2 9 ...
சென்னை-600 008
எழும்பூர்

3-5-2007

# உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-39

2. **அறிவிப்புகள்—**

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது 40

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம் 149

3. **தகவல் கோரல்—**

(அ) மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் வாரிசுகளுக்கு அரசு உதவி 40-42

திரு. சி. ஞானசேகரன் 41

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 41-42

(ஆ) சென்னை மாநகரில் பிளாஸ்டிக் கழிவுகளால் சுற்றுப்புறச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்பு 52-60

திருமதி பதர் சயீத் 53-54

திரு. சி. ஞானசேகரன் 54-55

திரு. தி. வேல்முருகன் 55-57

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 58-60

பக்கங்கள்

**3. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(இ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க, அரசின் நடவடிக்கைகள் குறித்து, 2.5.2007 ஆம் நாளன்று, பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை தொடர்பாக — 61-70

திரு. ஜி.கே. மணி — 61-64,67-68

திரு. சி. ஞானசேகரன் — 64

*திரு. ஓ. பன்னீர்செல்வம் — 68-69

*மாண்புமிகு திரு. துரைமுருகன் — 64-67,68,69-70

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு**—

சூறாவளி மற்றும் மழையினால் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர்ச் சேதமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவர் உயிரிழந்ததும் — 43-52

திரு. பி.கே. சேகர்பாபு — 43-45

திரு. எஸ். ஜான் ஜேக்கப் — 45

திரு. கு. ஆறுமுகம் — 45-46

*திரு. ஞா. ஜான் ஜோசப் — 46-47

திரு. சபா. இராஜேந்திரன் — 47-48

திரு. தி. இராமசாமி — 48-49

திரு. நா. இராமகிருஷ்ணன் — 49-50

*மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் — 50-52





பக்கங்கள்

**5. கவன ஈர்ப்பு**—

வால்பாறை தொகுதி, அக்காமலை மற்றும் புல்மலையில் தீயினால் ஏற்பட்ட சேதம் — 71-76

திரு. கோவை தங்கம் — 71,73-74,75-76

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் — 71-73,74-75,76

**6. அறிக்கைகள் அளித்தல்**—

(அ) மதிப்பீட்டுக் குழு — 76

(ஆ) பொதுக் கணக்குக் குழு — 76

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—

(அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 77

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 77

(ஆ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 — 77-78

மாண்புமிகு டாக்டர் க பொன்முடி — 78

**8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி — 78-128, 135-149.

கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை — 149-173

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 78,101,108,113, 114,115,117, 118,119,122

திரு. சி.வி. சண்முகம் — 101-113, 115,116

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் — 120-128,130, 135-141

| | பக்கங்கள் |
|---|---|
| **8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை—தொடர்ச்சி | |
| *திரு. வ. முல்லைவேந்தன் | 142-150 |
| திரு. ஜி.கே. மணி | 80,132,150, 151-160 |
| திரு. கே. மகேந்திரன் | 160-164 |
| *திரு. கே. உலகநாதன் | 99-100, 164-168 |
| *திரு. எஸ். ராஜகுமார் | 90-91,168-173 |
| **9. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைத்தல் | 129-135 |
| (ஆ) விதி 32–ஐத் தளர்த்துதல் | 173-174 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 174-175 |


227665



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்குதல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority .

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுத்தீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. ஸ்பரவன், எம்.காம்., | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி—I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. | திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்

23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்

24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி

25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)

27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்

28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி

29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி

30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்

31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்

32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)

33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்

35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு

36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்

37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி

38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்

39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்

41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்

42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்

45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்

46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி

47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்

48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி

51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்

52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி

53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்

54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்

57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி

58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்

59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்

63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். .. மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். .. முசிறி
107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

| | | |
|---|---|---|
| 109. | சேகரன், திரு. கு.ந. | .. திருவெறும்பூர் |
| 110. | சேகர், திரு. எஸ்.வி. | .. மயிலாப்பூர் |
| 111. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. | சையது கௌஸ் பாஷா, திரு. சை. | .. மதுரை மத்தி |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 114. | சௌந்திரபாண்டியன், திரு. அ. | .. குன்னூர் (செ.வ.) |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | .. சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | .. அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | .. திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | .. அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | .. கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | .. வேடசந்தூர் |
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | .. ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, முனைவர் மு. | .. பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | .. சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்டு, திரு. த. | .. பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. சு. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. பாபநாசம் |



| | | |
|---|---|---|
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | .. திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வீ.பெ. | .. சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 134. | துரைராஜ், திரு. சி. | .. சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | .. மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், டாக்டர் க. | .. கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | .. புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி—2 |
| 140. | பதர் சயீத், திருமதி | .. திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி பி. | .. நன்னிலம் (செ.வ.) |
| 142. | பரஞ்ஜோதி, திரு. மு. | .. ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 144. | பலராமன், திரு. பி. | .. பொன்னேரி (செ.வ.) |
| 145. | பழனிசாமி, திரு. ஆர்.எம். | .. மொடக்குறிச்சி |
| 146. | பன்னீர்செல்வம், திரு. எம். | .. சீர்காழி (செ.வ.) |
| 147. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 148. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. பெரியகுளம் |
| 149. | பாண்டுரங்கன், திரு. கு. | .. அணைக்கட்டு |
| 150. | பாபு, திரு. வி.எஸ். | .. புரசைவாக்கம் |
| 151. | பாரதி மோகன், திரு. ஆர்.கே. | .. திருவிடைமருதூர் |
| 152. | பாலபாரதி, செல்வி கே. | .. திண்டுக்கல் |
| 153. | பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்
157. புஷ்பாராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே. ஆர். .. திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுத்துரை, திரு. செ. .. பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்
173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 20, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மே 3, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்"

நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள், எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**161—**

### மின் உற்பத்தி

***668—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு **விடையளிப்பாரா—**

**மின்சக்தி** தேவையைப் பூர்த்தி செய்ய மரபுசாரா எரிசக்தி (காற்று, சூரிய வெப்பம்) மூலம் மின் உற்பத்தியைப் பெருக்க, அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

[2007 மே 3

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சக்தி தேவையைப் பூர்த்தி செய்ய, மரபுசாரா எரிசக்திகளான காற்றுச் சக்தி மற்றும் சூரிய வெப்பச் சக்திமூலம் மின் உற்பத்தியைப் பெருக்க, அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. 31-3-2006 வரை, காற்றாலையின் மொத்த மின் உற்பத்தித் திறன் 2,898 மெகா வாட் ஆகும். மேலும், காற்று வளமிக்க பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அந்த இடங்களில் தனியார் முதலீட்டாளர்கள் காற்றாலைகளை நிறுவ, அரசு தக்க ஊக்கம் அளிக்கும். சூரிய சக்திமூலம் 3,387 தெரு விளக்குகளும், 551 வீட்டு விளக்குகளும், தமிழ்நாடு முழுவதும் உள்ள பஞ்சாயத்துகளில் 50 சதவீத மைய அரசின் மானியத்துடனும், மீதி 50 சதவீதம் அந்தந்தப் பஞ்சாயத்து நிதியிலிருந்தும் பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காற்றாலைமூலம் தயாரிக்கப்படும் மின்சாரம், காற்று அதிகமாக வீசுகின்ற பகுதிகளில், தரையிலே காற்றாலைகள் அமைத்து, இந்த மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. காற்று வீசாத பகுதிகளாக இருந்தாலும், தமிழகத்திற்கு நீண்ட கடற்கரை உள்ளது. கடலில் சற்றுத் தொலைவு உள்ளே சென்றால், அங்கே எப்போதும் நல்ல வேகமான காற்று கிடைக்கின்றது. கடலின் நடுவிலும் காற்றாலைகளை நிறுவி, அங்கும் நாம் மின்சாரத்தைத் தயாரிக்க முடியும். பல மேலைநாடுகளில் இந்த முறை கையாளப்பட்டு, கடல் நடுவே காற்றாலைகளை அமைத்து மின்சாரம் தயாரிக்கின்றார்கள். அதேபோன்று, சூரிய வெப்பத்தாலும் மின்சக்தியை நாம் உற்பத்தி செய்யலாம். தமிழகத்திலே, ஆண்டு முழுவதும் சூரிய வெப்பம் அதிகமாகக் கிடைக்கின்றது. சராசரியாக, ஒரு சதுர மீட்டருக்கு, 1 யூனிட் மின்சாரம் தினசரி தயாரிக்கலாம் என்று கூறுகிறார்கள். எனவே, இதைப் பெரிய அளவில், பெரிய மின்சார ஆலையை—சூரிய வெப்பத்தின்மூலம், தற்போது கிராமங்களுக்குச் சிறிய அளவில் கொடுக்கப்படுகின்றது; இதற்குப் பதிலாக ஒரு பெரிய மின் உற்பத்தி நிலையத்தை—அமைத்து, சூரிய வெப்பத்தின்மூலமாகத் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன். அதேபோன்று, கடலின் வெப்பத்தின்மூலமாகவும் மின்சாரத்[illegible]லாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர் என[illegible] [illegible]லைவர் அவர்களே, காற்றாலைகளை[illegible] [illegible]நடுவில் நிறுவி, மின்சாரம் த[illegible]ரிக்கவும், கடல் வெப்பத்தின்மூல[illegible]



2007 மே 3]

மின்சாரம் தயாரிக்கவும், திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா அல்லது அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, கடல் ஓரத்திலே காற்றாலைகள்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்று ஆய்வதற்காகத் தனியார் நிறுவனங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன. காற்றினுடைய வேகம், ஒரு மணிக்கு 15 கி.மீ.-க்குமேல் வீசினால்தான், அங்கே காற்றாலைகள் அமைக்க முடியும். ஆனால் தமிழ்நாட்டில், கடலோரத்தில் உள்ள சில பகுதிகளில் காற்றின் வேகம் 10 கி.மீ. தான் இருக்கிறது என்று ஒருசில அறிக்கைகள் வந்திருக்கின்றன. எனவே, எங்கெங்கே 15 கி.மீ.-க்குமேலே காற்று வீசுகின்றதோ, அங்கே தனியார் முன்வந்தால், காற்றாலைகள் அமைப்பதற்கான அனுமதியை இந்த அரசு வழங்கும். மாண்புமிகு உறுப்பினர் சூரிய சக்திமூலமாக உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய தமிழகத்திலே, இந்தியாவிலே ஏராளமான மின்சக்தி, சூரிய வெளிச்சத்தின்மூலமாக உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், அதனைத் தயாரிக்கக்கூடிய செலவு அதிகம் ஆகிறது. உதாரணத்திற்கு, நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய, ஒரு மெகா வாட்டுக்கு 5 கோடி ரூபாய் தேவைப்படும். அதுவே, அனல் மின்சாரமாக இருந்தால், ஒரு மெகா வாட்டுக்கு 4 கோடி ரூபாய் போதும். ஆனால், சூரிய வெளிச்சத்தின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், ஒரு மெகா வாட்டுக்கு 18 கோடி ரூபாய் செலவு ஆகிறது. அந்தச் செலவு என்றைக்குக் குறைகிறதோ, அன்றைக்கு அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** அமைச்சரின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுசாரா எரிசக்திமூலமாக மின் உற்பத்தி செய்வது

குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே, எரிவாயுமூலமாக மின் உற்பத்தி செய்வதும் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக எனது தொகுதியிலே, கோவில்களப்பால் பகுதியிலிருந்து கிடைக்கக்கூடிய எரிவாயுவைக் கொண்டு, திருமக்கோட்டையிலே மின் உற்பத்தி நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்போல, இராமநாதபுரத்திலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், ஏராளமான வகையிலே எரிவாயு இப்பொழுதும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதையும் பயன்படுத்துவதற்கான முயற்சி என்ற அடிப்படையில், மேலும் புதிய மின் நிலையங்களைத் தொடங்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்தபோதுதான், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே 95 மெகா வாட் மின்சாரத்தை எரிவாயுமூலமாக உற்பத்தி செய்வதற்கான திட்டம் தொடங்கப்பட்டு, மின்சாரம் இப்பொழுது உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே, இராமநாதபுரம் மாவட்டத்திலேயும், அங்கே கிடைக்கின்ற எரிவாயுவைப் பயன்படுத்தி, 95 மெகா வாட் மின்சாரத்தை இப்பொழுது உற்பத்தி செய்வதற்குத் திட்டம் தீட்டப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தாலும், அல்லது திருவாரூர் மாவட்டமாக இருந்தாலும், அங்கே இருக்கக்கூடிய எரிவாயுவை முழுமையாக எடுப்பதற்கான பணிகளிலே ஈடுபடவேண்டுமென்று இந்த அரசு நம்முடைய மத்திய அரசாங்கத்தை பல முறை கேட்டிருக்கிறது. ஆனால், அவர்கள் பல இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தும்கூட, தமிழகத்திலே இந்த அளவுக்குத்தான் எரிவாயு கிடைக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், கிருஷ்ணா, கோதாவரியிலிருந்து எரிவாயு இன்னும் 2 ஆண்டுக் காலத்திலே வரும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ரிலையன்ஸ் நிறுவனத்தின்மூலமாக, அந்த எரிவாயு தமிழகத்திற்கும், புதுவைக்கும் விநியோகம் செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிறது. அந்த எரிவாயு கிடைக்குமானால், வீடுகளுக்கும் பயன்படுத்தப்படும்; மின்சார உற்பத்திக்கும் அது பயன்படுத்தப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுசாரா எரிசக்தியைப் பயன்படுத்தி, சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுசாரா எரிசக்தித் துறையினுடைய அமைச்சர், நம்முடைய முதலமைச்சர் அவர்களை 6 மாத காலத்திற்கு முன்னாலே சந்தித்து இதுகுறித்துப் பேசினார்கள். அவருடைய நிருவாகத்தின்மூலமாக, அமைச்சரவையின்மூலமாக, நமக்குச் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று அமைத்துத் தருவதாகவும் வாக்குறுதி தந்தார்கள். அதன் அடிப்படையிலே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், கீழூர், காட்டூர், கொட்டமேடு, நெல்லிக்குப்பம் ஆகிய கிராமங்களில் சுமார் 700 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அங்கே அமைக்கப்படும். அப்படி அமைத்தால், காற்றாலைகள் தயாரிப்பதற்காக, அமெரிக்க நிறுவனங்கள் 5,000 கோடி ரூபாய் மூலதனம் செய்வதற்குத் தயாராக இருக்கின்றன; இன்னும் பல நாடுகளும், அங்கே காற்றாலைகளை உற்பத்தி செய்ய நிச்சயமாக வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுசாரா எரிசக்தியின்மூலம் இப்பொழுது அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதிலே காற்றாலைமூலம் கிடைக்கின்ற மின்சாரம்தான், மிக அதிகமான அளவிலே கிடைக்கிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் கோவை மாவட்டங்களிலே ஏராளமான காற்றாலைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தக் காற்றாலைகள், அங்குள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவதில்லை. அவற்றிற்குச் சேரவேண்டிய கட்டணங்களை வருடக் கணக்கிலே பாக்கி

வைத்திருக்கிறார்கள். உள்ளாட்சி அமைப்புகள், ஏற்கெனவே வருமானத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையிலே, இந்தக் கட்டணத்தை ஒவ்வொரு மாதமும் முறையாகச் செலுத்துவதற்கேற்ப, மின்சார வாரியம் அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்கின்றபோது, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைப் பிடித்துக்கொண்டு, மின்சார வாரியமே, நேரடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அந்தப் பணத்தை வழங்க முன்வருமா என்று உங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டு, இதுவரையிலே மின் வாரியத்திற்கு வரவில்லை. அது உண்மையாக இருக்குமானால், மின் வாரியமே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கட்டணத்திலிருந்து பிடித்து, ஊராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநகரப் பகுதிகளிலே ஏராளமான குப்பைக் கூளங்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றைக்கொண்டு, மரபுசாரா எரிசக்திமூலம் மின்சாரம் தயாரிக்க, நம்முடைய அரசு ஏதாவது சிறப்புத் திட்டம் வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குப்பைக் கூளங்களில் இருந்துகூட, மின்சாரம் தயாரிப்பதற்கு மின் வாரியம் ஏற்கெனவே முயற்சி எடுத்தது. ஆனால், அதற்கு அதிக முதலீடு தேவை என்றும், அதிலே இருந்து கிடைக்கக்கூடிய மின்சாரத்தினுடைய தரம் குறைவாக இருக்கிறது என்றும், அது நமக்கு முறையாகப் பயன்படுவதற்கான வாய்ப்பில்லை என்றும் தெரிவித்திருக்கின்ற காரணத்தாலே, மின் வாரியம் அதிகமாக அதிலே கவனம் செலுத்தவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியத்தில் அமையபுரம் ஊராட்சி, நல்லாண்பிள்ளை ஊராட்சி, அனியாப்பூர் ஊராட்சி, வெள்ளாளப்பட்டி ஊராட்சி, பழையகோட்டை ஊராட்சி, பெரியபட்டி ஊராட்சிகளிலே மின் பற்றாக்குறை இருக்கிறது. நான் 20 தினங்களுக்கு முன்பு அந்தப் பகுதிகளுக்குச் சென்றபோது, அங்கே மோட்டார் பம்பு செட்டுக்குத் தேவைப்படும் மின்சாரம் பற்றாக்குறையாக இருப்பதோடு, மாலை 5 மணிக்கு முன்பாக யார் வீட்டிலே லைட் போடப்படுகிறதோ. அங்கே மட்டும்தான் லைட் எரிகிறது. மீதி வீடுகளிலே, இரவு 10–30 மணி வரைக்கும் லைட் எரிகின்ற வாய்ப்பு இல்லை. அங்கே படிக்கின்ற மாணவ, மாணவிகள் எல்லாம், "எங்களுக்குப் படிப்பதற்கு இடையூறாக இருக்கிறது; காடா விளக்கை வைத்துக்கொண்டுதான் படிக்கிறோம்" என்று என்னிடத்திலே நேரடியாகச் சொன்னார்கள். அதைப்போல, மருங்காபுரி ஒன்றியத்தில், மருங்காபுரி, திருநல்லிப்பட்டி, கன்னிவடுகப்பட்டி, ஆமணக்கம்பட்டி, இடையபட்டி, வி. இடையபட்டி, கருமலை, முத்தாழ்வார்பட்டி ஆகிய பஞ்சாயத்துகளுக்கு உட்பட்ட பகுதிகளிலும், விவசாயிகள் தங்களுடைய மின் மோட்டாரை இயக்குவதற்குத் தேவையான மின்சாரம், பற்றாக்குறையாக இருக்கிறது. அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைத்தால், மின்சாரம் சீராகக் கிடைக்கும். எனவே, அந்தப் பகுதிகளுக்குத் துணை மின் நிலையம் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைத்தால், அந்தக் குறை நிச்சயமாகப் போக்கப்படும். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, 4 நாட்கள், காற்றாலைகள்மூலமாகக் கிடைக்கின்ற மின்சாரம், நமக்குக் குறைவாகக் கிடைத்த காரணத்தால், ஒரு சில இடங்களில், 15 நிமிடங்களிலே இருந்து 20 நிமிடங்கள் வரை மின் தட்டுப்பாடு இருந்தது. ஆனால், இப்போது கடந்த 3 நாட்களாக, 700 மெகா வாட் அளவுக்குக் காற்றாலைகள்மூலமாக மின்சாரத்தை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். தினந்தோறும் காலையில் 6 மணிக்கு மின்

துறையைச் சேர்ந்த Member (Generation), நம்முடைய தேவை எவ்வளவு, நம்முடைய மின்சார இருப்பு ஒவ்வொரு நாளும் எவ்வளவு இருக்கிறது என்ற விவரங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இன்று நம்முடைய தேவை 8,200 மெகா வாட்; நம்மிடத்திலே மின்சாரம் உற்பத்தியாகி இருப்பது 8,532 மெகா வாட். ஆகவே, மின்சாரம் இருக்கிறது; சில இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அதற்கான இடங்களைத் தேர்வு செய்து, நிச்சயமாக இந்த அரசு அந்தத் துணை மின் நிலையங்களைக் கட்டித் தரும். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட குறைகள் போக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சக்தியினுடைய தேவை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. நாமும் பல்வேறு வகையிலே இருந்து மின்சக்தியைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். இயற்கை மாற்றங்களால் ஏற்படுகின்ற மின்னலில் இருந்து, மின்சக்தி வெளிப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, மின்னலில் இருந்து மின்சக்தி பெறுவதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா; அல்லது திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் உலகத்தில் அணு மின் நிலையம்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள்; அனல் மின் நிலையம்மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள்; அதேபோல, காற்றாலைகள், அதேபோல சூரிய வெளிச்சம் இவற்றிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள். ஜப்பான் நாட்டிலே மட்டும்தான், கடலிலிருந்து வீசுகின்ற அலைகள்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு முயற்சி செய்தார்கள். முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதற்காக ஏறக்குறைய 10 கோடி ரூபாய் செலவு செய்து, அதற்கான திட்டத்தைத் தயார் செய்வதற்காகக்கூட ஒருவரை அனுப்பி வைத்தார்கள். ஆனால், அந்தத் திட்டம் ஜப்பான் நாட்டிலேயே சரியாக வரவில்லை. கடல் அலைகள்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அவர்களே அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்ட காரணத்தால், நாமும் அதைப்பற்றி யோசிக்கவில்லை. ஆனால்,





மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, மின்னலிலிருந்து மின்சாரம் தயாரிக்க இதுவரையில் உலகத்திலே எந்த நாடும் முயற்சிக்கவில்லை. இரண்டாவது, எப்போது மின்னல் வரும்; அதிலிருந்து எப்போது மின்சாரத்தைத் தயாரிப்பது என்பதைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் எதிர்காலத்திலே பிறந்தால்தான் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**162—**

## வேளாண்மைக் கல்லூரி

***5938—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். வேலூர் மாவட்டம், முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற மாவட்டம். அதிலும், திருப்பத்தூர் மிக மிகப் பின்தங்கிய தொகுதி. முழுக்க விவசாயம் சார்ந்த தொழில் செய்கின்ற பகுதியாக இருக்கின்றது. இதுவரையிலும் அரசு சார்ந்த எந்தவொரு கல்வி நிறுவனமும் அந்தத் தாலுகாவிலே கிடையாது. சுமார் 40,000 ஹெக்டேர் பரப்பளவிலே, எங்களுடைய தாலுகாவிலே விவசாயப் பயிர்கள் செய்து வருகிறார்கள். புதிய ரக நெல் விதைகளை விவசாயிகளுக்குத் தருகின்ற வகையிலே—விவசாயம்தான் நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்கிறார்கள்;

அந்த விவசாயிகளுடைய முதுகெலும்பைக் காப்பாற்றுகின்ற வகையிலே—புதிய ரக நெல் விதைகளையெல்லாம் கண்டுபிடித்து, விவசாயிகளுக்கு எளிதிலே வழங்கக்கூடிய வகையிலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, அங்கே விவசாயக் கல்லூரி ஒன்றை உருவாக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 75 சதவீத மக்கள் விவசாயத்திலேதான் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எல்லா மாவட்டங்களும் விவசாயிகள் நிறைந்த மாவட்டங்கள்தான். ஆக, அப்படிப்பட்ட மாவட்டங்களுக்கெல்லாம் விவசாயக் கல்லூரி ஆரம்பிப்பது என்பது இயலாத ஒன்று. தற்போது, தமிழ்நாட்டிலே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 10 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த 10 கல்லூரிகளில், பி.எஸ்சி. பட்டப் படிப்பில் வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், மனையியல் மற்றும் பி.டெக். படிப்பில் வேளாண்மைப் பொறியியல், தோட்டக்கலை, வேளாண் உயிரி தொழில்நுட்பம், உயிரி தகவலியல், உணவு பதப்படுத்தும் பொறியியல், சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் ஆகிய பாடத் திட்டங்கள் இப்போது நடத்தப்படுகின்றன. இக்கல்லூரிகளில் தேவையான அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டு, மாணவர்கள் படித்து வருகின்றனர். திருப்பத்தூர் தொகுதி மாணவர்கள், வேலூர் மாவட்டம், கலவையில் அமைந்துள்ள ஆதிபாராசக்தி வேளாண்மைக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஏதுவாக இருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும், வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரத்தில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையமும் இயங்கி வருகின்றன. மேற்கண்ட இரு நிலையங்களும் வேலூர் மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. புதிதாக ஒரு கல்லூரி தொடங்கப்பட வேண்டுமானால், அதற்கு 50 முதல் 60 கோடி ரூபாய் தேவை; 250-லிருந்து 300 ஏக்கர்வரை நிலங்கள் தேவை. ஆகவே, ஒன்று, நிதி இருந்தால் நிலங்கள் கிடைக்காது; நிலம் இருந்தால் நிதி நமக்குக் கிடைப்பது இப்பொழுது அரிதாக இருக்கும். மேலும், இந்த 10 வேளாண்மைக் கல்லூரிகளிலே பல்வேறு படிப்புகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு வேலைகள் கொடுப்பதும் சிரமமாக இருக்கிறது. காத்திருப்போர் பட்டியலில், சுமார் ஆறாயிரம் மாணவர்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, திருப்பத்தூரில் இருக்கின்ற அந்தப்





பகுதி மாணவர்கள், நம்முடைய ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரியிலே, கலவையிலே இருப்பதிலே, சேர்ந்து படிக்கலாம் என்ற ஆலோசனையை நான் வழங்குகிறேன்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் பதிலுரையிலே, நிலங்கள் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். செங்கத்திலே நான்கு ஆயிரம் ஏக்கர் நிலம், மத்திய அரசு நிலத்தை மாநில அரசு இப்போது குத்தகைக்கு எடுத்திருக்கிறது. அதேபோல, இராணிப்பேட்டையிலே இரண்டாயிரம் ஏக்கருக்கு மேலாக, 'நவ்லாக்' பண்ணை இருக்கிறது. அது ஆற்றுப் படுகையில் இருக்கிறது. தண்ணீர் வசதியும் இருக்கிறது. தொடர் வண்டி வசதியும் இருக்கிறது. அதேபோல, ஜவ்வாது மலையில் தோட்டக்கலைப் பண்ணை இருக்கிறது. ஏலகிரி மலையிலே பட்டுப்பூச்சி பண்ணை இருக்கிறது. இப்படியெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையான நிலங்கள் வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஜவ்வாது, ஏலகிரி, மலைவாழ் மக்கள் இருக்கின்ற பகுதியாக, அது இருக்கின்ற காரணத்தினாலே மிக மிகப் பின்தங்கிய பகுதியாக இருந்து, 1980–லே வேலைவாய்ப்பு இல்லாமல் அங்கே நக்சல்பாரிகள் எல்லாம் உருவாகிய காரணத்தினாலே—இதுவரை ஒரு அரசுக் கல்லூரிகூட கிடையாது; எனவே—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பின்தங்கிய பகுதியை முன்னேற்றுகின்ற வகையிலே, அந்தக் கல்லூரியை அங்கே கொண்டுவருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவ்லாக்கில் இருக்கின்ற தோட்டக்கலைப் பண்ணை, ஆராய்ச்சிக்காக இருக்கின்ற இடம். பண்ணையினுடைய பணியைச் செய்கிறது. அதிலே கல்லூரி தொடங்கினால், அப்புறம் பண்ணையினுடைய ஆராய்ச்சி தடைபட்டுவிடும். தனியாக இடம் கிடைப்பது சிரமம் என்றுதான் சொன்னேனே தவிர, பண்ணை இல்லாமல் இல்லை; 54 பண்ணைகள் இருக்கின்றன. பண்ணைகள் எல்லாம், புதிய விதைகள், செடிகள் இவற்றை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்குகின்ற அந்தப் பணிகளை மேற்கொள்கின்றன.

[2007 மே 3

அப்படிப்பட்ட நிலையிலே, அந்தப் பண்ணைகளையெல்லாம் இதுபோன்ற காரியங்களுக்குப் பயன்படுத்துவது என்பது, இயலாத காரியம். ஆகவே, தற்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**163—**

**பூங்கா**

***5896 - திரு. பி.கே. சேகர்பாபு:**

*மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10—வது வட்டம், மணலி சாலை பக்கிங்காம் கால்வாய் ஓரமாக வடக்கு, தெற்கு இருபுறங்களில் பூங்கா அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூங்கா அமைக்க சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை என்றால், விடுவதாக இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர நீர்வழிகள், 88 கிலோ மீட்டர் பரப்பளவு இருப்பதாக மானியக் கோரிக்கையின்போது, அமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். இதை மேம்படுத்தவும், உறுதிபடுத்தவும், ஆக்கிரமிப்பின்றிப் பாதுகாக்கவும், பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகவும், இதற்கு மத்திய அரசு 1,700 கோடி ரூபாய் அனுமதியளித்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தவகையிலே, கூவம் நதிக் கரை ஓரம் இருக்கின்ற சிந்தாதிரிப்பேட்டை, கிரீம்ஸ் சாலை ஓரம் இருக்கின்ற கூவம் நதிக் கரை என்ற அந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல்,



2007 மே 3]

ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் பொருட்டும், அந்தப் பகுதியில், பாதுகாப்பான ஒரு சூழ்நிலை நிலவ வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டும், பக்கிங்காம் கால்வாய் ஒட்டியுள்ள சென்ட்ரல், பேசின்பிரிட்ஜ், கொருக்குப்பேட்டை போன்ற பகுதிகளில் பூங்காக்களை அமைத்துத்தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10—வது வட்டம், மணலி சாலை பக்கிங்காம் கால்வாய் ஓரமாக வடக்கு, தெற்கு இருபுறங்களில் பூங்கா அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பது. அங்கு பூங்கா அமைக்க சாத்தியம் இல்லை என்று சொன்னேன். மற்ற இடங்களில் அமைந்து இருந்தால், அது மாநகராட்சி அமைத்தது. ஏன் அங்கு அமைக்க சாத்தியம் இல்லை என்பதற்குக் காரணம், மத்திய அரசின் கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறைமூலம் மக்களவையில் தேசிய உள்நாட்டு நீர்வழிப் பாதை அமைத்திட, மசோதா ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மசோதாமூலம், ஆந்திர மாநிலத்தில், காக்கிநாடா பகுதியிலிருந்து தமிழகம் வாயிலாக பாண்டிச்சேரி வரையிலும், கால்வாய் மற்றும் ஆறுகள் மூலமாக, தேசிய உள்நாட்டு நீர்வழிப் பாதை அமைக்கப்படவுள்ளது. திட்ட மதிப்பீடு 542 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திட்டத்தின்கீழ், தமிழகத்தில், சென்னை நகரில் வடசென்னைப் பகுதியான பேசின் பாலம் முதல் அரங்கம் பகுதி வரை, 55 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்வழிப் பாதையாக மேம்படுத்தப்படவுள்ளது. அதேபோல், தென்சென்னைப் பகுதியில், பாலவாக்கம் முதல் மரக்காணம் ஆலம்பாறை வரையில், தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்வழிப் பாதையாக மேம்படுத்தப்படவுள்ளது. இந் நீர்வழிப் பாதை அமைத்திட, மொத்தம் 100 மீட்டர் அகலம் தேவைப்படுகிறது. இதில், கால்வாய் 50 மீட்டர் அகலமும், ஏனைய பயன்பாடுகளை மேற்கொள்ள, 50 மீட்டர் அகலமும், ஆக மொத்தம் 100 மீட்டர் அகலம் தேவை என்று தேசிய உள்நாட்டு நீர்வழி ஆணையம் தெரிவித்தது.

(முற்பகல் 9-55)

மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 10—வது வட்டம், மணலி

சாலை அருகே பக்கிங்காம் மற்றும் அதனுடைய இருபுறக் கரைகள், காலி இடங்களையும் சேர்த்து, 90 மீட்டர் அகலம்தான் உள்ளது. கால்வாய் ஓரமாகப் பூங்கா அமைக்க, மொத்தம் 100 மீட்டருக்குப் பதில் 90 மீட்டர்தான் இருக்கிறது; இன்னும் 10 மீட்டருக்கு நாங்கள் இடம் தேடிக் கொண்டிருக்கிறோம். ஆகையினாலே, அங்கு பூங்கா அமைக்க சாத்தியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசானது, 93/2006 என்ற ஒரு சட்டமுன்வடிவைப் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ததாக, தாங்கள் மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த பக்கிங்காம் கால்வாய் என்பது, பெஜவாடாவிலேயிருந்து 30, 40 ஆண்டுகளுக்கு முன்பாகப் படகுப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருந்த கால்வாய். அதில் உப்பு, விறகு போன்ற பொருட்களை, பெஜவாடாவிலிருந்து சென்னைக்குக் கொண்டு வந்து வியாபாரம் செய்த சூழ்நிலையெல்லாம் இருந்தது. சிறு வயதில் நாங்கள்கூட அதைப் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நல்ல காட்சியை வருங்காலத்தில் பார்க்க வேண்டியிருப்பதால்—இந்தப் பகுதியிலே 90 மீட்டர் அளவுதான் அகலம் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—அந்தக் கால்வாய் ஓரமாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகளை ஒதுக்கீடு செய்து, உங்களுக்குத் தேவைப்படுகின்ற 100 மீட்டரை நீங்கள் எடுத்துக்கொள்கின்ற அதே நேரத்தில், இந்தக் கால்வாய் ஓரத்தில் அமைந்திருக்கின்ற பகுதியானது, குடியிருப்புகள் இருக்கின்ற பகுதிக்குச் சமநிலையில் உள்ளது; தற்போதைய உடனடித் தேவையான, அந்தப் பகுதி மக்களின் பாதுகாப்பைக் கருதி, அந்தப் பகுதியிலே தடுப்புச் சுவர் அமைத்து, மரம் நடுவதற்காவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பூங்காவிலிருந்து நடைபாதைக்குப் போய் இருக்கிறார். அங்கே பூங்கா அமைக்க முடியாது என்பதற்குத்தான், நான் தெரிவித்திருக்கிறேன், 100 மீட்டர் அகலம் வேண்டும் என்று. ஆனால் 50 மீட்டர் அகலத்திற்குக் கால்வாய் போக, மீதி இருபுறங்களிலும் அவர்கள் அதைப்





பயன்படுத்துகிறபோது, பண்படுத்தப்படுகிறபோது, இப்படிப்பட்ட பாதை அமைக்க ஒரு வழி பிறக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறிலிருந்து பக்கிங்காம் கால்வாய், புதுச்சேரி வரை செல்கின்றது. பெசன்ட் நகர்ப் பகுதியிலேயிருந்து ஆரம்பிக்கப்பட்டு, கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி பகுதி வரையுள்ள அதிலே, சோழிங்கநல்லூர் உள்ளிட்ட பகுதியும் அடங்கி இருக்கின்றது. அந்த பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாரி ஆழப்படுத்துவதோடு, அங்கு O.M.R. சாலையையும் E.C.R. சாலையையும் இணைக்கின்ற 5 தரைவழிப் பாலங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன; அந்தப் பகுதியிலே இப்போது தொழிற்சாலைகளும் அதிகமாக இருக்கின்றன; கணினித் துறைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் சுற்றி வருவதற்கு அதிக நேரம் செலவிடப்படுகின்றது; ஆகவே, இந்தப் பாலங்களைச் சீரமைத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள், 5 நிமிடத்திலே இரண்டு சக்கர வாகனங்களில், 4 சக்கர வாகனங்களில் செல்வதற்கு வசதியாக இருக்கும். அதை ஏற்படுத்தித்தர அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சென்னை மாநகரத்திலே ஓடுகின்ற கூவம் ஆறு, அடையாறு, வடக்கு பக்கிங்காம், மத்திய பக்கிங்காம், தெற்கு பக்கிங்காம், ஓட்டேரி கேப்டன் நல்லா, விருகம்பாக்கம், அரும்பாக்கம் ஓடை, வேளச்சேரி ஓடை ஆகிய பகுதிகளில் இருக்கின்ற கால்வாய்களைத் தூர் வாரவும், இப்படி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், போக்குவரத்திற்குத் தேவையான பாலங்களை அமைப்பதற்கும் ஒரு பெருந் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதாவது National Cyclone Risk Mitigation Project—தேசிய புயல் இடர்பாடு தடுப்புத் திட்டம்—என்ற ஒரு திட்டத்தை, 126 கோடி ரூபாய்க்குத் தீட்டி, இப்போது நாங்கள் அந்த நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அதேபோன்று, Jawaharlal Nehru National Urban Renewal Mission—ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மேம்பாட்டுக் குழுமத் திட்டம்—இதன்மூலமாகவும், 346 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதையும் அனுப்பி இருக்கிறோம். இந்த இரண்டு திட்டங்களும் விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறோம். அப்படிக் கிடைத்தால், சென்னை

[2007 மே 3

மாநகரத்தில் போகிற நீர்வழிப் பாதைகள் அத்தனையையும் நாம் மேம்படுத்துவதற்கு வழி பிறக்கும். ஆனால், அதுவரையிலே பொறுத்திருப்போம் என்று இல்லாமல், நம்முடைய மாநில அரசிலிருந்து 8.5 கோடி ரூபாய் நிதியை, இந்த அரசு செலவிடத் தயாராக இருக்கிறது. ஆகையினால், அதற்கான திட்டங்களையும் இப்பொழுது வகுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டம் எடுக்கிறபொழுது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திட்டங்களும் சேர்த்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியினுடைய ஜீவாதாரம் இராஜ வாய்க்கால். அந்த இராஜ வாய்க்கால், ஜேடர்பாளையத்திலிருந்து Bed Regulator கட்டிப் பிரிக்கப்படுகிறது. அந்த Bed Regulator-க்கு மேல்புறம், காவிரி ஆற்றின் கரையிலே நிறைய இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களிலே, இப்பொழுது (மணியடிக்கப்பெற்றது) கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ஆயத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, பக்கிங்காம் கால்வாயைப் பற்றியது. நீங்கள் காவிரிக்குப் போய்விட்டீர்கள். பூங்காவைப்பற்றிக் கேளுங்கள்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** பூங்காவைப்பற்றித்தான். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தவும், அதேபோல, சோளசிராமணி பகுதியிலே ஒரு கதவணைத் திட்டம் இருக்கிறது; அதைச் செயல்படுத்தவும், வரும் பொறியாளர்கள் மற்றும் பலரும் தங்கியிருக்க, அங்கே ஒரு பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை இருக்கிறது. அந்த ஆய்வு மாளிகையைச் சரி செய்து, அதற்குப் பக்கத்திலே ஒரு நல்ல பூங்காவை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதி, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜ வாய்க்கால், ஜேடர்பாளையம், அதையொட்டி



2007 மே 3]

வருகின்ற குச்சிப்பாளையம், பாண்டமங்கலம் ஆகிய எல்லாப் பகுதிகளுமே நீர்வளத்தாலே நிரம்பியிருக்கிற பகுதிகள். அங்கே தென்னையும், பனையும், கமுகும், வாழையும், தாழையும், எங்குப் பார்த்தாலும் நிறைந்திருக்கும். இதைவிடப் பசுமை வேறு என்ன வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**164—**

## பேருந்து வசதி

***5084—திரு. ஆர். சின்னசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் வசிக்கும் மக்களுக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில், 6 நகரப் பஞ்சாயத்துகளும், 8 கிராமப் பஞ்சாயத்துகளும் உள்ளன. இவ்வொன்றியத்தில், சாலை வசதியுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தால், 99 நகரப் பேருந்துகள், தினம் 1,343 நடைகளும், 11 தனியார் பேருந்துகள், தினசரி 161 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, கோவை சத்தியமங்கலம் சாலையில் அமைந்துள்ள எஸ்.எஸ். குளம் வழியாக, அரசுப் போக்குவரத்துக் கழகப் புறநகர்ப் பேருந்துகள் 66 எண்ணிக்கையைக்கொண்டு தினசரி 210 நடைகளும், 23 தனியார் பேருந்துகளைக்கொண்டு, தினசரி 127 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) எழாது.

[2007 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் உள்ள வழித் தடங்களைப்பற்றி, இங்கே சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். வழித் தட எண் 44, உக்கடம்–வெள்ளாளப்பட்டிவரை செல்லும் பேருந்தை அரசூர்வரை நீட்டித்துத் தரவேண்டும். வழித் தட எண் 92, உக்கடம்–சேரன்மாநகர்வரை செல்லும் பேருந்தை, அம்பேத்கர் நகர்வரை நீட்டித்துத் தரவேண்டும். வழித் தட எண் 63, செல்லூர்–கீரநத்தம்வரை செல்லும் பேருந்தை, கோவிந்தநாயக்கன்பாளையம்வரை நீட்டித்துத் தரவேண்டும். இதனால், அத்திப்பாளையம், கோவிந்தநாயக்கன்பாளையம் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள மக்கள் பெரிதும் பயனடைவார்கள். அதேபோல், 63, 63–ஏ, 113 ஆகிய பேருந்துகளை, லட்சுமி கார்டன்வரை செல்ல, வழித் தடத்தை மாற்றித் தரவேண்டும். அவ்வாறு மாற்றித் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னபடி, எந்தெந்த வழித் தடங்களை நீட்டிக்க வேண்டும் என்ற விவரம் எங்களுக்குத் தரப்படுமானால், அரசு அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி, அவற்றை இயக்குவதற்கு வசதியாக இருக்கும். ஒன்று, ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த பேருந்துகளுடைய் தூரம், 30 கிலோ மீட்டரிலிருந்து 35 கிலோ மீட்டர் அளவிலே இருக்குமானால்தான், நகரப் பேருந்தை நீட்டிக்க முடியும். 35 கிலோ மீட்டருக்குமேலே வந்தால் நகரப் பேருந்துகளை நீட்டிக்க முடியாது. இரண்டாவது, ஏற்கெனவே பயன்பட்டு வருகின்ற கிராம மக்கள், நகரப் பேருந்தை நீட்டித்தால், அதற்கு முன்பு பயன்பட்டு வருகின்ற கிராம மக்கள், எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, நீங்கள் அந்த விவரத்தைத் தருவீர்களானால், அதை நாங்கள் ஆராய்ந்து பார்த்துச் சரியாக இருக்குமானால், நகரப் பேருந்துகளை இயக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி. உங்களிடம் விவரங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள் அல்லவா? கொடுக்க வேண்டியதுதானே! (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். சொல்லுங்கள்.



2007 மே 3]

முற்பகல் 10–05

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிறைய வழித் தடங்களில் சென்று கொண்டிருந்த பேருந்துகளைக் குறைத்திருக்கிறார்கள். அதைப்போல, வழித் தடம் எண் 63–ஏ காஞ்சிபுரம் to கோவிந்தநாயக்கன்பாளையம்வரை செல்லும் பேருந்தை, பெரியநாயக்கன்பாளையம் வரை நீட்டித்துத் தர வேண்டும். அதேபோல, உக்கடம்–கோவில்பாளையம், காஞ்சிபுரம்–கோவில்பாளையம் ஆகிய 2 புதிய பேருந்து வழித் தடங்களில் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். நிறைய வழித் தடங்களில் சென்று கொண்டிருந்த பேருந்துகளை இயக்காமல் இருக்கிறார்கள். நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற வழித் தடங்களில் தொடர்ந்து இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது', 'நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார். எப்போதிலிருந்து அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரம் வேண்டும். ஏனென்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இப்போது ஆட்சிக்கு வந்தபிறகு, 1,000 வழித் தடங்கள் நீட்டித்துத் தரப்பட்டிருக்கின்றன; 670 புதிய வழித் தடங்களிலே புதிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அதனால், மாண்புமிகு உறுப்பினர், எந்த இடத்திலிருந்து எந்தப் பகுதிக்கு நீட்டித்துத் தரவேண்டும் என்கிற விவரங்களைத் தருவார்களேயானால், ஆய்வு செய்து, அவற்றை இயக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். துணைக் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. துரைக்கண்ணு:** ஒரு வருடமாகக் கையைத் தூக்கித் தூக்கி வலி கண்டுவிட்டது. இப்போதுதான், அந்த வாய்ப்புத் தருகிறீர்கள்.

[2007 மே 3

உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் அய்யம்பேட்டையிலிருந்து குடந்தை வழியாகச் சென்னைக்கு ஒரு Ultra Deluxe Bus விடப்பட வேண்டும். தொகுதிக்கு ஒரு பேருந்து என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இராஜகிரி, பண்டாரவாடை, சக்கராப்பள்ளியில் சுமார் 60,000 முஸ்லீம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் வெளிநாடு செல்வதற்கும் மற்றும் வியாபாரம் சம்பந்தமாகவும் அடிக்கடி சென்னைக்குச் செல்கிறார்கள். தனியார் 2 பேருந்துகளை தினம் அங்கே இயக்குவதால் அவற்றில் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வசதிக்காகவும், மக்களுடைய நலன் கருதியும், அய்யம்பேட்டை-பாபநாசம்-கும்பகோணம் வழியாகச் சென்னைக்கு இரவு 10-00 மணிக்கு ஒரு Ultra Deluxe Bus விட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 200 Ultra Deluxe Bus-களை, விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்காகக் கடந்த ஆண்டு வாங்கித் தந்தார்கள். இந்த ஆண்டு 200 பேருந்துகளை வாங்கித்தர இருக்கிறார்கள்; அனுமதி தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே வாங்கப்பட்ட 200 பேருந்துகளும், பல்வேறு பகுதிகளிலேயிருந்து இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் புதிய பேருந்துகளும் வந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலேயிருந்தும் வெகுவிரைவிலே, நிச்சயமாக இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் இருக்கிற நகரப் பேருந்துகள், 50 கிலோ மீட்டர் வரையிலும் நீட்டித்து இயக்கப்படுகின்றன. அதுபோல, தமிழகத்தில் இருக்கிற மற்ற எல்லா மாநகரங்களிலும், இப்போது 35 கிலோ மீட்டர் என்று இருப்பதை, 40 கிலோ மீட்டர் அளவிற்காவது நீட்டித்துத் தருவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.



2007 மே 3]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு, இந்த அரசு புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான், 30 கிலோ மீட்டர் என்பதை 35 கிலோ மீட்டர் என நீட்டித்து நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டன. சென்னை மாநகரத்திலே, 40 கிலோ மீட்டர் என இருந்தது. 50 கிலோ மீட்டர் என நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. மக்களுடைய தேவையைக் கருதி, நகரங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டிருந்தால், அதையெல்லாம் ஆய்வு செய்துதான் முடிவு செய்ய முடியும். ஏனென்றால், ஒவ்வொரு முறையும் நகரப் பேருந்துகளின் இயக்கத்தை நீட்டித்துக்கொண்டே போவோமேயானால், Mofussil Bus-கள் பாதிக்கப்படுகின்றன. அதனால் ஒரு பக்கம் பாதிப்பு வருகிறது. இதைக் கருத்திலேகொண்டு, மக்களுக்குத் தேவை என்று கருதினால், அதைப்பற்றி ஆய்வு செய்தபிறகு, முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்.

**165—**

**பட்டா**

***7601—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி, அறிவொளி நகர்ப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பல்லடம் தொகுதி, ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சி, அறிவொளி நகர்ப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை. ஆனால் அங்கே 40 நபர்களுக்குத் தலா ரூபாய் 8,000 வீதம் வீடு கட்டுவதற்குக் கடன்

வழங்கப்பட்டிருக்கிறது. கட்டப்பட்ட வீடுகளுக்கு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கள மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே வீடுகள் எதுவும் கட்டப்படவில்லை.

(ஆ) பட்டா வழங்கப்படுமா; ஆமெனில், எப்போது என்று கேட்டிருக்கிறார்கள். அந்த இடம் அரசுக்குச் சொந்தமான மேய்ச்சல் புறம்போக்கு நிலம். எங்கள் பகுதியில் அதை 'மேய்ச்சுத்தலம்' என்று சொல்வோம். ஆனால், இங்கே மேய்க்கால் புறம்போக்கு என்று சொல்கிறார்கள். புறம்போக்கு இடத்திலே இருக்கிற காரணத்தால், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் அவர்களுக்கும் நிலமாற்றம் செய்யக் கோரி, துறையின் சார்பில் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, வருவாய்த் துறையின் சார்பிலே இருக்கக்கூடிய அந்த நிலம், நம்முடைய துறைக்குப் பட்டா மாற்றம் செய்யப்பட்டவுடன், அவர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பல்லடம் தொகுதி, ஆதித்தன்பாளையம், அறிவொளிநகர் ஆகிய பகுதிகளில், ஒரு 32 ஏக்கராவில் சுமார் 1,400 வீடுகள், அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கின்ற ஏழை மக்களுக்குக் கொடுக்கப்பட்டவற்றில், 40 வீடுகளுக்கு நகர மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமாகக் கள மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டிருந்தன. அதற்காக 8,000 ரூபாய் கொடுக்கப்பட்டு, அதனை 20 ஆண்டுகள் திரும்பக் கட்டுவதாக அது ஒதுக்கப்பட்டது. அதை, நிறைய பேர் வசதி இல்லாத காரணத்தினால், கட்ட முடியாதது மட்டுமல்லாமல், அதற்கு வட்டி, அபராத வட்டிகள் கூட்டப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், கோவை மாவட்டத்தில், பி.கே. புதூர், சுகுணாபுரம் போன்று, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இதுபோன்ற ஏழை மக்கள், தாம் வாங்கிய கடனை, 20 ஆண்டு காலமாகக் கட்ட முடியாமல், வட்டி, அபராத வட்டியை—5,000 ரூபாயானது, சுமார் ரூ.50,000, ஒரு இலட்சம் என்ற அளவுக்கு ஆகி—கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அதை இந்த அரசு



தள்ளுபடி செய்யுமா என்பதைக் கேட்பதோடு, குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக 11–வது நிதித் திட்டத்தின்கீழ், கோவையில் 916 வீடுகளும், மதுரையில் 916 வீடுகளும், சென்னையில் 2,000 வீடுகளும் தனித் தனியாகக் கட்டப்பட்டிருக்கின்றன; அதேபோன்று 12–வது நிதித் திட்டத்தின்கீழும், இந்த ஆண்டு மீண்டும் அதே மாவட்டங்களில் விரிவுபடுத்துமா; இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதில், திருநெல்வேலி, சேலம், ஈரோடு, கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர்கள். ஆனால். அவர் கேட்ட கேள்வியின்மூலமாக, இந்த அவையில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம், ஏதோ வட்டிக்கு வட்டி போட்டு கொள்ளை இலாபம் அடிக்கக்கூடிய ஒரு துறை போன்ற ஓர் உணர்வு உருவாகியிருக்கிறது. வட்டி என்பது, இந்தத் துறையின் சார்பிலே உருவாக்கப்பட்டதல்ல. மத்திய அரசின், நில எடுப்புத் துறையினுடைய 1894 ஆம் ஆண்டு சட்டம், 34, 23(1), 22(2) ஆகிய விதிகளின்படி முதல்கட்டமாக அவ்வாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. முதலாண்டு நிலம் எடுக்கிறபோது இறுதி விலை நிர்ணயிக்கப்படாமல் இருந்தால், 9 சதவீதம் வட்டி விதிக்க வேண்டும். அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, அதிலேயிருந்து எத்தனை ஆண்டுகள் முடிவுறுகிறதோ, ஒவ்வோர் ஆண்டிற்கும் 15 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. எனவே, அவற்றையெல்லாம் சேர்த்து, வாரியம் அந்தச் சம்பந்தப்பட்ட நில உடைமையாளர்களுக்குச் செலுத்துகின்ற காரணத்தினால், அதைத்தான் பங்கிட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறதேயொழிய, வாரியம் தன்னுடைய சொந்த இலாபத்திற்காக வட்டி விதிப்பதில்லை என்பதை ஒட்டுமொத்த அவைக்கும் நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். வேறு பல, இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் கட்டுவதற்கு இயலவில்லை என்று சொன்னார்கள். இத்திட்டத்தின்கீழ், வீடுகள் அமைத்துக்கொள்ள 40 குடும்பங்கள் மட்டும், குடும்பம் ஒன்றுக்கு 8,000 ரூபாய் வீதம் கடனாக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் பெற்று, வீடுகள் அமைத்துள்ளார்கள். இக்கடன் தொகையினை மாதம் ரூ.86 வீதம் 20 ஆண்டுகளுக்கும், மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கான முன்வைப்புத் தொகை ரூ.294 மற்றும் மாதாந்திர தவணைத் தொகை ரூ.30 வீதம் 20 ஆண்டுகளுக்கும் செலுத்தியபின், மனைப் பட்டா

வழங்கப்படும் என்றுதான் அப்போது வழங்கிய காலத்தில் கோப்புகளில் உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், நில மாற்றம் செய்யப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும்.

**திரு. செ.ம. வேலுசாமி:** சுருக்கமாகத்தான் கேட்டேன். உங்களுக்கு வேண்டுமென்றால், நிறைய பேருக்கு வேறு வழியில்லாமல் அனுமதித்துவிடுகிறீர்கள்; எங்களுக்கு மட்டும் சுருக்கமாகப் பேசச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை அமைச்சர் அவர்கள், வட்டி, அபராத வட்டி இருப்பதை ஒத்துக்கொள்கிறார். Below poverty line–ல் இருப்பவர்களுக்கு, அடித்தளத்திலுள்ள மக்களுக்கு, வீட்டு வசதித் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் துறையாக இருந்தாலும் சரி, 20 ஆண்டுகளுக்கு மேலாகியும்கூட, இன்னும் கட்ட முடியாமல் பட்டா பெற முடியாத நிலையில் இருக்கின்ற அதுபோன்ற இலட்சக்கணக்கான பேர்களுக்கு, அரசு விதிவிலக்கு அளித்து—ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இருந்தபோது, வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான கோப்பு, அனுப்பப்பட்டது—அதை நிறைவேற்ற வேண்டுமென்றுதான் இப்போது நான் கேட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபராத வட்டி மற்றும் இவையெல்லாம் குறித்து விரிவாகச் சொல்லப்போனால், இந்தத் துறையே, நிருவாகச் சீர்கேட்டின் காரணமாக எவ்வளவு மோசமடைந்திருக்கிறது என்பதை விரிவாகச் சொல்லவேண்டியிருக்கும். நீங்களும் ஒரு அமைச்சராக இருந்தவர். நம்முடைய துறையினுடைய சரித்திரங்களைப் பார்த்தால், 95 விழுக்காடு அளவிற்கு அபராத வட்டி வசூலான இந்தத் துறையில், 90%, 80%, 70%,





60%, 36%, 18% என்ற அளவிற்குக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. தேர்தல் வருகிறபோதெல்லாம், 4 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று அவற்றையெல்லாம் வசூலிக்காமல் விட்டு விட்டு, அவற்றிற்கெல்லாம் தண்ட வட்டி அதிகரித்து, கடைசியில் தேர்தல் இருக்கிறபோது, "3, 4 மாதங்கள் அந்தத் தண்ட வட்டியைக் கட்டாமல், அதுவும் அசல் முழுவதையும் கட்டினால், அபராத வட்டி தள்ளுபடி"; அதுதான். அசலை யாருக்கும் தள்ளுபடி செய்யவில்லை. அசல் முழுவதையும் கட்டினால், அவர்களுக்கு மட்டும்தான் தள்ளுபடி. நான் அதற்குள்ளேபோய் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நீங்களும் அமைச்சராக இருந்தீர்கள். எனவே, எங்களுடைய காலத்திலே நீடிக்கப்பட்டிருக்கிறது. மற்றவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அதற்குத் தீர்வு காணப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின்மூலமாகக் கட்டப்பட்டு வழங்கப்படுகிற வீடுகளுக்கு, அந்த நிலத்தினுடைய மதிப்பிற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், தவணையிலே அந்தத் தொகையைக் கட்டியபிறகு, அந்தப் பத்திரத்தைத் திரும்ப வாங்கச் செல்கிறபோது, "தற்போதைய market-படி, புதிய மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது; அதற்கான தொகையைக் கூடுதலாகச் செலுத்தினால்தான், பத்திரம் உங்களுக்கு வழங்கப்படும்" என்று நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக இன்றைக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புவது, ஏற்கெனவே நிலத்தினுடைய மதிப்பையெல்லாம் ஆய்வு செய்து, ஒரு விலையை நிர்ணயம் செய்தபிறகு, அந்தத் தொகையை, அந்த வீட்டு உரிமையாளர்கள், உபயோகிப்பாளர்கள் செலுத்திய பிறகு, புதியதாக ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி, கூடுதல் கட்டணம் வசூலிப்பது, அதைக் கட்டவில்லையென்றால், பத்திரத்தை வழங்க மறுப்பது போன்ற நடைமுறைகள் இன்றல்ல; தொடர்ச்சியாக இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, ஏற்கெனவே தாவா இல்லாமல் நிலத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், அவர் எழுப்புவதுபோன்ற கேள்விகளுக்கு இடமே கிடையாது. Tentative cost — உத்தேச விலை—என்று முதலில் நிர்ணயம் செய்யப்பட்டு, வழங்கப்படுகிறது. அதன்பிறகு, இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டதற்குப் பிறகு, இடைவெளியில் இருக்கக்கூடிய அந்தக் கட்டணங்களை வசூலிக்கவேண்டிய நிலைமையிருக்கிறது; அது ஒன்று.

மற்றொன்று; வழக்கு மன்றத்திற்குச் சென்றிருப்பார்கள். எங்களுடைய துறையினுடைய விதிமுறைகளின்படி, ஒரு வழக்கு மன்றத்திற்குச் சென்று, அங்கே தீர்ப்பாயம், மூன்று மடங்கு கூடுதலாக—ஏற்கெனவே, நில எடுப்புத் துறையின் சார்பில் guideline value or market value நிர்ணயிக்கப்படுகின்றது; அப்படி நிர்ணயித்ததைக் காட்டிலும், வழக்கு மன்றத்திலே மூன்று மடங்குத் தொகையைக் கூடுதலாக—தரத் தீர்ப்பளித்திருந்தால், நாங்கள் court-க்குச் செல்லவேண்டுமென்று துறையினுடைய விதியிருக்கிறது. இல்லையென்றால், இங்கே வாரியத்திற்கு sur-charge வரும். எனவே, அந்த முறையிலே appeal-க்குச் செல்ல வேண்டிய காரணம் ஏற்படுகிறது. வேறு பல காரணங்கள், நில உடைமையாளரிடத்திலேயிருந்து நில எடுப்பின்போது வழக்கு மன்றத்திற்குச் செல்வது, அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலமாக இருக்கலாம்; நில மாற்றம் செய்யப்படாமல் இருக்கலாம்; இப்படிப் பல்வேறு காரணங்களால், தொடக்கத்தில் உரிய விலையை நிர்ணயம் செய்யமுடியாமல், இயலாமல், tentative cost என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இறுதி விலையை நிர்ணயம் செய்கிறபோது, அது மாற்றியமைக்கப்படுகிறதேயொழிய, அதற்கு இரண்டு விலைகள் எப்பொழுதும் நிர்ணயிக்கப்படுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு வீட்டு வசதிப் பிரிவு, பள்ளிப்பாளையம்–I திட்டத்தின்கீழ், 1994 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட நில மதிப்பு ரூ.70,400/–. அதற்குப்





பின்னாலே ரூ.1,05,700/– என்று மறு நிர்ணயம் செய்யப்பட்டு, 15% அபராத வட்டியோடு கட்டவேண்டுமென்று கூறியுள்ளார்கள். வீட்டு வசதி வாரியத்தால் ஒப்படைக்கப்பட்ட வீடுகளிலுள்ள அத்தனை பேரும், இப்பொழுது அசலைக் கட்டத் தயாராக இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை அருள்கூர்ந்து கவனித்து, அவர்களுக்கு அந்தப் பட்டா கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10–20)

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 15% தண்ட வட்டி வசூலிப்பதாக, இப்பொழுதுகூட சொல்கிறார்கள்; அது வட்டியே அல்ல. மத்திய அரசினுடைய சட்டப்படி, நில உடைமையாளர்களுக்கு நாங்கள் செலுத்திய தொகையைத்தான் உங்களிடத்திலே வசூலிக்கிறோம். இது தவறான முறையிலே பிரச்சாரம் செய்யப்பட்டு, வட்டி எதற்குக் கேட்கிறீர்கள்; வட்டி இல்லாமல் தள்ளுபடி செய்துவிட்டால், நிலத்தின் விலையை நாங்கள் திருப்பிச் செலுத்துகிறோம் என்று சொல்கிறார். Tentative cost-க்கும், இறுதி விலைப் பட்டியலுக்கும் இடைவெளியிலே இருக்கக்கூடிய தொகையைக் கட்டுவோமேயொழிய, வட்டியைச் செலுத்தமாட்டோம் என்று சொலகிறார்கள். இதுதான் கால தாமதத்திற்குக் காரணம். வட்டி நாங்கள் விதிப்பதல்ல. எங்களுடைய துறையினுடைய இலாபத்திற்காக விதிப்பதும் அல்ல. சட்டப்படி நில உடைமையாளர்களுக்கு வட்டி செலுத்துகிறோம். அந்த வட்டியைத்தான் கட்டுமாறு நம்முடைய ஒதுக்கீடுதாரர்களுக்கு அது பிரித்து வழங்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வட்டியும் சேர்த்துக் கட்டச் சொல்லி அவர்களுக்கு ஆலோசனை வழங்குவார் என்று சொன்னால், உடனடியாக அதற்கான அந்த உத்தாவுகளை உங்கள் முன்னிலையிலேயே வழங்கி, அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினரை வைத்தே, அவர்களுக்கு விநியோகிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 166. மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 3

**166—**

**மருத்துவக் கல்லூரி**

***2505—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் மருத்துவக் கல்லூரி நிறுவ, அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் பகுதி கல்வியிலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய பகுதி. அதோடுமட்டுமல்ல; அங்கே பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அங்கு அவர்கள் வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வேறு எதுவும் இல்லை. படிப்பதற்கு இங்கேயிருந்து பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியின் முன்னேற்றத்தினைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் மறு ஆய்வு செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அது பின்தங்கிய மாவட்டம் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எல்லா மாவட்டங்களிலும், அரசு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்ற



2007 மே 3]

கொள்கை உடையவர்கள். எதிர்காலத்திலே நிதிநிலைக்கேற்றாற்போல, நம்முடைய பெரம்பலூர் மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி அமைப்போம் என்று சமீபத்திலே அறிவித்தார். இது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்றப் பொன்விழாக் காலம். அந்தக் காலத்தை, அந்த வரலாறை நினைவுகூருகின்ற வகையிலே, அதற்குச் 'சட்டமன்றப் பொன்விழா நினைவுக் கல்லூரி' என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அறிவிப்பாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலே இரண்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த இரண்டுக்கும் சேர்த்து 200 கோடி ரூபாய் அளவுக்கு நிதியை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலே இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**167—**

**கோயில் வருமானம்**

***5335—திரு. கோ. அரி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியைத் திருத்தணி நகர மக்களின் அடிப்படை வசதிகளுக்கு ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

[2007 மே 3

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் வருமானம், இத்திருக்கோயில் மற்றும் உப திருக்கோயில்களுடைய மேம்பாடு, பக்தர்களின் நலன், நலத் திட்ட உதவிகள் ஆகியவற்றிற்கே போதுமானதாக உள்ளது. திருக்கோயில் நிதியினை தினசரி பூசை, திருப்பணி மற்றும் இந்து சமய அறக்கொடைகள் தொடர்புடைய செயல்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்திட இயலும் என்பதால், இத்திருக்கோயிலின் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை, திருத்தணி நகர மக்களின் அடிப்படை வசதிகளுக்கு ஒதுக்கித் தர இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், அறுபடை வீடுகளுள் முக்கியமான ஒன்று. அதற்கு அருகில் உலகப் புகழ்பெற்ற திருப்பதி வெங்கடாஜலபதி திருக்கோயிலும் அமைந்துள்ளது. திருத்தணிக்கு வருடந்தோறும் சுமார் ஒரு கோடி பக்தர்கள் வருகிறார்கள். திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு, சுமார் 11 கோடி ரூபாய்க்குமேல் வருட வருமானம் வருகிறது. ஆக, அந்த 11 கோடி ரூபாய் வருமானத்திலே, 7 கோடி ரூபாய் அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோக, 4 கோடி ரூபாய் இந்து சமய அறநிலையத் துறையின்மூலமாக மற்ற திருக்கோயில்களுக்கும் செலவிடப்படுகிறது. அதிலே ஒரு பகுதியை திருத்தணி நகர மக்களுடைய வளர்ச்சிக்காகவும், அங்கு வந்து செல்லுகின்ற பக்தர்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காகவும் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்து சமய அறநிலையத் துறையின் விதியையும் தளர்த்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, திருத்தணி நகரத்திலே அமைந்திருக்கின்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலினுடைய வருமானத்தின்மூலமாக அங்கே இருக்கின்ற ஏழையெளிய மாணவ மாணவிகள் பயன்பெறுகின்றவகையிலே ஒரு பொறியியல் கல்லூரி ஒன்றை அறநிலையத் துறையின்மூலமாக அமைத்து, அந்த மாணவர்கள் இலவசமாகப் பயில்வதற்கும் இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2007 மே 3]

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள் சொல்வதெல்லாம் சரி. நீங்கள் உண்மையிலேயே திருத்தணி மக்களுடைய தேவைகளை, அடிப்படை வசதிகளைச் செய்துதர சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் விரும்பினால், அந்த அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், எல்லா நகராட்சிகளும், பேரூராட்சிகளும் வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றி, அடிப்படை வசதிகளைச் செய்வதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் தந்து கொண்டிருக்கிறார்கள்; ஆகவே, உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டால், அவர்கள் நிச்சயமாகச் செய்து தருவார்கள். கல்லூரி தொடங்குவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அறநிலையத் துறையின் சார்பில் ஏற்கெனவே ஐந்து கல்லூரிகள், பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் கேட்டதற்கு, வாய்ப்புகள் இருப்பின், எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி, நீங்கள் கேட்க வேண்டிய துறையே வேறு. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. கோ. அரி:** போதுமான அளவிற்கு வருமானம் அந்தக் கோயிலுக்கு இருக்கிறது. உபரியாக இருக்கின்ற அந்தப் பணத்திலே அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும்; செயல்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கிறார். ஆனால், அந்தத் திருக்கோயிலினுடைய நிர்வாகத்தின்கீழ், 25 உப கோயில்கள் இருக்கின்றன. அதையும் தாண்டி, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 40,000 திருக்கோயில்களில், அன்றாட பூசைகள் செய்வதற்குக்கூட

வழியில்லாதவை ஆயிரக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. ஆகவே, இந்தத் திருக்கோயில்களில் உபரியாக வரக்கூடிய நிதியை அந்தத் துறைக்கே பயன்படுத்துவதுதான் சரியாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இந்த முறை பின்பற்றப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**168—**

## நூலகம்

***491—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில், மாவட்ட நூலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 252, பள்ளிக் கல்வி, நாள் 5-12-2006-ல், கிருஷ்ணகிரியில், மாவட்ட நூலகம் தொடங்குவதற்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த, மாவட்ட மைய நூலகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாகவே கேட்கப்பட்ட கேள்வி இது. 2007, கடந்த ஜனவரி 3 ஆம் தேதியன்று கிருஷ்ணகிரியிலே மாவட்ட மைய நூலகம் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. ஆகவே அந்த மைய நூலகத்தை ஆரம்பிப்பதற்கு உத்தரவளித்த மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், எங்களது உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும், எங்களது மாண்புமிகு பள்ளிக் கல்வித்





துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, ஒரு மைய நூலகம், 21 கிளை நூலகங்கள், 51 ஊர்ப்புற நூலகங்கள், 21 பகுதி நேர நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த நூலகங்கள் எல்லாம், தருமபுரி மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டபோது, நிதி சம்பந்தப்பட்ட உத்தரவு வராத காரணத்தினால், இன்றுவரையிலே அவை செயல்படுவதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலையிலே இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருமபுரி மாவட்டத்திலே அந்த மைய நூலகத்திலிருந்து பிரிக்கப்பட்டதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அந்த நூலகங்கள் எல்லாம் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்ட நூலகம் அமைக்கப்படுகிறபோது, அந்த மாவட்டத்திலே ஏறத்தாழ 100 நூலகங்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போலப் பிரித்து அமைக்கப்பட்டன. அதற்கான பணியிடங்களும்கூட—31 புதிய பணியிடங்கள்—அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவர் கேட்டுக்கொண்டிருப்பதைப்போல, தேவையான நிதியினை, தருமபுரி மாவட்ட நூலக ஆணைக் குழுவிலிருந்து பிரித்து, விரைவிலே வழங்குவதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

[2007 மே 3

**169—**

## சாலை வசதி

***2549—திரு. ச. லட்சுமணன்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கணி முதல் டாப் ஸ்டேஷன் வரை செல்ல சாலை அமைக்க வனத் துறைமூலம் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போடிநாயக்கனூர் தொகுதி, குரங்கணி முதல் டாப் ஸ்டேஷன் வரை சாலை அமைக்கின்ற திட்டம், அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதியானது, மலைகள் சூழ்ந்த பகுதியாகும். குரங்கணியிலிருந்து டாப் ஸ்டேஷன் வரை செல்கின்ற பாதையில், முட்டம், கீழ்முட்டம், மேல்முட்டம், சாலைப்பாறை, சென்ட்ரல், முதுவாக்குடி, கொழுக்குமலை மற்றும் சோலையாத்துக்குடி ஆகிய கிராமங்கள் உள்ளன. குரங்கணியிலிருந்து டாப் ஸ்டேஷன் 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இதில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஏற்கெனவே சாலை போடப்பட்டுள்ளது. பாக்கி 10 கிலோ மீட்டர் தூரத்தில், 5 கிலோ மீட்டர் தூரம், தனியார் பட்டா நிலம் உள்ளது. எஞ்சிய 5 கிலோ மீட்டர் தூரம், வனத் துறை வசம் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தயவுகூர்ந்து, அங்கு சாலை வசதியைச் செய்து தருவாரா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கோருகின்ற சாலை, கொட்டக்குடி காப்பு நிலத்தில் அமைந்துள்ளது. கொட்டக்குடி காப்பு நிலம், 1882 வனப் பாதுகாப்புச் சட்டப்படி, 1978 ஆம் ஆண்டு அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியாகும் அவர் கேட்கின்ற அந்தக் குரங்கணி பகுதி, கடல் மட்டத்திலிருந்து



2007 மே 3]

698 மீட்டர் உயரத்தில் உள்ளது. டாப் ஸ்டேஷன், கடல் மட்டத்திலிருந்து 2,014 மீட்டர் உயரத்தில் உள்ள செங்குத்தான பகுதி. எனவே, அந்த இடத்தில் சாலை அமைக்க வேண்டுமானால். 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்க வேண்டுமானால்கூட, செங்குத்தான பகுதியில் சாலை அமைக்க வேண்டுமானால், அதிக அளவில் கொண்டை ஊசி வளைவுகள் கொண்ட பாதையாக அமைக்க வேண்டும். அப்போது, அங்கே நாம் அதிகப்படியான நிலங்களைச் சேதப்படுத்துகின்ற சூழ்நிலை உருவாகும். அந்தப் பகுதி, இயற்கைச் சூழல் நிறைந்த அடர்ந்த காட்டுப் பகுதியாகும். அது, வெக்காலி, வேங்கை, நெல்லி, முள்முருங்கை போன்ற தாவர வகைகளும், அதேபோல, காட்டெருமை, காட்டுப் பன்றி, மான், கரடி, சிறுத்தை, மர அணில் போன்ற வன விலங்குகளும் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதி, யானைகள் நடமாட்டமுள்ள பகுதி. கொடைக்கானல் வன விலங்குகள் சரணாலயம் அமைக்க கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில், இந்தப் பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், போடிக்கு நீர் தருகின்ற நீராதாரம் உள்ள பகுதியாகும். அந்த நகராட்சியிலேகூட, 14–5–2002–லே தீர்மானம் ஒன்றின்மூலம், அந்தப் பகுதியிலே சாலை அமைக்கக்கூடாது; அந்தப் பகுதியைச் சேதப்படுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், வைகையாற்றிற்குப் பெருமளவு நீரைத் தருகின்ற ஒரு நீர்ப்பிடிப்புப் பகுதியாகும். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக, அந்தப் பகுதியிலே சாலை அமைக்கின்ற வாய்ப்பு இல்லை. மூணாறு வழியாக டாப் ஸ்டேஷன் செல்வதற்கு ஏற்கெனவே சாலை வசதி இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடியிலிருந்து மூணாறுக்கு டாப் ஸ்டேஷன் வழியாக 116 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. ஆனால், போடியிலிருந்து டாப் ஸ்டேஷன் 29 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. கிட்டத்தட்ட 90 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. அந்தப் பகுதியிலே விளையக்கூடிய பொருட்களான ஏலக்காய், காபி, மிளகு, இலவம்பஞ்சு, எலுமிச்சை ஆகியவற்றை எடுத்து வருவதற்கு விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்தச் சாலை அமையும்பட்சத்திலே, அங்கேயிருக்கக்கூடிய மலைவாழ் மக்கள் பெரிதும் பயனடைவார்கள். அந்தச் சாலை அமையும்பட்சத்தில் சுற்றுலாத் துறையின்மூலமாக

அரசுக்கு வருவாயும் அதிகரிக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, அந்தச் சாலையை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் துறையின்மூலம் கிடைத்த தகவலின்படி, அங்கேயிருக்கின்ற சென்ட்ரல் ஸ்டேஷன் என்ற இடத்தில் 150 மக்களும், டாப் ஸ்டேஷனில் 110 கிராம மக்களும்தான் அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் குறைவாக வசிக்கின்ற காரணத்தினாலே, சாலை வசதி செய்துதர வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அந்தப் பகுதியிலே சாலை அமைப்பதற்கு இருக்கின்ற சிரமங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், மீண்டும் அதிகாரிகளிடம் அதுபற்றிப் பரிசீலித்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன்.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறியுள்ளமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நேற்றையதினம் வனத் துறையின்மூலமான அறிவிப்புகளிலே, போடி தொகுதியில், தேவாரம்–சாக்குலத்துமெட்டு சாலை அமைத்துத் தருவதாக அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஓ. சுப்பிரமணியம்.

முற்பகல் 10–35

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்குத் தொடர்பில்லாத ஒரு பகுதியாக, தெங்குமாஹடா என்கின்ற பகுதி வனத் துறையிலே அமைந்திருக்கின்றது. அந்தப் பகுதிக்கு, பவானிசாகர் வழியாகத்தான் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. 36 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இந்தப் பாதை முழுவதும், வனப் பகுதியிலேயே



செல்லுகின்றது. 10 கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலையாக இருக்கின்றது. மீதி 26 கிலோ மீட்டருக்கும் தார்ச் சாலை அமைத்துக் கொடுப்பதற்கு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், வனத் துறைச் சாலைகள் மேம்பாட்டிற்கு, இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்த நிதியைப் பயன்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் உள்ள சாலைகள் பராமரிக்கப்படும். அந்த வகையிலே, அந்தச் சாலையும் பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**170—**

## பால் கொள்முதல்

***5383—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதியில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் கொள்முதல் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆத்தூர் தொகுதியில் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் வழங்கப்படுகிறது. 2004 ஆம் ஆண்டில் நிலுவையில் வைக்கப்பட்டிருந்த பால் பணம் முழுவதும், தற்பொழுது வழங்கப்பட்டுவிட்டது. மேலும், தற்பொழுது 1-11-2006 முதல் 31-12-2006 முடிய, 1,052 சங்கங்களுக்கு ரூ.1,579.69 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.

[2007 மே 3

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே, பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடத்திலும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், பால் உற்பத்தி விலையைக் கூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விலையை உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். அதற்காக நான் முதலிலே நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, இப்பொழுது 15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகின்றது. கடந்த ஆட்சிக் காலத்திலே இரண்டு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை செய்யப்பட்டது. இருந்தாலும்கூட, இப்பொழுது ஒரு மாதம், ஒன்றரை மாதங்கள் கழித்துதான் பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது என்று பால் உற்பத்தியாளர்கள் என்னிடத்திலே தொலைபேசிமூலமாகத் தெரிவித்தார்கள். இப்பொழுது தவிடு, பருத்திக்கொட்டையினுடைய விலை உயர்ந்திருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு உரிய நேரத்தில், அதாவது, 15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்தால், அவர்கள் பால் உற்பத்தியை இன்னும் அதிகரிக்க முடியும் என்று தெரிவித்து, அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணையை ஏற்று, தற்பொழுது 10 நாட்களுக்கு ஒரு முறை, பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஆத்தூர் தொகுதியில், அனைத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 2004–2005–ல் மூன்று கோடி ரூபாய் பாக்கி இருந்தது. தற்பொழுது, முழுவதுமாக அவர்களுக்குப் பால் பணம், பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், 23–4–2007–ல் 1.02 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்னொரு முக்கியமான தகவலாக, தமிழகத்தில் எந்தப் பால் உற்பத்தியாளருக்கும் இன்றைய தேதிவரையில் ஒரு ரூபாய்கூட பாக்கி இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.



2007 மே 3]

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். இருந்தாலும், அந்தப் பால் பணம் பட்டுவாடா என்பது, பால் உற்பத்தியாளர்களுக்குச் சேர வேண்டிய போனஸ் என்று சொல்லக்கூடிய, சங்கத்தில் உள்ள அந்தத் தொகையிலிருந்துதான், 15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் வரவில்லையென்று சொன்னால்—அந்தப் பால் உற்பத்தியாளர்கள் சேர்த்து வைக்கக்கூடிய போனஸ் பணத்திலேயிருந்துதான்—வழங்கி வருகின்றார்கள். அப்படி வரும்பொழுது, வருடக் கடைசியில் பால் உற்பத்தியாளர்களுக்குப் போனஸ் வழங்குகின்ற நேரத்தில் காலதாமதம் ஏற்படுகின்றது. பால் உற்பத்தியாளர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் போனஸ் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், சங்க உறுப்பினர்களுக்குத் தர வேண்டிய பால் பணம் நிலுவை, ரூபாய் 3.15 கோடி முழுவதும் 20–4–2007–லே வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், கடந்த காலத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணம் ரூ.3.15 கோடி பாக்கி இருந்தது. அது மட்டுமல்லாமல், மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டிய பால் பணம், கடந்த ஆண்டு 51.44 கோடி ரூபாய் நிலுவையில் இருந்தது. தற்போது ரூ.40.50 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 10 கோடி ரூபாய் கடனை அடைத்திருக்கிறோம். வருங்காலத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கிணங்க, அதனைப் பரிசீலனை செய்து, போனஸ் கொடுக்கக்கூடிய அந்தத் தொகைகூட, காலத்தில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 10-40*

## 2. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று விஷயங்கள், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளாக, வந்தவை தகவல் கோருகின்ற முறையில் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. முதலில் முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் மகன்கள் வறுமையில் உள்ளதால், அவர்களுக்கு அரசு உதவி வழங்கவேண்டிய அவசியம் குறித்தும், இன்னொன்று, அண்மையிலே தமிழகத்திலே வீசிய சூறாவளிக் காற்று மழையினால், பல மாவட்டங்களில் வாழை மற்றும் பிற பயிர்கள் சேதம் அடைந்தது மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவர் உயிரிழந்தது மற்றும் அதற்கு அடுத்ததாக, பிளாஸ்டிக் கழிவுகளால், சென்னை மாநகரத்தின் சுற்றுப்புறச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்படைவது குறித்தும் என்ற இந்த மூன்று விஷயங்களையும் இன்றைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் வாரிசுகளுக்கு அரசு உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கக்கன் அவர்களின் மகன்கள் வறுமையில் உள்ளதால், அவர்களுக்கு அரசு உதவி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் . . . (மணியடிக்கப்பெற்றது)





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய ஆட்சியிலே, உள் துறை அமைச்சராக மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர் வணக்கத்திற்குரிய கக்கன் அவர்கள். கறை படியாத கரத்திற்குச் சொந்தக்காரர் என்ற பெயர் எடுத்து, தனக்கென வாழா பிறருக்கென வாழ்ந்த பெருந்தகையாகத் திகழ்ந்த அன்னாருடைய குடும்பத்தில், அவருடைய கடைசி மகன் திரு. நடராஜ மூர்த்தி என்பவர், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலே பயின்று கொண்டிருந்தவருக்கு, மனநலம் பாதிக்கப்பட்டு, அவர் 1987 ஆம் ஆண்டிலிருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்று வந்துகொண்டிருக்கிறார். எந்தவிதமான ஆதரவும் இல்லை. ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, மனநலம் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே, பல ஆண்டுகளாக, 18 ஆண்டுகளாக இப்படிச் சிகிச்சையில் இருந்துகொண்டிருக்கக்கூடிய அந்த நடராஜ மூர்த்தி அவர்களுக்கு, ஏதாவது சிறப்புச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து, அவரைக் குணமடையச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, இன்னொரு மகன் பாக்கியநாதன் என்பவர் குடியிருப்பதற்குக்கூட வீடில்லாமல், அவருடைய மகன் கண்ணன் என்பவர் வேலையின்றி மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்கள்மீது கருணை கொண்டு, மிகச் சிறப்பாக உள் துறையில் பணியாற்றி, தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த அந்தப் பெருந்தகை கக்கன்ஜி அவர்களுடைய குடும்பத்திற்கு அரசு நிதி உதவி செய்யுமா; அதேபோல, சிறப்புச் சிசிக்சைக்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முன்னாள் உள் துறை அமைச்சராகத் தேர்ந்த, மறைந்த பெரியவர் திரு. கக்கன் அவர்களுடைய மகன் திரு. நடராஜ மூர்த்தி உடல் நலமும், குறிப்பாக மனநலமும் பாதிக்கப்பட்டு, 18 ஆண்டுகளாக சென்னை மனநல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இன்னொரு மகன் திரு. கே. பாக்கியநாதன் வறுமையில் வாடுவதாலும், அவரது மகன் திரு. கண்ணன் வேலையின்றி இருப்பதாலும், அரசு உதவி வழங்க வேண்டிய அவசியம் குறித்து

விவாதிக்க, சிறப்புக் கவன ஈர்ப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே அளித்துள்ளார்.

முற்பகல் 10–45

மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தைச் சேர்ந்த தமிழகத்தின் முன்னாள் உள் துறை அமைச்சர் கக்கன் அவர்களுக்கு திரு. பத்மநாபன், திரு. பாக்கியநாதன், திரு. சத்தியநாதன், திரு. காசி விசுவநாதன், திரு. நடராஜ மூர்த்தி, திருமதி கஸ்தூரி ஆகியோர் வாரிசுதாரர்கள். இவர்களில் திரு. பத்மநாபன், திரு. காசி விசுவநாதன் ஆகிய இருவரும் தற்போது உயிரோடு இல்லை. அவர்களுடைய வாரிசுதாரர்கள் நல்ல நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திரு. சத்தியநாதன், எம்.பி.பி.எஸ். படித்து, சென்னையில் மருத்துவராகப் பணிபுரிகிறார். திருமதி கஸ்தூரி, சென்னையில் வசித்து வருகிறார். இவருடைய கணவர் அந்தமானில் பொறியாளராக இருந்து ஓய்வு பெற்றவர். திரு. நடராஜ மூர்த்தி திருமணம் ஆகாதவர். அவர் மனநலம் குன்றி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அரசுப் பராமரிப்பில் உள்ளார். அவருக்குக் கீழ்ப்பாக்கம் அரசு மனநலக் காப்பகத்தில், இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மற்றொரு வாரிசுதாரரான 62 வயதுடைய பாக்கியநாதன், எந்தவித ஆதரவுமின்றி சிரமப்படுவதாகவும், அவருடைய மகன் கண்ணன் விவசாயக் கூலித் தொழிலாளியாக வேலை செய்துவருவதாகவும், இருவரும் சிரம நிலையில் இருப்பதாகவும், மதுரை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். அரசு விடுத்த செய்திக்குப் பிறகு, அவர் விசாரணை செய்து, இந்த விவரங்களைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, இந்த அரசு மிகுந்த அக்கறையோடு பரிசீலனை செய்ததில், முன்னாள் உள் துறை அமைச்சராகத் திகழ்ந்த, மறைந்த பெரியவர் கக்கன் அவர்களுடைய பேரன் கண்ணன், தாங்கள் வசிக்கும் கிராமத்திற்கு வெளியே நிலமோ, வீட்டுமனையோ பெற்றுக்கொள்ள தங்களுக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்துவிட்டதால், கக்கன் அவர்களுடைய புதல்வர் பாக்கியநாதன் அவர்களுக்கும், அவரது மகனும், கக்கன் அவர்களுடைய பேரனுமான கண்ணனுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வங்கியிலே கட்டி, அதன் வட்டியை அவர்களுடைய மாதச் செலவிற்கு வழங்க வகை செய்வதோடு, மேற்படி இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் கையிலே ரொக்க நிதியாக வழங்கவும் இந்த அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)





## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சூறாவளி மற்றும் மழையினால் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர்ச் சேதமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவர் உயிரிழந்ததும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அண்மையில் தமிழகத்தில் வீசிய சூறாவளிக் காற்று, மழையினால், பல மாவட்டங்களில் வாழை மற்றும் பிற பயிர்கள் சேதமடைந்துள்ளன; மற்றும், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவர் உயிரிழந்தது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. ஆர்.கே. பாரதி மோகன், திரு. ரெ. நெடுஞ்செழியன், திரு. எம்.வி.ஆர். வீரகபிலன், திரு. ல. ராதாகிருஷ்ணன், திரு. பி. தங்கமணி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. கோ. அரி, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. அருண்மொழிதேவன், திரு. கே.எஸ். விஜயகுமார், திரு. பி. பலராமன் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. ராம. சுப்புராம், திரு. பெ.சு. விஜயகுமார், திரு. விடியல் எஸ். சேகர், திரு. எஸ். ஜெயபால், திரு. எஸ். ஜாண் ஜேக்கப் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக திரு. சி. கோவிந்தசாமி, திருமதி ரா. லீமா றோஸ், திரு. ஞா. ஜாண் ஜோசப் ஆகியோரும், விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மேலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. துரை சந்திரசேகரன், திரு. பெ. காமராஜ், திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. சபா. இராஜேந்திரன் மற்றும் ம.தி.மு.க. சார்பாக திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. வீர. இளவரசன் ஆகியோர் விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக உரையாற்றலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22–4–2007 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினாலும், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த பல்வேறு மீனவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியும், அந்தப் பகுதியிலே இன்றைய வரையில் மீன் பிடிப்பதற்கே அந்தப் பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத ஒரு சூழல் இருப்பதாலும், 45 நாட்கள்

என்ற கால அளவிற்கு, கடலுக்குச் சென்று மீன் பிடிக்க முடியாத மீனவர்களுக்கு, பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரி போன்ற மாநிலத்திலும்கூட, அந்தக் கால அளவிற்கு ஆயிரம் ரூபாயையும், 60 கிலோ அரிசியும் வழங்குகின்ற நிலை இருப்பதையும், இப்படிப்பட்ட கடல் கொந்தளிப்பு ஏற்படுகின்ற காலங்களில், மீன் பிடிக்கச் செல்லாமல் இருக்கின்ற அந்த மீனவர்களுக்கு ஒரு நிவாரணத்தை வழங்கிடும்பொருட்டும், இந்தக் கடல் கொந்தளிப்பினால் ஜேம்ஸ் என்ற மீனவர் குடும்பத்திற்குப் போதிய நிதி உதவி வழங்கிடவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, இது புயலால் அங்கு ஏற்பட்ட சேதம் குறித்து உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம். *(குறுக்கீடு)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** சேதம்தான்; அதையும் சேர்த்துதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீனவர் பிரச்சினை இல்லை இது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை, இல்லை. அதையும் சேர்த்துதான் கொடுத்திருக்கிறேன் அதிலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எடுத்திருக்கின்ற சிறப்பு கவன ஈர்ப்பு, அங்கு புயலால் பாதிக்கப்பட்டது சம்பந்தமானது.

*பகற்பகல் 10–50*

**திரு. பி.கே. சேகர்பாபு:** சொல்லிவிடுகிறேன். அதேபோன்று, கரூர் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற அந்தப் புயல், மழையினால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாழைத் தோட்டங்கள் சேதமடைந்திருப்பதையும், பல்லாயிரக்கணக்கான ஏக்கரிலே இருந்த விளை நிலங்கள் நாசப்பட்டிருப்பதாலும், திருத்தணியிலே 19–4–2007 அன்று ஏற்பட்ட பலத்த மழையினால் 10 ஏக்கர் பப்பாளித் தோட்டமும் மற்றும் திருத்தணி ஒன்றியத்தைச் சுற்றிப் பெய்த பேய் மழையின் காரணமாக, 5,000 ஏக்கர் அளவிலே இருக்கின்ற வாழைகள் நாசமடைந்திருப்பதாலும், தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு பகுதிகளில் நேற்றும், இன்றைக்கும்கூட ஊட்டி போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற அடாத மழையினால் ஏற்பட்டிருக்கிற வெள்ளச் சூழலின் காரணமாகவும், அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள், தினக் கூலிகளாகச் சென்று தங்களுடைய பிழைப்பை நடத்தி வருகின்ற அந்தப் பகுதி மக்களுக்கு இந்த அரசு—கடந்த காலத்தில், சுனாமி, மழை, வெள்ளம் போன்ற இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோது எப்படி அரசு விரைந்து செயல்பட்டு அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்றியதோ,





அதேபோல்—போர்க்கால அடிப்படை நடவடிக்கையாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தினை இந்த அவையிலே ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் வட்டாரத்தில், கடையாலுமூடு பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியில், கடந்த சில நாட்களுக்குமுன் மழையும், புயலுமாகக் கூடியதில், 12,000 ரப்பர் மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டுள்ளன. 7,000 வாழைகள் சாய்க்கப்பட்டுள்ளன. அதேபோல, 154 வீடுகளும் இடிந்துவிட்டன. இந்தப் பாதிப்பு, அந்தப் பகுதி மக்களையே, குமரி மாவட்ட மக்களையே கலங்க வைத்துள்ளது. கடையாலுமூடு பகுதியில், ரப்பர் மரங்களெல்லாம் முறிந்து, அந்த மக்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ரப்பர் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற அந்த மக்கள், பரிதாப நிலையில் காணப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல், திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியில் சூறாவளிக் காற்றால் இலட்சக்கணக்கான வாழைகள் நாசமாகிவிட்டன. விவசாயிகளுக்கு அதற்கான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே, தென்னை மரங்களும் அதிகமாக சாய்ந்துள்ளன. 100 ஏக்கருக்குமேல் தென்னை மரங்கள் நாசமாகி உள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அதையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு, விவசாயிகளுக்குத் தகுந்த நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, காங்கேயம் தொகுதியில், ஈத்தவளையில் வாழைகள் நாசமாகிவிட்டன. அதற்கும் அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வார காலமாக, தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களிலே, குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, ஈரோடு, சேலம், திருவள்ளூர் மாவட்டங்களிலே, அதேபோன்று கரூர் மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்ததாலும், அப்போது ஏற்பட்ட

புயலாலும், பெரும்பாலான விவசாயிகள் பாதிப்படைந்துள்ளார்கள். குறிப்பாக, வாழை விவசாயிகளுக்கும், தென்னை விவசாயிகளுக்கும் மிக அதிக அளவிலே பாதிப்பு ஏற்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய எதிர்காலத்தை சற்று நாம் சிந்தித்து, அவர்களுக்கு உடனடியாக நட்ட ஈடு வழங்குவதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று, தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களிலே நடந்திருக்கிற, இரண்டு வார காலமாக நடந்திருக்கிற இந்தச் சம்பவ இடத்தை நம்முடைய அதிகாரிகள் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கும் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு, மேட்டூர் பகுதியிலே இருக்கிற புதூர் துரைராஜ் என்பவருடைய தோட்டம் முழுவதுமாக, நவப்பட்டி ஊராட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று சின்னமனூர் பகுதியிலே இருக்கிற குச்சனூர், புலிக்குத்தி போன்ற பகுதிகளிலும் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கெல்லாம் உரிய நிவாரணத்தை உடனடியாக வழங்குவதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

*முற்பகல் 10–55*

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–4–2007 அன்று ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தையொட்டி, கடல் கொந்தளிப்பின் காரணமாக, சின்னத்துறை என்ற ஊரைச் சார்ந்த திரு. ஜேம்ஸ் என்ற 37 வயதுடைய இளைஞர் மரணமடைந்தார். மேலும், வள்ளவிளை என்ற பகுதியைச் சார்ந்த திரு. தாசன் என்பவருக்குச் சொந்தமான படகு, கடல் அலைகளால் சின்னாபின்னமாக அடித்து நொறுக்கப்பட்டிருக்கிறது. குமரி மாவட்டத்தில் பலத்த மழையுடன் கூடிய சூறாவளிக் காற்று வீசியதில், மின் கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கியதால், திற்பரப்பை அடுத்த கொச்சூட்டுப்பாறை என்ற ஊரைச் சார்ந்த 60 வயதுடைய தங்கம்மா என்பவர் மரணமடைந்தார். விளவங்கோடு, திருவட்டாறு தொகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன. சில வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. பதினாயிரத்திற்கும் அதிகமான





வாழை, ரப்பர் போன்றவை சூறாவளிக் காற்றினால் அடித்து நாசம் செய்யப்பட்டுள்ளன. ஏராளமான மின் கம்பங்கள், விழுந்து நொறுங்கியுள்ளன. சேதமடைந்த வீடுகளுக்கு உடனடியாக ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. விரைந்து செயல்பட்ட அரசுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இத்தொகை போதுமானதாக இல்லை. உண்மையிலேயே சொல்லவேண்டுமானால், சிலர் போதுமான பணம் இல்லாத காரணத்தினால், இதுவரையிலும் தங்களுடைய வீடுகளைச் சரிசெய்ய முடியாத நிலையிலே உள்ளார்கள். வாழைகள் பெரும்பாலும் குலைதள்ளிய வாழைகளாக இருக்கின்றன. ரப்பர் பெரும்பாலும் பால் எடுக்கத் தொடங்கி, இரண்டு, மூன்று வருடங்கள்தான் ஆகின்றன. ஒரு வாழை குலைதள்ளுவதற்குக் குறைந்தபட்சம் நூறு ரூபாய் வரையிலே செலவு செய்ய வேண்டியிருக்கிறது. 6 முதல் 8 மாத காலங்கள் வரை நெற்றி வியர்வை சிந்தி, உழைத்து, இந்த நிலை வந்தபோது, 'வெண்ணெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி உடைந்தது' போல, விவசாயிகள் மிகவும் பரிதாபமான நிலையில் உள்ளார்கள்.

கடந்த 19–4–2007 அன்று, கிருஷ்ணகிரி மாவட்டம், அரூர் தொகுதியில், ஊத்தங்கரை, ரெட்டிவலசை கிராமத்தில் 5,500 நேந்திரம் வாழைகள் இதுபோன்று நாசமடைந்துள்ளன. எனவே, அருள்கூர்ந்து, வீடு, படகு, வாழை, ரப்பர், உயிர் பலி போன்றவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதங்களை நியாயமான முறையில் பரிசீலனை செய்து, மதிப்பீடு செய்து, உரிய இழப்பீட்டை வழங்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மலையோரப் பகுதிகளில் அடிக்கடி ஏராளமான மின் கம்பங்கள் இயற்கைச் சீற்றத்திற்குத் தலை வணங்கும் நிலை ஏற்படுகின்றது. இதனால்தான், மலையோரப் பகுதிகளில் underground cable போடவேண்டுமென்று நான் ஏற்கெனவே வலியுறுத்தி வருகின்றேன். எனவே, அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் நேற்று இரவு இலேசான மழையுடன் வீசிய சூறாவளிக் காற்றில், சுமார் ஆயிரம் ஏக்கர் வாழைப்

பயிர்கள் சேதமடைந்துள்ளன. அதேபோன்று கடந்த 10 நாட்களுக்கு முன்பு வீசிய சூறாவளிக் காற்றில், கிருஷ்ணராயபுரம் தொகுதியில், வாழைப் பயிர்களும், வெற்றிலைக் கொடிக்கால்களும் சேதமடைந்துள்ளன. அதேபோல, திருவையாறு தொகுதியில், திருக்காட்டுப்பள்ளியிலும், குளித்தலை தொகுதியில், குளித்தலை பகுதியிலும், லால்குடி தொகுதியில், மணிகண்டம் ஒன்றியத்திலும் வாழைப் பயிர்கள் சேதமடைந்துள்ளன. விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். சரியான இழப்பீடுகள் கிடைக்காத விவசாயிகள், கடன் சுமையின் காரணத்தால், கடந்தகாலங்களிலே தற்கொலை செய்துகொண்ட நிகழ்ச்சிகளெல்லாம் நடந்திருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில், பாதிக்கப்பட்ட 20 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவரைச் சந்தித்து, மனு கொடுத்திருக்கின்றார்கள். எனவே, எங்கெல்லாம் மக்கள் பாதிக்கப்படுகின்றார்களோ, துயரப்படுகின்றார்களோ,

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு”

என்ற குறளுக்கேற்ப, அங்கே தன் உதவிக் கரத்தை நீட்டியிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தகுந்த நிவாரணத் தொகையை அளித்து, விவசாயிகளுக்கு உதவிட வேண்டிய நடவடிக்கையை எடுக்குமாறு, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன். நன்றி.

(முற்பகல் 11–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை மழை, மக்களுக்கு வெப்பத்தைத் தணித்து, மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், ஒரு பக்கம் சூறாவளிக் காற்றாக அடித்து, பயிர்களுக்குச் சேதங்களை உருவாக்கியிருக்கிறது. குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தேனி, எங்கள் விருதுநகர் மாவட்டப் பகுதிகளில், இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில், சுந்தரபாண்டியம் பகுதியில் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் ஏற்பட்ட அந்த சூறாவளி மழையில் சிக்கி, சேதம் அடைந்திருக்கின்றன.





பல இடங்களில் கொய்யாவும், சப்போட்டா மரங்களும் திருகி, அந்தக் கொப்புகள் முழுமையும் ஒடிந்து சேதம் அடைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட சேதங்கள் ஸ்ரீவில்லிப்புத்தூரினுடைய, மானகச்சேரி பகுதியிலும் நடந்திருக்கிறது. எனவே, நமது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி, பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்கிவருகின்ற இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் ஓராண்டுக் காலம், பல ஆண்டுக் காலம் என்று பாதுகாத்து வைத்திருக்கின்ற அந்தப் பயிர்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்கவேண்டும். வாழை விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் ஏக்கருக்கு ரூபாய் 2 இலட்சமாவது நிதியுதவி வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 19 மற்றும் 22 ஆகிய தேதிகளில் சூறாவளிக் காற்றோடு கனமழை பெய்ததினால் தமிழகத்திலே, கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வாழை, பாக்கு, தென்னை மற்றும் வெற்றிலைக் கொடிக்கால் முற்றிலும் நாசம் அடைந்திருக்கின்றன. தேனி மாவட்டம், சின்னமனூர் ஒன்றியத்தில் அய்யம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர், மரியாதைக்குரிய அண்ணாதுரை அவர்களுடைய வாழைத் தோட்டத்தில் கிட்டத்தட்ட 4 ஆயிரம் வாழை மரங்கள் சேதமாகியிருக்கின்றன.

அதேபோல, சின்னமனூர் ஒன்றியம், குச்சனூரில் லீலாவதி என்ற பெண்ணினுடைய தென்னந்தோப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை இந்தக் காற்று சாய்த்திருக்கிறது. ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் மரிக்குண்டு அருகேயுள்ள வீரசின்னம்மாள்புரம் என்ற ஊரில் வாழ்ந்து வருகின்ற செல்லமணி என்பவர், மின்னல் தாக்கி இறந்திருக்கின்றார். அதேபோல, திருச்சி மாவட்டத்தில் லால்குடி, திருவெறும்பூர், முள்ளிப்பள்ளம், எட்டறை போன்ற ஊர்களில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நேந்திரன், பூவன், பச்சை வாழை மரங்கள் இந்தக் காற்றிலே சாய்ந்திருக்கின்றன.

ஈரோடு மாவட்டத்தில் 40 ஆயிரம் வாழை மரங்களும், அதைப்போல, திருத்தணி, பள்ளிப்பட்டு ஆகிய ஊர்களில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்களும் சேதம் அடைந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட அந்த விவசாயிகளின் ஏழ்மையையும், நஷ்டத்தையும்,

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2007 மே 3

கஷ்டத்தையும் கருத்தில்கொண்டு, அவர்களுக்கு முழு நிவாரணத் தொகை வழங்குவதோடு, வேளாண்மைக் கூட்டுறவுத் தொடக்க வங்கிகளில் கடன் எடுத்து விவசாயம் செய்து வருவதால், அந்தக் கடனை முழுமையாக இரத்து செய்வதோடு, தொடர்ந்து விவசாயம் செய்வதற்கு மேலும் கடன் தந்து உதவவேண்டுமென்று இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

*(முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள், இந்த அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையில், இங்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் 13, 14, 19, 22 மற்றும் 24 ஆகிய தேதிகளில் மழை மற்றும் சூறாவளிக் காற்றால் வாழை, வெற்றிலை, ரப்பர், பப்பாளி போன்ற பயிர்கள் சேதமடைந்தது இந்த அரசினுடைய கவனத்திற்கு வந்துள்ளது.

இந்தச் சேதம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலும், மாவட்ட வேளாண்மைத் தோட்டக் கலைத் துறை அதிகாரிகளிடத்திலும் சேத விவரத்தைக் கேட்டு, விவரத்தைப் பெற்றுள்ளோம். கரூர் மாவட்டத்தில் 182.14 ஹெக்டேரிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 3.50 ஹெக்டேரிலும், சேலம் மாவட்டத்தில் 36.01 ஹெக்டேரிலும், தேனி மாவட்டத்தில் 15.20 ஹெக்டேரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 1.76 ஹெக்டேரிலும், ஈரோடு மாவட்டத்தில் 52.74 ஹெக்டேரிலும், திருச்சி மாவட்டத்தில் 304.00 ஹெக்டேரிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 8.40 ஹெக்டேரிலும், தஞ்சை மாவட்டத்தில் 120 ஹெக்டேரிலும், ஆக மொத்தம் 723.75 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்துள்ளன.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் கள்ளப்பள்ளி, கிருஷ்ணராயபுரம் வடக்குக் கிராமங்களில் 10.40 ஹெக்டேரிலும், திருச்சி மாவட்டம், அரசனூர் கிராமத்தில் 0.86 ஹெக்டேரிலும் ஆக மொத்தம் 11.26 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட வெற்றிலைக் கொடிகள் சேதமடைந்துள்ளன எனவும், திருவள்ளூர் மாவட்டத்தில் காஞ்சிப்பாடி கிராமத்தில் 2.2 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட 5,686 பப்பாளி மரங்கள் சேதமடைந்துள்ளன என்றும், திருநெல்வேலி மாவட்டம்,



2007 மே 3] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

வாசுதேவநல்லூர், மற்றும் மேலநீலிதநல்லூர் கிராமங்களில் 1.05 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட 275 எலுமிச்சை மரங்கள் சேதமடைந்துள்ளன எனவும், தேனி மாவட்டம், அய்யம்பட்டி கிராமத்தில் 0.20 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட 500 முருங்கை மரங்கள் சேதமடைந்துள்ளன எனவும், கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் மற்றும் திருவட்டாறு வட்டாரங்களில் 12 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட 4,867 ரப்பர் மரங்கள் சேதமடைந்துள்ளன எனவும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டம், சின்னக்கல்வராயன் மலைப் பகுதியில் 8.74 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட தக்காளியும், 8.20 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட 328 மா மரங்கள் சேதமடைந்துள்ளன எனவும், ஆக மொத்தம் 767.40 ஹெக்டேரில் பயிரிடப்பட்ட வாழை, வெற்றிலை, ரப்பர், பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, மா, தக்காளி ஆகியவை சேதமடைந்துள்ளன என்ற தகவல் பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள்மூலம் அறிக்கைகள் பெற்றுக்கொண்டிருக்கின்றோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 22-4-2007 அன்று பெய்த மழை மற்றும் சூறாவளிக் காற்றால் மின்சாரக் கம்பி அறுந்து, கொச்சூட்டுப்பாறையைச் சேர்ந்த தங்கம்மா, வயது 60 என்பவர் மரணம் அடைந்துள்ளார். இவருக்குக் கருவூல விதி 27-ன்கீழ், இடைக்கால நிவாரணமாக 50 ஆயிரம் ரூபாய் மாவட்ட ஆட்சித்தலைவரால் வழங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்க, மேலும் கோரப்பட்டுள்ளது. அந்நிதி பெறப்பட்டதும், எஞ்சியத் தொகை அக்குடும்பத்திற்குக் கொடுக்கப்படும். அதேநாளில், கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு மரணம் அடைந்த ஜேம்ஸ் என்பவர் குடும்பத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*(முற்பகல் 11-10*

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு இட்டிருக்கின்ற கட்டளை, மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் காட்டியிருக்கின்ற வழிகாட்டுதலின்பேரில், ஏற்கெனவே, வீடுகள் சேதமடைந்திருந்தால், அவர்களுக்கெல்லாம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உரிய நிவாரண உதவிகள் எல்லாம் வழங்கியிருப்பார்கள்; இருந்தாலும், இதுபோன்ற பயிர்கள் சேதம் அடைந்ததற்கு, உடனடியாக அரசின் சார்பிலே நிவாரணம் வழங்க வேண்டுமென்று என்னிடத்திலே சொல்லியுள்ளார்கள். இப்போது நான்

இங்கே தெரிவித்ததைப்போல, வாழைச் சேதம் 723.75 ஹெக்டேரிலும், அதைப்போல, வெற்றிலை, பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, ரப்பர், தக்காளி, மா எல்லாவற்றையும் சேர்த்து 767.40 ஹெக்டேரிலும் சேதம் அடைந்திருக்கின்றன. இதற்கான வழிகாட்டுதலின்பேரிலே, வாழை போன்ற ஆண்டுப் பயிருக்கு ஹெக்டேருக்கு 2,500 ரூபாய் என்றும், வெற்றிலை, பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, மா, ரப்பர் ஆகிய தொடர்நிலையான பயிர்களுக்கு 4,000 ரூபாய் ஹெக்டேருக்கும், தக்காளி போன்ற பயிருக்கு ஹெக்டேருக்கு ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 29,57,755 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தொடர்ந்து, இந்த ஆண்டு மழை வருவதற்கு முன்பே, சூறாவளி போன்ற காற்றுகள் பலமாக வீசுகின்றன. அதனாலேதான், இதுபோன்ற பயிர்கள் பெரும்பாலும் சேதம் அடைகின்றன. இப்போதுகூட, நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சொன்னார்; நேற்று கடலூர் மாவட்டம், அவருடைய தொகுதியிலே இதுபோன்ற காற்று வீசியதாலே ஆயிரம் ஏக்கர் வாழை மரங்கள் சேதமடைந்ததாகச் சொன்னார். இப்படித் தொடர்ந்து பாதிப்புகள் வருமேயானால், மாவட்ட ஆட்சித்தலைவரிடத்திலே அறிக்கை பெற்று, உரிய நிவாரணத்தை இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சென்னை மாநகரில் பிளாஸ்டிக் கழிவுகளால் சுற்றுப்புறச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை மாநகரில், பிளாஸ்டிக் கழிவுகளால் சுற்றுப்புறச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்படைவது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55—ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக உரையாற்றும்படி வேண்டுகின்றேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.





**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலகம் முழுவதும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டுமென்று எச்சரிக்கை விடப்பட்டு வருகிறது. நம் தமிழ்நாட்டுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், மாசுக் கட்டுப்பாடும் மிகவும் தேவை. பிளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்வது, அவற்றைப் பயன்படுத்துவது, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு எதிரானது என்பது நம் அனைவருக்கும் தெரியும். பிளாஸ்டிக் பொருள்களைப் பயன்படுத்திய பிறகு, புதைத்தாலும் அவை மக்கிப் போவதில்லை. எரித்தாலும், அதன் நச்சுத் தன்மை மக்கள் உயிருக்கு ஆபத்தாக அமைகிறது. The burning and burying leads to more atmospheric pollution and toxicity of the ambient atmosphere. இந்தப் பூங்காக்களுக்கும், கடற்கரைப் பகுதிகளுக்கும், picnic spot—களுக்கும் நிறைய மக்கள் holidays season—ல் வருகிறார்கள். வந்து use பண்ணிவிட்டு, அந்தச் சிறிய plastic bags—களை, bottle—களை ஆங்காங்கே they throw it away and go. Scooterist ரொம்ப tension—ஆக இருக்கிறார்கள். அவர்கள் drive பண்ண. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். *(குறுக்கீடுகள்)* What else you want?

**திருமதி பதர் சயீத்:** Sir, can I….(Interruption) Earlier also…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Subject குறித்து, நீங்கள் எல்லாம் விவரமாகக் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா?

**திருமதி பதர் சயீத்:** Yes, sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** சொல்லிவிட்டேன். அந்த rule. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் ஏன் பேசுகிறீர்கள்? *(குறுக்கீடுகள்)* அந்த அம்மாவிடம் நான் பேசுகிறேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–15*

**Tmt. BADER SAYEED:** Sir, I bring (Interruption) I bring this to the notice of the Hon'ble Minister.

**Hon. SPEAKER:** Thank you, sit down. (Laughter) (Bell was gonged) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

**Tmt. BADER SAYEED:** You have not permitted me what I want to say. You have not permitted me to say a word.

**Hon. SPEAKER:** You have already told.

**Tmt. BADER SAYEED:** I have not told. I have not said what is needed.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Tell, tell.

**திருமதி பதர் சயீத்:** நான் உங்களுக்குப் பயந்து பயந்து, English-ல் பேசுகிறேன். தமிழில் பேசுவதற்கு நீங்கள் எனக்கு chance கொடுத்ததால் நான் வேகமாகப் பேச முடியவில்லை. அதனால்தான் பயந்து, பயந்து English-ல் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திருமதி பதர் சயீத்:** சரி, போகட்டும். Any way, தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கவும், பயன்படுத்துவதைத் தடுக்கவும் சட்டம் இயற்ற வேண்டும். இதைப் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். Only then, we will be able to live a safe and a healthy planet for the future generations to come. This must be done on a war-footing. I request the Hon. Minister incharge of this to please see that a legislation is brought before this House, even if there is earlier legislation on the plastic manufacture has not been implemented. What we need is strict implementation. Not only a health hazard but it is dangerous for the scooterists who ply on the roads because empty bottles are thrown there and they are not collected. These are non-bio-degradable items. Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நவீன உலகில் பிளாஸ்டிக் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக நம்முடைய வாழ்வில் இருந்தாலும்கூட, அந்தப் பிளாஸ்டிக் இன்று சமுதாயத்தில் பெரும் சீர்கேட்டை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறது. எங்குப் பார்த்தாலும், பொதுவாக சென்னை மாநகரில், காலையிலேகூட நாங்கள் walking போகும்போது பார்த்தால், beach-அதாவது கடற்கரை ஓரம் முழுவதுமாக பிளாஸ்டிக்





பேப்பர்களாகவே இருந்து கொண்டு இருக்கின்றன. எல்லாக் கிராமங்களிலும், குறிப்பாக சென்னை மாநகரம் போன்ற இடங்களில், பிளாஸ்டிக் எல்லாம் குவியல் குவியலாக நிறைய சேர்ந்துபோய், காலியாக இருக்கக்கூடிய ஓர் இடத்தில் அவற்றைக் கொண்டுபோய் கொட்டிவிடுகிறார்கள். அங்கே தண்ணீர் வருகிறபோது தேங்கி அதிலிருந்து கொசு உற்பத்தி ஆகிறது. அந்தப் பிளாஸ்டிக் மக்குவதும் இல்லை. இப்படி இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில், நிறைய சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. அதன் மூலமாகக் கொசு உற்பத்தி ஆகிறது. அந்தப் பிளாஸ்டிக்கைத் தடை செய்வதற்கு, ஏற்கெனவே இந்த அவையில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அது Select Committee-க்கு அனுப்பப்பட்டது. இப்போது ஊட்டி போன்ற, அதாவது நீலகிரி போன்ற மாவட்டங்களிலே ஆங்காங்கு இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், 'பிளாஸ்டிக் இல்லா மாவட்டம்', 'பிளாஸ்டிக் இல்லா நகரம்' என்று ஒரு தடையாணையைப் போட்டு, அவ்வாறு சொல்கிறார்களேயொழிய, முழுமையாகச் சட்டம் இயற்றப்படாத காரணத்தினால், அதைத் தடை செய்ய முடியவில்லை. அந்தமான் போன்ற பகுதிகளில், அதை முழுவதுமாகத் தடை செய்து, ஒரு பெரிய பிளாஸ்டிக் மூட்டை எல்லாம் கொடுத்து, பிளாஸ்டிக்கைக் கொண்டுபோய், அதில்தான் போட வேண்டும் என்று ஒரு கட்டாயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று, சில இடங்களில், எங்களுடைய வேலூரில் இருக்கக்கூடிய V.I.T. என்ற நிறுவனம், பிளாஸ்டிக் பேப்பர்களைக் கொண்டு, தார் ரோடே போடுகிறார்கள். ஆகவே, அப்படி அதையெல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி, தார் ரோடு போன்றவற்றைப் போட்டாவது, பிளாஸ்டிக்கை முழுவதுமாகப் பயன்படுத்தி, அதிலே சுகாதாரக் கேடு வராமல் இருப்பதற்கு, அமைச்சர் ஆவன செய்வாரா; அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்புஅறிமுகமான பிளாஸ்டிக் என்ற இந்தச் சொல், கிரேக்க சொல்லிலிருந்து பயன்பாட்டுக்கு வந்தது. எந்தத் துறையாக இருந்தாலும், பிளாஸ்டிக் பயன்பாடு இல்லாத துறையே எதுவுமில்லை என்கிற அளவிற்குப் பிளாஸ்டிக்கினுடைய பயன்பாடு, இப்போது மனித இனத்திற்குத் தேவையாக இருந்துகொண்டிருக்கிறது.

அதே அளவுக்கு, மனித இனத்தின் உயிர்க் கொல்லியாகவும், நோய்களை உருவாக்குகின்ற இடத்திலும், இந்தப் பிளாஸ்டிக் இப்போது முதல் இடத்தில் இருப்பதாக ஐ.நா. மன்றத்தினுடைய ஆய்வு அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. அந்தப் பிளாஸ்டிக்கிலே, பல வகையான பிளாஸ்டிக்குகள் பயன்பாட்டிலே இருக்கின்றன. Thermoset, thermo plastic, குறைந்த அடர்த்தி பாலிதீன், உயர் அடர்த்தி பாலிதீன், poly propylene, poly ethylene, engineering thermo plastic என்று பலவகையான பிளாஸ்டிக்குகள் இருந்தபோதிலும், இந்த dioxine என்று சொல்லக்கூடிய இந்தப் பிளாஸ்டிக்கிலிருந்து உருவாகிற 75 வேதியல் பொருட்கள் அடங்கிய இந்த dioxine மூலமாக இன்றைக்கு Chlorine போன்ற மூலப் பொருட்கள் அதிலே உற்பத்தியாகின்ற காரணத்தினால் இன்றைக்கு அதை எரித்தாலோ அல்லது தன்னிச்சையாக dioxine வெளியாகிற காரணத்தினால், இப்போது பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுகின்றன. அந்த நோய்களின் பட்டியலைக்கூட, தாம்பரம் காசநோய் மருத்துவமனையினுடைய தலைமை இயக்குநராக இருந்த டாக்டர் தெய்வநாயகம் என்பவர், நம்முடைய அரசுக்கு ஓர் ஆய்வு அறிக்கையில் கொடுத்திருக்கிறார். குப்பைகளைப் பிளாஸ்டிக்கோடு சேர்த்து எரிக்கிறபோது, benzene, பியோடெர்பின் என்கின்ற நச்சு வாயுக்கள் காற்றில் கலக்கின்றன என்றும், இவற்றால், நுரையீரல் புற்று நோய், யுகோபியன் நோய் உள்ளிட்ட கொடிய நோய்கள் ஏற்படும் என்றும், மேலும் நுரையீரலில், சளி, நிமோனியா, நுரையீரலில் நார்மிகு நோய், ஆஸ்துமா, இதயத்தில் உயர் இரத்த அழுத்தம், இதயத்தில் இரத்த ஓட்டக் குறைவு, மாரடைப்பு, நச்சு உலோகம், நரம்புத் தளர்ச்சி பக்கவாதம், கண்பார்வை மங்குதல், காமாலை, ஈரல் பாதிப்பு, வயிற்றுப் போக்கு ஏற்படும் என்றும் பல்வேறு நோய்களைப் பட்டியலிட்டு டாக்டர் தெய்வநாயகம் தலைமையிலான அந்தக் குழு, நம்முடைய அரசுக்குக் கடந்த காலத்திலே ஆய்வு அறிக்கை தந்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் கடந்த முறை குறிப்பிட்டபோது, தமிழக அரசு அதற்குத் தடை கொண்டு வந்தது, 2002–லே. பிறகு என்ன நடந்ததோ தெரியவில்லை; 2003–லே அந்தச் சட்டத்தை அரசு திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் இருக்கின்ற சுமார் 8 மாநிலங்களில் இந்தப் பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டிருக்கிறது, பெரும்பான்மையான இடங்களிலே. ஆகவே, நம்முடைய தமிழக அரசு மீண்டும் இந்தப் பிளாஸ்டிக்கைத் தடை செய்வதற்கு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 11–20)

இப்போது கோயம்பேட்டிலே 400 ஏக்கர் நிலத்திலே இந்தக் குப்பைக் கழிவுகள், பிளாஸ்டிக்குகளை எல்லாம் எரிக்கின்றபோது. அதிலே ஏற்படுகின்ற டை–ஆக்சின் என்று சொல்லக்கூடியது புற்றுநோய்க்கு மிகப் பெரிய காரணியாக இருக்கிறது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. மலட்டுத் தன்மை, ஹார்மோன் கோளாறு, விந்து அணுக்கள் குறைபாடு போன்ற பல்வேறு பிறவிக் கோளாறுகளை டை–ஆக்சின் காற்றில் கலந்து விளைவிக்கிறது; நரம்பு மண்டலத்தைக்கூட பாதிக்கிறது என்ற புள்ளிவிவரங்களெல்லாம் குறிப்பிட்டிருக்கிற காரணத்தினாலே, நம்முடைய தமிழக அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் குழந்தைகள், இந்தப் பிளாஸ்டிக் பொருட்களை வைத்து விளையாடும்போது, தெரியாததனமாகக் கடித்துவிடுகிறார்கள். அப்படிக் கடிக்கிறபோது, பிளாஸ்டிக்கிலே இருக்கிற நச்சு, அதனுடைய கழிவுகள் உள்ளே சென்று மிகப் பெரிய நோய் வருவதற்குக் காரணமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல, ஸ்டிக்கர் பொட்டு; பெண்கள், மணி பர்சைத் தங்களுடைய இதயத்திற்கு அருகில் வைத்துக்கொள்கிறார்கள். அதனால் வெண்குஷ்டம் என்கின்ற நோய் வருவதாகவும், அறிவியல் ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பிளாஸ்டிக்குகளை எல்லாம் குப்பையிலேயிருந்து களைகின்றபோது, நிலத்திலேயிருந்து அகற்றுகின்றபோது, தண்ணீரை உள்வாங்கிக்கொள்வதற்கு பூமிக்கு அந்தச் சக்தி இருக்கின்றது. அதனால் மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து அல்லது கழித்தல் அல்லது உருவாக்குதல் என்ற வகையில் பல்வேறு துறைகளின்மூலமாக இந்தப் பிளாஸ்டிக்கை முழுவதுமாக ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கலாம். இப்போது மற்ற மாநிலங்களான கோவா, அஸ்ஸாம், டெல்லி போன்ற பிற மாநிலங்களில் இருப்பதுபோல, இந்த அரசு அதைத் தடை செய்வதற்கு முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். வாய்ப்புக்கு நன்றி.

[2007 மே :

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) பின் வரிசையில் இருந்துகொண்டு ஏன் சத்தம் போடுகிறீர்கள்? கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

***மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55-ன்கீழ், மாண்புமிகு உறுப்பினர்கள் பதர் சயீத், ஞானசேகரன், வேல்முருகன் ஆகியோர், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதைப்பற்றித் தெரிவித்து, இந்த அரசு அதைத் தடை செய்யுமா என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக மாண்புமிகு திரு. மோகன் அவர்கள் இருந்தபோது, அ.தி.மு.க. ஆட்சியில், 8-5-2002 ஆம் நாள், "தமிழ்நாடு பிளாஸ்டிக் பொருட்கள் விற்பதனை, சேமித்து வைப்பதனை, ஏற்றிச் செல்வதனை மற்றும் பயன்படுத்துவதனைத் தடை செய்தல் சட்டமுன்வடிவு எண் 22/2002" என்ற ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவந்து, அதுபற்றி, சட்டமன்றத்திலே விவாதம் நடைபெற்றது அந்த விவாதத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் ரங்கநாதன் பொன்முடி, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பாலபாரதி, ஏ.எஸ் கண்ணன், டாக்டர் கோவிந்தசாமி, ஜி. பழனிசாமி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் கருத்துகளை எடுத்துச் சொல்லியவர்கள் அத்தனை பேரும், அந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அன்றைய முதலமைச்சர் இந்தச் சட்டத்தை ஏன் கொண்டு வருகிறோம் என்பதற்கான விளக்கத்தை, 20 நிமிடம் இந்தச் சட்டமன்றத்திலே தெரிவித்துப் பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு, அந்த விவாதம் முடிகிற நேரத்தில், அன்றைய அமைச்சர் திரு. மோகன் அவர்கள், இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதுபற்றி, செலக்ட் கமிட்டிக்கு விடுகிறோம் என்று சொல்லி, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த செலக்ட் கமிட்டி 16 பேர்கள் அடங்கியது. அது, 6 நாட்கள் கூடியிருக்கிறது. அந்த செலக்ட் கமிட்டி நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டம் உட்பட சில மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் செய்து வட இந்தியாவில் சிக்கிம் மாநிலத்திலும், இந்தக் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, தவிர்க்க முடியாத சில காரணங்களால், அங்கு செல்லாமலேயே திரும்பி வந்துவிட்டது. அதற்குப் பிறகு அந்த ஆட்சியிலேயே, ஜனவரி மாதம் 31 ஆம் தேதி, அந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறுகிறோம் என்று இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், அதிலே இருக்கின்ற ஆபத்தைப்



2007 மே 3] [திரு. ஆர்க்காடு நா. வீராசாமி]

பற்றியெல்லாம். அவர், முன்னாள் முதலமைச்சரோடு பழகக்கூடிய வாய்ப்பு, அதிகம் பெற்றவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தச் சட்டத்தை, 2002 ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் தேதி ஏன் கொண்டு வந்தார்கள்; மறுபடியும், எதற்காக 2003 ஜனவரி 31 ஆம் தேதி திரும்பப் பெற்றார்கள் என்ற விவரத்தைக் கேட்டு, இந்த அவைக்குச் சொன்னால் நாங்களும் அதைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பை நிச்சயமாகப் பெறுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தியாவிலே இந்தச் சட்டம் எங்கெல்லாம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும், அதுபோல இந்தச் சட்டத்தை, இந்த அரசாங்கம் அமல்படுத்துவதற்கு முன்வருமா என்றும் ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், பா.ம.க. சார்பில் கருத்து சொல்லும்போது, இதனால் ஏற்பட இருக்கின்ற ஆபத்துகள் என்னென்ன என்பதை எடுத்துச்சொல்லி, இந்தப் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதனாலே, வெண்குஷ்டம் போன்ற நோய்கள் எல்லாம் ஏற்படும்; எனவே, அதைத் தடை செய்ய வேண்டும்; அதற்கான ஒரு தடை சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற கருத்தையும் இங்கே சொல்லியிருக்கிறார்.

பொதுவாக, இந்தப் பிளாஸ்டிக் பொருட்களை, சமுதாயத்திலே ஏறக்குறைய 70 சதவிகிதம் பேர் பயன்படுத்துகிறார்கள். உதாரணத்திற்கு, தண்ணீர் குடிப்பதற்குக்கூட சிலபேர் பிளாஸ்டிக் டம்ளரைத்தான் பயன்படுத்துகிறார்கள். பிளாஸ்டிக் பொருட்கள் இல்லாத இடமே இல்லை; இல்லாத வீடுகளே இல்லை என்ற ஒரு நிலை, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. பிளாஸ்டிக் பொருள் பூமிக்கு அடியிலே போனால், அது மக்குவதில்லை; அது அப்படியே இருந்துவிடுகிறது; அதனால் நச்சுத் தன்மை ஏற்படுகிறது என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. அதை இந்த அரசாங்கம் உணர்ந்த காரணத்தினால், இந்த அரசு பொறுப்புக்கு வந்தவுடனே, 2006 ஆம் ஆண்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், எந்த அளவுக்குப் பிளாஸ்டிக் பொருள்கள், மற்ற குப்பைக் கூளங்களில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்த நேரத்தில், 4 சதவிகிதம் அளவுக்குத்தான் அந்தப் பிளாஸ்டிக் பொருட்கள் இருக்கின்றன எனத் தெரிய வந்தது. அவற்றைப் பயன்படுத்தித் தூக்கி எறிவதால்,

அவற்றின் அளவு அதிகமாகின்ற நேரத்தில், அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று, உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற அமைப்புகளுக்குச் சில அறிவுரைகளை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். குப்பைகள் முறையின்றிக் கொட்டப்படுவது தடுக்கப்பட வேண்டும் என அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வாரியம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. திடக் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்து, மக்கும் கழிவுகளை உரமாக்கவும், பிளாஸ்டிக், உலோகம் போன்றவற்றை மறு சுழற்சி செய்யவும் வாரியம் உத்தரவு பிறப்பித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பயிற்சி முகாம்களையும், விழிப்புணர்வு முகாம்களையும் வாரியம் நடத்தியுள்ளது. அனைத்து நகராட்சிகளும், மாநகராட்சிகளும் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரிப்பதையும், வீடு, வீடாகக் குப்பைகளைச் சேகரிப்பதையும் பகுதி அளவிலே துவக்கியுள்ளன.

கழிவு மேலாண்மை திட்டத்திற்காக, இதுவரை 94 நகராட்சிகள் உரிய இடத்தினைத் தேர்வு செய்து, வாரியத்தின் அனுமதியும் பெற்றுள்ளன. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சுமார் 330 பிளாஸ்டிக் தொழிற்சாலைகளில் பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்ய, உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. திருப்பூர், உதகமண்டலம், உடுமலைப்பேட்டை, நாமக்கல், தாராபுரம் மற்றும் குன்னூர் நகராட்சிகள், திடக் கழிவு மேலாண்மையில் முன்மாதிரியாக உள்ளன. பல சுற்றுலாத் தலங்களிலும், வழிபாட்டுத் தலங்களிலும் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு, உள்ளாட்சி அமைப்புகளால் தடை செய்யப்பட்டுள்ளது. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் திடக் கழிவு மேலாண்மையை முழுமையாகச் செயல்படுத்தத் தொடங்கியவுடன், பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல், மாசு ஆகியவை தவிர்க்கப்படும் என்று இந்த அரசு கருதுகிறது. இதிலே இருக்கக்கூடிய அபாயத்தை ஒருபுறம் எண்ணிப் பார்க்கின்ற அதே நேரத்தில், இதிலே ஈடுபட்டிருக்கின்ற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய எதிர்காலத்தையும் எண்ணிப் பார்த்து, இதிலே முதற்கட்டமாக உள்ளாட்சி மன்றங்கள் இதை எப்படிக் கையாள வேண்டும் என்பதற்கான உத்தரவுகள் உள்ளாட்சித் துறையாலே அறிவிக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால், தீங்கு மென்மேலும் வருமென்றால் பிறகு இதுபற்றி ஆய்ந்து, அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.





*முற்பகல் 11–30*

**(இ) பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க, அரசின் நடவடிக்கைகள் குறித்து, 2-5-2007 ஆம் நாளன்று, பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அளித்த அறிக்கை தொடர்பாக**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய பேரவையில், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், 110 விதியின் கீழே ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள்; செய்தியை வெளியிட்டார்கள். நான் அதற்குள்ளே, விவாதத்திற்குப் போக விரும்பவில்லை. இருந்தாலும்கூட, நேற்று அவர் சொன்னபோது, தோழமைக் கட்சியிலே இருக்கிற ஒரு தலைவர் அரசின்மீது சில குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்; அது மிகுந்த வருத்தம் அளிக்கிறது என்ற பாங்கில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படித் தோழமையோடு இருக்கிற ஒரு தலைவர் என்று சொன்ன எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், பாலாற்றிலே, ஆந்திர அரசால் அணை கட்டப்படவிருக்கிறது; அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற அடிப்படையில், ஐந்து நாள் தொடர் போராட்டத்தின் நிறைவாக ஐந்தாவது நாள் போராட்டத்திலே கலந்துகொண்டு, அந்தப் போராட்டத்தில், "ஆந்திர அரசால், அணை கட்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்; மத்திய அரசு தலையிட்டு உடனடியாக அணை கட்டாமல் இருப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்; நம்முடைய தமிழக அரசும் போர்க்கால அடிப்படையில் விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற கருத்தைப் பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னார்கள்.

பாலாற்றிலே, ஆந்திர அரசால், அது ஓடக்கூடிய 28 கிலோ மீட்டர் தொலைவிலே, ஏறக்குறைய 22 தடுப்பணைகளுக்கு மேலே கட்டப்பட்டிருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே, 3 பெரிய பாசன அணைகள், பேத்தமங்கலாவில் ஓர் அணையும், ராமசாகரம், புக்கசாகரம் என்ற 2 அணைகளும், 30 தடுப்பணைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அவை, இது இந்த ஆட்சியில் கட்டப்படவில்லை; கடந்த காலங்களில் தொடர்ந்து கட்டப்பட்ட

அணைகள். தொடர்ந்து கட்டப்பட்ட அந்த அணைகள், அரசு ஆட்சியாளர்களால் தடுத்து நிறுத்தப்படவில்லை. ஆகவே, கோட்டையிலே இருக்கிற அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை; தடுத்து நிறுத்தவில்லை என்ற பாங்கிலே அவர்கள் சொன்னார்கள். அதைக்கூட நான் வெளிப்படையாகவே சொல்லிக்கொள்கிறேன்; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ, அரசையோ குறை சொல்வதாக, குற்றச்சாட்டுச் சொல்வதாக அல்ல. தொடர்ந்து கட்டப்பட்டுவந்த அணைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நம் தமிழகத்தின் சார்பிலே முயற்சி எடுக்கப்படவில்லை என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே சொன்னார்களே தவிர, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் குற்றஞ்சாட்டிச் சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டுமென்ற ஒரு கருத்தையும் அவர் சொன்னார். அதை நான் மறுக்கவில்லை. அவ்வாறு சொன்னதற்குக் காரணம், இந்த அவையிலே அதாவது 10 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியதற்குப் பதிலளித்த நேரத்திலும், அதை அடுத்து இரண்டாவது முறை பேசிய நேரத்திலும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள்: "தமிழக மக்களுடைய நலனைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு, சட்டத்திற்குப் புறம்பாக எந்த அணையையும் ஆந்திர அரசு கட்டாது என்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள்; 'அப்படி ஏதாவது நாங்கள் கட்டுகிற நிலை ஏற்பட்டால், தமிழகத்திற்கு 1892 ஆம் ஆண்டு பன்மாநில ஒப்பந்தப்படி, அதனுடைய விவரத்தைத் தமிழக அரசுக்கு நாங்கள் அனுப்புவோம்' என்று தெரிவித்திருக்கிறார்கள்; இதுவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டதுபோல, 'இந்து' பத்திரிகையிலோ, 'இந்து' பத்திரிகையிலே வந்தாலும்சரி, இதுவரையில் ஆந்திர அரசிடமிருந்து எந்தவிதமான திட்ட அமைப்பு குறித்த செய்தியும் நமக்கு வரவில்லை; நான்கூட ஆந்திர முதலமைச்சரிடத்திலே கேட்டேன்: 'நீங்கள் அடிக்கல் நாட்டுவதாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன; உள்ளபடி உண்டா?' என்று கேட்டேன். அவர்கள் தெரிவித்தார்கள்: 'நான் ஒன்றும் அடிக்கல் நாட்டுவதற்குத் தேதி குறிப்பிடவில்லை' என்று தெரிவித்துவிட்டு, 'உங்களுக்கு நான் விரைவிலே போய், என்ன விவரம் என்றெல்லாம் கேட்டுத் தெரிவிக்கிறேன்' என்று அவருடைய டைரியை





எடுத்துக் குறித்துக்கொண்டு போயிருக்கிறார்கள்" என்ற செய்தியையும் சொல்லிவிட்டு, அவர் தொடர்ந்து சொல்கிறார். அதாவது அவர் சொல்வது, "இதுவரையிலும் எங்களுக்கு எந்தச் செய்தியும் வரவில்லை; ஆந்திர முதலமைச்சரிடமிருந்தோ மற்றவர்களிடத்திலிருந்தோ எங்களுக்குச் செய்திகள் வரவில்லை" என்பவைதான் நிறைய அவர் பேசியவை. அதேமாதிரி நேற்றும்கூட சொன்னார்கள்: "நேற்றைய முன்தினம்தான் எங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது; அந்தக் கடிதத்திலே, 4,000 ஏக்கர் பாசனப் பெருக்குள்ள ஓர் அணையும், குடிநீருக்காகவும் 600 எம்.சி.எஃப்.டி. அளவிற்கு அதாவது 0.6 டி.எம்.சி. தண்ணீர் பயன்பாட்டுக்கான ஓர் அணையும் கட்டவிருக்கிறோம்" என்ற செய்தி வந்ததாகச் சொன்னார்கள். மேலும், அவர்கள் கட்டவிருக்கிற அந்த அணையினுடைய திட்ட மதிப்பீடு 275 கோடி ரூபாய்; அணையின் நீளம் 560 மீட்டர்; அணையின் உயரம் 35 மீட்டர்; அதன் தண்ணீர்த் தேக்கப் பரப்பு 12 சதுர கிலோ மீட்டர்; அதன் ஆயக்கட்டுப் பகுதிப் பரப்பு 17,500 ஏக்கர்; இப்போது, சிறு பாசனத் துறையின்கீழ், அந்த அமைச்சரவையின் சார்பிலே, இந்த ஆண்டு 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 50 கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அங்கு வந்திருக்கக்கூடிய திட்ட மதிப்பீட்டினுடைய செய்திகள். இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன.

முற்பகல் 11-35

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1-2-2007-லே இதுகுறித்து ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு ஆந்திர முதலமைச்சர் அவர்கள், 5-2-2007-லே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நேற்று முன்தினம் வந்தது என்ற அந்தக் கடிதத்தினுடைய செய்தியை, பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதியே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள். "ஏன், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதைச் சொல்லவில்லை?" என்று கேட்டார்கள். ஆகவே, இந்தச் செய்தியை நான் இந்த அவையிலே பதிவு செய்து, இது ஒரு பரபரப்பான குற்றச்சாட்டு அல்ல; தொடர்ந்து நம்முடைய ஆட்சியாளர்கள் தமிழகத்தின் சார்பிலே அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தவில்லை என்ற ஒரு செய்தியைச் சொன்னார்களே தவிர, வேறெந்தக் குற்றச்சாட்டும் அல்ல. அதேவேளைவில், ஆந்திர அரசு கட்டக்கூடிய அணையை நாம் எப்பாடுபட்டாவது தடுத்து நிறுத்த

வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம் என்பதை, அரசின் கவனத்திற்கு எடுத்துச்சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு point.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஞானசேகரன், அவர் அதற்காகவேண்டி explanation சொன்னார்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை, இன்று காலையில்கூட நான் இதுகுறித்துக் கொடுத்தேன். Only one point, I am asking.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதாவது நீங்கள் சொன்னது மாதிரி* I won't allow you to go into the matter, No. *(குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, இன்று morning also ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் அளித்தார்கள். 25-4-2007 ஆம் தேதி, உச்ச நீதிமன்றத்தில், நம்முடைய தமிழக அரசு, தடையாணை கேட்டு ஒரு மனு செய்திருக்கிறது. அது எந்த stage-ல் இருக்கிறது? தடையாணை கிடைத்திருக்கிறதா? அதேபோல, 454 ஏக்கரிலே வனத் துறை ஏரியாவிலே அவர்கள் கட்டப்போகிறார்கள். மத்திய அரசினுடைய வனத் துறையினுடைய clearance-ஐ அவர்கள் பெற்றிருக்கிறார்களா? மத்திய அரசின்மூலமாகத் தடையைப் போடுவதற்கு, இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன என்பதையும், அதேபோல நேற்றைக்கு, முந்தையநாள், ஆந்திர முதல்வர், இந்த அரசுக்குக் கடிதம் என்ன எழுதியிருக்கிறார் என்பது குறித்தும் அவைக்கு விளக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய அவைத் தலைவர் திரு. கோ.க. மணி அவர்கள், நேற்றைக்கு, 110 விதியின்படி நான் படித்த அறிக்கைகுறித்து, ஒரு விளக்கத்தை இப்போது அவர்கள்



தெரிவித்திருக்கிறார்கள். "குற்றச்சாட்டாக அல்ல; ஆனால், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகத்தான்; அதுவேதவிர, முதலமைச்சர் அவர்களையோ, இந்த அரசையோ குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக அல்ல" என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், "முதலில், துரைமுருகன் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்தல்ல. ஒரு இலாகாவை, முதலமைச்சர் அவர்கள் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அதன் பணிகளைச் செவ்வனே செய்யவேண்டியது என்னுடைய கடமை. ஆகையினால், அந்த இலாகாவினுடைய செயல்பாடுகளுக்கு நான் பொறுப்பேற்பதிலே நான் எப்போதும் பின்வாங்கப் போவதில்லை.

"அவர்கள், முதன்முதலில் 5-2-2007-லே எழுதிய கடிதத்திலேயே தெரிவித்திருக்கிறார்களே!" என்று கேட்கலாம். அப்போது என்ன சொன்னார் என்று கேட்டால், "அதைத்தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; இவர் மறைத்துவிட்டார்" என்று. எங்களுக்கு ஒன்றும் மறைப்பதற்கு வேண்டிய அவசியமே இல்லை. இப்போது ஞானசேகரன் கேட்டாரே, "இப்போது அந்தக் கடிதத்தை படியுங்கள்" என்று சொன்னால், அப்போதே படித்துவிட்டுப் போயிருப்போம். ஆனால், அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், "Proposal -- இப்படியெல்லாம் ஒரு திட்டம் இருக்கிறது; ஆனால், நாங்கள் finalise ஆகவில்லை; அதை இறுதியாக finalise பண்ணியபிறகுதான், அது திட்டம் என்று ஏற்றுக்கொள்ளமுடியும்". அந்த இரண்டையும்சேர்த்து இப்போது நான் படிக்கிறேன். 26-4-2007 அன்று எழுதியிருக்கிறார்கள்; நமக்கு நேற்றைய முன்தினம்தான் வந்தது இந்தக் கடிதம்:

"Dear Sri. Karunanithigaru,—*அவர் ஆந்திர முதலமைச்சர் எழுதுகிறார்*—I am aware of the press reports and statements of certain political parties, on the proposal of the State of Andhra Pradesh, to have a small scheme on Palar river which is mainly intended for drinking water, to the people living in Kuppam town and surrounding villages of Chithoor District along the irrigation facilities to an extent of 4000 acres and Kharif I.D. The total utilization of the above said scheme will be about 600 mcft. I have explained the same in the meeting of the ministerial level delegation of Tamil Nadu held on 5-8-2006 at Hyderabad, that a small scheme proposed on Palar River is to supply drinking water to Kuppam Town and surrounding villages and to irrigate 4,000 acres of kharif I.D. and total utilisation will be about 600 mcft. The design of the scheme will be sent to Tamil Nadu after finalisation of the scheme to aleviate their

apprehension."—"நாங்கள் அந்தத் திட்டத்தை finalise பண்ணியபிறகு, அனுப்புகிறோம் என்று, அன்றைக்கு மாண்புமிகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலேயும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரிடத்திலேயும் நான் தெரிவித்தேன்" என்று சொல்லியிருக்கிறார்.

பிற்பகல் 11-40

இப்போது என்ன சொல்கிறார்: "The designs of the scheme are finalised now and are forwarded herewith for your information. We assure you of our continued co-operation."—"இப்பொழுது நாங்கள் திட்டத்தை finalise பண்ணிவிட்டோம். இப்போது எங்கள் திட்டம் என்ன என்று கேட்டால்....—மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, முதலமைச்சர் எனக்கு சொன்னதைத்தான் நான் சொல்ல முடியும்; அவர் வேறு ஏதோ ஒரு scheme, instrument எல்லாம் சொன்னார்; இப்போது என்னவென்றால் 600 mcft. என்று சொல்வது, ஒரு ½ tmc-யைவிடக் குறைவு; அதை இன்னும் நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 0.6 tmc—"அந்தத் தண்ணீருக்குதான் நாங்கள் பண்ணுகிறோம்; அது drinking water-க்கு இரண்டு பங்கு, மீதி இருப்பதைக் கொஞ்சம் irrigation பண்ணப் போகிறோம்; 4,000 ஏக்கர்தான் நாங்கள் பண்ணப் போகிறோம்" என்று ஆந்திர முதலமைச்சர் அவர்கள் நம்முடைய முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி இருக்கிறார். ஆக இதுதான். இப்போது என்ன பிரச்சினை? இப்போது அவர்கள் design போட்டு, இதுதான் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

இப்போது, 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி, அவர்கள் என்ன செய்யப்போகிறார்களோ, அதுகுறித்துத் தமிழக அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அதை இப்பொழுது இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். நமக்கு அதிலே பாதகம் என்று சொன்னால், நாம் ஒத்துக் கொள்ளக்கூடாது. அதைத்தான் நான் சொன்னேன். ஒட்டுமொத்தமாக 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி, கொடுப்பதையெல்லாம் oppose பண்ண வேண்டும் என்பது அல்ல. அது நம்முடைய மாநிலத்தைப் பாதிக்கும் என்றால், அதை நாம் எதிர்க்க வேண்டும்; இல்லை என்றால் நாம் ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்று அர்த்தம். இப்போது நாம் அதை எடுத்துக்கொள்வதற்குக் காரணம் நம்முடைய நிலைமை வெட்ட வெளிச்சமாக இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி, சின்ன சின்ன check dams பல கட்டிவிட்டார்கள். இன்னும் கட்டினார்கள் என்றால், பாலாறு வறண்டு போய்விடும். ஆகவே, இதை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆகையினாலேதான்,





ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற அந்த வழக்கை வேகப்படுத்துவதற்கும்—இப்போது ஆந்திர அரசு அதை முடிவாகப் பிடித்துக்கொண்டார்கள்—அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்கும் நாம் stay petition சுப்ரீம் கோர்ட்டிலே போட்டிருக்கிறோம். இப்போதுதான் அதனுடைய cause of action வந்திருக்கிறது. முன்பெல்லாம், இது பத்திரிகையிலே வந்திருக்கிறது; இந்தச் செய்தி வந்திருக்கிறது என்று சொன்னால், சுப்ரீம் கோர்ட்டில் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இப்பொழுது, முதலமைச்சரே concrete-ஆக திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்ட காரணத்தால், cause of action arises. Therefore we are going to approach the Supreme Court for grant of stay. கேட்கப்போகிறோம் அதற்கு. ஆகையினாலே, சட்டப்படிதான் இதன்மீது நடவடிக்கை எடுக்க முடியும். உங்களுக்கெல்லாம் தெரியும். இது Inter-State level–லே வரும்பொழுது, சட்டத்தில் எந்தெந்த முறைகளை இந்த அரசு கையாளவேண்டுமோ, அத்தனை முறைகளையும் கையாண்டு, தமிழகத்தினுடைய உரிமைகளுக்கு, குறிப்பாக, சிறப்பாக, வட மாவட்டத்தினுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு இந்த அரசு அளிக்கும் என்பதை அன்றும் சொன்னோம்; இன்றும் சொல்கிறோம்; எப்போதும் சொல்வோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார் இல்லையா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாக விளக்கம் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆந்திர அரசு கடிதத்திலே சொல்லப்பட்டிருப்பதுகூட, மறைமுகமாகக் குறைத்துச் சொல்கிறார்கள். அங்கே குடிநீர்ப் பஞ்சம் இல்லை. குப்பத்தைச் சுற்றி 23 ஏரிகள் இருக்கின்றன. குடிநீருக்குப் பஞ்சம் இல்லை. இரண்டு போகம், இப்போது விளைச்சலும் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது இந்த அணையைக் கட்டினால், மூன்றாவது போக விளைச்சல். அதுமட்டுமல்ல; பாசனத்திற்காக மட்டும் அவர்கள் அந்த அணையைக் கட்டவில்லை; அங்கே மிகப் பெரிய ஒரு தொழிற்பேட்டை வரவிருக்கிறது. அதற்குத் தேவை என்றுதான், உள்நோக்கத்தோடு இதைக் கட்டுகிறார்கள். எப்படியாவது குடிநீருக்காக என்று நாம் இதை ஒத்துக்கொண்டுவிட்டாலும், அல்லது அணை கட்டப்பட்டாலும், நமக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வராது. ஆகவே, தடுக்க வேண்டும் என்பதுதான் பொதுவான கருத்து. அதே அடிப்படையில், தாங்கள்

சொன்ன இந்தக் கடிதத்தினுடைய முழு விவரமும் 5-2-2007-லேயே வந்திருக்கிறது. இரண்டாவது மாதம்—பிப்ரவரி—5 ஆம் தேதியே ஆந்திர முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, ஆகவே, நீங்கள் சொன்னமாதிரி எப்படியாவது உச்ச நீதிமன்றம் தலையிட்டோ, அல்லது மாண்புமிகு முதலமைச்சர்கள் இருவரும் பேசியாவது, அந்தக் குப்பம் அணை கட்டக்கூடாது; அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்முடைய தமிழக அரசு எல்லா வகையிலும் முயற்சிக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து, இது குடிநீருக்கோ அல்லது சாகுபடிக்கோ அல்ல; வேறு ஏதோ ஒரு தொழிற்சாலைக்காகக் கட்டுகிறார்கள்; மற்றபடி குளங்கள் எல்லாம் இருக்கின்றன; அவற்றிலிருந்து எடுக்கிறார்கள்; நிரப்புகிறார்கள் என்று சொல்வது எல்லாம், நாம் stay வாங்குவதற்கோ, வழக்குக்கோ உதவுகின்ற point-கள்தான். ஆகையினால், அந்தவகையிலே, அவற்றை points-ஆகவே நான் எடுத்துக்கொள்கிறேன். மூன்றாவது ஒன்று சொன்னதற்கு, நான் இப்போது திரும்பவும் திரு. மணிக்கு சொல்கிறேன்: 5-2-2007-ல் எழுதும்போது, இப்படியெல்லாம் ஒரு திட்டம் அவர்களிடம் proposal இருக்கிறது என்றார். Proposal வேறு; திட்டம் என்பது வேறு. Proposal என்பது வேறு; திட்டம் என்பது வேறு. இப்போது அவர்கள் திட்டத்தை அரசுக்குச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டும் பிரச்சினை சம்பந்தமாக, 2006, 8-வது மாதமே, இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டது. அப்பொழுது, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துப் பேசுகின்ற நேரத்தில், அந்தமாதிரியான ஒரு திட்டம் ஏதும் இல்லை என்ற தகவல் இங்கே சட்டமன்றத்திலே அந்த நேரத்திலே சொல்லப்பட்டது. ஆனால், இன்றைக்கு நிலைமை வேறுவிதமாகச் சென்று கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை.





ஆந்திர முதலமைச்சரே, தனது வாக்குமூலத்தில், "கடந்த ஆண்டு, தமிழக அரசின் சார்பாக என்னைச் சந்தித்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவது சம்பந்தமாக ஏற்கெனவே நான் சொல்லியிருந்தேன்" என்று, அவராகவே வாக்குமூலமும் கொடுத்திருக்கின்றார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு திட்டத்தைப்பற்றி, பன்மாநில நதிநீர்த் தாவா சட்டம், 1892-ன்கீழ் வழக்குத் தொடுக்க வேண்டுமென்றால், cause of action தேவை என்று இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். சென்ற ஆண்டு, எட்டாவது மாதமே, ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், "நாங்கள் ஒரு திட்டத்தினைச் செயல்படுத்த இருக்கின்றோம்" என்று அன்று சந்திக்கின்ற நேரத்தில், நம்முடைய அமைச்சர்களிடம் சொல்லியுள்ளார். அதையே ஏன் cause of action-ஆக எடுத்துக்கொண்டு நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை என்பதனை நான் இங்கே கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், ஏதோ ½ tmc. என்று அதை மிகவும் இலகுவான முறையில் சொல்கின்றார். அதனுடைய நீர்த்தேக்கம் 0.6 tmc. மேலாக இருக்கிறது; ½ tmc. கூடுதலாக இருக்கிறது. தேக்கத்தின் அளவுதான் ½ tmc. கூடுதல். ஆனால், அதிலிருந்து பயன்பாடு எனப் பார்த்தால், 4 தடவை, 5 தடவை filling பண்ணி, அதிலிருந்து பல்வேறு பாசனப் பகுதிகளுக்கு செல்லுகின்றபொழுது, குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு, அது ஜீவ நதியாக இருப்பதனால் தொடர்ந்து வருடம் பூராவும் அந்த நீர்த்தேக்கத்திலிருந்து நீர்ப்பாசனத்திற்கு நீர் எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, குறிப்பாக, வேலூர் மாவட்டமும் அதனைச் சார்ந்து இருக்கின்ற 5 மாவட்டங்களும், சென்னை மாநகரத்தின் நீராதாரம் உள்பட பாதிக்கப்படும். பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டினால், கட்டாயமாக மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, மிகப் பெரிய பாதிப்பு தமிழகத்திற்கு வரும்; வந்து சேரும். அதைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழக அரசு என்ன நடவடிக்கை, உறுதியான நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதைத்தான் நாம் இன்றைக்கு ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றோம்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கின்ற இந்தப் பிரச்சினை ஆரம்பித்ததே, அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுது.

[திரு. துரைமுருகன்] [2007 மே 3

மாண்புமிகு இரு அமைச்சர்களிடத்திலே, அவர் சொன்னார்கள் என்று, அவர் சொன்னதை வைத்துக்கொண்டே ஏன் கோர்ட்டுக்குப் போகக்கூடாது என்கிறார்கள். We have an idea என்பது வேறு; We have come to a conclusion என்பது வேறு. அதைக் கோர்ட்டிலே போய் அது hasty decision என்று சொல்லக்கூடாது. "He is having an idea, your Lordship" என்று அப்படிச் சொல்லக்கூடாது; "This is the authenticity proposal, your Lordship" என்று அப்படிச் சொல்லவேண்டும். இது சட்டப் பிரச்சினை, அதை விட்டுவிடுகிறேன். இரண்டாவது அவர் சொன்னார்; ஜீவ நதி என்று சொன்னார். அது பாதிக்கும் என்றார். ஒன்றை நான் தெளிவாகச் சொல்லுகிறேன், 'துரைமுருகன் பொறுப்பேற்க வேண்டும்' என்று டாக்டர் அய்யா அவர்கள் சொன்னதைக்கூட அவர் சொன்னார். இது தமிழகத்தினுடைய உயிர்ப் பிரச்சினை, எனக்கு, என் மாவட்டத்திற்கு உணவுப் பிரச்சினை; உயிர்ப் பிரச்சினை; தமிழகத்தினுடைய மானப் பிரச்சினை என்பதைவிட, அதில் தண்ணீர் வந்தால்தான் நாங்களெல்லாம் சாப்பிட முடியும். இது ஜீவ நதி அல்ல; Poverty-யான நிலைமை; மழை வந்தால்தான் த்ண்ணீரே வரும். ஏற்கெனவே, மேலே பேத்தமங்கலாவிலே கட்டிவிட்டு, கர்நாடகம் தண்ணீரை நிறுத்திவிட்டது. ஆகையினால், இங்கே தண்ணீர் கொஞ்சம்கூட வராது. (குறுக்கீடுகள்) உங்களுக்குச் சொல்கிறேன், அந்த ஏரியாவினுடைய வரலாறை. அது கர்நாடகத்திலே ஓடி, ஆந்திராவிலே நுழைந்து, இப்படி வருகிறது. (குறுக்கீடுகள்) அதனாலே இது அப்படி அல்ல. பெரிய பேத்தமங்கலம் ஏரியைக் கட்டி முடித்துவிட்டார்கள். ஆகையினால் அது அல்ல. "நீங்கள் concrete-ஆன திட்டங்கள் என்ன எடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார்கள். உங்கள் ஆட்சி இருந்தபோது, concrete-ஆன திட்டங்கள் என்ன எடுத்தீர்கள்? Supreme Court-க்குப் போனீர்கள். (குறுக்கீடு) "என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதேதான். Supreme Court-க்குப் போனீர்கள். ஒரு மனுவைத் தாக்கல் செய்தீர்கள். இப்போது திரும்பவும் அதே பேச்சை என்னிடமிருந்து வாங்குவீர்கள்! அந்த மனுவிற்கு— அந்த petition-க்கு—ஒரு number-கூட வாங்கவில்லை. போட்டுவிட்டுப் போய்விட்டீர்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். Cover போட்டால், stamp ஒட்டினால்தான் அது போகும். Stamp ஒட்டாமல் cover போட்ட மாதிரிதான், நீங்கள் number வாங்காமல் போட்டுவிட்டு வந்தீர்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, கலைஞர் ஆட்சி வந்த பிறகு அதற்கு number வாங்கியிருக்கிறோம்; இப்போது, இரண்டாவது petition போடப்பட்டிருக்கிறது; Stay-க்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகையினால், பல்வேறு நடவடிக்கைகளை முறையாக எடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)



2007 மே 3]

## 5. கவன ஈர்ப்பு

### வால்பாறை தொகுதி, அக்காமலை மற்றும் புல்மலையில் தீயினால் ஏற்பட்ட சேதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், இழக்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. கோ. அரி:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Not allowed. (குறுக்கீடுகள்) திரு. கோவை தங்கம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் அழகுவாய்ந்த இடங்களான அக்காமலை, புல்மலையில் தீயினால் ஏற்பட்ட பெருத்த சேதம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**திரு. கோ. அரி:** Speaker Sir, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் கையைக் காண்பிக்கிறீர்கள்? பின்பக்கம் கையைக் காண்பித்தால் எப்படி? (குறுக்கீடுகள்) பின்பக்கம் கையைக் காண்பித்தால் எப்படி? (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்)

#### அறிக்கை

கோவை மாவட்டம், பொள்ளாச்சி இந்திரா காந்தி வன உயிரினக் காப்பகம் மற்றும் தேசியப் பூங்காவின் வால்பாறை சரகத்தைச் சார்ந்த புல்மலை மற்றும் அக்காமலையில், கடந்த 10-03-2007 மற்றும்

4–04–2007 ஆகிய இரு நாட்கள் தீ நிகழ்வு ஏற்பட்டது. 10–3–2007 அன்று புல்மலை Beat-ஐச் சேர்ந்த போதுமலை, சடையாண்டிமலை, கள்ளர்மலையில் ஏற்பட்ட தீ, 11–3–2007 அன்று நண்பகல் 12–00 மணிக்கு அணைக்கப்பட்டது. அதேபோன்று 4–04–2007 அன்று அக்காமலை Beat, கோணலார் சரகம், தணக்கமலை, சிலுவைமேடு ஆகிய இடங்களில் ஏற்பட்ட தீ விபத்து, 6–04–2007 அன்று காலை 11–00 மணிக்கு அணைக்கப்பட்டது.

(2) புல்மலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 300 எக்டேர் பரப்பிலும், அக்காமலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 1,000 எக்டேர் பரப்பிலும் காடுகள் எரிந்துள்ளன. மேற்படி தீ விபத்தில் புதர்கள் மற்றும் புற்கள் மட்டும் எரிந்துள்ளன. மேலும், மேற்காண் தீ விபத்துகள், கேரள மாநிலத்தின் காப்புக் காடுகளில் ஏற்பட்ட தீயினைத் தொடர்ந்தும், பலத்த காற்று வீசியதாலும் ஏற்பட்டன. பாதை வசதி இல்லாததால், தீப் பிடித்த இடத்தை அடையக் கூடுதலான கால அவகாசம் தேவைப்பட்டது. இதனால் தீயினைக் கட்டுக்குள் கொண்டு வர தாமதம் ஆகிவிட்டது. மேற்படி பொள்ளாச்சி இந்திரா காந்தி வன உயிரினக் காப்பகம் மற்றும் தேசியப் பூங்காவிற்கு உட்பட்ட புல்மலைப் பகுதி, அக்காமலைப் பிரிவு வனவரின் பொறுப்பில் உள்ளது. இப்பிரிவின் தலைமையிடம் கள்ளர்மலையாகும். எனவே, சம்பந்தப்பட்ட Beat வனக் காப்பாளர், பிரிவு வனவருக்குத் தகவல் தெரிவித்து, அருகில் உள்ள எஸ்டேட்களிலிருந்து கூலியாட்களை அழைத்துக்கொண்டு தீ விபத்து இடத்திற்குச் செல்வதற்குக் கால அவகாசம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்ததால், அப்பகுதியில் பதற்றம் நிலவியது. ஆனாலும், கூலியாட்கள், வனச் சார்நிலைப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்கள் ஆகியோரின் உதவியுடனும் மேற்படி தீயைத் தடுத்து, மேலும் தீப் பரவாமல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, பதற்றம் தணிக்கப்பட்டது. இத்தீயினால் வன விலங்குகளுக்கோ, மரங்களுக்கோ சேதம் ஏதும் இல்லை. மேலும், இத்தீயினால் வன விலங்குகள், அருகில் உள்ள பசுமை மாறாக் காடுகளுக்கு இடம் பெயர்ந்துவிட்டன.

(3) ஒவ்வோர் ஆண்டும் தீத் தடுப்புக் கோடுகள் வெட்டும் பணி மேற்கொண்டும், தீத் தடுப்புக் காவலர்களைக் கோடை மாதங்களில் நியமித்து ரோந்துப் பணி மேற்கொண்டும், தீ விபத்துகளில் இருந்து காடுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 2006–2007 ஆம் நிதியாண்டில் மட்டும் பொள்ளாச்சி இந்திரா காந்தி வன உயிரினக் காப்பகம் மற்றும் தேசியப் பூங்காவின் கட்டுப்பாட்டிற்குள் வரும் காப்புக் காடுகளில் தீப் பரவாமல் கண்காணிக்க, 29 தீத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டு ரூ.1.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும்,





காப்புக் காடுகளின் எல்லைகளிலும் தீப் பிடிக்கும் இடங்களிலும் தீத் தடுப்புக் கோடுகள் 178 கி.மீ. நீளத்திற்கு வெட்டப்பட்டு ரூ.3.15 இலட்சம் செலவினம் மேற்கொண்டு, தீ விபத்துகளிலிருந்து காடுகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

(4) இனிவரும் காலங்களிலும் தீ விபத்தினைத் தடுக்கவும், மேற்படி தீ விபத்திலிருந்து காடுகளைக் காப்பாற்றவும், அனைத்து மாவட்ட வன அலுவலர்/வன உயிரினக் காப்பாளர்/வனப் பாதுகாவலர் ஆகியோருக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. கோவை தங்கம், பேசுங்கள் (குறுக்கீடுகள்) Not allowed. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. கோவை தங்கம், பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலேயிருந்து 12 கிலோ மீட்டர் தூரமுள்ள அக்காமலையில் மற்றும் புல்மலையில் கடந்த 10–3–2007 அன்று 300 எக்டேர் பரப்பில் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, 4–4–2007 அன்று 1,000 எக்டேர் பரப்பளவுகொண்ட வால்பாறையில் இருக்கிற அக்காமலை மற்றும் புல்மலைக் காடுகள் தீப் பற்றி எரிந்திருக்கின்றன. கேரளாவிற்கு அருகிலே இருக்கின்ற காப்புக் காட்டிலேயிருந்து தீப் பரவி, இந்தப் பகுதியிலுள்ள வால்பாறை காட்டிற்கு வந்ததாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) உங்கள் துணைத் தலைவர் விளக்கம் கேட்டார். எல்லாம் சொல்லியாகிவிட்டது. இனி ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள் சார். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். கோவை தங்கம், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** 10,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்தக் காடுகள், தீப் பற்றி எரிகின்றபோது அங்கே அணைப்பதற்குச் சரியான சாலை வசதிகள் கிடையாது; அங்கே வன ஊழியர்களும் குறைவாக இருக்கிறார்கள். ஏறத்தாழ 10,000 ஏக்கர் பரப்பளவுகொண்ட அந்த இடத்தில் வெறும் 10 வன ஊழியர்கள்தான் பணிபுரிகிறார்கள். ஆக,

நான் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தியாவிலே, வேறு எங்குமே இல்லாத மூலிகைச் செடிகளும், மரங்களும், கொடிகளும் அங்கே இருக்கின்றன. . (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும், அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே இருக்கின்ற அக்காமலையிலே இருக்கின்ற புல்மலையில் இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத மூலிகைச் செடிகளும், மரங்களும் இருக்கின்றன. அங்கே 10,000 ஏக்கர் பரப்பளவு நிலம் எரிந்திருக்கிறது. எரிகிறபோது, அதை அணைப்பதற்கு அங்கே சாலை வசதிகளும் இல்லை;

முற்பகல் 11-55

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும், அவையிலிருந்து வெளியேறினர்.)

ஆள் பற்றாக்குறை; 10,000 ஏக்கர் கொண்ட அந்த இடத்தில், வெறும் 10 வன ஊழியர்கள்தான் பணிபுரிகிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே வனத் துறைக்குப் போதுமான ஆட்களை நியமிப்பதோடு, சாலை வசதிகள் செய்து கொடுத்து, மேலும் தீ விபத்து ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் தீயைத் தடுப்பதற்காக – வனத் தீ என்பது மாடு மேய்க்கச் செல்பவர்களாலும், அல்லது வனத்தில் விளைகின்ற சிறு மகசூலைச் சேகரிக்கச் செல்பவர்களாலும், சில நேரங்களிலே சமூக விரோதிகளாலும், சில நேரங்களிலே அந்த வழியாகச் செல்கின்ற உயர் மின் அழுத்தக் கம்பிகள் அறுந்து விழுவதாலும் அல்லது ஒன்றோடொன்று உராய்வு ஏற்படுகின்ற நேரத்திலே தீப் பொறிகளாலும், இந்த மாதங்களிலே, மிகவும் வறட்சியான நேரங்களிலே, காய்ந்த புல்களிலே, அவை படுகின்ற நேரத்திலே அந்தத் தீப் பரவுகிறது. அங்கேயெல்லாம், தீப் பரவி விடாமல் தடுப்பதற்கு, முன்னெச்சரிக்கையாக, நாங்கள் தீத் தடுப்புக் கோடுகளை





அமைத்திருக்கிறோம். சில இடங்களிலே, தீத் தடுப்புக் காவலர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்களை எல்லாம் பயன்படுத்தியிருக்கிறோம். அங்கே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடத்திலே, 29 தீத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.1.33 இலட்சம் ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, அந்தத் தீத் தடுப்புக் கோடுகள், 178.5 கி.மீ. அளவிற்கு அங்கே அமைக்கப்பட்டு, அவர்களுக்கு 3.15 இலட்சம் ரூபாய் செலவிலே ஊதியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தீ வரும் என்பதற்காக, வனத்தை அழித்து சாலைகளை அமைக்க முடியாது. சில இடங்களிலே குன்றுகள் இருக்கின்ற பகுதிகளுக்கு, அங்கே செல்லவே முடியாது. அது தானாக அமைந்தால்தான் முடியும். எனவே, எங்கெங்கு தீப் பரவும் என்று நினைக்கிறோமோ, அந்த இடங்கள் முழுவதுமாக, இந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் 6,142.5 கி.மீ. தீத் தடுப்புக் கோடுகளும், அதைப்போல 736 தீத் தடுப்புக் காவலர்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். மீறி ஏதாவது நடந்தால், வனக் குற்றவாளிகள்மீது, இதுவரை இல்லாத அளவிற்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், நேரத்தைப் பாருங்கள்; போய்க்கொண்டே இருக்கிறது. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே இருக்கின்ற அக்காமலை, புல்மலை இந்தியாவிலேயே வேறு எங்கேயுமே அவ்வளவு அழகு வாய்ந்த இடமாக இருக்க முடியாது. அப்படி அழகு வாய்ந்த இடம். அப்படி அழகு வாய்ந்த அந்த இடத்திலே, வெள்ளைக்காரர்கள் அந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதற்காக அங்கே ஒரு வீடு—ஒரு தங்கும் விடுதி—கட்டியிருக்கிறார்கள். அதைச் சுற்றி அகழி இருக்கின்றது. இயற்கை நிறைந்த, பார்ப்பதற்கு அழகு வாய்ந்த இடம். மாண்புமிகு நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் ஐயாகூட, அந்தக் காலத்தில், அந்தக் காட்சி அமைந்த, 'மலைக் கள்ளன்' என்ற படத்திற்குக் கதை வசனம் எழுதியிருக்கிறார்கள். அப்போதே 'ரோப் கார்' அந்தப் படத்தில் விடப்பட்டிருக்கிறது. அப்படி அழகு வாய்ந்த அந்த இடத்திற்கு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், சுற்றுலாத் துறை

அமைச்சர் அவர்களும் 'ரோப் கார்' விடுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், அதை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக முடியுங்கள். மணி என்னங்க ஆகிறது?

**திரு. கோவை தங்கம்:** ஒரே ஒரு நிமிஷம். வால்பாறையைப் பொறுத்தவரையில், அது மலைப் பகுதியாகவும் அறிவிக்கப்படவில்லை; சுற்றுலா மையமாகவும் இல்லை. கொடைக்கானல், ஊட்டி எல்லாம் மலைப் பகுதிகளாக இருக்கின்றன. மத்திய அரசும் அவற்றிற்கு நிறைய நிதி உதவி செய்கிறது. எனவே, வால்பாறையையும் மலைப் பகுதியாக அறிவித்து, நிதியுதவி பெற்றுத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினருடைய கருத்துகளின் அடிப்படையில் ஆலோசிக்கப்படும்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் ஒன்றாவது முதல் ஐந்தாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 54 முதல் 57 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.





## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

நண்பகல் 12-00

### (ஆ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 3

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.20,13,80,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"





எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 333, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5380, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11380, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2676, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5087, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8050, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8567, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8759, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10132, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.



**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10227, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11258, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 232, திரு. அ. தமிழரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 453, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுக் கல்லூரிகளே இல்லாத குமரி மாவட்டத்தில், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1093, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதி, ஆலங்குளத்தில் ஓர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1110, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் அரசுப் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1464, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1485, திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் முழுமைக்கும், தனியார் துறையில் இயங்கும் இரண்டு பொறியியல் கல்லூரிகள் மட்டுமே உள்ளன. அங்கே மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1647, திரு. செ. சின்னச்சாமி.



**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதியில் புதிதாக அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோளிங்கரில் அரசுப் பொறியியல் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3589, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் அரசு அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி, அரசுப் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4613, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4867, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அண்ணா பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றை மதுரையில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4942, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அளவில் அரசுப் பாலிடெக்னிக் விரிவுரையாளர்கள் 27 பேர் பணியிலிருக்கும்போதே, படித்து, B.E., M.E., பட்டம் பெற்றவர்கள். இவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இன்னும் ஓரிரு மாதங்களில் ஓய்வு பெறவுள்ளார்கள். எனவே, இவர்களது பணியினை வரன்முறைப்படுத்தி, உரிய பதவியில் அமர்த்தி, ஓய்வுபெறச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5341, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிப்பட்டி, மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரிக்குக் கூடுதல் பிரிவுகள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5398, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5440, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5445, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியில் பொறியியல் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5586, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் ஓர் அரசுப் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5635, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி அரசு சுப்பிரமணியசாமி கலைக் கல்லூரியில், கல்வி ஆண்டில் நியமிக்கப்படும் விரிவுரையாளர்களைத் தொகுப்பூதிய அடிப்படையில் நியமிப்பதை மாற்றி, காலமுறை ஊதியத்தில் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5676, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுக் கல்லூரி விரிவுரையாளர்கள் தேர்வை, மூப்பு அடிப்படையில் நியமனம் செய்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5720, திரு. பி. தங்கமணி.



**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில், புதிய அரசுக் கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5741, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5768, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர் தொகுதி, அரகண்டநல்லூர் பேரூராட்சியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6009, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உயர் கல்விக் கூடம் விரைவில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6082, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6066, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் அரசு சிற்பக் கலைக் கல்லூரியைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6227, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவில்லிபுத்தூர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6278, திரு. சொ. கருப்பசாமி.



**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் அரசுமூலம் பெண்கள் கலைக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6398, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதியில் மேச்சேரியில் பல் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6594, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7112 திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மொடக்குறிச்சி தொகுதியில் விவசாயக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7278, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நாகப்பட்டினத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7396, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதியில் மகளிர் அரசுக் கலைக் கல்லூரியைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7448, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மயிலாடுதுறை தொகுதியில் இயங்கிவரும் ஞானாம்பிகா அரசினர்



மகளிர் கலைக் கல்லூரியில் ஏழை மாணவியர் பயில இடம் கிடைக்க, மாலை நேர வகுப்புகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7519, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7659, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள நயம்பட்டி கிராமத்தில் உள்ள மனோ கல்லூரியில் மாணவ, மாணவியர் நலன் கருதி, கூடுதலான கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 766 திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே “சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பகுதியில் ஏழை, எளிய

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி புதிதாக ஒரு அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7697, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7736, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடசென்னையில் உள்ள பாரதி மகளிர் கல்லூரி மற்றும் டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரிகளுக்கு மாணவ, மாணவியர் நலன் கருதி கூடுதலான கட்டடங்கள் கட்டுவதற்கும், பராமரிப்பதற்கும் மற்றும் பழுதுபார்ப்பதற்கும் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7761, திரு. ஓ.கே. சின்னராஜ்.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7855, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7877, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள மாம்பாக்கம் மேனிலைப் பள்ளி அருகில் அரசுக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7892, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரியோ, சட்டக்

கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7968, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி பயிலும் அனைத்து எஸ்.சி./எஸ்.டி மாணவர்களுக்கும், கல்வி நிலையத்திற்கும், விடுதிக்கும் இடையே இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8205, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுய நிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் படிக்கும் மாணவர்களுக்கான கட்டணத்தை அரசுக் கல்லூரிகளின் கட்டண அளவுக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8412, திரு. செ.ம. வேலுசாமி.



**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடத்தில் தமிழ்க் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8480. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8502, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் அமைந்துள்ள உலகநாதன் அரசுக் கலைக் கல்லூரி கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகின்றது. மேற்படி கல்லூரியில் வணிகவியல் (B.Com.) மற்றும் பட்ட மேற்படிப்பு (Post Graduate), M.Sc., தாவரவியல், இயற்பியல் மற்றும் வேதியியல் வகுப்புகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8926, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதி, தேன்கனிக்கோட்டையில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9250, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் அரசு பாலிடெக்னிக்கில் பல்நோக்குத் தொழிற்கல்வி இவ்வாண்டில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9350, திரு. இல. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9403, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9455, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9612, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் அரசுக் கலைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9734, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9804, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9822, முனைவர் கு. ஜெயக்குமார் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9927, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி பயிலுகின்ற ஏழை மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9967, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் அல்லது குன்னத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10010, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதியில் இதுவரை எந்தக் கல்லூரியும் இல்லை. அதனால் இத்தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10432, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு அரசுக் கல்லூரியில் அதிக அளவில் வகுப்பறைகள்



கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10656, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் வியாபார நோக்கில் நடத்தப்படும் தனியார் கல்லூரிகளுக்கு மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10866, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் சட்டக் கல்லூரி ஒன்று அரசு சார்பில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10937, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்று தொடங்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11579, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, தனியார் கல்லூரிகளில் அதிகமான கட்டணம் வசூல் செய்கின்றனர். ஏழை மாணவர்களால் இக்கட்டணத்தைக் கட்ட இயலவில்லை. எனவே, இம்மாணவர்களுக்குக் கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11631, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வங்கிகளில் கல்விக் கடன் பெறுவதில் உள்ள தடைகளைப் போக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11818, திரு. சி. கோவிந்தசாமி.



V21/3/2007
407.34.1

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர், L.R.G. அரசுப் பெண்கள் கல்லூரியில் பன்றிகள் மற்றும் பாம்புகளிடம் இருந்து மாணவிகளைக் காப்பாற்ற சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,034,31,00,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,13,80,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 12–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம். நேரமின்மையால், 15 நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறவிருக்கின்ற உயர் கல்வி மானியத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்திருக்கின்ற எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

---

@ 177 முதல் 234 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227665
சென்னை-600 008

பாதம் பணிந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே எனக்குப் பேசுவதற்கு அனுமதி அளித்திருக்கின்ற பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

முதலிலே, இந்த மானியத்திலே போவதற்கு முன்பு, ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகின்றேன். சமீபத்திலே என்னுடைய தொகுதியிலே, செண்டூர் கிராமத்திலே நடைபெற்ற வெடி விபத்திலே — நான் வெடி விபத்திற்கு உள்ளே செல்லவில்லை; குற்றஞ்சாட்டவும் இல்லை — ஒரு குறைபாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அந்தச் செண்டூர் வெடி விபத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டிருக்கின்றது. அதிலே அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். தி.மு.க., அண்ணா தி.மு.க., காங்கிரஸ் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதுகுறித்துக் கணக்கெடுக்கப்பட்டபோது, அதிலே பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை. அப்படியே நிவாரணம் அளிக்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு அவர்களுக்கு அந்த நிவாரணம் அளிக்கப்படவில்லை. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாகுபாடு பார்த்து, நிதி அளிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, ஒரே ஒரு சம்பவம். அந்த வெடி விபத்து நடந்த 5 அடிக்குப் பக்கத்தில் இருக்கின்றது, ஒரு டீக் கடை. அதிலே பாண்டுரங்கன் என்பவர் இருந்தார். அவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய பிரதிநிதி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை உயர் கல்வித் துறையைப் பற்றியது. அதனின்று வேறுபட்ட ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தாலுங்கூட, அந்தப் பிரச்சினையை இந்த நேரத்திலே எழுப்புவார்களேயானால், உரிய பதிலை, முழு விளக்கமான பதிலை இப்பொழுது சொல்லமுடியாது. இந்த நேரத்தை, வேறுவிதமான பிரச்சினைகளைப் புகுத்திப் பேசுவதற்குப் பயன்படுத்துவதைப் பேரவையின் துணைத் தலைவர் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு முன்னாலேயே சொல்லிவிட்டேன். குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை என்று.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**திரு. சி.வி. சண்முகம்:** கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சொன்னேனேதவிர. . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவனத்தைத் திருப்புவதுகூட தவறல்ல; ஆனால், எந்த நேரத்திலே வேண்டுமானாலும் கவனத்தைத் திருப்பினால் என்ன பதில் சொல்ல முடியும்? என்ன விளக்கம் சொல்ல முடியும்? மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நேரத்தை உயர் கல்வித் துறைக்குத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர, வேறு பிரச்சினைக்கு இந்த நேரத்தைப் பயன்படுத்துவது, இந்த அவையிலே நீண்ட அனுபவம் பெற்றவர்களுக்கு நியாயமல்ல. புதிதாக வந்த உறுப்பினர்கள் யாரேனும் தங்களுடைய தொகுதிக்காகச் சிலவற்றைச் சொல்ல நேரிட்டால், அதை நாம் அவர்களுடைய நிலை கருதி ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே நடைமுறையை, விதியை அனைவரும் கடைப்பிடித்தால் நன்று. நன்றி.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அனைவரும் கடைப்பிடிப்பதைத்தான் நானும் விரும்புவேன். ஆனால், புதிய உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிபற்றி, தங்களுடைய வேண்டுகோளைத் தெரிவிக்க இதுதான் வாய்ப்பு என்று அவர்கள் தெரிவிப்பார்களேயானால், அது வேறு. ஏற்கெனவே இந்த அவையில் அமைச்சராக இருக்கிற அளவிற்கு வாய்ப்புப் பெற்றவர்கள், மானிய விவாத நேரத்தில் வேறு பிரச்சினையை எழுப்பினால், எப்படி ஓர் அமைச்சர் பதில் சொல்ல முடியும் என்பதை இன்றைக்குப் பேசுகிற முன்னாள் அமைச்சர்தான் உணர்ந்து பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

*பிற்பகல் 12–10*

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை மானியத்திலே பேசுகிறேன். தமிழகத்திலே, உயர் கல்வித் துறையிலே மிகப் பெரிய ஒரு மலர்ச்சியை ஏற்படுத்தியவர்

எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, உயர் கல்வித் துறைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, அந்தத் துறையை மேம்படச் செய்தவர், எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதை ஏதோ இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்காக, நான் சொல்லவில்லை. அம்மாவினுடைய ஆட்சியிலும், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலும் எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளை நீங்கள் பார்த்தால் தெரியும். இப்போது இந்தியாவிலே பொறியியல் துறையிலே சிறந்து விளங்குகின்ற மாணவர்களைக் கொண்டு, தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. 1983 ஆம் ஆண்டுக்கு முன்பாகப் பார்த்தீர்கள் என்றால், 7 பொறியியல் கல்லூரிகள்தான் தமிழகத்தில் இருந்தன. அதிலும் முக்கியமாகப் பார்த்தீர்கள் என்றால், கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு விஷயம், இந்தியாவிலேயே முதன்முதலாகப் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது, 1794 ஆம் ஆண்டு, East India Company இந்தியாவிற்கு வந்தபோது, Survey of Schools சென்னையிலே ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலாகப் பொறியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதே சென்னையிலேதான். அப்படிப்பட்ட தமிழகம், இப்போது பொறியியல் துறையில் மிக முன்னிலை மாநிலமாக விளங்குவதற்குக் காரணம், புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கையே. அதன் காரணமாக, இப்போது இந்தியாவிலேயே, தொழில் கல்வியைக் கொண்ட பொறியியல் கல்லூரிகள் அதிகமாகக் கொண்ட மாநிலமாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான், ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 60,000 மாணவர்களுக்குமேல் பொறியியல் படித்த மாணவர்கள், இப்போது வெளியே வந்துகொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் தினந்தோறும் பேப்பரிலே —'தினத் தந்தி'யிலே— பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், இந்த இந்த நாட்டுடன் ஒப்பந்தம்; ஃபோர்டு கம்பெனி வருகிறது; ஹூண்டாய் கம்பெனி வருகிறது என்று ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாக. அதற்கு மிக முக்கியமான காரணம், வர்த்தக நிறுவனங்கள் சொல்லுகின்ற காரணம், தமிழகத்தில் பொறியியல் துறை மாணவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள்; திறமை வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள்; அதிலும், குறிப்பாக ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் தமிழகத்தில் இருக்கின்றார்கள் என்பது. இதற்கெல்லாம் அடிக்கல் போட்டவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் உங்களுக்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.



உயர் கல்வித் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்றால், அவர்களால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கையையும் நீங்கள் பார்க்கலாம். இப்போது தமிழகத்திலே 20 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அந்த 20 பல்கலைக்கழகங்களிலே, 11 பல்கலைக்கழகங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டவை. உங்கள் காலத்தில், நீங்கள் ஆரம்பித்தவை, கடந்த ஆண்டு நீங்கள் தொடங்கிய இரண்டு பல்கலைக்கழகங்களையும் சேர்த்து ஆறு பல்கலைக்கழகங்கள். மூன்று பல்கலைக்கழகங்கள் அதற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டன. ஆகவே, இப்படி உயர் கல்வித் துறைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்த அரசு, அம்மாவினுடைய அரசு. அதுமட்டுமல்ல; இன்னும் சொல்லப்போனால், பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவியல் துறையிலே நல்ல அறிவுத் திறன் வரவேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தைத் தொடக்கி வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதுமட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கின்ற அந்தக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வியை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தைத் தொடங்கிவைத்தவர் புரட்சித் தலைவி அம்மா என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; அரசுக் கலைக் கல்லூரிகளிலே, தொழில் பாடத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1992 ஆம் ஆண்டில். இப்படிப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான்; உயர் கல்வித் துறைக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால், இப்போது உயர் கல்வித் துறை எப்படி இருக்கிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது பல்கலைக்கழகங்களுக்குள்ளாகவே, துணைவேந்தர்களுக்குள்ளாகவே பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு துணைவேந்தர் இன்னொரு துணைவேந்தரைப் பார்த்து, 'இவர் ஊழல் செய்துவிட்டார்'; இன்னொரு துணைவேந்தர், அவரைப் பார்த்து, 'அவர் ஊழல் செய்துவிட்டார்' என்று சொல்கிற நிலை. இன்றைக்குத் தமிழகத்திலே உயர் கல்வித் துறையிலே மிக மோசமான ஒரு நிலைமை; வியாபாரம் செய்கின்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. ஒரு துணைவேந்தர் மீது போலீசிலே புகார் கொடுக்கின்ற அளவிற்கு— என்னை நியமனம் செய்வதற்குப் பணம் கேட்கின்றார்; பணம் கொடுத்திருக்கின்றேன் என்று சொல்லுகின்ற அளவிற்கு—உயர் கல்வித் துறையில் நிலைமை உருவாகி இருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு உயர்

கல்வித் துறையிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதாக இன்றைக்கு நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அதிலே குறிப்பாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: எத்தனை முறை 'இன்றைக்கு' என்று சொல்வீர்கள்?

**திரு. சி.வி. சண்முகம்:** நீங்கள் கொடுத்திருக்கின்ற மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே 60 பக்கங்கள் இருக்கின்றன. அந்த 60 பக்கங்களிலும், 'தரத்தினை உயர்த்துவோம்; எண்ணிக்கையை அதிகரிப்போம்' என்று சொல்லியிருக்கிறீர்கள். படிப்பதற்கும், கேட்பதற்கும் நன்றாக இருக்கின்றது. அதிலே, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அதற்கு நீங்கள் ஒதுக்கியிருக்கின்ற நிதி, 20 கல்லூரிகளுக்குத் தலா 10,000 ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். "இதுதான் தரத்தை உயர்த்துவோம்; எண்ணிக்கையை அதிகரிப்போம் என்பதா?" என்று நாங்கள் கேட்க விரும்புகின்றோம். வெறும் 2 இலட்சம் ரூபாயை ஒதுக்கிவிட்டு, தமிழகத்திலே மொத்தம் 60 கல்லூரிகள் இருக்கின்றன; அரசுக் கலைக் கல்லூரிகள் 60 இருக்கின்றன. நீங்கள் 60 பக்கம் கொடுத்திருக்கின்றீர்கள். அந்த 60 கலைக் கல்லூரிகளுக்காவது, 60 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கலாம். இதுதான் உங்களுடைய ஆட்சியினுடைய நிலைமை. இன்றைக்கு உண்மையிலேயே அந்த ஆதி திராவிட மக்களுக்கு, மாணவர்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற எண்ணம் இல்லை. தலைப்புச் செய்தியாக வரவேண்டும்; மக்களுக்குத் தலைப்புச் செய்தியாகத் தர வேண்டும் என்ற எண்ணத்திலே நீங்கள் இன்றைக்கு அறிவிப்புகளை வெளியிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோன்றுதான். . .

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்கு என்று சண்முகம் தொடங்குங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** அதேபோன்று, கல்வியை மாநிலப் பட்டியலிலே நீங்கள் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னீர்கள். ஆனால், அது என்னவாயிற்று என்று நாங்கள் கேட்டால், கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்வீர்கள். பாலாறு பிரச்சினை என்னவாயிற்று என்றால், பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்வீர்கள். காவிரிப் பிரச்சினை என்னவாயிற்று என்றால்,



பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம் என்று சொல்வீர்கள். இப்படி, எதைக் கேட்டாலும், ஜீவாதாரப் பிரச்சினை எதைக் கேட்டாலும், நாங்கள் கடிதம் எழுதிவிட்டோம் என்றும், பதிவு செய்துவிட்டோம் என்றும் சொல்கிறீர்களே தவிர, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டால், நடவடிக்கை என்பது இதுவரைக்கும் எதுவும் இல்லை.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு மிக முக்கியமான ஒரு விஷயம், சென்னைப் பல்கலைக்கழகம், 150–ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடியிருக்கின்றது. அந்தச் சென்னைப் பல்கலைக்கழகம் ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருந்தது. கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வரை ஐந்து நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருந்த அந்தச் சென்னைப் பல்கலைக்கழகம், இப்போது உங்களுடைய ஆட்சியிலே, அந்த ஐந்து நட்சத்திர அந்தஸ்தை இழந்திருக்கிறது. 'A' அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஐந்து நட்சத்திர அந்தஸ்துக்குச் சமமாக என்றால், A++ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஐந்து நட்சத்திர அந்தஸ்து பெற்றிருந்த, 150 ஆண்டுக் காலப் பெருமை வாய்ந்த சென்னைப் பல்கலைக்கழகம், உங்களுடைய ஓராண்டுக் கால ஆட்சியிலே, பெருமை இழந்திருக்கின்றது. அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அதேபோன்று, உங்களுடைய கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே சொன்னீர்கள்; உங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் சொன்னீர்கள். மாவட்டந்தோறும் பயிற்சிப் பள்ளிகள் இல்லாத மாவட்டங்களில் எல்லாம், அரசுக் கல்லூரிகளில், அரசுப் பயிற்சிப் பள்ளியும், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், கல்லூரிப் பயிற்சிப் பள்ளியும் ஆரம்பிப்போம் என்று சொன்னீர்கள். எத்தனைப் பள்ளிகள் இந்த ஓர் ஆண்டுக் காலத்திலே நீங்கள் ஆரம்பித்தீர்கள் என்று தெரியப்படுத்த வேண்டும். அதே ஏழு கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள்தான் இன்றைக்கும் இருக்கின்றன. எங்கள் ஆட்சியிலும் ஏழு கல்லூரிகள்தான் இருந்தன; இப்பொழுதும் ஏழுதான் இருக்கின்றன. ஓர் ஆண்டுக் காலம் உங்கள் ஆட்சியிலே என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோன்று, நீங்கள் சொன்னீர்கள்; "உங்கள் ஆட்சியிலே, அம்மா ஆட்சி வரும்பொழுதெல்லாம், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்குமட்டும் வேகம் வேகமாக அனுமதி அளிக்கிறீர்கள்" என்று சொன்னீர்கள்; கடந்த ஆண்டுகூட நீங்களே பேசினீர்கள். அதாவது, "என்னவோ இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மட்டும், இந்த Teachers Training, B.Ed., college–களை

அவ்வளவு அக்கறையாக, நிரம்ப கவனம் எடுத்து, 100, 200 என்று உருவாக்குகிறார்கள்!" என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு சொன்னார்கள். நான் கேட்கிறேன்—கடந்த ஆண்டு இந்தச் சட்டமன்றம் ஆரம்பித்தவுடனே சொன்னீர்கள்; என்னென்னமோ குற்றச்சாட்டுகளை எல்லாம் சொன்னீர்கள்; ஆசிரியர் பயிற்சியிலே கோடிக் கணக்காகக் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது; அதைப் பண்ணிவிட்டோம்; இதைப் பண்ணிவிட்டோம் என்று சொன்னீர்கள்; முறைகேடு நடந்ததாகச் சொன்னீர்கள்; அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கின்றார்கள்; நான் கேட்கிறேன்—இந்த ஓர் ஆண்டுக் காலத்திலே, நீங்கள் என்ன பண்ணியிருக்கிறீர்கள்? ஆசிரியர் பயிற்சிக்கு நீங்கள் எப்படிஅனுமதி கொடுத்திருக்கிறீர்கள்? கல்லூரிக்கு எப்படிக் கொடுத்திருக்கிறீர்கள்? நாங்கள் கொடுத்தது 132; நீங்கள் ஓராண்டுக் காலத்தில் 117, இந்த ஓராண்டு, 11 மாத காலத்திலே 117 கல்லூரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, B.Ed.-க்கு ஒரு கல்லூரிக்குக்கூட இந்த அரசாங்கம் 'No Objection' கொடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, அரசாங்கமே No Objection கொடுத்து, பல்கலைக்கழகத்திலே அனுமதி வாங்கியிருக்கிறார்கள். பெங்களூரிலே இருக்கின்ற அந்தக் கல்விக் கழகம்தான், B.Ed.-க்கு அனுமதி அளிக்கிறது. இதுகூட, அமைச்சராக இருந்த அவருக்குத் தெரியும். அவர்களுக்குக்கூட இப்போதுள்ள தமிழக அரசு இதுவரை, ஒன்றுக்குக்கூட அனுமதி கொடுக்கவில்லை. ஆனால், கடந்தகால ஆட்சியிலே, இவர் அமைச்சராக இருந்தபொழுது No Objection கொடுத்தே வாங்கியிருக்கிறார். அதை இல்லையென்று மறுக்கத் தயாரா? ஆனால், இந்த அரசு இதுவரை ஒரு B.Ed., கல்லூரிக்குக்கூட கொடுக்கவில்லை என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதையேதான் நாங்களும் கடந்த ஆண்டு உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தோம். நான் அமைச்சராக இருந்தபொழுதுகூட சொன்னேன்; நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை. No Objection... (குறுக்கீடு) நான் சொல்கிறேன். நான் சொன்னதற்குப் பிறகு. . .





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நீங்கள் கொடுத்ததற்கு ஆதாரத்தை நான் நிரூபிக்கிறேன், ஏற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. சி.வி. சண்முகம்:** நேரடியாக பெங்களூர் N.C.T.E.-க்குச் செல்வதற்கு முன்பாகத் தமிழக அரசால் எந்தக் கல்லூரிக்கும் 'No Objection Certificate' எந்தத் தேதியிலும் கொடுக்கப்பட்டதேயில்லை. நீங்கள் அதை நிரூபிக்கத் தயாரா? இது, பெங்களூரிலிருந்து ஒரு கல்லூரி சென்று, அனுமதி பெற்று வருவதற்கு முன்பாக. . .

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவதற்கு முன்பாகவோ, வந்ததற்குப் பின்பாகவோ, இரண்டுக்குமே இந்த அரசு கொடுக்கவில்லை. வந்ததற்குப் பிறகும் இந்த அரசு, தமிழக அரசு, கொடுக்கவில்லை. ஆனால், "வந்ததற்குப் பிறகு கொடுத்திருக்கிறோம்" என்பதை உங்கள் பதிலிலேயே நீங்களே ஒத்துக்கொண்டதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். நீங்களே, உங்களுடைய தேர்தல் அறிக்கையிலேயும் சொல்லியிருக்கிறீர்கள். "மாணவர்களுடைய எதிர்காலத்தை பாதிக்கின்ற விதத்திலேயுள்ள ஏ.ஐ.சி.டி.இ. – யு.ஜி.சி–யினுடைய முரண்பாடுகளை நீக்கி, மாணவர்களுடைய எதிர்காலத்தை நாங்கள் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்" என்று சொன்னீர்கள். அதையேதான் இன்றைக்கும் சொல்கிறோம். அன்றைக்கும் சொல்லிக்கொண்டு வந்தோம்.

மாநில அரசினுடைய அதிகாரத்தினைப் பறித்து, மாநில அரசாங்கத்திற்கு எந்த அதிகாரமும் இல்லாத வகையிலே, ஏ.ஐ.சி.டி.இ.–யும், என்.சி.டி.இ–யும், தாங்களாகவே தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் அதற்கு அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்று நாங்கள் பலமுறை சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதையேதான் இன்றைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. மாநில அரசாங்கத்தை அவர்கள் கேட்பதில்லை. மாநில அரசாங்கத்தின் கருத்தையும் அவர்கள் கேட்பதில்லை. அதே நடைமுறையைத்தான் நீங்களும் இன்றைக்குக் கடைப்பிடித்து வருகின்றீர்கள். நாங்கள் அதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அவர்கள் அனுமதியை அங்கு பெற்றுவந்த பிறகு, உயர் நீதிமன்றத்திலேயும் அவர்களுக்குக் கொடுக்கச் சொல்லி உத்தரவு கொடுக்கின்றார்கள். வேறு வழியில்லாத காரணத்தினால்தான், அந்தக் கல்லூரியை யார் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதாவது நமக்குத் தெரிய வேண்டுமல்லவா? அந்தக கல்லூரியைச் சென்று பார்வையிடுவதற்காகவாவது நம் அனுமதி வேண்டும் என்பதற்காகத்தான், அவர்கள் நம்மிடம் மனு செய்த பிறகு, அந்த இடத்தைச் சென்று பார்வையிட்டு, மீண்டும் அவர்களுக்கு அந்த அனுமதியைக் கொடுத்திருக்கிறோமே தவிர, நேரடியாக எந்தக் கல்லூரிக்கும் நாங்கள் அனுமதி கொடுக்கவில்லை. அது, அவர்களுக்காக அந்த என்.சி.இ.டி.—ல் கொடுக்கப்பட்டது.

நான் கூற வந்தது என்னவென்றால், தனியார் கல்லூரிகளுக்கு நீங்கள் இப்போது எப்படிக் கொடுக்கிறீர்கள் என்ற அந்த மர்மம், அந்தப் பெட்டியில் இருக்கின்ற மர்மம் என்ன என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; உங்கள் தேர்தல் அறிக்கையிலே மற்றொன்றையும் சொல்லியிருந்தீர்கள். தமிழகத்திலேயிருக்கின்ற "மருத்துவ முதுநிலைப் படிப்புப் படிக்கின்ற மாணவர்களுக்குத் தமிழகத்தில் இருக்கின்ற கல்லூரிகளிலே, 100 சதவிகித மாணவர்களுக்கும் இடம் கிடைப்பதற்கு நாங்கள் வழிவகை செய்வோம்" என்று சொன்னீர்கள். இதுவரைக்கும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல: உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள். "கிராமப்புற மாணவர்கள் பயன்பெறுவதற்காக, நாங்கள் தொழில் படிப்பிலே 15 சதவிகித இட ஒதுக்கீட்டை அளித்தோம்; ஆனால், அதற்குப் பிறகு வந்த அண்ணா தி.மு.க. அரசு, அதைக் கெடுப்பதற்காக, 25 சதவிகிதமாக உயர்த்தியது" என்று நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில் குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறீர்கள். மேலும், "நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அந்த 15 சதவிகிதத்தைக் கொடுப்போம்" என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு ஆட்சிக்கு வந்து, ஓர் ஆண்டுக் காலமாகிறது. 15 சதவிகிதத்தைக் கொடுத்துவிட்டீர்களா? கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவிகிதம் இட ஒதுக்கீட்டினைக் கொடுப்பதற்கு நடவடிக்கையாவது எடுத்தீர்களா? (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிற அந்தக் கேள்வி 15 விழுக்காடு கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டது; 25 விழுக்காடாக அதை உயர்த்தியதன் காரணமாக, நீதிமன்றத்திலே வழக்கிலே அடிபட்டுப் போனதற்கு, ஈடுசெய்வீர்களா என்று கேட்டார்கள். அதற்கெல்லாம் சேர்த்து, ஈடுசெய்வதற்காகத்தான், புகுமுக நுழைவுத் தேர்வு—Entrance Test—அடியோடு நீக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வாங்கியிருக்கிற மதிப்பெண்கள், தேர்விலே அவர்கள் பெற்றிருக்கிற மதிப்பெண்கள் அடிப்படையில், அந்த மதிப்பெண்களுக்குரிய தகுதியின்படி இடம் அளிப்பதன்மூலமாக, கிராமத்து மாணவர்கள் இடம்பெறும் விகிதாச்சாரம் பல மடங்கு உயர்வதற்கான அரிய வாய்ப்பை உருவாக்கி வழங்கியிருக்கிறோம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையிலே இதுவரை தனித் தனியாகத்தான் நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். நுழைவுத் தேர்வை நாங்கள் இரத்து செய்வோம் என்று அதற்குத் தனியாகக் கொடுத்திருக்கிறீர்கள். 15 சதவிகிதம் என்று தனியாக கொடுத்திருக்கிறீர்கள். அதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆகவே, இப்போது இந்த அரசிலே, ஓராண்டுக் காலம் இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசிலே, உயர் கல்வித் துறையிலே பல்வேறு குழப்பங்கள் நிலவிக் கொண்டிருக்கின்றன. நிருவாகத்திற்கும், பல்கலைக்கழகத்திற்கும் தொடர்பில்லாத நிலையாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, இப்போது அண்ணா பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தியாவிலேயே, ஐ.ஐ.டி.–க்குப் பிறகு, விரும்புகின்ற ஒரு பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம். இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தப் பல்கலைக்கழகங்களை எல்லாம் இணைத்து ஒரு மிகப் பெரிய பல்கலைக்கழகமாக அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்து, உங்கள் கொள்கைமுடிவின்படி அதைப் பிரித்தீர்கள். அதை, திருச்சி அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அண்ணாமலைப்

பல்கலைக்கழகம் என்று சொல்லியிருக்கிறீர்கள்—அண்ணா பல்கலைக்கழகம்; மன்னிக்கவும்—அண்ணா பல்கலைக்கழகம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நீங்கள், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகம் என்று சொல்வதற்குப் பதிலாக, அண்ணா பல்கலைக்கழகம் திருச்சி, அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – ஐ.ஐ.எம்., பெங்களூர், ஐ.ஐ.எம்., டில்லி, அலகாபாத் என்று சொல்வது போல—அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி, அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்று சொன்னால், நன்றாக இருக்கும் என்ற ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது நான் சொல்லவந்த கருத்து, அண்ணா பல்கலைக்கழகத்தில், இன்றைக்கு மிகப் பெரிய ஒரு முறைகேடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாணவர்கள் சேர்க்கையாகட்டும், ஆசிரியர்கள் நியமனமாகட்டும். . .

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது.

**திரு. சி.வி. சண்முகம்:** பல்வேறு முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே, முத்தாய்ப்பாக ஒன்று, மாணவன் ஒருவன் தேர்வு எழுதவேண்டும் என்றால், 75 சதவிகிதம் வருகை இருக்க வேண்டும். இது மிக முக்கியம். பள்ளியிலே படிக்கின்ற மாணவராக இருந்தாலும் சரி, கலைக் கல்லூரியில் படிக்கின்ற மாணவராக இருந்தாலும் சரி, பொறியியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவராக இருந்தாலும் சரி, 75 சதவிகிதம் வருகைப் பதிவேடு கண்டிப்பாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காரணங்களுக்காக, மருத்துவக் காரணங்களுக்காக, இதுபோன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக என்று சொன்னால், 10 சதவிகிதம் குறைத்து, 65 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதத்திற்குள் கண்டிப்பாக மாணவர்களின் வருகைப் பதிவேடு இருக்க வேண்டும். அதற்குக் கீழே இருந்தால், அந்த மாணவன் மீண்டும் அந்த ஆண்டிற்கான படிப்பைத் திரும்பப் படிக்க வேண்டும். Repeated course படிக்க வேண்டும். Course-ஐ, redo பண்ண வேண்டும். அந்த ஆண்டிற்கான படிப்பை மீண்டும் அந்த மாணவன் திரும்பப் படிக்க வேண்டும். ஆனால், இப்போது அண்ணா பல்கலைக்கழகத்திலே, ஒரு புதுமையான, ஒரு விநோதமான ஓர் உத்தரவை அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள் அதிலே, 40 சதவிகிதத்திற்குமேல் வருகைப் பதிவேடு இருந்தால் போதும் அண்ணா பல்கலைக்கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள் தேர்வு



எழுதலாம் என்ற ஓர் உத்தரவைப் போட்டிருக்கிறார். இது அண்ணா பல்கலைக்கழகத்தைச் சீரழிக்கின்ற ஒரு திட்டம். மாணவர்களைச் சீரழிக்கின்ற ஒரு திட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து வழக்கம்போல, ஒரு கோயபல்ஸ் அறிக்கையை அவர்களுடைய தலைவிகூட விட்டிருந்தார்கள். (குறுக்கீடுகள்) ஏன்? அதிலே ஒன்றும் தப்பு கிடையாதே? (குறுக்கீடுகள்) நான் அதற்கு விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்கிறேன், Goebbels என்பது, it is not an unparliamentary word. 'Goebbels' is not an unparliamentary word. 'Goebbels' is a word allowed by the Parliament. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயபல்ஸ் அறிக்கை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோயபல்ஸ் என்ற வார்த்தை, it is not an unparliamentary word. It will go to the record.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கோயபல்ஸ் அறிக்கை என்று சொல்ல வந்ததற்குக் காரணத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோயபல்ஸ் என்றாலே நீங்கள் ஏன் எழுந்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Yes, Minister, you can continue. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான செய்திகளைச் சொல்கிற ஒருவரை, 'கோயபல்ஸ்' என்று சொல்வது வரலாற்றிலே இருக்கிற உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் அவர் சொன்னது, தவறான செய்தி என்பதை நான் நிரூபிக்கிறேன். நிரூபிக்காவிட்டால், நான் அந்த வார்த்தையை திரும்ப வாங்கிக்கொள்கிறேன். அந்த வார்த்தையைத் திரும்ப வாங்கிக்கொள்கிறேன். இதுமட்டுமல்ல. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரும்பத் திரும்ப, பொய்யைச் சொல்வதற்குப் பெயர் 'கோயபல்ஸ்'. (குறுக்கீடு) ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லி, அதை உண்மை ஆக்குவதற்குப் பெயர்

கோயபல்ஸ். Mr. Shanmugam, you please learn from me. என்னிடமிருந்து சிலவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அந்த அறிக்கையிலே — இந்த ஓர் அறிக்கை மட்டுமல்ல; சென்ற முறைகூட. வெளியிலே பேசட்டும் என்று சொன்னார்கள்; வெளியிலே பேசினேன்; அதற்கு வழக்கே வரவில்லை; இப்போது அதிலே—சொல்லியிருப்பது, முதலமைச்சருடைய பேரன் ஒருவருக்காக, இங்கே இருக்கிற மின்சாரத் துறை அமைச்சருடைய பேரன்களுக்காக—இந்த வார்த்தைகளையே சொல்லி, அவர்களே அறிக்கை விட்டிருக்கிறார்கள் அவர்களுக்காக—இந்தச் சலுகை கொடுக்கப்பட்டது என்று சொல்கிறபோது, அது கோயபல்ஸ் அறிக்கை என்று நிரூபிக்கின்ற வாய்ப்பு எனக்கிருக்கிறது. ஏனென்றால், முதலமைச்சருடைய பேரன், அந்தத் தேர்வை எழுதவே இல்லை; இதுவரை அனுமதிக்கப்படவில்லை; அவர் போகவே இல்லை. அப்புறம் எப்படி உங்களுக்கு வந்தது பெயர்? (மேசையைத் தட்டும் ஒலி) யார் பெயரைச் சொல்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத் துறை அமைச்சருடைய பேரன்கள் இரண்டு பேரும், 75 சதவிகிதம் ஒருவரும், 79 சதவிகிதம் ஒருவரும் வாங்கி, இருவருமே தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; இது முதலிலேயே. ஆக, இவையெல்லாம் இப்படி இருக்கும்போது, வேண்டுமென்றே—இது ஒன்றும் இப்போதுதான் நடக்கவில்லை; இவர் அமைச்சராக இருந்தபோதும்கூட நடந்தது. இப்போதாவது இதை சிண்டிகேட்டிலே வைத்து பாஸ் பண்ணி, கொண்டுவந்து போட்டிருக்கிறார்கள். ஆனால், இவர் அமைச்சராக இருந்தபோது, சிண்டிகேட்டிலேயே வைக்காமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்போது அமைச்சராக இருந்தபோது, அன்றைய முதலமைச்சர் இருந்தபோது, அப்போது என்ன நடைபெற்றது தெரியுமா? V.C.-யே exemption கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு சிண்டிகேட்டிலே கொடுத்து approval வாங்கின நிகழ்ச்சியை நான் நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கெல்லாம் என்ன பதில்? ஆக, இது கோயபல்ஸ் அறிக்கையா? இல்லையா? (குறுக்கீடுகள்)

**Hon. Deputy Speaker:** Sir, Before that I. . . (Interruptions) Mr. Minister. . . (Interruptions)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** 15 மாணவர்கள், தங்களுக்கு இதுபோன்ற வியாதிகள் இருக்கின்றன என்று சொல்லி, அவர்கள் விண்ணப்பித்ததற்குப் பிறகு, சிண்டிகேட்டிலே அவர்களை அனுமதித்திருக்கிறார்கள். அந்த அனுமதி பெற்றவர்களிலே,



முதலமைச்சருடைய பேரனோ அல்லது இங்கே இருக்கிற மின்சாரத் துறை அமைச்சருடைய பேரன்களோ கிடையாது என்பதை மட்டும் நான் ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த கோயபல்ஸ் அறிக்கையை மீண்டும் அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு யாரும் சொல்லித் தர வேண்டியதில்லை. உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**Hon. Deputy Speaker:** If the Hon. Member gives false news or misrepresentation, the Chair has got every right to rectify.

**திரு. சி.வி. சண்முகம்:** You have your right. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி.வி. சண்முகம்:** நான் பேசி விடுகிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி விடுகிறேன். நான் கருத்துகளைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசும்போது பேசட்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசிய பிறகு, பதில் சொல்லச் சொல்லுங்கள். அவர் குற்றச்சாட்டுக்குத்தான் நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) . மாண்புமிகு அமைச்சர்.

பிற்பகல் 12–30

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள், அந்தப் பல்கலைக்கழகத்திலே சிண்டிகேட் உறுப்பினராக இருக்கின்றார். உண்மை என்ன என்பதை அவரே சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு)

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்த பிறகு, அவர் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. சுதர்சனம் அவர்களுக்கு மைக் கொடுங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் கூட்டம் நடைபெற்றபோது, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது சிக்குன்–குன்யா நோயால் பாதிக்கப்பட்ட சில பேருக்கும், அம்மை நோயால் பாதிக்கப்பட்ட சில மாணவர்களுக்கும், 40 சதவிகிதம் attendance இருந்தால், அவர்கள் தேர்வு எழுதலாம் என்று சிண்டிகேட் கூட்டத்தில் அனுமதி கொடுக்கப்பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பிறகுதான் அனுமதி கொடுக்கப்பட்டதே தவிர, தனிப்பட்ட எந்த ஒருவருக்காக அல்ல. இந்த நோய் என்று சொல்லி, அவர்கள் மருத்துவச் சான்றிதழ் அளித்த பின்னர்தான், அது அனுமதிக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் தலைவர் அவர்கள், அண்ணா பல்கலைக்கழகத்தைப் போல, 40 சதவிகிதம் என்பது, அனைத்துக் கல்லூரிகளிலும் இடம் பெறுமா என்று கேட்டிருக்கிறாரே, இதற்கு அவர் என்ன பதில் சொல்லப்போகிறார்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்ளவேண்டிய ஒன்று. மாண்புமிகு முதலமைச்சருடைய பேரனுக்கும், மாண்புமிகு அமைச்சர் வீராசாமி அவர்களுடைய பேரனுக்கும்தான் இத்தகையதொரு relaxation கொடுத்ததாகவும், விதிவிலக்கு தந்தார்கள் என்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அது தவறு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அமைச்சர் கேட்பதெல்லாம், அதைப்பற்றி அவர் சொல்கிறபோது, நீங்கள் எழுந்து ஒரு கருத்து சொன்னீர்களே, அதை நிரூபிக்க முடியுமா? இன்னொன்று, துரைமுருகனுடைய மாமனார் பெங்களூரில் இருக்கிறார் என்று சொன்னார். என்னுடைய மாமனார் செத்து, 10 வருடங்கள் ஆயிற்று. இப்படி ஓர் அறிக்கையை விடுகிறீர்கள்,



இதை கோயபல்ஸ் என்பதா? பொய் என்பதா? புரட்டு என்பதா? பித்தலாட்டம் என்பதா? என்னய்யா சொல்வது இதை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) நான் ஒரு கருத்தைச் சொல்கின்றேன். (குறுக்கீடு) சி.வி. சண்முகம், நான் பேசுவதற்கு முன்னால், நீங்கள் பேசக்கூடாது. University என்பது ஒவ்வொரு University–க்கும் சிண்டிகேட் வேறு. அதனுடைய style of functions என்பதே வேறு. (குறுக்கீடு) No, no. ஒரு University–யினுடைய rules and procedures, controlling options–ஐ இன்னொரு University–இல் compel பண்ண முடியாது. (குறுக்கீடு) அமைச்சர் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், இங்கே கொடுக்கும் 40 சதவிகிதத்தை அங்கேயும் கொடுக்கலாமே என்றார். இதை Government போடவில்லை சார். முதலில் அதைத் தெரிந்துகொள்ளுங்கள். அது சிண்டிகேட் சார். அவர் சிண்டிகேட் உறுப்பினர். இங்கே பாருங்கள். உங்கள் period–ல் அதைக் கொடுக்கவில்லை என்கிறாரே, Vel Shri Rangarajan Dr. Sakunthala College - 10 சதவிகிதம்தான் என்றாரே, Multi media Veltech College–இல் 37 மாணவர்கள், 75 சதவிகிதத்திற்குக் குறைவாக இருந்து, 40 சதவிகிதத்திற்கு மேல் இருந்தவர்களுக்கு, அப்போது 29–10–2004–இல் அனுமதி வழங்கி, University–க்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதைக்கூட V.C.–யே போட்டுவிட்டால், பிறகு எப்படி சிண்டிகேட்டில் அனுமதி வாங்குவது? இதை சிண்டிகேட்டிலேயே வைத்து, முதலில் கேட்டுவிட்டு, விவாதம் நடத்திவிட்டு, பிறகு கொடுக்கிறார்கள். அதிலே என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், நீங்கள் சொல்வது, தனிப்பட்ட இருவருக்காக என்று நீங்கள் சொல்கிறீர்கள். அந்தத் தனிப்பட்ட இரண்டு பேரும் இதில் வரவேயில்லை. அப்படியிருக்கும்போது, இதைவிட கோயபல்ஸ் விவகாரமே இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், விவாதம் முடிவுற்றது.

(குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பாதிக்கப்பட்ட 15 பேருக்குக் கொடுக்கிறீர்கள். இதைவிட என்ன செய்ய முடியும்? அறிக்கை கொடுப்பதற்கு முன்பு செய்தியை ஒழுங்காக வாங்கவேண்டும். அரைகுறை செய்தியைக் கேட்டுவிட்டு, அரைகுறை அறிக்கை விட்டால், அது கோயபல்ஸ் அறிக்கையாகத்தான் இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சார், இதோடு முடித்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) சரி, point of order என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, சிக்குன்–குன்யா நோயின் காரணமாக மாணவர்கள் 40 சதவிகிதம் வகுப்பறைக்கு வந்திருந்தால் போதும் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்னாலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சொன்னார், அப்படிப்பட்ட நோயே தமிழ்நாட்டில் இல்லையென்று சொல்லியிருக்கிறாரே? அது என்ன கோயபல்ஸ் ஊழல் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உட்கார்ந்துகொண்டு அரைகுறையாகக் கேட்டால் இப்படித்தான் சார். சிக்குன்–குன்யா நோயால் யாரும் சாகவில்லை என்றுதான் சொன்னாரே தவிர, சிக்குன்–குன்யா நோயே இல்லையென்று சொல்லவில்லை. யாரும் சாகவில்லையென்று சொன்னார். கேட்பதை முழுதாகக் கேளுங்கள்; முழுதாகப் பேசுங்கள். அவர் சொன்னது, சிக்குன்–குன்யா நோயால், தமிழகத்தில் இறப்பு இல்லையென்று சொன்னாரே தவிர, அதிலேயும் புள்ளிவிவரமும் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** 22 கோடி ரூபாய் நிதியும் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிக்குன்–குன்யா நோய்க்காக, 22 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கியிருக்கின்ற அரசுதான் இந்த அரசு. இதெல்லாம் தெரியாமல், அரைகுறையாகப் பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்த விவகாரம் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்துகொண்டு, பேசாமல் உட்கார்ந்துவிட்டார்! இந்த விவகாரத்தில் ஏன் வீணாகப் போய் மாட்டிக்கொள்ள வேண்டும் என்று பேசாமல் உட்கார்ந்துவிட்டார்! (சிரிப்பு)

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே இப்போது 75 சதவீதம் வருகைப் பதிவு இருந்தால் தேர்வு எழுத அனுமதிக்கலாம் என்று நடைமுறை இருந்ததைப்பற்றி. சில உதாரணங்களை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் சொன்னார். சில specific case-ல் இருக்கிறது. அது காலங்காலமாக இருக்கிறது. அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால் term days கம்மியாக இருந்தால், அவர்கள் தேர்வு எழுத சிண்டிகேட்டில் வைத்து அனுமதிக்கலாம் என்று அந்த உதாரணத்தைச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Condone பண்ணலாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எப்போதாவது 75–இலிருந்து ஒட்டுமொத்தமாக அனைத்து Engineering Colleges–களிலும், University–யிலும் பரவலாக 40 சதவீதம் attendance இருந்தால் போதும் என்ற நடைமுறை இதற்கு முன்னால் இருந்திருக்கிறதா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறான ஒரு செய்தியை அவர் சொல்லக்கூடாது. அந்த மாதிரி University-ல் இப்போதும் pass செய்யவில்லை. முதலில் அதைச் சரியாகப் படியுங்கள் சார். (குறுக்கீடுகள்) கிடையாது. யார் சொன்னது? கிடையாது. (குறுக்கீடுகள்) தீர்மானமே போட்டிருக்கிறார்கள் சார். சிக்குன்–குன்யா. . . (குறுக்கீடுகள்) அதைத்தான் எல்லோருமே. . . (குறுக்கீடுகள்) ** நாங்கள் என்ன சார் செய்யமுடியும்? (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடுகள்) டாக்டர் விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் இன்று உயர் கல்வி மானியத்தில் பேச வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எழுப்பப்பட்ட அந்தப் பிரச்சினை குறித்து இந்த மன்றத்திலே முறை தவறாக விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்தப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், அங்கேயுள்ள சிண்டிகேட் என்ற அந்த அமைப்பிற்கு, இந்தச் சட்டமன்றத்திற்கு எப்படித் தமிழ்நாட்டின் ஆட்சியிலே முழு உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை, பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு சிண்டிகேட்டிற்கும் அந்தந்தப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் உண்டு. சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட் ஒரு தீர்மானம் நிறைவேற்றினால், மதுரைப் பல்கலைக்கழக சிண்டிகேட் வேறு ஒருவிதமான தீர்மானம் போடுவதற்கு, நிறைவேற்றுவதற்கு, அவர்களுக்கு முழு உரிமையுண்டு. இந்த சிண்டிகேட் நடந்துகொண்ட முறையில், ஏதேனும் சட்ட விரோதமான காரியம் இருந்தால்தான் இங்கே இந்த அவையிலே எழுப்பலாம். சிண்டிகேட், அதனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டு நிறைவேற்றப்படுகிற எந்தக் காரியத்தைப்பற்றியும் நாம் இங்கே விவாதிப்பது முறை அல்ல. பல்கலைக்கழகத்தினுடைய தனி உரிமையைப் பாதிக்கின்ற முறையிலே நாம் பேசுவதாகத்தான் நான் கருதுகிறேன். ஒருவேளை, ஆட்சியிலே இருக்கிற அமைச்சர்கள், முதலமைச்சர், ஆகியோருடைய குடும்பத்தாருக்குச் சலுகை வழங்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால், இங்கே தாராளமாகப் பேசலாம். அது உண்மையல்ல என்றால், மற்ற விவகாரங்கள் எல்லாம், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட விவகாரம்; அவற்றைப்பற்றி இந்த அவையில் மேலும் மேலும் பேசுவது முறையல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடுகள்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அம்மா அவர்கள் விடுத்த அறிக்கையில், முதலமைச்சருடைய பேரனைப் பற்றியும், என்னுடைய பேரன்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். நம்முடைய முன்னாள் கல்வியமைச்சர் பேசும்போது, (குறுக்கீடுகள்) திட்டமிட்டே அதற்காகத்தான் 40 சதவீதமாக attendance குறைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பேரன், பரீட்சையே எழுதவில்லை; ஆகவே attendance என்ற பிரச்சினை எழவில்லை. என்னுடைய பேரன்களுக்கு 78 per cent attendance இருக்கிறது. அதோடுமட்டுமல்ல; Cricket Player என்ற காரணத்தினாலே, அகில இந்தியா என்ற அளவிலே போய் On Duty-ல் போய் விளையாடிய காரணத்தால் 8 per cent attendance–ம் இருக்கிறது. 86 சதவீதம் attendance அவர்களுக்கு இருந்து, பரீட்சை எழுதுவதற்கு அனுமதித்து, எல்லாத் தேர்வுகளிலும் அவர்கள் தேர்ச்சியும் பெற்றிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, வேண்டுமென்றே திட்டமிட்டு எனக்கும், எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் அவர்கள் அறிக்கைவிட்ட காரணத்தினால்தான் இந்த மறுப்புகளைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கோஷம் போட்டுக் கொண்டிருந்தனர்.)*

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் ruling கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நிற்கிறீர்கள் என்றால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்) நான்

உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் நிற்பதாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. மாண்புமிகு திரு. எம்.கே. விஷ்ணுபிரசாத். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இவர்களைச் சுட்டிக்காட்டிய அந்த ** என்ற வார்த்தை அவர்கள் மனதைப் புண்படுத்தி இருக்குமானால், அதை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Please expunge *(குறுக்கீடுகள்)* சரி, எப்படியோ எடுத்தாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* யார் சொன்னால் என்ன? *(குறுக்கீடு)* டாக்டர் விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை; அவர் சொல்லிவிட்டார். மனம் புண்படும் என்றால் எடுத்துவிடுங்கள் என்று அவரே சொல்லிவிட்டார். டாக்டர் விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இன்று. . . *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, முடியாது. *(குறுக்கீடுகள்)* நேரமில்லை. *(குறுக்கீடுகள்)* நேரமே இல்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. முடியாது. இதோ பாருங்கள்; 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 7 பேர் பேச வேண்டும். *(குறுக்கீடுகள்)* இல்லை, முடியாது, முடியாது. *(குறுக்கீடுகள்)* முடியவே முடியாது. *(குறுக்கீடுகள்)*

*(உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இந்தியில் ஏதோ பேசினார்.)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அனைவருக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். பேரன்களும் இருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஷ்ணுபிரசாத் பேச ஆரம்பித்துவிட்டார். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** உயர் கல்வி என்றால், கல்வியின் நிலையைமட்டும் குறிப்பதல்ல. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** அந்தக் கல்வியின் தரமும் உயர்வாக இருக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* அந்தக் கல்வியைக் கற்கும் மாணவர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் உயர் கல்வி என்ற பெயரை வைத்திருக்கின்றோம். எனவே, இந்த மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)* நாம் இன்று மெகாலே என்ற கல்வி முறையைத்தான் வைத்திருக்கிறோம். *(குறுக்கீடுகள்)* ஆங்கிலேயர்கள் ஆட்சியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Time இல்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலேயே அவர்களால் விமர்சிக்கப்பட்டு. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* Time-ஐப் பாருங்கள். *(குறுக்கீடுகள்)* No. No.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கேலியாகப் பேசப்பட்ட கல்வி முறைதான் மெகாலே கல்வி முறை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள் எல்லோரும். *(குறுக்கீடுகள்)* ஒத்துழைப்புக் கொடுங்கள், உட்காருங்கள். இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டும், உட்காருங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இந்த மெகாலே கல்வி முறை என்றால் என்ன? ஆங்கிலேயர்கள் எண்ணினார்கள்; இந்தியாவிலே இந்த மெகாலே கல்வி முறையைப் புகுத்த வேண்டும்; அப்போதுதான் படித்தவர்கள், மென்மேலும் படித்துவிட்டு மேதாவி ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களுக்கு எடுபிடியாகவும், கூலி விவசாயிகளாகவும் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் மெகாலே கல்வி முறையைத் தமிழகத்திலே, இந்தியாவிலே புகுத்தியவர்கள் ஆங்கிலேயர்கள்தான். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இதை முதன்முதலாக எதிர்த்தவர் யார் தெரியுமா? தந்தை பெரியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மெகாலே கல்வி முறை என்றால் என்ன? பத்தாம் வகுப்பு மாணவன் அல்லது பன்னிரண்டாம் வகுப்பு மாணவன் தேர்விலே தோல்வியுற்றான் என்று சொன்னால், அவனுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக மாறிவிடுகிறது. அவனுக்கு எதிர்காலம் இருண்ட உலகமாக மாறிவிடுகிறது. (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு, தோல்விக்குப் பிறகு, தேர்விலே அவன் தோல்வியை அடைந்துவிட்ட பிறகு, அவன் மேலும் கல்வி கற்க வாய்ப்பு இல்லாமல் போகின்ற முறைதான் மெகாலே கல்வி முறை. வெறும் மனப்பாடத்தை மட்டுமே அவன் நம்பி இருக்கின்ற ஒரு காலக்கட்டத்திலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காகத்தான், மெகாலே கல்வி முறையை ஒழிக்க வேண்டும் என்று முதல் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையிலே தமிழகத்தை ஒரு நல்ல பாதையிலே அழைத்துக் கொண்டு செல்கிற ஒரே தலைவர், உன்னத தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற காலத்திலேதான் அந்த மெகாலே கல்வி முறையை ஒழித்துக் கட்ட முடியும்; (மேசையைத் தட்டும் ஒலி) முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்ற ஒரு நம்பிக்கையோடுதான் இன்று நான் உங்கள்முன் என்னுடைய பணிவான' கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய உரிமை பறிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இந்த மெகாலே கல்வி முறையிலே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அதாவது உங்கள் உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டது, 15 நிமிடங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். 12–05–க்கு ஆரம்பித்திருக்கிறார்; 12–40–க்கு முடித்திருக்கிறார். கிட்டத்தட்ட 35 நிமிடங்கள் அவருக்கு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் allow பண்ணினால், மற்ற உறுப்பினர்கள் பேச முடியாது. அதனால், நான் அடுத்த உறுப்பினரை அழைத்திருக்கிறேன்.

பிற்பகல் 12–45

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** ஆன்றோர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள் இவர்களெல்லாம் சேர்ந்து ஒரு மிகப் பெரிய' அற்புதமான திட்டத்தை மெகாலே (குறுக்கீடுகள்) ஆன்றோர்கள், சான்றோர்கள் வழங்கியருளிய எண்ணத்தின்படி. . . (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கல்வி முறையை மாற்றியமைக்கக்கூடிய மிகப் பெரிய ஒரு காலக்கட்டம், மிகப் பெரிய ஒரு கடமை, தமிழக முதலமைச்சருக்கு இருக்கிறது. . . (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** என்ற எண்ணத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) இன்று தமிழகத்திலே தொழில் புரட்சி, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி இவை மூன்றையும் செய்து சாதனை படைத்துக்கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் இருக்கின்ற காலத்திலேதான், கல்விப் புரட்சியும் வர வேண்டும்; கல்விப் புரட்சியைக் கொண்டு வரக்கூடிய ஒரே தகுதி படைத்தவர் டாக்டர் கலைஞர்; (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், டாக்டர் கலைஞர் தமிழகத்திலே சிறப்பான ஒரு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்–குழப்பம்) அன்னை சோனியா காந்தி, எங்களுடைய அன்னை சோனியா காந்தி அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான ஒரு வழிகாட்டுதலின்பேரில், இந்தியாவை ஆளக்கூடிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மிகப் பெரிய தலைவர் அன்னை சோனியா காந்தி இருக்கின்றார்களே, அவர்கள் துணையோடு. . . (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) சொன்னால் கேளுங்கள். உட்காருங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 35 நிமிடங்கள்தான். மற்ற கட்சிகளில் உள்ளவர்கள் எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. அனுமதியில்லை. (கூச்சல்–குழப்பம்) அனுமதியில்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** ஒரு புரட்சியைக் காண வேண்டும்; கல்விப் புரட்சியைத் தர வேண்டும்; (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. உட்காருங்கள். அனுமதியில்லை, உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அனுமதி தர முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். (குறுக்கீடுகள்)

[2007 மே 3

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கல்விப் புரட்சியைத் தர வேண்டும்; தருவார் என்ற காரணத்தினாலே, டாக்டர் கலைஞர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருகிறீர்களா? நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** பாடத் திட்டங்களைச் செயல்முறைக் கல்வியாகவும். . . (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருகிறீர்களா? அல்லது, நடவடிக்கை எடுக்கட்டுமா? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் பேசும்போது இடையூறு பண்ணுகிறீர்கள். (கூச்சல்–குழப்பம்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** செயல்முறைக் கல்வியாகவும். . . (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அனுமதிக்க முடியாது. மேற்கொண்டு நேரம் கொடுக்க முடியாது. ஒதுக்கப்பட்டது 15 நிமிடங்கள். பேசியிருப்பது 35 நிமிடங்கள். (கூச்சல்–குழப்பம்) அனுமதியில்லை. (கூச்சல்–குழப்பம்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** தமிழகத்திலே செயல்முறைக் கல்வி, தொழில்முறைக் கல்வி வர வேண்டுமென்ற காரணத்தால், டாக்டர் கலைஞர் ஒருவர்தான் இதைச் செய்ய முடியும், செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு, மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான கருத்துகளை உங்கள்முன் பதிவு செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்–குழப்பம்)

வேலைக்கேற்ற ஊதியம், கல்விக்கேற்ற வேலை, இதெல்லாம் கிடைக்கின்றதா? இன்று உயர் கல்வி எதற்குப் படிக்கிறான்? தன்னுடைய வாழ்க்கையிலே உயரிய நிலையை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் உயர் கல்வியை மனிதன் படிக்கிறான். ஆனால், அவனுடைய கல்விக்கேற்ற வேலை இருக்கின்றதா என்று சொன்னால் அங்கே. . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாருக்கும் அனுமதி கிடையாது. உறுப்பினர் விஷ்ணுபிரசாத், உரையை முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்)



2007 மே 3]

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இன்னும் ஆரம்பிக்கவேயில்லை. முடியாது. முடியவே முடியாது. எனக்கு முழுமையாக வாய்ப்புத் தர வேண்டும். இவர்களை வெளியேற்றுங்கள். இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) ஒரு கல்விக்காக நான் குரல் கொடுக்கின்றேன். இவர்கள் அனைவரும் என்னுடைய ஜனநாயகக் கடமையைப் பறிக்கின்றார்கள். எனவே, உடனடியாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களை முதலிலே வெளியே அனுப்புங்கள். (கூச்சல்–குழப்பம்) இவர்களுக்கு இங்கே இருப்பதற்குத் தகுதியில்லை. தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்ற முடியாமல் இவர்கள் மக்களை ஏமாற்றுகின்றார்கள். (கூச்சல்–குழப்பம்) மக்களை ஏமாற்றுகின்ற. . . (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருவதாக இருந்தால், உட்காருங்கள். இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (கூச்சல்–குழப்பம்)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்த நாட்டை விட்டே விரட்டியடிக்க வேண்டும். (கூச்சல்–குழப்பம்) இந்த நாட்டை விட்டு உடனடியாக இவர்களை வெளியேற்றுங்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டுமென்றால் சரி. (கூச்சல்–குழப்பம்) எனக்கு ஒன்றுமில்லை. (கூச்சல்–குழப்பம்) அனுமதியில்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** ஏனென்றால், அரிய கருத்துகளைச் சொல்லும்போது. . . (கூச்சல்–குழப்பம்) என்னால் முடியாது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பவும் சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) ஒரு உறுப்பினர் பேசும்போது யாரும் குறுக்கிட்டு இடைஞ்சல் பண்ணக் கூடாது. (கூச்சல்–குழப்பம்) உங்கள் உறுப்பினர் 35 நிமிடங்கள் பேச எடுத்திருக்கிறார். (கூச்சல்–குழப்பம்) அதனால், இதற்குமேல் allow பண்ண முடியாது. 15 நிமிடங்கள்தான் அவருக்கு ஒதுக்கப்பட்டது. 35 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள். அனுமதியில்லை.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதியுங்கள். நான் இந்த நாட்டிற்காக, இந்தத் தமிழகத்திற்காக, உயர் கல்விக்காக (மேசையைத் தட்டும் ஒலி) பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். என் உயிரைவிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறேன். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இவர்கள், தங்களுடைய ஜனநாயகக் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். *(கூச்சல்–குழப்பம்)* எனவே, இந்தச் சபையிலே இவர்கள் இருப்பதற்குத் தகுதியில்லை, தகுதியில்லை, தகுதியில்லை என்று சொல்லி, முதலிலே அவர்களை விரட்டுங்கள். . . *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடந்ததை நான் சொல்லியாகிவிட்டது. 15 நிமிடங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்டது. 35 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இதற்கு மேல் நேரம் தர முடியாது. மற்ற கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டியிருக்கிறது. அமைதியாக உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)* திரும்ப எச்சரிக்கையாகச் சொல்கிறேன். உட்காருங்கள். Right. *(கூச்சல்–குழப்பம்)* Point of order எல்லாம் ஒன்றும் இல்லை. என்ன point of order? *(கூச்சல்–குழப்பம்)* அமைதியாக உட்காருகிறீர்களா? இல்லை, வெளியேற்றவா? *(கூச்சல்–குழப்பம்)* Right. அவைக் காவலர்கள், அனைவரையும் வெளியேற்றுங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** நன்றி, நன்றி, நன்றி. *(கூச்சல்–குழப்பம்)*.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரையும் அப்படியே வெளியேற்றுங்கள். *(கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்)* அவைக் காவலர்கள், எல்லோரையுமே வெளியேற்றிவிட்டீர்களா?

*(உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம், தன் கையிலிருந்த கடிதங்களைக் கிழித்துப் பேரவைத் தலைவரின் மேசையின்மீது போட்டார்.)*



## 9. அரசினர் தீர்மானங்கள்

### (அ) உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்களைப் பேரவைப் பணிகளினின்றும் கூட்டத்தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கிவைத்தல்

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* ஒரு கூட்டத்தொடரில் இரண்டு முறை வெளியேற்றப்பட்டால் அந்தக் கூட்டத்தொடர் முழுவதும் அவர்கள் கலந்துகொள்ள முடியாது என்று நடவடிக்கை எடுப்பது மரபு. இதுகுறித்து உங்களுடைய தீர்ப்பை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், *(குறுக்கீடு)* வெளியேற்றுங்கள்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்து, *(குறுக்கீடுகள்)* பேரவையின் விதிகளை மீறித் தொடர்ந்து *(குறுக்கீடுகள்)* பேரவையின் விதிகளை மீறித் தொடர்ந்து முறையற்றுப் பயன்படுத்துவதாலும் சட்டமன்றப் பேரவை விதி 120, 121 உள்விதி 2–ன்கீழ் இந்த அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர் சி.வி. சண்முகம் அவர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிக நீக்கம் செய்ய வேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**உறுப்பினர்** திரு. சி.வி. சண்முகம் அவர்கள் இந்தக் கூட்டத்தொடர் முடிகிற வரை, எஞ்சிய நாட்களுக்கு அவையைவிட்டு நீக்கி வைக்கப்படுகிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உரிய நேரத்திற்கு மேல் ஒதுக்கிக் கொடுத்தீர்கள். பின்னர் எங்களுடைய உறுப்பினரை நீங்கள் அழைத்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தீர்கள். எங்கள் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கின்றபோது, இதேபோன்று இவர்கள் கூச்சலிடுவதும், சபாநாயகர், உறுப்பினர்களை வெளியேற்றக் கூறியபோது, சபாநாயகர் முன்னாலே வந்து அந்தக் கடிதங்களையெல்லாம் கிழித்து, சபாநாயகர் முன்னாலே போடுவதும், குப்பைத் தொட்டியிலே போடுவதும் எந்தவிதத்திலே நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. அதுமட்டுமல்லாமல், வெளியேபோய் நின்றுகொண்டு, சபாநாயகரையும், இங்கே இருக்கின்ற கட்சிக்காரர்களையும் பற்றித் தகாத வார்த்தைகளைக் கூறுவதும், தகாத சைகைகளைச் செய்வதும், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழகல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாளை முதல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பேசுகின்றபோதெல்லாம் காங்கிரஸ் கட்சி இதேபோன்று கூச்சலிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள், விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இவர்களுடைய எதிர்ப்பிற்கு நடுவிலே பேசிய காரணத்தினால், உயர்ந்த பல கருத்துகளை என்னால் பதிய வைக்க இயலவில்லை.

பிற்பகல் *12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, அமைச்சர் பெருமக்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம் அவர்களை வெளியேற்றச் சொல்லி உத்தரவு பிறப்பித்த பின்னர், எனக்கு முன்னாலே இங்கே வந்துநின்று, அவர் கையிலிருந்த கடிதங்களையெல்லாம் கிழித்து என்னுடைய மேஜையில் எனக்கு முன்பாக வீசி எறிந்தது, இந்த அவையை அவமானப்படுத்துகிற வகையில் அது நடந்தது என்பதை நான் முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய அந்த நடவடிக்கையை இங்கே இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அந்த அளவுக்கு அவை மரபை மீறுகின்ற வகையில்



அவையை மதிக்காத முறையில் அவர் நடந்துகொண்டதை, அவையின் அனைத்து உறுப்பினர்களின் சார்பாக அவருடைய நடவடிக்கையைக் கண்டிக்கிறேன். *(குறுக்கீடு)* சொல்லுங்கள். திரு. கோவிந்தசாமி, சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான மானியக் கோரிக்கையின்மீது இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இதற்காக நீங்கள் கொடுத்த கொள்கைக் குறிப்புகளை எல்லாம், விடிய விடிய உட்கார்ந்து படித்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, கூட்டங்களையெல்லாம் நடத்தி, பேசுவதற்காகத் தயாரிப்போடு நாங்கள் வருகிறோம். மக்களுக்கு உபயோகமாக, இந்த அரசினுடைய நல்ல பணிகளையும் குறிப்பிடுவதோடு, இந்த அரசு மேற்கொள்ளவேண்டிய பல்வேறு பணிகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் வருகிறோம். ஆனால், இப்படிப்பட்ட பொறுப்பான முறையில் நடந்து கொள்கிற உறுப்பினர்களுக்கு உரிய நேரம் கிடைப்பதில்லை. ஆனால், சட்டமன்ற நேரத்தை, சட்டமன்ற ஜனநாயகத்திற்குப் புறம்பாக நேரத்தை, உண்மையிலேயே வீணடித்து சபை நடவடிக்கைகள் முறையாகச் செயல்படுவதற்குத் தொடர்ச்சியாக இடையூறு செய்து கொண்டிருக்கிற இந்தப் போக்கைக் கட்டுப்படுத்தவில்லையென்றால், இந்தச் சபையை ஜனநாயகபூர்வமாக நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமை உருவாகும். ஒவ்வொரு நாளும் இப்படி வருவது, கூச்சலிடுவது, அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் எடுத்த முடிவின்படி, ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலான நேரம், இரு மடங்கு நேரம், அவர்கள் பேசுகிறார்கள்; பேசிவிட்டு, மற்றவர்கள் பேசுவதற்கு இடையூறாக, இந்தச் சபையை நடத்துவதற்குக் குறுக்கீடாக நிற்பது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. ஆகவே, கொஞ்சம் கறார் தன்மையோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், நாளையிலிருந்து இந்த நடவடிக்கையை முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் பேசுகின்றபொழுது, அவருடைய பேச்சும் முறைகேடான பேச்சாக இருந்தது. பேச்சும் பொருள்பொதிந்த பேச்சாக இருந்தால் பரவாயில்லை. பொருள் இல்லாமல் பேசிவிட்டு, பேரவைத் தலைவர் முன்பாக வந்து, பேரவைத்

தலைவரை அவமானப்படுத்துகிற வகையிலே கையிலே இருந்த தாள்களை எல்லாம் கிழித்து எறிவது என்பது, பேரவைத் தலைவரைக் கொச்சைப்படுத்தக்கூடிய செயல். அதை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதுமாதிரி அவர் பலமுறை நடந்துகொண்டிருக்கிறார். ஒருமுறை அல்ல; பல முறை நடந்துகொண்டும், நீங்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேதான், இப்படிப்பட்ட நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர் யாராக இருந்தாலும், தயவுதாட்சண்யம் இல்லாமல் நீங்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல, அவையிலே யார் செய்தாலும் சரி, நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுங்கள். பேசுவதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. நல்லவற்றை விவாதிப்பதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை தொடரக் கூடாது என்பதை உங்களிடத்திலே அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சண்முகம்மீது, ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு, மீண்டும் இங்கே எதிர்க்கட்சித் தலைவர்களால் வேண்டுகோள் வைக்கப்பட்டு, மீண்டும் அவரை அனுமதித்தீர்கள். ஆனால், அனுமதித்தது மிகப் பெரிய தவறு என்பது, நமக்கு இப்பொழுது வழங்கப்பட்ட ஒரு தண்டனைபோல் அவருடைய செயல் அமைந்திருக்கிறது. திரு. சண்முகம் அவர்கள் பேசுகிறபொழுது, ஒரு முன்னாள் அமைச்சராக இருந்தவர்; அந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்தவர்; அந்தத் துறைபற்றிய கருத்துகளைச் சொல்கிறபொழுதே, உண்மைக்கு மாறான அனைத்துக் கருத்துகளையும் இங்கே பதிய வைப்பதற்கான முயற்சியை எடுக்கிறார். இடையிலே, ஒலிபெருக்கி இல்லாமல், பல்வேறு தேவையற்ற சம்பவங்களையும், கருத்துகளையும் பேசுகிறார். எதிர்க்கட்சி வரிசையிலே, யாராவது அவர்கள் கருத்தைச் சொல்ல முற்பட்டால், ஒன்றுசேர்ந்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவருமே பேசுகிற பேச்சை, இங்கே பத்திரிகைகாரர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன். அந்த வார்த்தைகள் நா கூசுகிற வார்த்தைகள்; அவை அனைத்துமே பயன்படுத்தப்படுகின்றன அ.தி.மு.க. உறுப்பினர்களால். அப்படியானால், அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு அவ்வளவு அதிகாரமும், அவ்வளவு ஜனநாயக உரிமையும் இங்கே வழங்கப்பட்டுக்



*கொண்டிருக்கிறதா? வேறு யாருமே அப்படிப் பேச முடியாதா? கேட்க முடியாதா?*

அவர்களுடைய தலைவர், இப்படிப்பட்ட தவறான அறிக்கையை வெளியிடுகிறார். அதை அப்படியே இங்கே வந்து, வாந்தி எடுக்கிற வேலையைத்தான் அ.தி.மு.க. செய்துகொண்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* வேறு ஏதாவது புதிய செய்தியை ஆக்கபூர்வமான கருத்துகளை இந்த அவையிலே பதியவைத்து, நாட்டு மக்களுக்கு நலம் பயக்கத்தக்க வகையிலே அவர்களுடைய செயல்பாடு அமைந்தால், ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், இப்படியே அவர்களுடைய செயல்பாடு இருக்கிறது. கிராமத்திலே சொல்லுகிற ஒரு பழமொழிதான் எனக்கு நினைவுக்கு வருகிறது, "ஒரு கூடை கல்லும் பிடாரி ஆன கதை போல", அவர்களுடைய தலைமையிலிருந்து தொண்டர் வரையிலும், அ.தி.மு.க. அப்படித்தான் இருக்கும்போல் இருக்கிறது. இது நாடு அறிந்துகொண்டிருக்கிற ஓர் உண்மை. இப்படியே நடைபெறுவதற்கு அனுமதிக்கக் கூடாது. ஓர் உறுப்பினரை நீங்கள் பேச அழைக்கிறபொழுது, அவர் பேசுகிறபொழுது அனைவருமே எழுந்து ஒன்றாகக் கூச்சலிட்டு, அவருடைய பேச்சையே பதிவுசெய்ய விடாமல் தடுத்துவிட்டார்கள். இப்படியே செய்கிறபோது, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிறபோது—தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம்; நாளையிலிருந்து இந்த அவைக்கு அவர்கள் வரலாம்; ஆனால், அவர்கள் பேசினால்—நாங்களும் கூச்சல் போட்டு அவர்களுடைய பேச்சைத் தடுப்போம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள்மீது நம்முடைய அமைச்சர் பெருமக்கள் கொடுக்கின்ற புத்தகங்களை எல்லாம் இரவு முழுவதும் படித்துவிட்டு, நீங்கள் கொடுக்கும் 5 நிமிடங்களில் பேசி முடிக்கலாம் என்று பார்த்தால், அதிலும் இப்படி இடையூறு செய்து, தொடர்ந்து கலாட்டா செய்வதும், வம்புக்கு வருவதும் வாடிக்கையாகிவிட்டது. ஏற்கெனவே 3 சட்டமன்ற உறுப்பினர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுத்து அவர்கள் உள்ளே வரக்கூடாது என்று... (குறுக்கீடு) 4 சட்டமன்ற உறுப்பினர்கள் வரக்கூடாது என்று ஆணையிட்டிருந்தீர்கள். ஆனால், நம்முடைய

[திரு. கு. செல்வம்] [2007 மே 3

தமிழக முதல்வரிடமும், அவை முன்னவர் அவர்களிடமும், அவர்களை எப்படியாவது உள்ளே வரவழைக்க வேண்டுமென்ற நம்முடைய காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவரின் வேண்டுகோளை ஏற்று உள்ளே விட்டுவிட்டீர்கள். தொடர்ந்து வாடிக்கையாக இப்படி நடந்துகொள்வது, அவர்களுடைய பழக்கமாகிவிட்டது. இனிவரும் காலங்களிலாவது, இந்த அவை மாண்போடு நடக்க வேண்டும், எந்தவித சிக்கலுக்கும், கலாட்டாவுக்கும் இடம் அளிக்கக்கூடாது, அவர்கள் அப்படி இடைமறித்துப் பேசினால், நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு விசித்திரம் என்னவென்றால், மாண்புமிகு பொன்முடி அவர்கள், மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்களுடைய அல்லது கலைஞருடைய பேரன் என்று சொன்னதைத் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார்கள். வெளியிலே எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விட்டார்கள், வெளியிலேயே அதற்கு நாங்கள் மறுப்பு அறிக்கை விட்டு, பதில் சொன்னோம். பதில் சொன்னதற்குப் பிறகும்கூட, இந்த அவையில் மாண்புமிகு வீராசாமி அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்; அந்த நேரத்திலே கொண்டுவந்து, அதே குற்றச்சாட்டை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறார்கள். ஒரு பொய்யைக் கொண்டுவந்து, உண்மைக்கு மாறான சரக்கை இங்கே பதிவு செய்ய விரும்புகிறார்கள். அதற்குப் பதில் சொன்னார்; பதில் சொன்னால், அதோடு விட்டுவிட வேண்டும். அதைத்தான் நானும் சொன்னேனே! துரைமுருகனுக்கு மாமனார் ஊர் பெங்களூர். அப்படி எங்களுக்கு பெங்களூரே இல்லை. அவர் மாமனார் அங்கே பெரிய வியாபாரம் செய்கின்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுதான். என் மாமனார் பெரிய வியாபாரியாம். என் மாமனார் செத்து 10 வருடங்கள் ஆகிவிட்டன. என் மாமனார் ஊரும் தெரியவில்லை; என்னுடைய மாமனார் உயிரோடு இருக்கிறாரா என்றும் தெரியவில்லை. எவன் எழுதிக் கொடுக்கிறானோ, என்ன எழவோ, அதிலே ஒரு கையெழுத்தைப் போட்டு அனுப்பிவிட்டு, எங்கள் உயிரை வாங்கினால், என்ன செய்வது? அதைக் கொண்டு வந்து இங்கே நம் உயிரை வாங்குகிறார்கள். கேட்டால், இவர்கள் எல்லாம் அடிவருடிகள். அப்போது அவர்கள் அடியை வருடியவர்கள் எல்லாம் எப்பேர்ப்பட்டவர்களாக இருப்பார்கள்? அவர்கள் அடியை வருடியவர்கள் எல்லாம் எப்படி இருப்பார்கள்? ஏன் சார், இதுவெல்லாமா ஒரு பேச்சு? ஆகையினால், அவர்கள் சட்டமன்றத்திற்கு வருவதே இல்லை.



2007 மே 3] [திரு. துரைமுருகன்]

அவர்கள் அம்மா புகழ் பாடுவதற்காகத்தான் வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கிறார்கள். யாராவது வரவேண்டியது, அவர்கள் அம்மாவைப்பற்றிச் சொல்ல வேண்டியது; ஆத்தாவைப்பற்றிச் சொல்ல வேண்டியது; போய்விட வேண்டியது; இதையே வேலையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாளைக்குப் பாருங்களேன் மறுபடியும். அவர்கள் எங்கேயோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்; இங்கே வருகிறது அறிக்கை. கூலிக்கு இரண்டு பேர் இருக்கிறார்கள்; கிடு கிடுவென்று எழுதிக்கொடுத்து, கையெழுத்தைப் போட்டு அப்படியே மடித்து அனுப்பிவிடுகிறார்கள். ஆகையினால், கொஞ்சம் strict ஆக இருங்கள் சார். பாவம், பன்னீர்செல்வம் கொஞ்சம் பரவாயில்லை. வம்பில் எல்லாம் மாட்டக்கூடாது என்று பார்க்கிறார்; இழுத்து விடுகிறார்கள். ஆகையால், பொய்யை, மீண்டும் மீண்டும் சொன்னதை, 'கோயபல்ஸ்' என்று சொன்னார். அவர் சொன்னதில் ஒன்றும் தப்பே கிடையாது. (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை காலை இதற்கு நீங்கள் ஒரு முடிவு எடுக்காவிட்டால், காங்கிரஸ் கட்சி இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசுகின்றபோதெல்லாம் சத்தம் எழுப்பிக்கொண்டு, நின்று கொண்டே இருப்போம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களும், எங்களுடைய தலைவர் அவர்களும் கூறியதுபோல, இந்த உயர் கல்வி மானியக் கோரிக்கை குறித்து நாங்கள் இரவு முழுவதும் படித்துவிட்டு, தயார் செய்து மக்களுக்கு நல்ல பல கருத்துகளையும், அரசாங்கத்திற்கு நல்ல பல கருத்துகளையும் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக வந்தும், என்னுடைய கருத்துகளை முழுவதுமாகப் பதிவுசெய்ய

முடியவில்லை. எனவே, நீங்கள் முழுவதுமாக எனக்கு நேரத்தை ஒதுக்கித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

முதற்கண்ணாக, நீங்கள் அவர்களை வெளியேற்றுங்கள் என்று நான் சொன்னவுடனேயே, முளையிலேயே கிள்ளி எறிந்திருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. வளர விட்டு, பின் கோடரி தேட வேண்டாம் தலைவர் அவர்களே. நாளை பிரச்சினை செய்வோம் என்று சொன்னார்கள். சத்தம் மட்டுமல்ல; இங்கே அவர்கள் எழுந்தார்கள் என்றால், பிரளயமே உருவாகும் என்பதிலே நாங்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–05*

இன்று உயர் கல்வி மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உயர் கல்வி என்றால் கல்வியின் நிலை மட்டும் உயரவில்லை; கல்வியின் தரத்தையும் உயர்த்த வேண்டும். அதைக் கற்கும் மனிதனும், தன்னுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற காரணத்திற்காக, உயர் கல்வியிலே சேருகின்றான். ஆனால், இன்றைய நிலை என்ன என்பதனைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆங்கிலேயராலேயே பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலேயே கொச்சையாகப் பேசப்பட்டு, கேலியாகப் பேசப்பட்ட முறைதான் மெகாலே கல்வி முறை. இன்று நாம் அதைத்தான் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென்றால், உயர் கல்வியிலே சேர்ந்து தமிழர்களும், இந்தியர்களும் அதிமேதாவிகளாக ஆகிவிடக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான், இந்த மெகாலே கல்வி முறையை ஆங்கிலேயர்கள் நமக்குத் திணித்திருக்கின்றார்கள். இந்த மெகாலே கல்விமுறை என்றால் என்ன என்று கேட்டால், ஒருவன் 10–வது வகுப்பிலே தேர்விலே தோல்வியுற்றாலோ, 12–வது வகுப்புத் தேர்விலே தோல்வியுற்றாலோ, அவன் வாழ்க்கை இருண்ட உலகமாக மாறிவிடுகின்றது. அதற்குப் பிறகு, அவன் என்ன கல்வி கற்பான்; அவனுடைய எதிர்காலம் எப்படி அமையும் என்பதிலே அரசாங்கம்தான் முழுக் கவனத்துடன் செயல்பட வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மெகாலே கல்வி முறையை ஒழிக்க வேண்டுமென்று, முதன்முதலாகக் குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்; ஆன்றோர்கள், சான்றோர்கள்,



கல்வியாளர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து செயல் முறைக் கல்வியை வகுக்க வேண்டும், தொழில்கல்வி வகுக்க வேண்டும்; அதுதான், மனிதன் படிக்கின்ற படிப்பிற்கு உத்தரவாதமாக இருக்கும் என்று சொன்ன காரணத்தினாலேதான், நானும் என்னுடைய தாழ்மையான அந்தக் கருத்தைச் சொல்கிறேன். இப்போது, பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி, தொழில் புரட்சி செய்துகொண்டிருக்கின்ற டாக்டர் கலைஞர் இருக்கின்ற காலத்திலேயே, அவரால்தான் இதைச் செய்ய முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) கல்விப் புரட்சியையும் செய்ய வேண்டுமென்ற காரணத்திற்காக, இந்தச் சபையிலே என்னுடைய தாழ்மையான கருத்துகளைப் பதியவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், இப்போது பொறியியல் கல்லூரிகள் அதிகப்படியாக வந்துவிட்டன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக உலகம் வேகமாக உருண்டோடிக் கொண்டிருக்கின்ற காலக்கட்டத்திலே, Research Oriented Syllabus அவசியம் தேவை என்ற என்னுடைய கருத்தைப் பதிவுசெய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், வேலைக்கேற்ற ஊதியம், கல்விக்கேற்ற வேலை கிடைக்கிறதா என்று சொன்னால், இல்லை. அப்போது உயர் கல்வியை எதற்காக ஒரு மனிதன் படிக்கின்றான்? ஆரம்பக் கல்வியோடு தன்னுடைய படிப்பினை நிறுத்திவிடலாம். ஆனாலும், தொடர்ந்து படிக்க வேண்டும்; உயர் கல்வியிலே சேர வேண்டுமென்ற ஓர் எண்ணத்தோடும், வண்ணக் கனவுகளோடும் அவன் உயர் கல்வியிலே சேர்ந்தாலும், அதற்கேற்ற வேலை கிடைக்கிறதா என்று சொன்னால், இல்லை. அப்போது கல்வியானது தோற்றுப் போகின்றது. அந்தக் கல்வியைத் தோற்றுப்போக, நாம் விடக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான், இங்கே என்னுடைய தாழ்மையான கருத்தை மேலும் பதிவுசெய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

டாஸ்மாக் ஊழியர்களுக்குக்கூட—என்னுடைய கிராமத்திலே, வடமணப்பாக்கம் என்ற ஊரிலே, இளங்கோவன் என்ற ஒரு மாணவன், பி.எட். படித்துவிட்டு, டாஸ்மாக்கிற்கு கடந்த வருடம் 50,000 ரூபாய் கட்டியும் அவனுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை.

இதே சட்டமன்றத்திலேயே clerk-ஆக இருப்பவர் யார் தெரியுமா? ஒரு பொறியியல் பட்டதாரி. ஒரு பொறியியல் கல்லூரியில் சேர்ந்து பட்டதாரி ஆகிய ஒரு பெண், இதே சட்டமன்றத்திலே clerk-ஆக இருக்கின்ற ஓர் அவல நிலையைத்தான் நாம் பார்க்கின்றோம். அதாவது clerk வேலை அவ்வளவு கேவலமானது அல்ல. அவர்கள்

படித்த படிப்பிற்கும் செய்கின்ற வேலைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதனைச் சுட்டிக்காட்டுவதற்காக, நான் இதைச் சொல்கின்றேன். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், employment exchange வெறும் அரசாங்க வேலைக்காக மட்டும் என்று இருக்கக் கூடாது. நிறைய தனியார் நிறுவனங்களை இப்போது தமிழக அரசாங்கம் ஊக்குவிக்கின்றது. தனியார் நிறுவனங்களும் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக்கொண்டு, தங்களுடைய முன்னேற்றப் பாதையிலே சென்றுகொண்டிருக்கின்ற காலக்கட்டத்திலே, மகாராஷ்டிராவிலேயிருந்து இளைஞர்கள் வருகிறார்கள்; பூனாவிலிருந்து படித்த பட்டதாரிகள் வருகிறார்கள். நம்முடைய தமிழகத்திலே எத்தனையோ பட்டதாரி இளைஞர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களெல்லாம் employment exchange–லே பதிவு செய்திருக்கின்றார்கள். அவர்களையும் இந்தத் தனியார் நிறுவனங்களில், வேலைக்கு ஆள் எடுக்க வேண்டுமென்று சொன்னால், employment exchange மூலமாகத்தான் எடுக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் வேலையில்லாப் பட்டதாரிகள் அனைவருக்கும் ஒரு விடிவுகாலம் பிறக்கும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று உலக அரங்கமே இந்தியாவைப் பார்த்துப் பயப்படுகிறது என்று சொன்னால், அமெரிக்காவிலே 60–லிருந்து 70 வயது கடந்தவர்கள் 30 சதவீதம் பேர் இருக்கிறார்கள்–Non-productive population. அவர்கள் அந்த அரசாங்கத்திற்குச் சுமையாகத்தான் இருக்கிறார்கள். அவர்களைப் பேணிக் காப்பதும் அந்த அரசாங்கத்தின் கடமையாக மாறியிருக்கிறது. ஆனால், இந்தியாவில் மட்டும்தான் 20–லிருந்து 45 வயது உள்ளவர்கள் கிட்டத்தட்ட 65 சதவீதம் பேர் இருக்கிறார்கள் – productive population. இந்த இளைஞர்கள் எந்த வேலையையும் செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர்கள். எனவேதான், இதைக் கண்டுதான், இன்று உலக அரங்கம் இந்தியாவை, குறிப்பாக தமிழகத்தைப் பார்த்துப் பயந்துகொண்டிருக்கின்ற ஒரு காலக்கட்டத்திலே, இவர்களை நாம் வீணடித்துவிடக் கூடாது. இவர்களுடைய வேலையை, இவர்களுடைய திறமையை இந்த அரசாங்கம்தான் வாங்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், mechanised farming வரவேண்டும். இன்னும் காலம் போகின்ற போக்கிலே போகின்றோம். குறுநில மன்னர்கள் எப்படி ஒரு காலத்திலே அழுதார்களோ, அதேபோல குறு விவசாயிகளும், சிறு விவசாயிகளும் அழுகின்ற காலக்கட்டத்தை



நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம். அது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால், TATA, Birla, Reliance போன்றவர்களெல்லாம் வேளாண்மையிலே இப்போது வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்க மாற்றம். பரிணாம வளர்ச்சிதான். இதை நாம் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால், இந்த mechanised farming வருவதற்கு முன்பாக, நாம் நம்முடைய இளைஞர்களை வேளாண் கல்வியிலே தயார்படுத்த வேண்டும். ஏனென்றால், நான் இன்று சொல்கிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவொரு காலக்கட்டத்திலும் அரிசி, பருப்பு, பழங்கள், காய்கறிகளுக்காக அண்டை நாட்டிடம் நாம் கையேந்தக்கூடிய நிலைக்கு நாம் இந்தியாவை உருவாக்கிவிடக் கூடாது. அதற்குத் தமிழகம் ஒரு முன்னோடியாகத் திகழவேண்டுமென்ற காரணத்தினால், வேளாண் கல்விக்கு, உயர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தை கூறிக்கொண்டு, U.S.S.R., Yuri Gagarin–ஐ, 'Sputnik' என்ற இராக்கெட்டிலே முதலில் அனுப்பியது. அப்போது அமெரிக்காவில் மிகப் பெரிய ஒரு போராட்டம்; அமைதிப் போராட்டம். கல்வியாளர்கள் எல்லாம் கூடிக் கூடிப் பேசினார்கள். "என்னது? ஒரு பொதுவுடைமை நாடு; அந்த நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு கல்வி முறை வைத்திருக்கிறார்கள்; நாம் தனியுடைமை நாடு, நாம் ஏன் இந்தக் கல்வி முறையை மாற்றக்கூடாது" என்ற ஒரு மௌனப் போராட்டத்திலே பத்து வருடங்கள் அவர்கள் வேலை செய்தார்கள். அதன் விளைவாகத்தான், அதற்குப் பதில் தரும் வகையில்தான் பத்து வருடங்களிலே, அவர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங்கை விண்ணுக்கு அனுப்பினார்கள். நிலவிலே காலடியைப் பதியவைத்தார்கள்.

பிற்பகல் 1–10

பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் ஒன்று மட்டுமே மாற்றம் இல்லாதது—Only change is not changeable. எனவே, மாற்றத்தை அடிக்கடி நாம் புகுத்த வேண்டும். கல்விப் பாடத் திட்டங்களில், உடனுக்குடன் நம்முடைய உலகத்தினுடைய வேகத்திற்கு ஈடுகொடுக்க வேண்டும் என்று சொன்னால், மாற்றங்களை உடனடியாக நாம் செய்தாகவேண்டும். பத்து வருடங்களுக்கு ஒரு பாடத் திட்டம். பி.ஏ. என்கிறோம்; பி.காம். என்கிறோம்; பி.எஸ்சி. என்கிறோம். இதைப் படித்துவிட்டு, பட்டதாரிகளுக்கு என்ன எதிர்காலம் இருக்கிறது? இதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, தொழில்முறைக் கல்வியும், செயல்முறைக் கல்வியும் அவசியம் என்பதனை நாம் உணர்ந்து, இந்த உயர் கல்வியிலே அதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்று சொல்வார்கள். எடுக்க எடுக்க சுரப்பது போல, படிக்கப் படிக்கத்தான் நம்முடைய அறிவு வளரும். எனவே, உயர் கல்வி என்பது, ஒரு நாட்டின் உயிர்நாடி என்பதை நாம் உணர்ந்துகொண்டு செயல்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

மேலும், மருத்துவப் பரிசோதனை. பள்ளிகளிலே மருத்துவப் பரிசோதனை இருப்பதைப்போல, இளைஞர்கள் படிக்கின்ற கல்லூரிகளிலே மருத்துவப் பரிசோதனை வேண்டும். ஏனென்றால், 25 வயதிலே Heart attack வருகிறது. Height, weight, B.P., Glucose இவையெல்லாம். . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** கல்லூரிகளிலும் மருத்துவப் பரிசோதனை அவசியம் தேவை. ஏனென்றால், அந்தப் பருவத்திலேதான், அவர்கள் தடம் புரண்டு செல்லக்கூடிய ஒரு காலக்கட்டத்திலே இருக்கிறார்கள். அதையெல்லாம் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொன்னால், மருத்துவப் பரிசோதனை தேவை.

இன்று இருக்கக்கூடிய மன அழுத்தங்கள்; I.T. Sector–லே இன்று உலக அரங்கிலே இந்தியாவும், தமிழகமும் தலைநிமிர்ந்து நடைபோட்டுக்கொண்டிருக்கிற வேகத்திலே, அங்கே வேலை செய்து கொண்டிருக்கின்ற அனைவரும் மன அழுத்தத்திலே பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுடைய மன மாற்றத்தை, இவர்களுடைய மன அழுத்தத்தை, நாம் சீர்செய்யவேண்டும் என்று சொன்னால், யோகாசனப் பயிற்சியும் இளைஞர்களுக்குத் தேவை. அதையும் உயர் கல்வியிலே நாம் பெற்றுத்தர வேண்டும்.

மேலும், சிங்கப்பூர், மலேசியாவிலே National Defence Academy என்று இருக்கிறது. அங்கே படிக்கின்ற இளைஞர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஷ்ணுபிரசாத், இன்னும் நான்கு பேர் பேச வேண்டியிருக்கிறது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** நான் என்ன பண்ணுவது தலைவரே? அதைத்தான் நான் சொன்னேன். நீங்கள் முன்னாடியே அவர்களை அனுப்பியிருக்கவேண்டும்! அதற்குத்தான் நான் சொன்னேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். You have earned double time. போதும், உட்காருங்கள், விஷ்ணுபிரசாத். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முல்லைவேந்தன். (குறுக்கீடு) சரி, முடியுங்கள், முடியுங்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** இன்னும் இரண்டே நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். National Defence Academy–யிலே ஒவ்வொரு குடிமகனும் கண்டிப்பாக இரண்டு வருடம் நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும். அதேபோல், நம்முடைய தமிழகத்திலே இருக்கிற மக்களும் காவல் துறை, தீயணைப்புப் படை மற்றும் அத்தனை அரசாங்க வேலைகளிலே, ஏதாவது ஒன்றில், இரண்டு வருடம் stipend–லே வேலை செய்தால் போதும்; அப்போது அவர்களுக்குப் பட்டம் கொடுக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைக் கூறிக்கொண்டு, முக்கியமான ஒரு பிரச்சினை. பிற்படுத்தப்பட்டோருக்கு 69 சதவீதம் இருக்கிறது என்று சொல்கிறார்கள், தமிழகத்திலே. ஆனால், நான் கேட்கிறேன், 119 சதவீதத்திலே, 119–லே, வெறும் 69 வருவது, 69% ஆகாது. 50 விழுக்காடுதான் பிற்படுத்தப்பட்டோர்களுக்குக் கிடைக்கின்றது என்று பல குற்றச்சாட்டுகள் இன்று காதிலே விழுகின்றன. ஆனால், இன்று செங்கோலை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் நம்முடைய தமிழக அரசாங்கம், மற்றவர்களுடைய சந்தேகத்தைத் தீர்க்கின்ற வகையிலே இதன்மீது ஒரு வெள்ளை அறிக்கையைத் தந்து, மற்றவர்களுடைய வாயை அடைக்க வேண்டும். 69 சதவிகிதம் தாழ்த்தப்பட்டோருக்கு, பிற்படுத்தப்பட்டோருக்கு கிடைக்கிறது என்பதனை நிலை நாட்டவேண்டும் என்பதைக் கூறிக்கொண்டு, தொகுதி வரைமுறைக்கு வருகிறேன். இந்தத் தொகுதி வரைமுறை என்பது மிக மிக முக்கியமான பிரச்சினை. தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இல்லை. நான் கேட்கின்றேன்; தென் மாவட்டங்களிலும் சரி, மேற்கு மாவட்டங்களிலும் சரி, தாழ்த்தப்பட்டவர்கள் இல்லையா? அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து, இதற்குத் தமிழக அரசாங்கம், மற்ற அரசாங்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்து இதைத் தடுத்து நிறுத்த வேண்டும்; அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ் கிட்டத்தட்ட 240 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன; அவற்றிற்கு Research Oriented Syllabus வேண்டும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.

பிற்பகல் 1–15

***திரு. வ. முல்லைவேந்தன்:** இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இருள் அகற்றவந்த ஒய்வறியா சூரியனாம், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், வருங்கால தமிழகத்தினுடைய வரலாற்று நாயகராம் தளபதியார் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம்நிறைந்த நன்றியை முதலில் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசுகிற நல்லவாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக முதன்முதலாக, கடந்த ஆண்டு, உயர் கல்விக்கு என்று ஒரு துறையைத் தனியாக உருவாக்கித் தந்து, ஒரு பகுத்தறிவுவாதியாகப் பணியாற்றுகிற நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிற மாண்புமிகு பொன்முடி அவர்களை அந்தத் துறையிலே அமைச்சராக்கி, தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும், நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் எந்த உணர்வோடு போராடி இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தார்களோ, அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட எல்லாச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் கல்வித் துறையில் கல்வி அறிவைப் பெறுவதற்கான நல்ல வாய்ப்பை உருவாக்கி இருக்கிற இந்த அரசுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே, ஒரு முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால், கலைஞரைப்போல்தான் இருக்க வேண்டும் என்ற ஓர் இலக்கணத்தைப் படைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முதலமைச்சர் எப்படி இருக்கக் கூடாது என்று சொன்னால், கோயபல்ஸ் அறிக்கைகளை விடுகிற ** போன்றவர்கள் இந்த நாட்டிலே (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கக் கூடாது என்பதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், கல்வித் துறையில், உயர் கல்வித் துறையில்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இந்தியாவில் நாம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம். அது மாத்திரமல்லாமல், பொறியியல் கல்லூரிகளில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தன்னாட்சி வழங்குவதில் முதலிடத்தில் இருக்கிறோம். பெரியாருடைய இலட்சிய உணர்வுகளை நடைமுறைப்படுத்துகிற இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம்.

அதைத் தொடர்ந்து உயர் கல்வித் துறையில் நாம் 2020 ஆம் ஆண்டிற்குள், 25 சதவிகிதம் இடத்தைப் பெற்றிட வேண்டும்; அந்த இலட்சியப் பாதையை நோக்கி வீறு நடை போட வேண்டும் என்ற உணர்வோடு தலைவர் கலைஞர் அவர்கள், உயர் கல்வித் துறையைச் சுறுசுறுப்பாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, மத்திய அரசாங்கம் 11–வது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் 15 சதவிகித மாணவர்கள் கல்வி கற்கின்ற வாய்ப்பை உருவாக்குவதற்காக 1,500 பல்கலைக்கழகங்கள் அமைக்க வேண்டும் என Sam Pitroda தலைமையிலான. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ** என்கிற வார்த்தை சொன்னார். அந்த ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வ. முல்லைவேந்தன்:** அறிவு ஆணையம் கூறியுள்ளது. மத்திய அரசாங்கமே 15 சதவிகிதம்தான் என்கிற நிலை எடுத்திருக்கிறபோது, தலைவர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, 25 சதவிகிதம் அளவிற்கு உயர் கல்வியைக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற உன்னதமான நிலையை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

குறிப்பாக, கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், பொறியியல் கல்லூரிகளில் கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியில், ஏழையெளிய மாணவர்கள் படிக்கக் கூடாது என்ற உள் எண்ண உணர்வோடு, ரூ.12,500/- என்ற கட்டணம் நிர்ணயித்திருந்ததை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தலைவர் கலைஞருடைய ஆட்சியில், 7,550/- ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழ்நாட்டிலே மாத்திரம்தான் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அனைத்துத் தரப்பைச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சார்ந்த மாணவர்களும் இலவசமாகக் கல்வி பயிலலாம் என்கிற அற்புதமான திட்டத்தைக் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தி அறிவித்திருக்கிறார்கள்.

கிராமப்புற மாணவர்களுக்கு, கலைஞர் அவர்கள் ஆட்சியிலே இருந்த காலத்தில், 15 சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்து, அவர்கள் எல்லாம் கல்வித் துறையில் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கினார்கள். உள்எண்ண உணர்வோடு, 25 சதவிகிதமாகக் கடந்தகால ஆட்சியாளர்கள் மாற்றி, கிராமப்புற மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்புக்கு முட்டுக்கட்டை போட்டார்கள். அதுமாத்திரமல்லாமல், சென்ற ஆண்டு உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி 100 சதவிகித மாணவர்களும் தேர்வு எழுதி, நிர்வாகமே அவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின்னால், இட ஒதுக்கீட்டை முறையாகச் செயல்படுத்த வேண்டும் என்ற உணர்வோடு, நிருவாகத்தோடு பேசி தனியார் கல்லூரிகளில் 65 சதவிகிதம் பேரும், அரசின் சார்பாக, கல்லூரியின் சார்பாக, 35 சதவிகிதம் பேரும் சேருவதற்கான வாய்ப்பை உருவாக்கினார். சிறுபான்மையினர் கல்லூரிகளில் 50–க்கு 50 என்கிற விகிதாச்சார முறையைக் கொண்டு வந்தார்கள்.

அதேநேரத்தில், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்லூரிக் கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய அ.தி.மு.க. ஆட்சியில் இராமன் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிற்கு வேலை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், சிறந்த கல்வியாளர்களைக் கொண்டு குழு அமைத்து, கல்விக் கட்டணத்தை, முறையான கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்திட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்னால், தமிழ்நாட்டில் இருக்கிற ஏழையெளிய கிராமப்புறத்து மாணவர்கள் உயர் கல்வியிலே இடம் பெற்றுப் படித்திட வேண்டும்; அதுவும் தொழில் கல்வியை முறையாகக் கற்றிட வேண்டும் என்பதற்காக நுழைவுத் தேர்வை இரத்து செய்வோம் என்று நாம் அறிவித்தோம்; வாக்குறுதிகளாகச் சொன்னோம்; நிதிநிலை அறிக்கையிலேயும் அறிவித்தோம். அதன் அடிப்படையில், முன்னாள் துணைவேந்தர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழு



முறையாக நாடு பூராவும் சுற்றி, கல்வியாளர்களைச் சந்தித்து, தமிழ்நாடு தொழில்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கைக்கான ஒரு புதிய சட்டமுன்வடிவைத் தந்தார்கள். அதன்மூலம் நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டு, கிராமப்புற மாணவர்கள் எளிதிலே சேர்ந்து கல்லூரியிலே படிக்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இடைப்பட்ட காலத்தில், நீதிமன்றத்திலே போய் தடையாணை பெறுகிற நிலை வரும் என்கிற காரணத்தால், அதற்காக caveat போடுகிற முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் நம்முடைய துறைசார்ந்த அமைச்சர்கள் எடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் அரசையும் கிராமப்புற மக்கள் சார்பாகப் பாராட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1–20

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறையைக்—shift system—கொண்டுவந்து, ஏராளமான மாணவர்கள் படிக்கிற வாய்ப்பை உருவாக்கி இருக்கிறார்கள். யாருக்கும் கல்லூரியில் இடம் இல்லை என்கிற ஒரு நிலை இந்த ஆட்சியில் இல்லை என்கிற நிலையை உருவாக்குகிற வகையில், நடப்பு ஆண்டில் எல்லாக் கல்லூரிகளிலேயும் அந்த மாற்று முறையைக் கொண்டுவர வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, அதிகமாகக் கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டிய நிலையில் இருக்கிற சுய நிதிப் பாடப் பிரிவுகள் அனைத்தையும், பொதுப் பிரிவுகளாக மாற்றி இருப்பதற்காகவும், அதேபோல பெண்களுடைய முன்னேற்றத்திற்காக இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பங்குபெறும் பெண்களுக்கான இலவசமான பயிற்சி, S.C., S.T., M.B.C. மாணவர்களுக்கு ஆங்கிலம், கணிதம், அறிவியல் சிறப்புப் பயிற்சி, தமிழ்வழிப் பயிலுகின்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகை, கிராமப்புற மாணவர்களுக்கு மொழி ஆய்வுக் கூடம், ஆங்கில மொழி வெளிப்பாட்டுத் திறனுக்கான பயிற்சி, அதேபோல தமிழ்நாடு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுடைய குடும்பத்துப் பிள்ளைகள் கல்வி கற்பதற்காகக் கல்வி உதவித் தொகை போன்ற அற்புதமான நலத் திட்ட உதவிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிற காரணத்தால், ஏழையெளிய மக்கள் எளிதிலே உயர் கல்வியைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக, இந்தக் கல்லூரிகளில் கல்வித் தரம் உயர்ந்திருப்பதற்குக் காரணம், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு இருக்கின்றன. பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படைப் பணியாளர்கள், விரிவுரையாளர்கள்

நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியில் கல்விக் கூடங்கள்—அது தொடக்கப் பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரிக் கட்டடங்களாக இருந்தாலும் சரி—ஓட்டை உடைசல்களோடு, பள்ளிக்கூடத்திலே உட்கார்ந்து படிப்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருந்தது மாத்திரமல்ல; இட வசதி இல்லாமல், மாணவர்கள் மரத்தடியிலே படிக்கிற அவல நிலையும் இருந்தது. அவற்றை எல்லாம் மாற்றி, கல்வி வகுப்புகளை நடத்துவதற்கான கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், அடிப்படை வசதிகள், மின்னணுவியல், நூலகங்கள் போன்ற அத்துணை அடிப்படை வசதிகளையும் இந்த ஆட்சியிலே உருவாக்கித் தருவதற்காக நிதி ஒதுக்கித் தந்து, அதையும் முதன்மைப்படுத்தி இருக்கிறார்கள்.

குறிப்பாக, கிராமப் பகுதிகளிலே இருக்கிற ஏழையெளியவர்கள், இளைஞர்கள், படித்தவர்கள், வேலைவாய்ப்புப் பெறவேண்டும் என்பதற்காகச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டும், சிவகங்கையில் ஒன்றுமாக, புதிய தொழில் பயிற்சி நிலையங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட இருக்கின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது வேலைவாய்ப்பைத் தருவதற்காக. அப்படி வேலைவாய்ப்பைத் தருகிற கல்வியைத் தருகிற நேரத்தில், படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்குப் பயிற்சி முன்கூட்டியே தந்தால்தான், அந்த மண்டலங்களில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பணியாற்றுகிற இளைஞர்கள் கிடைப்பார்கள் என்பதற்காக முன்யோசனையோடு, தொலைநோக்குப் பார்வையோடு பொருளாதார மண்டலங்களை உருவாக்குகிற அதேநேரத்தில், தொழில் பயிற்சி நிலையங்களையும் உருவாக்குகிறார். இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை, கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

நான் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்ளையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்வி கற்பதில் குறைவாக இருக்கிற மாவட்டங்கள் கடலூர், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் என்று கல்வித் துறைக் குழுவின் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே, பள்ளிக்கூடங்களையும், கல்லூரிகளையும் உருவாக்குகிற நேரத்தில், மாவட்டத்திற்கு, தொகுதிக்கு ஒன்று என்று தராமல், எங்கே கல்வி அறிவு குறைவாக இருக்கிறதோ, எங்கே படிப்பதற்கு ஏற்ற வசதி



இல்லையோ, அப்படிப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை தந்து கல்விக் கூடங்களை உருவாக்கிட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், மேலை நாடுகளுக்குச் சவால் விடுகிற வகையில், நம்முடைய நாட்டில் இருக்கிற கல்வியாளர்கள் புதிய புதிய பாடங்களையும், புதிய புதிய பாடத் திட்டங்களையும், படிப்புகளையும் கல்வித் துறையிலே இன்றைக்குப் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தோடு போட்டி போட்டு முன்னேறுகிற வகையில், புதிய technology-களையும், management படிப்புகளையும், பாடங்களையும் அறிமுகம் செய்கிற நம்முடைய கல்வியாளர்கள். நிரம்ப இருக்கிற இந்த நாட்டில், இப்போது கல்வித் துறைகளில், வளாகங்களிலேயே campus interview நடத்தி, வேலைக்கு ஆட்களைத் தேடிக்கொண்டிருக்கிற காலம். எனவே, இப்படிப்பட்ட காலக்கட்டங்களில் புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும் நேரத்தில், புதிய technologies வருகிற நேரத்தில், கிராமப் பகுதியிலே இருக்கிற மாணவர்கள் எளிதிலே சென்றடைந்து படிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. நகர்ப்புறத்திலே இருக்கிற மாணவர்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்புகள் மிக எளிதாகக் கிடைக்கின்றன. எனவே, நான் தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், கல்விக்காகக் கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழித்து, இன்னும் சொல்லப்போனால், மொத்த நிதிநிலை அறிக்கையில் நான்கிலே ஒரு பங்கு பணத்தைச் செலவழித்து, கல்விக்கு முன்னுரிமை தந்திருக்கிற உங்களுடைய காலத்தில், கிராமப் பகுதிகள் முன்னேற வேண்டும் என்கிற அடிப்படையில், ஒருங்கிணைந்த கல்வி நிலையங்களை ஒன்றியத்திற்கு ஒன்றோ, அல்லது தொகுதிக்கு ஒன்றோ அமைத்து, புதிய பாடப் படிப்புகள், கிராமப்புற பகுதி மாணவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கிற வாய்ப்பை உருவாக்கி, அவர்கள் கற்பதற்கான செலவினத்தையும் அரசே ஏற்று, அவர்கள் கல்வியிலே முன்னேறுவதற்கான வாய்ப்பை உருவாக்கிட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–25

இறுதியாக, நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், தந்தை பெரியாருடைய... (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம். சென்னைப் பல்கலைக்கழகத்தின் 150 ஆவது ஆண்டு விழாவினையொட்டி, திராவிட இயக்க ஆராய்ச்சி மையம், தலைவர் கலைஞர் அவர்களால் இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையிலே நாம் வளர்ந்தோமோ, எந்தத் தலைவர்களால்

இன்றைக்குத் தலைநிமிர்ந்து நிற்கிறோமோ, எப்படிப்பட்ட சுய மரியாதை உணர்வைப் பெற வேண்டுமோ, மொழி உணர்வைப் பெற வேண்டுமோ, சமூக நீதியைப் பெற வேண்டுமோ, கூட்டாட்சியைப் பெற வேண்டுமோ, அவற்றையெல்லாம் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்குகிற வகையில், திராவிட இயக்க ஆராய்ச்சி மையத்தை உருவாக்கி, பெரியார் ஈ.வே.ரா. பகுத்தறிவு மற்றும் பாலின நீதி இருக்கை, அறிஞர் அண்ணா தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் அரசியல் சிந்தனை இருக்கை, சமூக, பொருளாதார சமநீதி இருக்கை, மத்தியில் கூட்டாட்சி மாநில சுயாட்சி இருக்கை போன்ற இருக்கைகளை உருவாக்கியிருப்பதற்காக நாடும் ஏடும், ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் சுயமரியாதை உள்ள அத்தனைபேரும் உங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மாத்திரம் இங்கே நான் நினைவுபடுத்தி முடிக்க விரும்புகிறேன். இட ஒதுக்கீட்டில் பெரியார் காலந்தொட்டு நாம் பெற்ற உரிமைகளை, இடைப்பட்ட காலத்தில் இழக்கிற நிலை வந்தது. அது உயர் நீதிமன்றத்திலே செல்லாது என்று வந்தாலும் அதற்காகச் சட்டத்தைத் திருத்தி, அவை செல்லும் என்ற நிலைமை வந்தது. அந்த நிலைக்குப் பின்னால் . . . (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், time ஆகிவிட்டது. இன்னும் 2, 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) 2, 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. வ. முல்லைவேந்தன்:** ஒரேயொரு நிமிடம். அரசாங்கத்தின் சமுதாய முன்னேற்ற, பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் எல்லாம் சட்ட வடிவம் பெறும் எல்லாக் காலங்களிலும், சட்டமாக நிறைவேற்றப்பட்ட பிறகு, பெரும்பான்மை மக்களுடைய நலனுக்கு விரோதமாக நீதிமன்றம் சென்று முடக்குகின்ற காரியம் தொடர்ந்து நடந்து வருகிறது. இதில் வழக்குத் தொடுப்பவரும், வழக்காடுபவரும், நீதி சொல்லுபவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரான இரண்டு, மூன்று பேர் என்பது வரலாற்று உண்மையாகும். அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் நாட்டம் உள்ளவர்கள் நீதி சொல்கிற இடத்திலே இல்லாத காரணத்தினாலேதான், இப்படிப்பட்ட நிலை வருகிறது. அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'பூனைகளிடமிருந்து



எலிகளுக்கு விடுதலை கிடைக்காது' என்று. ஒரு நூற்றாண்டுக் காலமாக நாம் அங்குலம், அங்குலமாகப் போராடிப் பெற்ற உரிமைகளையெல்லாம் . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) உறுப்பினர், உட்காருங்கள்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

## (ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (3–5–2007) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 11–5–2007, வெள்ளிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த அலுவல்கள், 12–5–2007, சனிக்கிழமை அன்று எடுத்துக்கொள்ளப்படும். 11–5–2007 அன்று மாண்புமிகு மக்களவைத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்குவதாக இருந்த "சட்டமன்றத்தில் கலைஞர்—பொன்விழா" என்ற நிகழ்ச்சி, 12–5–2007 அன்று நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

## கோரிக்கை எண் 20 - உயர் கல்வித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேச்சை முடித்துவிட்டார். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, time இல்லை. (குறுக்கீடு) இதோ பாருங்கள், time 1–28, தற்போது time 1–28. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, நீங்கள் அவருக்கு time கொடுக்கிறீர்களா? (குறுக்கீடு) சரி, உறுப்பினர் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** நூறாண்டுக் காலமாக நாம் அங்குலம், அங்குலமாகப் போராடிப் பெற்ற உரிமைகளையெல்லாம் ஒவ்வொரு தீர்ப்பின்மூலமும் முடக்கிப் போடுகின்ற வரலாற்றுச் சதி நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இதே மாமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் நூறு கோடி மக்களின் எதிர்காலத்தை இரண்டு, மூன்று பேர் நிர்ணயிக்கின்ற சூழ்நிலை ஜனநாயகத்திற்குக் கேடு;

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்கள் எரிமலையாய்ப் பொங்குகிற நிலைமைக்கு இடம் தராமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் பின்னால் நின்று, ஒட்டுமொத்தத் தமிழகமும், தமிழ்ச் சமுதாயத்தினைச் சார்ந்தவர்களும், தமிழர்கள்பால் நம்பிக்கை உள்ளவர்களும், தமிழன் வாழ வேண்டுமென்று எண்ணுகிற நல்லவர்களெல்லாம் அந்த இட ஒதுக்கீட்டுப் பெருமையை நிலைநாட்டிட வேண்டுமென்று கேட்டு, பொன்விழாக் கொண்டாடுகிற நாயகரே, "பல்லாண்டுக் காலம், பல்லாண்டுக் காலம் வாழுங்கள்!" (மேசையைத் தட்டும் ஒலி) என்று வாழ்த்துகிறோம், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 20–ல் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து"

என்று சொன்னார் வள்ளுவர். ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது, அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல், ஒருவனுக்கு ஏழு பிறப்பிற்கும் உதவும் தன்மையுடையதாகும் கல்வி என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையில் இந்த உயர் கல்வி என்பது, மனித அறிவை வளர்ப்பதற்கு மட்டுமல்லாமல், அவருடைய பொருளாதார மேம்பாட்டிற்கும், ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கும் மிக உறுதுணையாக இருப்பது. இந்த உயர் கல்வியைப் பொறுத்தவரையிலே, தமிழக அரசு சில சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே பட்டியலிட்டுக் குறிப்பிட்டுச் சொல்லவும் விரும்புகிறேன். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தச் சட்டமன்றப் பேரவையில்...

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**திரு. ஜி.கே. மணி:** சட்டமன்றப் பேரவையில், கடந்த ஐந்தாண்டுக் காலம் நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் குரல் கொடுத்தோம்; போராடினோம். ஆனால், ஆட்சி போகின்ற இறுதிக் காலக் கட்டத்திலே, அதை இரத்து செய்வதாக அறிவித்து, உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால், அது முற்றிலுமாக நிறைவுபெறாத நிலை இருந்தது. ஆனால், சமூக நீதியில் அக்கறையுள்ள ஒரு முதலமைச்சர் தலைமையேற்றிருக்கிற காரணத்தால், இந்த நுழைவுத் தேர்வை இரத்து செய்ய வேண்டுமென்ற உயர்ந்த முயற்சியோடு சட்டப் பேரவையிலே சட்டமாகக் கொண்டுவந்தது மட்டுமல்லாமல், நீதிமன்றத்திலே உரிய முறையில் வாதாடி, இந்த நுழைவுத் தேர்வை இரத்து என்ற அறிவிப்பை நிலைபெறச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது மிகப் பெரிய சாதனை. இது சாதனை என்று சொல்வதைவிட, இந்தியாவிற்கு வழிகாட்டியாக, முதல் மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப் பல்வேறு சாதனைகளை இந்த ஆண்டு நிறைவேற்றியிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரசுக் கல்லூரிகளில், அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளில் ஏழைகள் படிக்க முடியாதிருக்கிற இன்றைய சூழ்நிலையைக் கருதி, அந்தக் கட்டணம் முழுவதுமாக இரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஏழைகளின் உயர் கல்விக்கு வழிவகுக்கும் என்ற இந்த ஒரு நல்ல அறிவிப்பை நான் வரவேற்கிறேன்; பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; நீண்ட காலமாக அரசுக் கல்லூரிகள் துவங்கப்படுவதில்லை என்ற அரசின் கொள்கை முடிவை மாற்றி, கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே உத்தரவிடப்பட்டு, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்புச் செய்தார்கள். அந்த அறிவிப்பின்படி மேட்டூரிலும், அதேபோல வால்பாறையிலும் இரண்டு கல்லூரிகள் தொடங்கப்பட்டு, அவற்றைத் தொடர்ந்து பெரம்பலூர், ஒரத்தநாடு ஆகிய நான்கு இடங்களில் அரசுக் கல்லூரிகள் துவங்கி இருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்; பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, அரசுப் பொறியியல் மற்றும் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பொதுப் பாடப் பிரிவை—சுய நிதிப் பாடப் பிரிவை மாற்றி, பொதுப் பாடப் பிரிவை—துவங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் அனைவருக்கும் பயன்படக்கூடியது என்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைய கல்லூரிகளின் எண்ணிக்கைக்கேற்ப, அதிக மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணத்தினாலேதான் அரசுக் கல்லூரிகளாக இருக்கிற, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக இருக்கிற 67 கல்லூரிகளில், 10 கல்லூரிகளுக்கு மாற்றுமுறைத் திட்டம் என்று சொல்லக்கூடிய ஷிஃப்ட் முறையை முதன்முதலாகத் தமிழகத்தில் அறிமுகம் செய்த அந்த அறிவிப்பைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனதார வரவேற்கிறேன். வரவேற்கிற அதே வேளையில், இன்னொரு வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். இந்த 10 கல்லூரிகளில் செய்திருக்கிற இந்த மாற்றுமுறையை, 67 கல்லூரிகளுக்கும் கொண்டுவர வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். அதைப்போல, (குறுக்கீடு) மாற்றுமுறை. அதுதான். சொல்லியாகிவிட்டது. வரவேற்கிறேன், அதையும் பாராட்டுகிறேன்.

அதைப்போல, அரசுப் பொறியியல் கல்லூரிகளிலிருந்த கல்விக் கட்டணம் 12,500 ரூபாயிலிருந்து 7,550 ரூபாயாகக் குறைத்திருக்கிறீர்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

அதைப்போல, கணினிப் பயிற்சி; அனைத்துக் கல்லூரிகளுக்கும் கணினி வழங்கப் பெற்றிருக்கிற முறையையும் இங்கே நான் வரவேற்றுப் பாராட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து அரசின் சார்பிலே, தேசிய அறிவுசார் ஆணையமும் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. என்னவென்று சொன்னால், 18 வயதிலிருந்து 24 வயது வரையிலே உயர் கல்வி பெறக் கூடியவர்களுடைய எண்ணிக்கை, வெறும் 7 விழுக்காடு மட்டுமே என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, 12 ஆம் வகுப்பு, அதாவது பிளஸ் டூ படித்த மாணவன் உயர் கல்விக்குச் செல்ல வாய்ப்பில்லை. 7 விழுக்காடு மட்டுமே உயர் கல்வி பெறுகிறான். ஆக, 93 விழுக்காட்டைச் சார்ந்தவன், அவன் ஆதி திராவிடர், மிகப் பிற்படுத்தப்பட்டவர் என்ற காரணத்தினாலே, வசதி இல்லாத காரணத்தால், படிக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.



அதுமட்டுமல்லாமல், இன்று இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளின் எண்ணிக்கைக்கேற்ப அவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. இதைச் சொல்லிவிட்டு, ஆணையம் மேலும் சொல்கிறது; இன்னும் 1,500 பல்கலைக்கழகங்களை, தேசிய அளவிலே துவக்கினால்தான், அதிலும் 2015 ஆம் ஆண்டிற்குள், 15 விழுக்காட்டை எட்ட முடியும், உயர் கல்வியைப் பெறுவதற்கு. ஆக, 15 விழுக்காடு உயர் கல்வி பெறுவதற்கே 2015 ஆகும். எத்தனை? இன்னும் 1,500 பல்கலைக்கழகங்கள் துவக்க வேண்டுமென்ற நிலையைச் சொல்லியிருக்கிறது. ஆகவே, இதில் அரசு அதிக கவனம் செலுத்தி இந்த உயர் கல்விக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில், தமிழ்நாட்டில் மேலும் பல பல்கலைக்கழகங்களைத் துவக்க வேண்டும்; கல்லூரிகளைத் துவக்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–35

அதேவேளையில், இன்றைக்குப் பல்கலைக்கழகங்களைப் பார்க்கிறோம். பல்கலைக்கழகங்கள் என்று சொன்னால், ஆராய்ச்சிகள் செய்து, புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, அந்தக் கண்டுபிடிப்புகளின் வாயிலாக, தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், ஒட்டுமொத்த மாநில வளர்ச்சிக்கும் அடித்தளமாக இருப்பவைதான் பல்கலைக்கழகங்களாக இருக்கமுடியும். ஆனால், இன்றையச் சூழ்நிலையிலே, நம்முடைய பல்கலைக்கழகங்களை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், ஏதோ பாடங்களை மனப்பாடம் செய்து, தேர்வு எழுதுபவர்களுக்குப் பட்டம் கொடுக்கிற பல்கலைக்கழகங்களாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றன. நான் குறை சொல்வதற்காக அல்ல; எத்தனைப் பல்கலைக்கழகங்களிலே ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள், பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை நாம் பட்டியல் போட்டுப் பார்த்தால், அது கேள்விக்குறியாகவே இருக்கும். ஆகவே, அதையெல்லாம் மாற்றி, பல்கலைக்கழகங்கள் என்றால், மாநில வளர்ச்சிக்கு அடித்தளம் என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, தமிழகத்திலே, நாம் உயர் கல்வியிலே பல்வேறு சீர்திருத்தங்களை, சாதனைகளைச் செய்ய முன்வந்திருக்கிறோம்; வரவேற்கிறோம். ஆனாலும்கூட, ஒரு புள்ளிவிவரம் சொல்கிறது. புள்ளிவிவரம் என்ன சொல்கிறது என்றால், I.I.T.–யிலே மாணவர்கள் சேர்க்கை; சமீபத்திலே, அந்த I.I.T.–யில் உள்ள மாணவர்களின்

எண்ணிக்கை, தென் மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் 979 பேர். அந்த 979 பேரிலே, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 679 பேர். தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வெறும் 94 பேர் என்று சொன்னால், தமிழகத்திலே கல்வி நிலைமை எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அரசு கவனத்திலே கொண்டு, அவர்களை இன்னும் ஊக்குவிக்கும் வகையிலே, முழு முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே கல்வியிலே சில மாற்றங்களைச் செய்கிறோம். என்னதான் மாற்றங்களைச் செய்தாலும்கூட, தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விரும்புகிறமாதிரி சீர்திருத்தங்கள் வேண்டுமென்று சொன்னால், இன்றைய நிலையிலே அது முடியாத சூழ்நிலை. அந்த நிலையை எட்டவேண்டுமென்று சொன்னால், கல்வி, கட்டாயம் மாநிலப் பட்டியலுக்கு வந்தாகவேண்டும். மாநிலப் பட்டியலுக்கு வராதவரையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் எதிர்பார்க்கிறமாதிரி சீர்திருத்தங்களை, புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டுவர இயலாது என்ற காரணத்தினாலே, மாநிலப் பட்டியலிலே கொண்டுவருவதற்கு அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

அதைப்போல, துணைவேந்தர் நியமனம்; அதில் எந்த அளவுகோல் பின்பற்றப்படுகிறது என்று தெரியவில்லை. புதிய பல்கலைக்கழகங்களாக இருந்தாலும்கூட, அந்தப் பல்கலைக்கழகங்களிலே சிறப்பு அதிகாரிகளாக நியமனம் செய்தாலும்கூட, துணைவேந்தர்கள், அதிலே குறைந்தபட்சம் உதவிப் பேராசிரியராக இருந்திருக்கவேண்டும்; ஓர் எட்டு ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால், அந்த நிலை மீறப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு விளக்கமளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இப்போது உயர் கல்வி என்பது, சீனா போன்ற நாடுகளில் முழுக்க முழுக்க அரசுக் கட்டுப்பாட்டிலே இருந்து வருகிறது. ஆனால், 1989–லேயிருந்து, அதற்கு முன்புகூட, நம்முடைய உயர் கல்வி தனியார்மயமாகிவிட்டது; கல்வி வணிகப் பொருளாக மாறிவிட்டது. நாம் எவ்வளவுதான் அக்கறை எடுத்துக்கொண்டாலும்கூட, இந்தச் சுய நிதி தனியார் கல்வி நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் பொருளீட்டுவதிலே குறிக்கோளாக இருக்கிறார்களேதவிர, கல்வியிலே, கல்விச் சேவையிலே அக்கறை கொள்வதில்லை. இன்னும் சொல்ல வேண்டுமென்று



சொன்னால், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதலமைச்சராக முன்பு இருந்த நேரத்திலும்கூட, முழுக்க முழுக்க கல்வி, உயர் கல்வி, அரசுக் கட்டுப்பாட்டில் இருந்தது. அதற்குப் பிறகு, அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் வந்த பிறகு, அது முழுக்க முழுக்க தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட காரணத்தால், இன்றைக்கு அது வணிகப் பொருளாகவே மாறிவிட்டது. அந்த நிலையை மீண்டும் மாற்றி, அரசுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

அதற்கு உதாரணம், 1960–லே அரசுப் பொறியியல் கல்லூரிகள் 7–ஆக இருந்தன; இப்போது 6–ஆகக் குறைந்துவிட்டன. அதைப்போல, அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் 3 இருந்தன; இன்றைக்கும் அவை 3–ஆகவே இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், தனியார்ப் பொறியியல் கல்லூரிகள் 238. எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே, மீண்டும் அந்த நிலையைக் கொண்டுவர வேண்டும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இப்போது அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 67 இருக்கின்றன. இந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே, பொறியியல் பாடப் பிரிவுகளையும் உருவாக்கலாம். காலை நேரங்களிலே பொறியியல் பாடமும், மாலை நேரங்களிலே, பிற்பகல் நேரங்களிலே கலை மற்றும் அறிவியல் பாடங்களை வைத்துக்கொள்வோம் என்று சொன்னால், அங்கே மாணவர்கள் எளிதாகப் படிப்பதற்கு, கட்டணமில்லாமல் படிப்பதற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே, இந்த மாற்று முறையை—shift system—இதிலேயும் புகுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–40

அதைப்போல, மாணவர்கள் படித்துவிட்டு, சிலர் விரும்புகிற வரையிலே, உயர் கல்வி பெறுகிறார்கள். ஒருசிலர் பள்ளிக் கல்வியோடு அல்லது உயர் கல்வியைப் பாதியிலே முடித்துவிட்டு, பொருளாதார நெருக்கடியின் காரணமாக, குடும்பச் சூழல் காரணமாக வேலைக்குச் செல்லவேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படி வேலைக்குச் செல்வதற்கு வாய்ப்பாக இருப்பவை, சமுதாயக் கல்லூரிகள். மேலைநாடுகளிலே அந்தச் சமுதாயக் கல்லூரிகள் அதிகமாக

இருக்கின்றன. ஆகவே, வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய, வாழ்வாதாரத்தை நிறைவேற்றித் தரக்கூடிய அந்தச் சமுதாயக் கல்லூரிகள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அளவிலே துவக்கப்படலாம். அதற்கு அதிக செலவும் கிடையாது. குறைந்த செலவிலே அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு சமுதாயக் கல்லூரி என்ற அளவில் துவக்கப்படவேண்டுமென்ற வேண்டுகோளை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்று, மிகப் பெரிய பிரச்சினை. நீண்டநாட்களாக இந்த அவையிலே எல்லோரும் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள். அந்த நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்குகிறது. அரசு இடம் வழங்குகிறது. எல்லா உதவிகளையும் செய்கிறது. ஆனால், அரசினுடைய சட்ட திட்டங்களுக்கு அவர்கள் கட்டுப்படமாட்டோம் என்கிறார்கள். என்ன நிலைமை இது? (மணியடிக்கப்பெற்றது) எங்கிருந்து வருகிறார்கள்? வானத்திலிருந்து வந்தவர்களா இவர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜி.கே. மணி, இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?

**திரு. ஜி.கே. மணி**: 5 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை 10 நிமிடம்தான் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி.கே. மணி:** 10 நிமிடங்கள்கூட ஆகவில்லை. ஆகவே, இந்த நிகர்நிலைப் பல்கலைக்கழங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவிற்கு நம்முடைய சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அவர்கள் விரும்புகிற அளவிற்கு—இப்போது பொறியியல் கல்லூரிகளிலே அரசு நிர்ணயித்திருக்கிற கட்டணம் வெறும் 30,000 ரூபாய் என்று சொல்கிறோம்—ஆனால், பொறியியல் பாடப் பிரிவுக்குச் சில கல்லூரிகளிலே ரூ.8 இலட்சம், ரூ.10 இலட்சம், ரூ.12 இலட்சம்கூட வைத்திருக்கிறார்கள். நேற்றுகூட நான் ஒருவரிடத்திலே விசாரித்தேன்.



அப்படித் தேவையான அளவிற்கு, விருப்பத்திற்கு ஏற்ப கட்டணங்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பத்திற்கேற்ப பாடம். அதைப்போல தேர்வு முறை. தேர்ச்சி விகிதம் என்று அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப வைத்துக்கொள்கிறார்கள். அதிலும் குறிப்பாக, இந்த ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டு முறையே இங்கே பின்பற்றப்படுவதில்லை. இது மிகப் பெரிய மோசடி. தமிழ் மண்ணிலே அப்படி இருக்கக்கூடாது. ஆகவே, அதையெல்லாம் கவனத்திலே கொண்டு, அந்த மன்னர் ஆட்சி முறை இருந்ததையெல்லாம் மாற்றி— மன்னர் ஆட்சிக் காலம் எல்லாம்கூட மாறிப்போயிற்று. ஆனால், இப்பொழுது வேந்தர்கள் வந்துவிட்டார்கள். துணைவேந்தர்தான் அரசு. துணைவேந்தர்கள், இணைவேந்தர்கள் என்ற பெயராலே அவர்களது இந்தக் கல்விக் கொள்ளையைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த முறையை நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, தனியார் கல்வி நிறுவனங்கள். அதாவது, I.T.I., Polytechnic, பொறியியல், மருத்துவம், எந்தக் கல்லூரியாக இருந்தாலுங்கூட, அதிலே ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அந்தத் தனியார் கல்வி நிறுவனங்களில் ஆசிரியர் நியமன முறை, பணியாளர்கள் நியமன முறையிலேயும் இட ஒதுக்கீட்டு முறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்; சமூக நீதி கிடைக்கும். ஆகவே, இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றுவது ஒன்று.

அதுமட்டுமல்லாமல், கட்டண முறையை நிர்ணயிக்க வேண்டும். நிர்ணயித்த கட்டணத்திற்குக் கூடுதலாக வசூலிக்கக் கூடாது. நியமிக்கக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகக் குறைவு. ஆசிரியர்களாகவோ, பணியாளர்களாகவோ இருந்தாலும்கூட, சம்பளம் நிரம்பக் குறைவாகத்தான் கொடுக்கிறார்கள். ரூ.1,000–த்திலிருந்து ரூ.2,000, ரூ.5,000 தான் கொடுக்கிறார்கள். பேராசிரியர்களுக்கு ரூ.5,000 தான் கொடுக்கிறார்கள். இந்த நிலைதான் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அவர்களுடைய சான்றிதழ்களையெல்லாம் பெற்றுக்கொள்கிறார்கள். இடையிலே வேறு கல்லூரிக்கு, வேறு வேலைக்குப் போகவேண்டுமென்று சொன்னால், தர மறுக்கிறார்கள். இந்த நிலை கொத்தடிமையைப்போல நீடித்துக் கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. தனியார் பொறியியல், மற்றக் கல்லூரிகளுக்குச் செல்லுகிற நேரத்தில் இந்தப் போலிச் சாதிச் சான்றிதழ்கள். அவை பொறியியலிலும், மருத்துவத்திலும் அதிகமாக இருக்கின்றன. அந்தப் போலிச் சாதிச் சான்றிதழ்களை வாங்கி, அந்த இடங்களைப் பெறக்கூடிய நிலையும் ஒருசில இடங்களிலே தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதையும் கட்டுப்படுத்தவேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கல்வியியல் கல்லூரி, B.Ed. கல்லூரி. அதை, நம்முடைய அரசு கட்டுப்படுத்தியிருக்கிறது; வரவேற்கிறோம். இருந்தாலுங்கூட, பழைய நிலை தொடரக்கூடாது. இதற்குக் காரணம், ஏற்கெனவே கடந்த ஆட்சியில் நிறைய முறைகேடுகள் நடந்தன. நாங்கள்கூட, சட்டமன்றத்திலே அவற்றிற்கு விசாரணைக் குழு வேண்டுமென்று சொன்னோம்; அமைத்தீர்கள். அவை விசாரணையிலே இருக்கின்றன. நான் அவற்றிற்குள் செல்லவில்லை. இருந்தாலுங்கூட, இப்பொழுது அந்தக் கல்வியியல் கல்லூரியிலே M.Ed.-க்குக்கூட 50 சீட், 100 சீட் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டுபேர் பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். ஆகவே, அதையெல்லாம் கவனத்திலே கொண்டு அந்த அதிக இடங்களைக் கூடுதலாக வழங்குகின்றபொழுது ஆய்வு செய்து வழங்க வேண்டும். அதிலும்கூட, நம்முடைய பல்கலைக்கழகங்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். பல்கலைக்கழகங்கள் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டுச் செய்வார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அதையும் நீங்கள் ஆய்வில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது அரசாங்கம் ஒரு நல்ல சலுகையை அறிவித்துள்ளது. தனியார் கல்வி நிறுவனங்களில், பேருந்துகளுக்கு அந்தக் கட்டணச் சலுகை. இருக்கைகளுக்குச் சலுகை வழங்கியிருக்கிறார்கள். அரசு சலுகை என்று சொன்னால், அப்போது அந்தச் சலுகை மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டும். மாணவர்களுக்குப் போவதில்லை. அந்தக் கல்வி நிறுவனங்களுக்குத்தான் இலாபமாகப் பயன்படுகிறது. ஆகவே, எந்தெந்தக் கல்லூரிகள் அல்லது கல்வி நிறுவனங்கள் அந்தப் பேருந்துக் கட்டணத்தை, பயணக் கட்டணத்தைக் குறைக்கவில்லையோ, அதைக் கண்காணித்துக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.



பிற்பகல். 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சீக்கிரம் முடியுங்கள். இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** சீக்கிரமாகப் பேசி முடித்து விடுகிறேன். அதைப்போலவே, கணினி ஆசிரியர்கள். இப்போது எல்லாம் உலகமே கணினிமயமாக்கம். நம்முடைய மாநிலத்திலும் கணினிப் பயிற்சிகள், பாடங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன; வரவேற்கிறோம். ஆனால் இந்த அரசுக் கல்லூரிகள், சட்டக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றில் நீண்ட நாட்களாக, கணினி ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தொகுப்பூதியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, இதிலே 70 விழுக்காடு பெண்களான காரணத்தினாலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொகுப்பூதியத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த முதலமைச்சர் அவர்கள், இவர்களுக்கும் காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்; பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல கல்லூரிகளிலே கௌரவ விரிவுரையாளர்கள் நீண்ட நாட்களாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள், குறைந்த சம்பளம். அவர்களையும் நிரந்தரப்படுத்தி, காலமுறை ஊதியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல, அமைச்சர் அவர்களுக்கு ஒரு சின்ன வேண்டுகோள். எங்களுடைய மேட்டூர் தொகுதியிலே, ஐ.டி.ஐ. இருக்கிறது. பெரிய I.T.I. இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு பேர் பேச வேண்டும் என்று சொல்கிறேன் அல்லவா?

**திரு. ஜி.கே. மணி:** முடித்து விடுகிறேன். பெரிய I.T.I. இருக்கிறது. அங்கே கட்டடம் இருக்கிறது; இடமெல்லாம் இருக்கிறது. அதிலே ஒரு தொழில்நுட்பக் கல்லூரி—Polytechnic—தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தேவையான இடம் இருக்கிறது; கட்டடம் இருக்கிறது. அங்கே அதனைத் தொடங்குவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, முதலமைச்சர் அவர்கள்கூட கடந்த முறை ஒப்புதல் கொடுத்தார்கள்; நம்முடைய பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே, பண்ருட்டியிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

தொடங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். அதைப்போல, இந்த இராமன் கமிட்டி, சுப்பிரமணியன் கமிட்டி பரிந்துரைகள் அப்படியே நிலுவையில் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, ஒட்டுமொத்தமாகக் கல்வித் துறையிலே, உயர் கல்வித் துறை, இன்னும் பள்ளிக் கல்வித் துறையிலேகூட, நம்முடைய தமிழக அரசு நல்ல சீர்திருத்தங்களை செய்ய முன்வந்திருக்கிறது. அதை வரவேற்று இன்னும் புரட்சிகரமான மாறுதல்களைக் கல்வித் துறையிலே கொண்டுவர வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கோரிக்கை வைத்து, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், ஏழு நிமிடங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கு தின்றவர்களையெல்லாம் விட்டுவிட்டு சும்மா இருப்பவர்களிடம் இப்படிச் சொல்கிறீர்களே சார், நியாயமா இதுவெல்லாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஏழு நிமிடங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** பத்து நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right.

**திரு. கே. மகேந்திரன்:** உயர் கல்வித் துறை மானியக்கோரிக்கைமீது எங்களது கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புகளை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நாட்டின் வளமான பொருளாதார வளர்ச்சிக்குத் தரமான மனித வளம் முக்கிய பங்கு வகிக்கிறது. முழுமையான மனித வள மேம்பாட்டிற்கு உயர் கல்வி அடித்தளமாக அமைகிறது. மத்திய மனித வள மேம்பாட்டு பாராளுமன்ற நிலைக் குழு தேசிய அறிவுசார் ஆணையம், சமீபத்திலே வெளியிட்டிருக்கக்கூடிய புள்ளிவிவரத்தில், உயர் கல்வித் துறையிலே மாணவர் சேர்க்கை என்பது 7 சதவிகிதமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில், ஆதி திராவிட மாணவர்களது மாணவர் சேர்க்கை 6.7 சதவிகிதமாகவும், பழங்குடியினரது மாணவர் சேர்க்கை 4.5 சதவிகிதமாகவும் உள்ளதாக தன்னுடைய வேதனையை வெளிப்படுத்தியிருக்கிறது. 11–வது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக உயர் கல்வியில் மாணவர் சேர்க்கையை 15 சதவிகிதமாக உயர்த்திட



திட்டமிட வேண்டுமென்று தேசிய அறிவுசார் ஆணையம் கூறியுள்ளது. தமிழகத்திலும் மாணவர் சேர்க்கை இந்த ஐந்தாண்டுகளில் 15 விழுக்காடாக எட்டுவதற்கு நாம் தனியாக ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில்—இப்போதும் தமிழகத்திலே 6 மாவட்டங்களில் அரசுக் கல்லூரிகள் என்பது கிடையாது; அனைத்து மாவட்டங்களிலும், மருத்துவக் கல்லூரிகளை உருவாக்குவதற்கான கொள்கை உடைய இந்த அரசாங்கம், அரசுக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில்—உடனடியாக அரசுக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசுக் கல்லூரிகளில், இப்போது shift முறையை அமல்படுத்துவதுபோல, தமிழகம் முழுவதும் அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலும் shift முறை என்பதை அமல்படுத்தினால், அரசுக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் உள்ள ஏழையெளிய மாணவர்கள், உயர் கல்வி பெற வாய்ப்புக் கிடைக்கும் என்பதை நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழகத்திலே 441 சுய நிதிக் கல்லூரிகள் இருந்தாலும்கூட, அந்தக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய எண்ணிக்கையில், 40 சதவிகித இடங்கள் காலியாக இருக்கின்ற நிலைமை என்பது இப்போது இருக்கிறது. ஆகவே, அங்கே நடைபெறக்கூடிய அந்தக் கல்விக் கொள்ளையைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அரசுக் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய கௌரவ விரிவுரையாளர்கள் அனைவரும் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். அரசுக் கல்லூரிகளில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவர்களுக்கான பின்னடைவுப் பணியிடங்கள் 522 இருக்கின்றன. அவை உடனடியாக நிரப்பப்பட வேண்டும். கடந்த காலத்திலே உருவாக்கப்பட்டது, ஆண்டிப்பட்டி அரசுக் கல்லூரி என்று சொல்லுகிறார்கள். ஆனால், அரசுக் கல்லூரி என்று அல்லாமல் மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரி, ஆண்டிப்பட்டி என்ற பெயரிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகளாக இன்றைக்கு 7 கல்லூரிகள் தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த 7 உறுப்புக் கல்லூரிகளையும் அரசுக் கல்லூரிகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிற்பகல் 1–50

அனைத்துத் துறைகளிலும், ஆண்களுக்கு நிகரான நிலையைப் பெண்கள் எய்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் செயல்படுவதற்குக் கூடுதலாக தனி நிதியொதுக்கீடு செய்யப்பட வேண்டும். அதேபோன்று, தொகுப்பூதியம், மதிப்பூதியம் அடிப்படையிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டும். அன்னை தெரசா பல்கலைக்கழகத்திலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கான பணி நியமன உத்தரவு வழங்கப்படாமல் இருக்கிறது. பணி நியமன உத்தரவு, அடையாள அட்டை வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் உள்ள சுய நிதி வகுப்புகளில் பணியாற்றக்கூடிய இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அலுவலர்களுக்குப் பணி நியமன ஆணை, பணிப் பதிவேடு, மாதா மாதம் ஊதியம், வருங்கால வைப்பு நிதி, பேறுகால விடுப்பு உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படவில்லை. பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வரைதான் ஊதியமாக இந்தக் கல்லூரிகளிலே வழங்கப்படக்கூடிய அவல நிலைமை இருக்கிறது. வேறு நிறுவனங்களுக்குப் பணிக்குச் செல்ல விரும்பினால்கூட, ஆசிரியர்களுக்கு, அலுவலர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவது மறுக்கப்படுகிறது. தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் 1976, சுய நிதிக் கல்லூரி மற்றும் சுய நிதி வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் அலுவலர்களுக்குப் பொருந்தும் என்ற நிலை இருந்தபோதிலும், இந்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்படாத நிலைமை தமிழகத்திலே நீடித்துக்கொண்டிருக்கிறது.

பெண்களுக்கான அரசுக் கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் இப்போது போதுமான எண்ணிக்கையில் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், மாணவியர் விடுதிகளைக் கூடுதலாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நாங்கள் முன்வைக்கிறோம். அதேபோன்று, ஆதி திராவிட மாணவர் விடுதிகளில், மாணவர் சேர்க்கை இரட்டிப்பாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரட்டிப்பாக்கப்படும் இந்தச் சூழ்நிலையில், அந்த விடுதிகளுடைய கட்டமைப்பு வசதிகளைக் கூடுதலாக்குவதற்கான நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டும். கல்வி உதவித் தொகையைப் பொறுத்தவரை, இன்றைக்கு ஏறிவரக்கூடிய விலைவாசி உயர்வைக்



கணக்கில்கொண்டு, இந்த உதவித் தொகை இரட்டிப்பாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களில் கல்விக் குழு, செனட், சிண்டிகேட் அமைப்புக்களில் ஆதி திராவிடர்களுக்கு இடமளிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும்.

அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள நிதியாளர் பணியிடம் நிரப்பப்படாத காரணத்தினால், மாணவர்கள் பரீட்சை எழுதக்கூடிய நிலைமை ஏற்படும்போது பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, நிதியாளர் பணியிடம் உடனடியாக நிரப்பப்படுவதோடு, அரசுக் கல்லூரி ஆய்வக உதவியாளர்களுக்கு, பள்ளிக் கல்வித் துறையில் பணியாற்றும் ஆய்வக உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில், தொலைதூரக் கல்வியில் சோதிடம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இந்த முறை, பகுத்தறிவு கூடுதலாக வளர்ந்திருக்கக்கூடிய தமிழகத்திற்குப் பொருந்தாததாக இருக்கக்கூடிய காரணத்தினால், இந்தப் பாடப் பிரிவு தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

திண்டுக்கல்லில் இருக்கக்கூடிய ஜி.டி.என். அரசு உதவிபெறும் கல்லூரியில் கட்டாய நன்கொடை வசூல் செய்யப்பட்டு, அந்தக் கல்லூரியிலே கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணையின்பேரில், விசாரணையை, இணை ஆணையர் அவர்கள் மேற்கொண்டு, 19 இலட்சம் ரூபாயைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டதற்குப் பின்பும்கூட, இன்றையவரையில் அந்தப் பணம் திருப்பிச் செலுத்தப்படவில்லை. 2006–2007 ஆம் கல்வியாண்டில், அரசு உதவி பெறக்கூடிய B.A. English Literature பாடப் பிரிவில், மாணவர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டிருக்கிறது. கல்லூரிக்குள்ளேயே வேலி அமைத்து, சுய நிதி மாணவர்கள், அரசு உதவி பெறக்கூடிய மாணவர்கள் என்று இரண்டு பிரிவுகளாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோன்று, அரசு உதவி பெறக்கூடிய அம்பை கலைக் கல்லூரியில், மாணவர்களிடம் கல்வி மற்றும் சிறப்புக் கட்டணம் என்ற பெயரில் அங்கே கொள்ளையடிக்கப்படுகிறது. இணை ஆணையர் விசாரணையில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கே உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, லிண்டோ குழு பரிந்துரையின் அடிப்படையில், பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் மாணவர் பேரவை தேர்தலை நடத்திட, அரசு ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறது. ஆகவே,

பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1980 ஆம் ஆண்டிற்குப் பின்பாக, தமிழகத்தில் புற்றீசல்போல் தனியார் மற்றும் சுய நிதிப் பொறியியல் கல்லூரிகள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இவற்றில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், தரம், கல்லூரி மேலாண்மை, கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர் மற்றும் அலுவலர்களது சம்பளம் மற்றும் பணி நிலைகள், அக்கல்லூரிகளில் மாணவர்களிடம் வசூலிக்கும் கட்டணங்கள் யாவும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன. அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொன்னதுபோல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-55

**திரு. கே. மகேந்திரன்:** பல இலட்சக்கணக்கான ரூபாய், நன்கொடையாக, கட்டணம் என்ற பெயரிலே கொள்ளையடிக்கப்படுகிறது. இந்தக் கொள்ளை தடுத்து நிறுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 1974 ஆம் ஆண்டு தனியார் பள்ளி முறைப்படுத்தக்கூடிய சட்டம் மற்றும் 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டம் ஆகியவை உள்ளதுபோல, தமிழகத்தில், தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் கல்லூரிகளையும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளையும் முறைப்படுத்திட, ஒரு ஒழுங்காற்றுச் சட்டம் என்பது இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

கல்லூரி இல்லாத மாவட்டம், தருமபுரி மாவட்டம். அரூர் பகுதியிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், எழுத்தறிவற்றவர்கள் கூடுதலாக இருக்கக்கூடிய அந்த மாவட்டத்திலே ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள். திரு. மகேந்திரன், உட்காருங்கள்.

***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மானியக் கோரிக்கையின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மனிதவள மேம்பாட்டோடு நாட்டின் வளர்ச்சியை முன்னிறுத்தும் உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில், தமிழக அரசு எடுத்திருக்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. அரசுக் கலைக் கல்லூரியில், சுய நிதி பாடப் பிரிவுகளை அரசே ஏற்று நடத்துவது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இலவசக் கல்வியை நடைமுறைப்படுத்துவது மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அரசின் சார்பில் 65 விழுக்காடு மாணவர்களைக் கவுன்சிலிங்மூலம் சேர்க்க நடவடிக்கை எடுத்துவருவது எல்லாம் சிறப்புக்குரியவை.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், அரசின் உயர் கல்விக் கொள்கையாக, "தரத்தினை உயர்த்துவோம்; எண்ணிக்கையை அதிகரிப்போம்" என்ற இலட்சியம் சொல்லப்பட்டுள்ளது, சிறப்புக்குரியது. அதில், 'அரசின்மூலம் நிறைவேற்றுவோம்' என்ற வாசகத்தையும் இணைக்க வேண்டும். உயர் கல்வி என்பது, ஒவ்வொரு துறையிலும், தனி மாணவ, மாணவியரின் அறிவாற்றலை மேம்படுத்தும் கல்வி. அதில் அரசு முழுப் பொறுப்பேற்று, உயர் கல்வியின் வாய்ப்பு, தரம் முதலியவற்றிற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். தமிழக அரசு கொள்கை விளக்கக் குறிப்பில், தேசிய அளவில் உயர் கல்வி என்பது, 6.79 விழுக்காடு உள்ள நிலையில், தமிழகத்தில் தற்பொழுது 11 விழுக்காடு உள்ளதாகக் குறிப்பிட்டு, மேலும் 25 விழுக்காட்டை நோக்கிச் செல்வதாக உறுதி கூறியுள்ளது, பாராட்டுக்குரியது.

தற்சமயம் உயர் கல்வியில் உருவாக்கப்பட்ட வழிமுறைகள், பல குழப்பங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் உள்ளன. உயர் கல்வியில் தனியார் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பும், அதன் எண்ணிக்கை உயர்வும், அரசின் கொள்கைகளில் கிட்டத்தட்ட உயர் கல்வி முழுமையும் தனியார் சுய நிதிக் கல்வியின்மூலம் உருவாக்கப்பட எடுத்துள்ள நடவடிக்கைகளும், தமிழகத்தில் உயர் கல்வியில் பெரும் பாதிப்பை உருவாக்கும். அனந்தகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளதுபோல, சுய நிதிக் கல்லூரிகளின் தரம் வெகுவாகக் குறைந்துள்ளது. அதன உள் கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்களைப் பணியமர்த்தும் முறை, அதிகக் கல்விக் கட்டணம், நன்கொடைகள் போன்றவை சமுதாயத்தில் பெரும் பாதிப்புகளை உருவாக்கும். தனியார் சுய நிதிக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துவதோடு, இருக்கின்ற கல்லூரிகளில், அவற்றின் தரத்தை உயர்த்தும் நடவடிக்கைகளை அரசு உறுதியோடு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற அமைப்பு முறைகளை இரத்து செய்யவேண்டும். தனியார் சுய நிதிக் கல்லூரிகளில், அனைத்து இடங்களும் இட ஒதுக்கீடு அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கிவரும், Bharathidasan Institute of Management என்று அழைக்கப்படும் மேலாண்மைத் துறை, I.I.T., I.I.Sc. மற்றும் I.M.F. போன்ற மத்திய அரசினால் தொடங்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சமமானது. அது, தமிழக அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் உயர் கல்வி நிறுவனமாகும். தற்போது அந்த உயர் கல்வி நிறுவனத்தின் ஆளுமை, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் கையில் இல்லை. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு, B.I.M.-இன் நிர்வாகத்தில் முக்கிய பங்கு எதுவும் இல்லை. தமிழக அரசின் உதவியோடு மக்கள் வரிப் பணத்தில் தொடங்கப்பட்ட அந்த உயர் கல்வி நிறுவனம் தற்பொழுது யார் கையில் உள்ளது? இதை அரசே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், பொறியியல், தொழில் பயிற்சி மற்றும் மருத்துவக் கல்வியைச் சேர்த்து அரசே ஏற்று, அதிக அளவில் தொடங்கி நடத்தப்பட வேண்டும்.

கிராமப்புற நலனுக்காக, நுழைவுத் தேர்வை இரத்து செய்ததை வரவேற்கிறோம். அதேசமயம், தனியார் சுய நிதிக் கல்லூரிகளில் அத்துமீறி கல்விக் கட்டணம் வசூல் செய்வதால், கிராமப்புற ஏழையெளிய, ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வி பெற முடியாமல் தடுக்கப்படுகிறார்கள். சமூக நீதிக்காகவும், கடைகோடி மனிதனுக்காகவும் செயல்படும் நமது அரசு, இதில் அலட்சியம் காட்டக்கூடாது.

கடந்த பல ஆண்டுகளாகக் கட்டண உயர்வால், பொறியியல் கல்லூரிகளில் 20,000 இடங்கள் காலியாக உள்ளன. அனைத்து உயர் கல்வி சுய நிதிப் பிரிவுகளிலும் காலியிடங்கள் உள்ளன. அந்த இடங்களில் ஏழையெளிய மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தரமான உயர் கல்வி வழங்க ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது அவசியம். கடந்த 15 ஆண்டுகளாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. தற்பொழுது அரசுக் கல்லூரிகளில் 2,200 கௌரவ ஆசிரியர்கள் 10 ஆண்டுகள் பணிபுரிந்து, பணிப் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர். பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர்களை நிரந்தரம்



செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால், சில பிரச்சினைகளால் 611 ஆசிரியர் பணியிடங்கள் பிரச்சினை ஏற்பட்டபொழுது, 16–12–1988 அன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஆசிரியர் போராட்டத்தில் பங்குகொண்டு சிறைச்சாலை சென்றார்கள். இறுதியாக 611 பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். 1993 ஆம் ஆண்டு ஒப்பந்த ஆசிரியர்கள், T.R.B. மறுத்தும் சுமார் 400 ஆசிரியர் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர். இந்நிலையில், 10 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் கௌரவ ஆசிரியர்களின் பணி நியமனம் மற்றும் தகுதிபற்றிய காரணங்களைக் கூறி பணிநீக்கம் செய்வது, நமது தேர்தல் அறிக்கையின் நிலைபாட்டிற்கு விரோதமானது. எனவே, அவர்களுக்குள்ள பிரச்சினைகளுக்கு வழிவகை காணப்பட்டு அரசுக்குள்ள இடர்பாடுகளை, நெருடலைப் போக்கி, அவர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய நமது முதல்வர் அவர்கள் உத்தரவிடவேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

அதேபோல, சுய நிதி தனியார் கல்லூரிகளிலே, அதிக இலாபம் ஈட்டினாலும், ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, சம்பளம் போன்றவற்றால், உறுதியற்ற நிலை நீடிக்கிறது. எனவே, அவர்களுக்குச் சம்பளம், பணிப் பாதுகாப்பு மற்றும் சலுகைகள் கிடைப்பதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், ஷிப்ட் முறை கொண்டு வருவது வரவேற்கத்தக்கது. கல்லூரிகளிலுள்ள அனைத்துப் பாடப் பிரிவுகளிலும், ஷிப்ட் முறை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு, ஆசிரியர், பணியாளர் காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அனைத்துக் கல்லூரிகளிலும், தரமான நூலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். நூலகங்களில் இண்டர்நெட் வசதி செய்துதர வேண்டும். நூலகங்களின் பணி நேரத்தை அதிகரிக்க வேண்டும். மாணவர்களின் உடல் நலத்தினைப் பாதுகாக்க, அவசியமாக விளையாட்டு, கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும். பல கல்லூரிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லை. அவை நிரப்பப்பட வேண்டும்.

கிராமப்புறத்து மாணவன் உயர் கல்வியில் சேர முடியாமல், நகரங்களின் புதிய சூழ்நிலையில் தன்னை இணைத்துக்கொள்ள முடியாமல் உள்ளதால், மன உளைச்சலுக்கும், தாழ்வு மனப்பான்மைக்கும் ஆளாகுகின்ற நிலை பல இடங்களிலே உள்ளது. எனவே, இவற்றைக் கண்டறிந்து இக்குறைகளைக் களைவதற்குத் தனியாக கவுன்சில் போன்ற அமைப்புகளை உருவாக்கி மாணவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உலகநாதன், உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** உயர் கல்வி பயிலும் மாணவர்களின் பருவம் சற்று வித்தியாசமானது. அப்பருவத்து மாணவர்களைச் சமுதாயத்தோடு ஒன்றிய சமூகப் பார்வையோடு, பொது சிந்தனையோடு வளர்ப்பது அவசியம். எனவே, இன்று பெயரளவில் உள்ள என்.சி.சி., என்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளைச் சீரமைத்து, கண்டிப்பாகப் பயிற்சி கொடுத்து, அவர்களைச் சமூகப் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. கே. உலகநாதன்:** திருத்துறைப்பூண்டி தொகுதியிலே, அரசுக் கலைக் கல்லூரியே கிடையாது. சென்றமுறை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டபோது, நானும் எங்கள் சட்டமன்றத் தலைவர் தோழர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களோடு நேரடியாகச் சென்று கேட்டபோது, வரும் ஆண்டுகளில் பார்ப்போம் என்று சொன்னார்கள். எங்கள் பகுதியிலிருந்து வெளி மாவட்டங்களுக்குக் கிட்டத்தட்ட 10 பேருந்துகளில் மாணவர்கள் செல்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, இந்த ஆண்டு திருத்துறைப்பூண்டி தொகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார். நீங்கள் ஐந்து நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

***திரு. எஸ். ராஜகுமார்:** சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களைப்



போற்றி, அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்கி, அவையிலுள்ள அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, தமிழகத்திலே உயர் கல்வியிலே 'தரத்தினை உயர்த்துவோம்; எண்ணிக்கையை அதிகரிப்போம்' என்ற தாரக மந்திரத்தோடு, தமிழகத்தில் கல்வியின் தரத்தினை உயர்த்திட வேண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த சிந்தனையோடு, இத்துறைக்கெனத் தனியாக அமைச்சகத்தை ஏற்படுத்தியதோடுமட்டுமல்லாமல், அனுபவம் வாய்ந்த மூத்த அமைச்சருக்குப் பொறுப்பளித்துள்ளது, பெருமைக்குரிய விஷயம்.

ஒரு நாட்டினுடைய வளமான பொருளாதார வளர்ச்சிக்குத் தரமான மனித வளம் முக்கிய பங்கு வகிக்கிறது. மனித வள மேம்பாட்டிற்கு உயர் கல்வி அடித்தளமாக அமைகிறது. உயர் கல்வியின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து அறிய முடிகிறது. பல்வேறு வகையிலே கல்வியின் தரத்தினை உயர்த்தி நிறைவேற்றிவருகின்ற நம்முடைய அரசுக்கு, ஒருசில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில், தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே மத்தியிலே திட்டமிடப்பட்டபடி, கொல்கத்தா, பூனே போன்ற இடங்களில் அமைக்கப்பட்டு விட்டது. தமிழகத்திற்கு ஒரு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை வலியுறுத்திப் பெற வேண்டும். இதற்கென 600 கோடி ரூபாய் வரை மதிப்பீடு என்று மத்திய அரசுத் திட்டத்திலே வைத்திருக்கின்றார்கள். அதனை நம்முடைய தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழகப் பல்கலைகழகங்களுக்குத் தேவையான வகுப்பறைகள், கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், அதிநவீன தளவாடச் சாமான்கள், நூலக வசதி போன்றவற்றை உருவாக்க U.G.C. Development Grant, Matching (Block) Grant என்பது, மற்ற மாநிலங்களைவிட, இங்கு குறைவாக உள்ளதாகவே தெரிகின்றது. ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் matching grant ரூ.30 கோடியிலிருந்து ரூ.40 கோடிவரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கடந்த காலங்களில், பட்ஜெட்டுகளில். 8 கோடி ரூபாய் வரை மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மத்திய பல்கலைக்கழகம், தமிழகத்தில் இதுவரை இல்லை. தமிழகத்திலே மத்திய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும். ஆந்திராவில் நான்கு இடங்களிலும், பாண்டிச்சேரியில்கூட ஓர் இடத்திலும் இருக்கின்றன. தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைக்கூட மத்திய பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்த திட்டமிடலாம். இப்பல்கலைக்கழகத்திற்கு ஆயிரம் ஏக்கர் நிலமும் இருக்கிறது. 160 கல்லூரிகளுக்குப் பாடத் திட்டங்களையும் அளித்து வருகிறது.

*பிற்பகல் 2–05*

உலக அளவில் பார்த்தால், அமெரிக்காவில் 60 மில்லியன் மக்கள் தொகை. அங்கே 2,364 தனியார் பல்கலைக்கழகங்களும், 612 அரசுப் பல்கலைக்கழகங்களும் உள்ளன. ஜப்பானில் 300 மில்லியன் மக்கள் தொகை. அங்கு 1,684 தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன; 122 அரசுப் பல்கலைக்கழகங்கள் உள்ளன. இலண்டனிலே 60 மில்லியன் மக்கள் தொகை. அங்கு 104 அரசுப் பல்கலைக்கழகங்கள் மட்டுமே உள்ளன. நமது இந்தியாவில் 100 கோடி மக்கள் தொகையின்படி பார்த்தால், 1,500 பல்கலைக்கழகங்கள் இருக்க வேண்டும். அதற்கான திட்டத்தை நம்முடைய அரசு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. ஆனாலும், தமிழகத்தில் மேலும் புதிய பல்கலைக்கழகங்களை அரசே உருவாக்க வேண்டும். புதிதாக உருவாக்குவதிலேகூட, 100 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கல்லூரிகளான பிரசிடென்சி, கிறிஸ்டியன் காலேஜ், பச்சையப்பா, விவேகானந்தா கல்லூரி போன்ற பெருமைவாய்ந்த கல்லூரிகளை எல்லாம் பல்கலைக்கழகங்களாக உருவாக்குவதற்கு முயற்சி எடுக்கலாமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் Knowledge Centre, அதாவது, கணினி, ஆங்கிலம், Soft Skill போன்ற பயிற்சிகள் பெறக்கூடிய வசதிகளை உருவாக்க வேண்டும். Community Information Centre உருவாக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவில் Vocational Training Diploma Course உள்ளதுபோல, நம்முடைய திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. அதேபோல, அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் தொடங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தால் fail [illegible]வர்கள்கூட, படிக்க முடியாதவர்கள்கூட, இரண்டு ஆண்டுகள் [illegible]oma பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த [illegible]திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.



அதேபோல, உயர் கல்வியினுடைய சேர்க்கை விகிதாச்சாரத்தை 7 விழுக்காட்டிலிருந்து அதிகப்படுத்துவதற்கான திட்டத்தை நம்முடைய அரசு எடுத்து வருகிறது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலே மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் உடற் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைக்கென தனியாகப் பல்கலைக்கழகம் அமைத்தது பெருமைக்குரிய விஷயம்.

அதேபோல, நூலகத் தந்தை எஸ்.ஆர். ரங்கநாதன் பிறந்த இம்மண்ணில் University of Library and Information Science என்ற ஒரு பல்கலைக்கழகம் உருவாவதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். Knowledge Commission of Libraries, மத்திய அரசு வலியுறுத்தியதன் அடிப்படையிலே, National Level Institute of Library and Information Science for the development of the Libraries தமிழகத்தில் தொடங்குவதற்கு நம்முடைய அரசு வழிவகுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு புத்தகத்திற்கெல்லாம் தனி மதிப்பு அளித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றேன்.

தமிழகத்திலே, 8 பல்கலைக்கழகங்களிலே, நூலகர் பதவிகள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, உயர் நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலேகூட நூலகங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு நூலகர்களை நியமிப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு சுய நிதி தனியார் பொறியியல் கல்லூரிகள், ஆண்டிற்கு, 35,000/– ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கின்றன. புதிதாகத் தொடங்கப்படுகின்ற நேரத்தில் இந்தக் கல்லூரிகள் இந்தக் கட்டணத்தைப் பெறலாம். அதேநேரத்தில், 5 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தக் கட்டணத்தைப் படிப்படியாகக் குறைப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் வசூலிக்கின்ற இந்தக் கட்டண விகிதத்தைக்கூட குறைப்பதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அரசுப் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்கின்றபோது, தகுதியின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கிறது.

ஆனால், தற்போது பல்வேறு Deemed Universities, அரசு கடைப்பிடிக்கின்ற தகுதிகளைக் கடைப்பிடிப்பதில்லை என்கின்ற குற்றச்சாட்டு உள்ளது. இதுபோன்று முக்கியப் பதவிகளுக்கு வருகின்றவர்கள் அரசினுடைய வழிமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அனைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் தகுதிவாய்ந்த பொறுப்பானவர்களுக்கு அந்தப் பணி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய பாடத் திட்டங்களைத் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலே மட்டும் தொடங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்காமல், அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். M.D., M.S., D.M. போன்ற மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுகிறேன். அரசு மருத்துவக் கல்லூரிகளை நவீனப்படுத்தி, சேர்க்கையின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முக்கியத்துவம் தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நம்முடைய தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட சுமார் 6½ வருடங்களாக அரசுக் கல்லூரிகளிலுள்ள நிதியாளர் (Burzar) பணியிடங்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படாததால், பல பணியாளர்கள் பயன் பெறாமல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிடுகின்றார்கள். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த Burzar பணிகளில் 250 இடங்கள் காலியாகவே உள்ளன.

என்னுடைய தொகுதியினுடைய சில கோரிக்கைகளைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கின்ற திட்டத்தினைச் செம்மைப்படுத்தி வருகின்ற நம்முடைய அரசு, நாகை மாவட்டத்தினுடைய மையப் பகுதியான மயிலாடுதுறையில், மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நான் ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்திருக்கின்றேன், மயிலாடுதுறையிலே ஆடவர் கல்லூரி அமைக்க வேண்டுமென்று. அதற்கு அவர்கள் ஒரு கோடி ரூபாய் நிதி அரசுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். மிகவும் பின்தங்கிய விவசாயிகள் வாழ்கின்ற தொகுதி. கடைமடைப் பகுதியான எங்கள் பகுதியிலிருந்து அரசுக்கு இந்த நிதியைக் கட்டுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே. அமைச்சர் அவர்கள், நம்முடைய



முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு, அங்கே ஒரு அரசு ஆடவர் கல்லூரியினை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, தருமபுரம் அரசினர் ஞானாம்பிகை கல்லூரியில் மிகவும் ஏழை மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கல்லூரியில் சேர, ஒவ்வொரு ஆண்டும் காத்திருப்புப் பட்டியலில் இருக்க வேண்டிய நிலை இருக்கின்றது. ஆகவே, அங்கு மாலை நேரக் கல்லூரி வசதியினைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும், இதுவரை S.C., M.B.C., B.C.-க்குரிய உதவித் தொகை—scholarship—இதுவரை வழங்கப்படவில்லை. அதற்குத் தனிக் கவனம் எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் மூன்றாவது முறையாக இந்த வேண்டுகோளை இந்த அவையிலே வைக்கின்றேன். என்னுடைய தொகுதி, மணல்மேடு பேரூராட்சியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கும், மயிலாடுதுறையில் கூடுதலாகக் காவல் நிலையம் அமைப்பதற்கும், Mini Control Room அமைப்பதற்கும் கோரிக்கை வைத்திருக்கின்றேன். அதனை என்னுடைய வேண்டுகோளாக ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2-10

## 9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

## (ஆ) விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை, 4-5-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "சட்டமன்றப் பேரவையில் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 4-5-2007 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[2007 மே 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை, 1-5-2007 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-5-2007) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

181. மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

182. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

183. 2006–2007 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி குறித்த அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

184. சிறுதொழில்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை



2007 மே 3]

அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

185. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

186. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

187. 2006–2007 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை குறித்த அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

188. கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை) மீதான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

189. மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது அறிக்கை. (2006–2007)

190. மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2006–2007)

191. மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2006–2007)

192. மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கை. (2006–2007)

193. மதிப்பீட்டுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2006–2007)

194. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (2006–2007)

195. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (2006–2007)

196. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (2006–2007)

197. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (2006–2007)

## இணைப்பு

*(101 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 20 – உயர் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

### 1. முன்னுரை

உயர் கல்வி என்பது மொழி, கலை,. அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளின்மூலம் ஒருவர் தேர்ந்தெடுத்த துறையில் பட்டயம், இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சியில் பட்டங்கள் பெறுவதற்கு வழிவகை செய்கிறது. பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மிகச் சிறந்த மனிதவளத்தை உருவாக்குவதற்கும், உயர் கல்விக்காக அரசு அளிக்கும் இவ்வாய்ப்புகள் ஏழை,' எளிய மக்கள் பெறுவதை உறுதி செய்வதற்கும், இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. துணைவேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள், தொழில் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், பணியாளர் சங்க பிரதிநிதிகள், மாணவர் பிரதிநிதிகள் ஆகிய பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து உயர் கல்விக்கான வளர்ச்சித் திட்டங்களை அரசு தீட்டி வருகிறது.

*1.2* ஒரு நாட்டின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு தரமான மனித வளம் முக்கிய பங்கு வகிக்கிறது. முழுமையான மனித வள மேம்பாட்டிற்கு உயர் கல்வி அடித்தளமாக அமைகிறது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இதன் அடிப்படையில்தான் அனைத்துத் தரப்பினருக்கும் மிகச் சிறந்த உயர் கல்வியை வழங்க வேண்டுமென்று இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி அதனைச் செயல்படுத்தியதன்மூலம் இந்தியாவில் உயர் கல்வியைப் பொறுத்தவரை, தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தேசிய அளவில் பொறியியல் பட்ட வகுப்புகளில் (B.E. Degree Courses) ஒரு இலட்சம் மக்களில் சராசரியாக *49.54* பேரும், பல்தொழில்நுட்பப் பட்டய வகுப்புகளில் (Polytechnic Courses) ஒரு .இலட்சம் மக்களில் சராசரியாக *27.20* பேரும் பயில்கின்றனர். *2006-2007* ஆம் கல்வியாண்டு புள்ளிவிவரத்தின்படி தமிழ்நாட்டில் பொறியியல் பட்ட வகுப்புகளில் (B.E. Degree Courses)

ஒரு இலட்சம் மக்களில் 162 பேரும், பல்தொழில்நுட்பப் பட்டய வகுப்புகளில் (Polytechnic Courses) ஒரு இலட்சம் மக்களில் 111 பேரும் பயில்கின்ற நிலை இன்றைக்கு உருவாகி உள்ளது. இந்தியாவில் பொறியியல் கல்வியில் தமிழ்நாடு முதன்மை நிலையைப் பெற்றிருக்கிறது என்பது பெருமைப்படத்தக்கது. இந்நிலையை அடைய, இவ்வரசு வெகு முனைப்புடன் செயல்பட்டு, அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தியதன்மூலம் வெற்றி கண்டுள்ளது. அரசுக் கல்லூரிகளில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தியதுடன், தனியார் கல்லூரிகளிலும் உள்கட்டமைப்பை மேம்படுத்த ஊக்கம் அளித்து வருகிறது.

1.3 உயர் கல்வியின் வளர்ச்சிக்கான தேவைகளை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. தரமான உயா கல்வியை வழங்குகின்ற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தை (Gross Enrolment Ratio) 2020 ஆம் ஆண்டுக்குள் தற்போதைய நிலையான 11.73 விழுக்காட்டில் இருந்து 25 விழுக்காடு அளவிற்கு உயர்த்துவதற்கு இவ்வரசு மிகத் தீவிரம் காட்டி வருகிறது. உயர் கல்வியில் தேசிய சராசரி மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் 9.21 விழுக்காடு ஆகும். அதன் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:—

(i) 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உறுதியளித்தவாறு, கிராமப்புற பகுதியைச் சேர்ந்தோர் உயர் கல்வியினைத் தொடருவதற்கு ஏதுவாக புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கோவை மாவட்டம், வால்பாறையில் ஒன்றும், சேலம் மாவட்டம், மேட்டூரில் ஒன்றும் தொடங்கப்பட்டன. மேலும், இரண்டு புதிய கல்லூரிகள் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் ஒன்றும் தொடங்கப்பட்டன.

(ii) 2006-2007 ஆம் ஆண்டு உயர் கல்வி மானியக் கோரிக்கையின்போது சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு அரசுப் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த அதிக கட்டணம் செலுத்தி படிக்க வேண்டிய சுயநிதிப் பாடப் பிரிவுகள் அனைத்தையும், பொதுப் பாடப் பிரிவுகளாக இவ்வரசு மாற்றியமைத்துள்ளது. இதனால் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் பின்தங்கிய பகுதியைச்



சேர்ந்த மாணவர்கள் அதிகக் கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டிய சுமையிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

(iii) தற்போதுள்ள அடிப்படைக் கட்டமைப்புகளை முழுமையாகப் பயன்படுத்தும் நோக்கத்திலும், அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர் கல்வி பெறுகின்ற வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும், 2006-2007 ஆம் ஆண்டில், 10 அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்று முறை (Shift System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் வரும் கல்வியாண்டில் மாற்று முறை கொண்டு வரப்படும் என 2007-2008 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) நமது மக்கள் தொகையில் 18 வயதிலிருந்து 24 வயது வரை உள்ள இளைஞர்களில் சுமார் 7 விழுக்காடு மட்டுமே உயர் கல்விக்குச் செல்கின்றனர். பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, நமது தேவைக்கேற்ப உயர் கல்வி பெறுகின்ற சந்தர்ப்பம் போதுமானதாக இல்லை. இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கு தேசிய அளவில் 1,500 பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்படுவதன்மூலம், 2015 ஆம் ஆண்டுக்குள் 15 விழுக்காடு மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தை (Gross Enrolment Ratio) அடைய முடியும் என தேசிய அறிவுசார் ஆணையம் (National Knowledge Commission) தெரிவித்துள்ளது. இவ்வாணையம் கூறியுள்ள கருத்துகளுக்கு ஏற்ப, 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு இரண்டு புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் திருச்சியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் துவக்கப்பட்டுள்ளன. தென்மாவட்டங்களில் உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக, அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற பெயரில் ஒரு புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் துவக்கப்படும் என 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், இந்த கல்வியாண்டு முதல் செயல்படும்.

1.4 சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியவாறு, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், கிராமப்புற மாணவர்களுக்கும் உயர் கல்வி எளிதாகக் கிடைக்க வேண்டும் என்பது இவ்வரசின் முக்கியக் கொள்கையாகும். இதனை நிறைவேற்றும் வகையில், அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(i) 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில், அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் குறைக்கப்படும் என்று உறுதியளித்தவாறு, 2006-2007 ஆம் கல்வியாண்டு முதல் கல்விக் கட்டணம் ரூ. 12,550-லிருந்து ரூ. 7,550 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

(ii) 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப் படிப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், கல்விக் கட்டணம் இரத்து செய்யப்பட்டு, உயர் கல்வி இலவசமாக வழங்கப்படும். அதுபோல அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் கல்விக் கட்டணம் இரத்து செய்யப்படுகிறது.

1.5 உயர் கல்வி வளர்ச்சிக்கு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளில் வெற்றி என்பதில், முதன்மையானது மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதே என்பதனை இவ்வரசு உணர்ந்துள்ளது. மாணவர்களின் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்த அரசு கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(i) மாணவர்கள் கணினிப் பயன்பாட்டில் பயிற்சி பெறுவதற்கும், தகவல் தொழில்நுட்ப வேலைவாய்ப்புச் சந்தையில் பங்கேற்பதற்கும் வசதியாக, பல அரசுக் கல்லூரிகளுக்கு இணையதள வசதியுடன் கூடிய நவீன கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வசதியில்லாத மற்ற அரசுக் கல்லூரிகளுக்கும் கணினிகள் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

(ii) வேலைவாய்ப்பு சந்தைக்கேற்ப தங்களைத் தயார் செய்து கொள்ளவும், வேலைவாய்ப்பினைப் பெறவும், மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு அரசுக் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு ஆலோசனைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளன.



(iii) தமிழ்நாட்டிலுள்ள அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக வேலைவாய்ப்புப் பெற, தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஆங்கில வெளிப்பாட்டுத் திறனை வளர்க்க தமிழக அரசு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. அதற்கான சான்றிதழ் வகுப்புகள் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

(iv) பொறியியல் கல்லூரிகளுக்கான பாடத் திட்டத்தில், ஆங்கில வெளிப்பாட்டுத் திறன் என்ற பாடம் சேர்க்கப்பட்டு, மொழிப் பயிற்றுக் (ஆய்வகங்கள்) கூடங்கள் மூலமாக மாணவர்களுக்கு ஆங்கில மொழிப் வெளிப்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1.6 கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்வதோடு மட்டுமின்றி, தங்களுடைய கல்வியைத் தொடர இயலாமல் போகின்ற மாணவர்களின் மேம்பாட்டினையும் அரசு கருத்தில்கொண்டு திட்டம் தயார் செய்துள்ளது. ஏனென்றால் அவர்கள் வறுமை மற்றும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் கல்வி பயில முடியாமல் நின்று விடுகின்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்குத் தொழில் கல்வி வழங்குவதிலும், உயர் கல்வி பெறுகின்ற வாய்ப்பினை அதிகப்படுத்துவதிலும், சமுதாயக் கல்லூரிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறும் தகுதியினை அதிகரிக்க, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுக் கல்வியினையும் அதற்குரிய பட்டயச் சான்றிதழையும் பெறுகின்ற வாய்ப்பினையும் சமுதாயக் கல்லூரிகள் உருவாக்குகின்றன. சமுதாயக் கல்லூரிகளில் படித்து வெளிவருகின்ற மாணவர்கள் தங்களது உயர் கல்வியினைத் தொடர ஏதுவாக, சமுதாயக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்பட, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். இதன்மூலம் வறுமை மற்றும் பல்வேறு காரணங்களால் பள்ளிக்கூடப் படிப்பை முடிக்க முடியாதவர்கள் பட்டப் படிப்பு பெறுகின்ற வாய்ப்பைப் பெறுவர்.

1.7 தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வினால் அதிக செலவும் மாணவர்களுக்கு மிகுந்த இடர்ப்பாடும் ஏற்பட்டதை அரசு உணர்ந்தது. அதன் தொடர்ச்சியாக, 2006-2007 ஆம் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு,

தொழிற்கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கைக்குரிய பொது நுழைவுத் தேர்வு, 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் "தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டம், 2007" வாயிலாக இரத்து செய்யப்பட்டது. இதன்மூலம் கிராமப்புற மாணவர்கள் பெருமளவில் பொறியியல் மற்றும் மருத்துவம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளில் சேர்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1.8 தன்னாட்சிப் பெறுவதன்மூலம், தங்களுக்குரிய பாடத்திட்டத்தினை தேர்வு செய்வதற்கும், தேர்வுகள் நடத்தி மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கும் கல்லூரிகள் தகுதி பெறுகின்றன. இந்தியாவிலேயே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி வழங்குவதில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. 2005-2006-ல் தன்னாட்சித் தகுதி பெற்ற கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் எண்ணிகை 67 ஆக இருந்தது. 2006-2007-ல் அதாவது நடப்புக் கல்வியாண்டில் இதன் எண்ணிக்கை 74 ஆக உயர்ந்துள்ளது. வருங்காலத்தில் அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதி வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு முனைப்புடன் இருக்கிறது.

1.9 கல்லூரிகளின் தரத்தினை உயர்த்திட, அனைத்துக் கல்லூரிகளும் தேசிய தகுதி மற்றும் தர நிர்ணயக் குழுவிடம் தர நிர்ணயச் சான்றிதழ் பெற வேண்டுமென இந்த அரசு விழைகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் 175 கல்லூரிகள் தர நிர்ணயம் பெற்றுள்ளன. 2006-2007 ஆம் கல்வியாண்டில் 200 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் கல்வியாண்டுக்குள் அனைத்துக் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தர நிர்ணயம் பெறுவது கட்டாயமாக்கப்படும். மேலும், தமிழ்நாடு மாநில அளவில் அனைத்துக் கல்லூரிகளின் தரத்தினை ஆய்வு செய்வதற்கு வல்லுநர்களைக் கொண்ட மாநில தர மதிப்பீட்டுக் குழு ஒன்று அமைக்கப்படும்.

1.10 நமது மாநிலத்தில் தற்போதைய பல்கலைக்கழகத் தேர்வு முறையினை மாற்றியமைப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. தற்போதைய முறையானது மாணவர்களின் மனப்பாடம்/உருப்போடும் திறனைச் சோதிப்பதாக அமைந்துள்ளது. மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறனை மற்றும் பகுத்தாய்வு செய்யும் தன்மையினைச் சோதனை செய்வதே தேர்வுகளின் நோக்கமாக இருக்க வேண்டும். கற்பிப்பது, பயில்வது மற்றும் மதிப்பீடு முறைகள் மாற்றியமைக்கப்பட



வேண்டியுள்ளது. இதற்கான வழிமுறைகள் கண்டறியப்படுதல் வேண்டும். இதன்மூலம் தற்போதைய தேர்வு முறை பகுத்தாய்வு செய்யும் தன்மையினைச் சோதிப்பதாகவும், காலத்திற்கேற்ற மாற்றங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். இது தொடர்பாகப் பரிந்துரை செய்ய, முன்னாள் துணை வேந்தர் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

1.11 பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ஒரு துறையைத் தேர்வு செய்து, அவற்றைச் சிறப்புத் தகுதி மையங்களாக (Centres of Excellence) மேம்படுத்துவதற்கு வகை செய்யப்படும் என, 2007-2008 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் தன்னிடமுள்ள துறைகளில், சிறந்த துறையென கருதப்படும் ஒரு துறையினை சிறப்புத் தகுதி மையமாக மேம்படுத்துவதற்கு தேர்வு செய்யும். இதன் முதற்கட்டமாக, 'நானோ' தொழில்நுட்பத்தில் (NANO Technology) சிறப்புத் தகுதி மையம் ஏற்படுத்துவதற்காக, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதைப்போலவே ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஒரு முக்கியத் துறை சிறப்புத் தகுதி மையமாக மேம்படுத்தப்படும்.

1.12 பெரும்பாலான அரசுக் கல்லூரிகள், பழைய கட்டடங்களில் போதிய வகுப்பறைகள் இல்லாமல் இயங்கி வருகின்றன. இதனால், போதிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாத மோசமான நிலையிலேயே உயர் கல்வி அளிக்கும் கல்லூரிகள் தொடர்ந்து இயங்க வேண்டியிருந்தது. திறந்த வெளியில் வகுப்புகள் நடைபெறுவது அனைத்துக் கல்லூரிகளிலும் மிகவும் சாதாரண ஒன்றாகும். அவற்றுடன் மழைக் காலங்களில் வகுப்புகளை இரத்து செய்வதும் அன்றாட நிகழ்வாக இருந்து வந்தது. தமிழ்நாட்டில் உயர் கல்வியின் வளர்ச்சிக்கு அரசுக் கல்லூரிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி அவசியம் என்பதை இந்த அரசு உணர்ந்து, இந்தத் தேவையை நிறைவேற்றும்வகையில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 542 கூடுதல் வகுப்பறைகள் ரூ.27.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். இதைத் தவிர, அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக்கூடங்களின் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் 10 அரசுக் கல்லூரிகளில் கூடுதல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படவுள்ளன.

**நிதி ஒதுக்கீடு**

மானியக் கோரிக்கை-20, உயர் கல்வித் துறை என்ற தலைப்பின் கீழ் மொத்த செலவினத் தொகை ரூ.1,054.44 கோடி ஆகும். இதில் ரூ.70.73 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். ரூ.983.71 கோடி திட்டத்தில் சேராத செலவினமாகும்.

**நிதி ஒதுக்கீடு 2007 - 2008**

| கணக்குத் தலைப்பு (1) | | திட்டப் பணி (2) | திட்டத்தில் சேராதது (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2059 | பொதுப் பணி பராமரித்தலும் செப்பனிடுதலும் | — | 2067.00 | 2067.00 |
| 2202 03 | பொதுக் கல்வி பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 1444.91 | 77487.83 | 78932.74 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 2150.28 | 18062.18 | 20212.46 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் மற்றும் இளைஞர் நலப் பணிகளும் | 1151.84 | — | 1151.84 |
| 2205 104 | கலையும் பண்பாடும் ஆவணக் காப்பகங்கள் | 0.05 | 435.24 | 435.29 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | — | 35.45 | 35.45 |
| 2251 | தலைமைச் செயலகம் சமூக நலப்பணிகள் | — | 242.88 | 242.88 |
| 3425 | இதர அறிவியல் ஆராய்ச்சி | 312.38 | — | 312.38 |
| 3454 110 | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு மற்றும் புள்ளிவிவரம் விவரச் சுவடியும், புள்ளிவிவரக் குறிப்பேடுகளும் | — | 40.98 | 40.98 |
| 4202 | கல்வி, போட்டி, விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 2013.79 | 00.01 | 2013.80 |
| | மொத்தம் | 7073.25 | 98371.57 | 105444.82 |



**2007–2008–ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ எண் (1) | திட்டங்களின் விவரம் (2) | இறுதி நிலைச் செலவு (3) | 2007–2008 செலவு (4) |
|---|---|---|---|
| **கல்லூரிக் கல்வி** | | | |
| 1 | ஐந்து அரசுக் கலைக் கல்லூரிகளில் மின்னணு நூலகங்கள் ஏற்படுத்துதல் | 21.00 | 21.00 |
| 2 | வகுப்பறைகள் தேவைப்படும் அரசுக் கல்லூரிகளில், 42 கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 210.00 | 84.00 |
| 3 | ஆய்வுக் கூடங்கள் தேவைப்படும் 10 அரசுக் கல்லூரிகளில் கூடுதல் ஆய்வுக் கூடங்களைக் கட்டுதல் | 160.00 | 80.00 |
| 4 | மொழிப் பயிற்சி வசதிகள் தேவைப்படும் 3 அரசுக் கலைக் கல்லூரிகளில் துணைக் கருவிகளுடன் மொழிப்பயிற்சிக் கூடங்களைக் கட்டுதல். | 75.00 | 75.00 |
| 5 | முதற்கட்டமாக ஒலி, ஒளி வசதி தேவைப்படும் 10 அரசுக் கல்லூரிகளில் அவ்வசதி செய்து கொடுத்தல் | 15.00 | 15.00 |
| 6 | மாநிலக் கல்லூரியில் உள்ள கணினி ஆய்வகத்தை மேம்படுத்த 30 கணினிகள் வாங்குதல் | 10.50 | 10.50 |
| **தொழில்நுட்பக் கல்வி** | | | |
| 7 | சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியைச் சேர்ந்த 75 மாணவிகளுக்கு, மாணவியர் இல்லம் கட்டுதல் | 150.00 | 60.00 |

[2007 மே 3

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 8 | நாகர்கோவில் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவியர் இல்லம் கட்டுதல் | 100.00 | 40.00 |
| 9 | மதுரை, அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் தற்போதுள்ள மாணவியர் இல்லத்திற்கு மேலே முதலாம் தளம் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 10 | திருச்சிராப்பள்ளி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 8 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல் | 40.00 | 16.00 |
| 11 | சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் தொழில்நுட்பக் கல்வி வட்டத்திற்கு கணினிகள் மற்றும் மென்பொருள் வாங்குதல் | 6.00 | 6.00 |
| 12 | வேலூரிலுள்ள தந்தை பெரியார் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இ அண்டு டி பிரிவிலுள்ள கட்டடத்தில் முதல் மாடி கட்டுதல் | 17.00 | 17.00 |
| **தமிழ்நாடு ஆவணக் காப்பகம்** | | | |
| 13 | ஆராய்ச்சிக் கூடத்தை நவீனமயமாக்குதல் மற்றும் நிர்வாகப் பிரிவைப் புதுப்பித்தல். | 25.00 | 25.00 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்** | | | |
| 14 | அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 5.00 | 5.00 |
| **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்** | | | |
| 15 | திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல் | 18.00 | 18.00 |
| 16 | சென்னை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தில், அறிவியல் மையத்திற்குச் செல்லும் முதன்மை நுழைவாயில் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றுதல் மற்றும் கோளரங்கத்தின் நுழைவாயில் வண்டி நிறுத்துமிடப் பகுதியில் தரையில் ஓடுகள் பதித்தல் | 30.00 | 30.00 |



2007 மே 3]

**அறிவியல் நகரம்**

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 17 | அதிநவீன தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வு முகாம் | 6.00 | 6.00 |
| 18 | சென்னையில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளின் மாணவர்களுக்கு அறிவியல் உலகம் பற்றிய நுண்ணறிவுத் திறன் புகட்டுதல் | 5.00 | 5.00 |
| 19 | அறிவியல் விழா நடத்துதல் | 10.00 | 10.00 |
| **தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்** | | | |
| 20 | தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல் | 35.00 | 35.00 |
| **அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்** | | | |
| 21 | கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்குக் கருத்தரங்கு அறை கட்டுதல் | 45.00 | 45.00 |
| | மொத்தம் | 1023.50 | 619.50 |

[2007 மே 3

## 2. கல்லூரிக் கல்வி

2.1 1965 ஆம் ஆண்டுக்கு முன்னர், பொதுக் கல்வி இயக்ககமாக இருந்த காலத்தில் 123 கல்லூரிகள் மட்டுமே இயங்கி வந்தன. கல்லூரிக் கல்வித் துறையைத் தனியாக நிர்வகிப்பதற்காக, 1965 ஆம் ஆண்டில், முன்னர் செயல்பட்டுவந்த பொதுக் கல்வித் துறை இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கல்லூரிக் கல்வித் துறையாக பிரிக்கப்பட்டபின், இத்துறை பெரிதாக விரிவாக்கப்பட்டு, தற்போது 803 கல்லூரிகள் இவ்வியக்ககத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

2.2 தமிழக அரசு, தமிழ்நாட்டை உயர் கல்வியில் முதன்மையான மாநிலமாக ஆக்க தீவிரம் காட்டி வருகிறது. கடந்த ஆண்டுகளில் கற்பிக்கப்பட்டு வந்த சில பாடப் பிரிவுகளுக்குப் பதிலாக, எம்.சி.ஏ/ எம்.பி.ஏ/எம்.எஸ்.சி (தகவல் தொழில்நுட்பம்) ஆகிய பாடப் பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் தகவல் தொழில்நுட்பத் துறையில் மாணவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

### அரசுக் கல்லூரிகளுக்கான தகுதியை மீளவும் அளித்தல்

2.3 தமிழகத்திலுள்ள அனைத்து அரசுக் கல்லூரிகளையும் 16-10-2002 முதல், இணைவு பெற்ற பல்கலைக்கழகங்களின் உறுப்புக் கல்லூரிகளாக்கி அரசு ஆணை வெளியிடப்பட்டது. இருப்பினும், இத்திட்டத்தைச் செயல்படுத்த இயலாமல் இக்கல்லூரிகள் அனைத்தும் அரசாலேயே தொடர்ந்து நிருவகிக்கப்பட்டு வந்தன. இத்திட்டத்தில் எதிர்பார்த்த பயன்களை அடைய முடியவில்லை. அதனால் நிலவி வந்த குழப்பமான சூழ்நிலைகளைச் சரிசெய்யுமுகத்தான் அரசுக் கல்லூரிகளுக்கு, முன்னர் இருந்த தகுதியினை மீளவும் அளிப்பதென இந்த அரசு முடிவு செய்து, அவ்வாறே, அனைத்து உறுப்புக் கல்லூரிகளும் இனிமேல் மீண்டும் முழு அளவிலான அரசுக் கல்லூரிகளாகச் செயல்படுவதற்காகப் பல்கலைக்கழகச் சட்டங்களைத் திருத்தச் சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

### கல்லூரிகள் குழாம் திட்டம் (Cluster System)

2.4 ஒரே பகுதியில் அமைந்துள்ள 7 அல்லது 8 கல்லூரிகள் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் கல்லூரிகளில் கல்வி



2007 மே 3]

பயிலும் மாணவர்கள், அக்கல்லூரியிலுள்ள கல்வி செயற்கைகோள் ஈர்ப்பு முனையத்தின் உதவியுடன், EDUSAT மூலமாகப் பிற கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளவும், கல்வி பயிலுவதற்கு, தேவைப்படும் நூலகப் புத்தகங்கள், நடவடிக்கைக் குறிப்புகள் மின்கல்விமயமாகப் பெற வழிவகைகள் ஏற்படுகின்றன. மேலும், ஒரு கல்லூரியில் நடக்கும் வகுப்புகளுக்கு வேறு கல்லூரி மாணவர்கள் சென்று பயனடையவும், கல்வி குறித்த கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் முடியும். இதனால் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

### நாட்டு நலப் பணித் திட்டம்

2.5 நாட்டு நலப் பணித் திட்டம் 7:5 என்ற விகிதத்தில் மைய அரசும் மாநில அரசும் பகிர்ந்து அளிக்கும் மானியத்தைக் கொண்டு நடத்தப்படுகிறது. தற்பொழுது, 3 இலட்சம் மாணவர் தொண்டர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 2006-2007 ஆம் ஆண்டில் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு மைய அரசின் பங்கு ரூ.385.45 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.275.32 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.660.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மகளிர் திறனேற்றம்

#### இந்திய ஆட்சிப் பணி/இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான இலவசப் பயிற்சி

2.6 அரசின் அகில இந்திய அளவில் நடைபெறும் இந்திய ஆட்சிப் பணி/இந்தியக் காவல் பணித் தேர்வுகளில் பெண்கள் சிறப்பாகப் பங்குபெறும் பொருட்டு, சென்னை-4, இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி) மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய இரு அரசு மகளிர் கல்லூரிகளில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, பெண்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் 60 மாணவிகள் இந்திய ஆட்சிப் பணி/இந்தியக் காவல்பணித் தேர்வு எழுத இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு நிதி ஆண்டில் இத்திட்ட செயல்பாட்டிற்கென, அரசு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2007 மே 3

**தமிழ் வழிப் பயிலும் மாணவ/மாணவியர்க்கு ஊக்கத் தொகை**

2.7 தமிழ் வழிக் கல்வி பயில, ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1971-72 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ் வழிப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் ரூ.400/- வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் கல்வியாண்டில் 33,250 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

2.8 அரசுக் கல்லூரிகளில் பயிலும் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்களில், குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் மாணவர்கள் பல்கலைக்கழகத் தேர்வில் ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெறுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இத்தகைய மாணவர்கள் மேற்கண்ட பாடங்களில் முழுமையான அளவில் தகுதி அடையச் செய்வதற்காக, சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் 20 கல்லூரிகளில் நிறைவேற்றும் வகையில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.10,000/- வீதம் ரூ.2.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்**

2.9 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 22-12-2006 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பதிவுப்பெற்ற விவசாயக் கூலி மற்றும் அவர்களது ஆதரவில் இருப்போரது முன்னேற்றத்தை, சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வித் தகுதி நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

2.10 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குழந்தைகளின் கல்வித் தகுதி நிலையை உயர்த்தும்பொருட்டு, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்க, ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—



2007 மே 3]

| வ. எண் | படிப்பு | மாணவர் இல்லத்தில் தங்காது படிப்பவர் | | மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்பவர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) |
| 1 | பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 1750 | 2250 | 2000 | 2500 |
| 2 | முதுநிலை பட்டப் படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 2250 | 2750 | 3250 | 3750 |

**ஆங்கில வெளிப்பாட்டுத் திறன் பயிற்சி**

2.11 அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கில வெளிப்பாட்டுத் திறனில் தகுதிபெற, தமிழக அரசு முனைப்புடன் இருக்கிறது. இதற்கென சதர்லேண்டு குளோபல் சர்வீஸ் உதவியுடன் பயிற்சி அளிக்க கருதியுள்ளது. இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படும். இது B.P.O. மையங்களில் மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற மிகவும் உதவியாக இருக்கும். இந்த வகையில் இது நாட்டிலேயே முதன்மையானதாக இருக்கும்..

**ஐந்து அரசுக் கலைக் கல்லூரிகளுக்கு மின்னணுவியல் நூலகங்கள் அமைத்தல்**

2.12 தற்பொழுதுள்ள மரபு சார்ந்த நூலகங்களுக்குச் சிறந்த மாற்றாக இணைய வசதியுடன்கூடிய நூலகங்களாக "மின்னணுவியல் நூலகங்கள்" அமையும். இந்த நூலகங்களில் புத்தகங்கள் மற்றும் செய்திகள், விவரங்கள் குறுந்தட்டுகளில் பதிவு செய்யப்படும். கற்போர்கள் குறுந்தட்டுகளிலிருந்து அவர்களுக்குத் தேவையான செய்திகளை அனைத்துப் பாடங்களிலும் பெற இயலும். அரசு, இதுவரை 13 அரசுக் கல்லூரிகளில் மின்னணுவியல் நூலகங்கள் அமைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் ஐந்து கல்லூரிகளில் மின்னணுவியல் நூலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

**அரசுக் கலைக் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரிக்கும் மொழி ஆய்வுக் கூடங்கள் கட்டுதல்**

2.13 தற்பொழுதுள்ள மென்பொருள் தொழிற்சாலைகளின் தேவைகளை ஈடுசெய்வதற்கு ஏற்ப, பல்வேறு தகவல் தொழில்நுட்பத்

துறைகளில் வேலை தேடும் கிராமப்புற மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படவேண்டியது அவசியமாகிறது. கிராமப்புற மாணவர்களின் நலன்கருதி மொழி ஆய்வுக் கூடங்களை அமைக்குமாறு ஆசிரியர்கள் வலியுறுத்துவதால், 2007-2008 ஆம் ஆண்டில் மூன்று அரசுக் கலைக் கல்லூரிகளில் ரூ.75.00 இலட்ச மதிப்பீட்டில் மூன்று மொழி ஆய்வுக் கூடங்கள் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

### அரசுக் கலைக் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒலி, ஒளி வசதிகள் ஏற்படுத்துதல்

2.14 தற்போது கல்வி கற்பித்தல் மற்றும் பயிலுதல் முறைகளில் ஒலி, ஒளிச் சாதனங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான அரசுக் கலைக் கல்லூரிகளில் இந்த வசதி இல்லை. எனவே, வகுப்பறைகளில், இக்கல்வி கற்பிக்கும் முறைக்குத் தேவையான திரை, எல்.சி.டி. புரொஜெக்டர் மற்றும் ஒலிப்பெருக்கிக் கருவிகள் உள்ளடக்கிய ஒலி, ஒளி வசதிகள் ரூ. 15.00 இலட்சம் செலவில் 10 அரசுக் கலைக் கல்லூரிகளில் ஏற்படுத்தப்பட உள்ளன.



## 3. தொழில்நுட்பக் கல்வி

### பொறியியற் கல்லூரிகளின் வளர்ச்சி

3.1 தொழில்நுட்பக் கல்வி, இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில் உலகளாவிய பெருமைவாய்ந்த ஒன்றாகத் திகழ்கிறது. தமிழகம் தொழில்நுட்பக் கல்வி அளிப்பதில், இந்திய அளவில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்கிறது. 1981 ஆம் ஆண்டிற்கு முன்னர், 4 அரசுப் பொறியியற் கல்லூரிகளும், 3 அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மட்டுமே இருந்தன. இருபதாண்டுக் காலத்தில் சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளின் வளர்ச்சி அதிகரித்துள்ளது. தற்போது தமிழகத்தில் மொத்தம் 251 பொறியியற் கல்லூரிகள் 94,138 ஒப்பளிக்கப்பட்ட இடங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

3.2 தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சி, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்தும். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியுடன் நேரடித் தொடர்புடையதாக விளங்குகிறது. இதன் மிகை வளர்ச்சி, உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இதர துறைகளிலும் கூடுதல் முதலீட்டிற்குக் கவர்ந்திழுக்கும். அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் கணக்கீட்டின்படி, நாட்டின் பொறியாளர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

3.3 தமிழ்நாடு, தொழில்நுட்பத் துறையில் எப்பொழுதும் முன்னிலையில் இருப்பதுடன், 21 ஆம் நூற்றாண்டை நோக்கி அசுர வேகத்தில் முன்னேறி, ஆண்டிற்கு ஏறத்தாழ 65,201 பட்டதாரிப் பொறியாளர்களையும் மற்றும் 35,455 பட்டயதாரர்களையும் உருவாக்கியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும், பட்டதாரிப் பொறியாளர்கள் வெற்றிபெற்றுச் செல்லும் எண்ணிக்கையில், தமிழ்நாடு, நாட்டில் முதன்மை வகிக்கிறது.

### பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளின் வளர்ச்சி

3.4 ஆரம்பக் காலங்களில், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளே தொடங்கப்பட்டன. 1980 மற்றும் 2000 ஆண்டுகளுக்கிடையில், 5 அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் மட்டுமே நிறுவப்பட்ட நிலையில், சுயநிதிப் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள் தொடங்குவது வேகமடைந்து, அவற்றின் எண்ணிக்கை 2-லிருந்து 142 ஆக உயர்ந்துள்ளது. தற்போது, 22 அரசு பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள், 34 அரசு நிதியுதவி

[2007 மே 3

பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள், 3 இணைவுபெற்ற அரசு பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள் மற்றும் 165 சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகள் உள்ளன. தமிழ்நாட்டிலுள்ள 224 பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரிகளில், 71,419 ஒப்பளிக்கப்பட்ட இடங்களும், 65,586 சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் உள்ளன.

**சுயநிதித் திட்டத்தின்கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பாடப் பிரிவுகளைப் பொதுப் பிரிவுக்கு மாற்றல்**

3.5 அதிக அளவிலான பொறியியற் கல்வி மாணவர்கள் முதுநிலை பட்டப் படிப்பில் சேர்ந்து பயிலவும், அதன் வாயிலாகப் பொறியியல் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கிலும், வசதி படைத்த மாணவர்கள் மட்டுமே சேர்ந்து பயிலக்கூடிய நிலையில் இருந்த 28 முதுநிலை பாடப் பிரிவுகளும் 1 இளநிலை பாடப் பிரிவும் சுயநிதி திட்டத்தில் இருந்து அரசுத் பொறியியற் கல்லூரிகளில் 2006-2007 ஆம் ஆண்டு முதல் பொதுப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர் பணி நியமனம்**

3.6 2006-2007 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் வாயிலாக அரசுப் பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் காலியாக இருந்த 193 பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அரசுப் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 44 விரிவுரையாளர்கள் நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டம்**

3.7 இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சக மேனிலை மற்றும் உயர் கல்வித் துறை ரூ. 1,555 கோடி செலவில் நாடு முழுவதிலும் உள்ள பட்டம் மற்றும் பட்டயப் பொறியியற் கல்வி நிறுவனங்களின் சோதனைக் கூடங்கள் மற்றும் பணிப் பட்டறைகளை நவீனப்படுத்துதல், புலங்கள் மற்றும் ஆசிரியர் மேம்பாடு, பாடத் திட்ட மேம்பாடு, பாடப் பிரிவுகளின் இசைவிணக்கம், தொழிற்சாலைகளுடன் பரிமாற்றத் தொடர்பு, ஆய்வு, மேலாண்மைத் தகுதியினை மேம்படுத்துதல், நேர்த்தி வாய்ந்த மையங்கள், கீழிருந்து மேல்மட்டம் வரையிலாக அணுகுமுறை, தகுதிவழித் தேர்வு செய்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள நிறுவனங்களை மேம்படுத்துதல் போன்ற முக்கியப் பிரிவுகளில் தொழில்நுட்பக் கல்வியின் தரம் உயர்த்த இத்திட்டம் தொடங்கப்பட்டது.



2007 மே 3]

3.8 அனைத்து மாநிலங்களும், மைய அரசின் எல்லைக்குட்பட்ட பகுதிகளும், தங்கள் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தயார்நிலைத் தன்மையைப் பொறுத்து, இந்தத் தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பங்கேற்கும் விழைவினைத் தெரிவிக்கலாம். இத்திட்டத்தின்கீழ் பங்கேற்ற தேர்வு செய்யப்பட்ட ஏழு மாநிலங்களுள், இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்ட தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்திற்கான ஆயுட்கால ஒதுக்கீடு ரூ. 96.1627 கோடியாகும். இத்திட்டம், 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்டு, 2007 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய செயல்பட்டு வரும்.

**தமிழ்நாடு 2006 ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்**

3.9 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 22-12-2006 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பதிவுபெற்ற விவசாயக் கூலி மற்றும் அவர்களது ஆதரவில் இருப்போரது முன்னேற்றத்தை சமூகம், பொருளாதாரம் மற்றும் கல்வித் தகுதி நிலை மேம்படுத்தும் பொருட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

3.10 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் குழந்தைகளின் கல்வித் தகுதி நிலையை உயர்த்தும் பொருட்டு, தொழில்நுட்ப உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்க ரூ. 14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | படிப்பு | மாணவர் இல்லத்தில் தங்காது படிப்பவர் | | மாணவர் இல்லத்தில் தங்கிப் படிப்பவர் | |
|---|---|---|---|---|---|
| | | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) | ஆண்கள் (ரூ.) | பெண்கள் (ரூ.) |
| 1 | பல்தொழில்நுட்பப் பயிலகம் (ஆண்டு ஒன்றுக்கு) | 1,250 | 1,750 | 1,450 | 1,950 |
| 2 | பொறியியல் பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றுக்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |

## சமுதாய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் திட்டம்

3.11 மத்திய அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், நாட்டில் உள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலமாக, சமுதாய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் திட்டம் என்றழைக்கப்படும் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின்கீழ் இயங்கும் 60 பல்தொழில்நுட்பக் கல்லூரிகள்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

3.12 காலத்திற்கேற்ற பொருத்தமான தொழில்நுட்பங்களை கிராமப்புறப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதும், இலாபகரமான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் வாழ்க்கையில் தன்னிறைவு பெறுவதற்கும் ஏற்ற வகையில், கிராமப்புற மக்களுக்குப் பயிற்சி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் பொம்மை தயாரித்தல், கூடை பின்னுதல், அச்சுத் தொழில்நுட்பம், இருசக்கர வாகனங்கள் பழுதுபார்த்தல், ஆடை தயாரித்தல் ஆகிய தொழில்களில் அந்தந்த ஊரின் தேவைக்கேற்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சமுதாய பல்தொழில்நுட்பக் கல்லூரிகள், ஊராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் ஒருங்கிணைப்புடன் செவ்வனே நிறைவேற்றப்படுகிறது.



## 4. பல்கலைக்கழகக் கல்வி

உயர் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன:

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்
4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. அழகப்பா பல்கலைக்கழகம்
6. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
7. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
8. பெரியார் பல்கலைக்கழகம்
9. திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
10. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்
11. அண்ணாமலை பல்கலைக்கழகம்
12. தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம்

### தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள்

13. அண்ணா பல்கலைக்கழகம், சென்னை
14. அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
15. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

### சென்னைப் பல்கலைக்கழகம்

4.1 சென்னைப் பல்கலைக்கழகம், 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சி எல்லை சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ளது. ஆற்றல்சால் பல்கலைக்கழகம் என்ற தனிச் சிறப்பினைப் பெற்ற முதல் ஐந்து பல்கலைக்கழகங்களுள் இதுவும் ஒன்றாகும். கற்பித்தல், கற்றல்,

[2007 மே 3

ஆய்வு ஆகியவற்றை வளப்படுத்த, பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்து பெற்ற சிறப்பு மானியத்தை இப்பல்கலைக்கழகம் பயன்படுத்தியுள்ளது.

4.2 பல்கலைக்கழகம் தனது 150 ஆம் ஆண்டில், இன்றைய தொழில்நுட்ப வசதிகள் கொண்ட கடல் மற்றும் கடற்கரைசார் இயல் மையம், சுற்றுச்சூழல் அறிவியல் மையம், மக்கள்தொகை இயல், மூலிகை அறிவியல், உட்கட்டமைப்பு மேலாண்மை இயல் ஆகிய ஐந்து ஆய்வு பற்றிய வரைவு ஒன்றைத் தயாரித்துள்ளது. இப்புதிய மையங்கள், சமுதாயத்தின் பயன்பாட்டிற்கெனப் பயனீட்டாளர்களால் நேரடியாகப் பயன்படுத்தக்கூடிய மதிப்புக் கூட்டும் ஆய்வு வெளிப்பாடுகளை உருவாக்க பல்கலைக்கழகத்திற்கு வலுவூட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் முதற்படியாக, பல்வேறு அறிவியல் அமைப்புகளுடன், கல்வி மற்றும் ஆய்வுகளில் இணைந்து செயல்படுகிற செயற்பாட்டைக் கூறலாம். கடற்கரைப் பகுதி மேலாண்மைத் துறையில் ஆய்வு மேற்கொள்ள, கியோடோ பல்கலைக்கழகத்தின் உலகச் சுற்றுச்சூழல் இயல் பட்டப் படிப்பின் பன்னாட்டுச் சுற்றுச்சூழல் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆய்வுக் கூடமும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கடல் மற்றும் கடற்கரைசார் இயல் மையமும் இணைந்து செயல்படுவது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும். சமுதாயம்சார் கடற்கரைப் பகுதி மேலாண்மை பற்றிய இருதரப்பு ஆய்வுத் திட்டமொன்று, அறிவியல் மேம்பாட்டிற்கான ஜப்பானியக் கழகம் மற்றும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடம் வழங்கப்பட்டுள்ளது.

4.3 மேலும், 150 ஆம் ஆண்டு விழாவினை முன்னிட்டு, சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தினுள் நிறுவப்பட்டுள்ள சில மையங்களுள் புதிதாக "திராவிட இயக்க ஆராய்ச்சி மையம்" ஒன்று, கீழ்க்காணும் நான்கு இருக்கைகளுடன் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டுள்ளது:-

1. பெரியார் ஈ.வெ.ரா. பகுத்தறிவு மற்றும் பாலின நீதி (Gender Justice) இருக்கை.
2. அறிஞர் அண்ணா தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் அரசியல் சிந்தனை இருக்கை.
3. சமூக, பொருளாதார சம நீதி இருக்கை.
4. மத்தியில் கூட்டாட்சி மாநில சுயாட்சி இருக்கை.



2007 மே 3]

4.4 (1) பணிசார் முதுநிலை, இளநிலை பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகள், (2) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுப் பணிகள் திட்டம், பட்டயப் படிப்புகள் போன்ற வேலைவாய்ப்பு மிகுந்த உயர் கல்வியினைப் பொறுத்தவரை, பல்கலைக்கழகம் பல புதுமையான படிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

4.5 (1) கருத்துப் புலப்பாட்டுத் (எழுத்து) திறன்கள், (2) ஆங்கிலத்தில் பேசுதல், (3) கணினி அறிவு மற்றும் (4) ஆளுமை வளர்ச்சி முதலிய துறைகளில் மாணவர்களின் திறமையை மேம்படுத்துவதற்காக முதுநிலைப் பாடத் திட்டத்தின் பகுதியாக அனைத்து முதுநிலைப் படிப்புகளிலும் மென் திறன்கள் (Soft Skills) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

4.6 1966இல் நிறுவப்பட்ட மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 73 துறைகளை உள்ளடக்கிய 18 புலங்கள் (Schools) உள்ளன. பல்கலைக்கழகத் தொலை நிலைக் கல்வி இயக்ககம், சுமார் 1.30 இலட்சம் மாணவர்களைக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம் 28 தகவல் மையங்கள், 16 கல்வி சேர்க்கை மையங்களைத் தமிழ்நாட்டிலும், 59 மையங்களைப் பிற மாநிலங்களிலும், 7 கல்வி மையங்களை அயல் நாடுகளிலும் கொண்டுள்ளது.

4.7 ஆற்றல்சால் பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ், ரூ. 10.00 கோடியை ஆரம்ப நிதியாக பல்கலைக்கழக மானியக் குழு வழங்கியுள்ளது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்குத் தேசிய தர நிர்ணயக் குழுமம் (NAAC), பெங்களூர் "A" தரத்தினை வழங்கியுள்ளது.

4.8 பொது நிதியுதவிகளில் ஏற்படும் இழப்புகளைத் திறமையாக எதிர்கொண்டு சமாளிப்பதற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுதல், உலகத் தரத்திற்கு நிகராக உள்கட்டமைப்பு வசதிகளை உயர்த்துதல் என்ற சிந்தனையுடன் கூடியதாகப் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்குப் பார்வை அமைகிறது.

4.9 கல்வியியல் ஆராய்ச்சியினை ஊக்குவிப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள "கல்வியியல் ஆய்வு மையம்" ஒன்று அமைப்பதற்காகத் தமிழக அரசு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2007 மே 3

4.10 அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த தேசிய புவியியல் கழகம், உலகளாவிய நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து மையங்களில் ஒன்றாக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைத் தேர்வு செய்து மரபணு ஆய்வுத் திட்டத்தினை மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

4.11 வயது வந்தோர் கல்வித் துறை, தமிழக அரசின் பெண்கள் முன்னேற்றத் திட்டங்களுடன் ஒத்திசைந்து பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்பு, தொழில் முனைவோரியல் பயிற்சி அளித்து வருகிறது.

4.12 சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய வகுப்பிலிருந்து வரும் மாணவர்களின் கல்வி ஆர்வத்தை வளர்க்கவும், நிலை நிறுத்தவும், தமிழக அரசின் ஆலோசனைப்படி இப்பல்கலைக்கழகம் 'கற்கும் போதே ஊதியம் பெறுதல்' என்ற புதிய திட்டத்தை பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மாணவர்கள் பயன் பெறுமாறு அறிமுகப்படுத்தியுள்ளது.

**பாரதியார் பல்கலைக்கழகம்**

4.13 பாரதியார் பல்கலைக்கழகம், தமிழக அரசால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் கோவையில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்கள் உள்ளன.

4.14 மூன்று புதிய படிப்புப் பிரிவுகள் (New courses), பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், 89 புதிய படிப்புப் பிரிவுகள் (New courses) பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளில் தொடங்கப்பட்டுள்ளன. விரிவுரையாளர் பணிக்கான மாநில அளவிலான தகுதித் தேர்வினை (SLET) இதுவரை மூன்று முறை சிறப்பான முறையில் பாரதியார் பல்கலைக்கழகம் நடத்தியுள்ளது.

4.15 இந்திய அரசு, இராணுவ அமைச்சகம் சார்ந்த இராணுவ ஆய்வு மற்றும் வளர்ச்சிக் குழு (DRDO) வின் நிதியுதவியுடன் கூடிய கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த கூட்டுப் பணிகள் பாரதியார் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக ஆராய்ச்சியில் இப்பல்கலைக்கழகத்தின் திறனானது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்துக்குச் (DRDO) செய்முறைகளையும் பொருள்களையும் தயாரித்துள்ளது. இது பல்கலைக்கழக வளாகத்தில் வாழ்க்கை அறிவியல் தொடர்பான Bu-DRDO மையம் அமைவதற்கு வழிவகை செய்தது.



2007 மே 3]

4.16 பாரதியார் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மானியக் குழுவின் முழு நிதியுதவியுடன் செயல்படும் கல்வியியல் கல்லூரி, உயர் கல்வியாளர்கள் பயன்பெறும் வகையில், தரம், வகை, பயன்பாடு, எளிமை இவற்றுடன் இணைய வழி நூலக இணைப்பு (Inflibnet - infonet) செயற்கைக் கோள் உதவியுடன்கூடிய படிப்பு (EDUSAT) மின்வழி கற்றல், (e-learning) மின்வழி வளர்ச்சி (e-content development) போன்ற கருத்தரங்குகள் நடத்தி, தேசிய அளவில் முதல்தரமான நிலையை அடைய பல்வேறு முறைகளில் முனைந்து வருகிறது.

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

4.17 பாரதிதாசன் பல்கலைக்கழகம், 1982 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் தோற்றுவிக்கப்பெற்றது. திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஏழு மாவட்டங்கள் இப்பல்கலைக்கழக ஆட்சி எல்லையில் அடங்கியுள்ளன.

4.18 பல்கலைக்கழகத்தில் இளநிலை மற்றும் முதுநிலைக் கல்வியில், தரத்தினை உயர்த்துவதற்காக, பல கல்வியியல் சீர்திருத்தங்களை, பாரதிதாசன் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல், மானுடவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் முதலிய துறைகளில் புதிய மற்றும் நவீன திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களுக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவை விருப்பார்ந்த தகுநிறை கல்வித் திட்டத்தின் (Choice Based Credit System) கீழ் செயல்படுகின்றன.

4.19 பெரியார் கல்வி மையமும், தமிழ் இசை மற்றும் கலை மையமும் 2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் பட்டயப் படிப்புகள் மற்றும் சான்றிதழ் படிப்புகளை நடத்தவுள்ளன.

**அழகப்பா பல்கலைக்கழகம்**

4.20 அழகப்பா பல்கலைக்கழகம், 1985-ல் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் தோற்றுவிக்கப்பட்டது. அழகப்பா கல்வி நிறுவனங்கள், பலதுறை வித்தகரும் மிகச் சிறந்த கொடையாளருமான டாக்டர் ஆர்.எம்.அழகப்பா செட்டியார் அவர்களால் உருவாக்கப் பெற்றவையாகும். அழகப்பா பல்கலைக்கழகத்தினை இணைப்புக் கல்லூரிகள் கொண்ட பல்கலைக்கழகமாக மாற்றி சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அதன் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டன. அழகப்பா

பல்கலைக்கழகமானது, 26 பல்வேறுபட்ட துறைகள் மற்றும் மையங்களின் வழியாக உயிரி தொழில்நுட்பவியல், தொழில் வேதியியல், மேலாண்மையியல், வங்கி மேலாண்மையியல், பன்னாட்டு வணிகவியல் கூட்டாண்மை, செயலகப் பணிக் கல்வி ஆகிய படிப்புப் பிரிவுகளை நடத்தி வருகிறது. தேசிய தர நிர்ணயக் குழு, அழகப்பா பல்கலைக்கழகத்தை மதிப்பீடு செய்து "A" தரம் வழங்கியுள்ளது.

4.21 தொலைதூரக் கல்வி இயக்ககத்தின்மூலம் 63 புதிய மற்றும் வேலைவாய்ப்புக் கல்வித் திட்டங்கள் இளங்கலை, முதுகலைப் பட்டயம் மற்றும் இளம் முனைவர் நிலைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககத்தின்மூலம் 2006-2007 ஆம் ஆண்டில் பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 63,000 பேர் ஆகும்.

4.22 'நானோ' அறிவியல் என்பது, உலகில் தற்போது முன்னணியில் இருக்கும் துறையாகும். அடிப்படை அம்சங்களைப் புரிந்து கொள்ளுதல், 'நானோ' பொருள்களை இணைப்பதற்கான உத்திகளைப் பயன்படுத்துதல், 'நானோ' கருவிகளை உருவாக்குதல் ஆகியன இத்துறையில் அடைந்துள்ள புதிய சாதனைகளாகும். இதனை மனதிற்கொண்டு, அழகப்பா பல்கலைக்கழகத்தில் 'நானோ' மையம் உருவாக்கப்பட்டது.

## அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

4.23 1984 ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. மகளிரியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், மகளிர் மேம்பாடு குறித்த திட்டங்களுக்கு ஆலோசனை நல்குதல், ஒருங்கிணைத்தல் ஆகிய பொறுப்புகள் இப்பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகம் அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகரான நிலையை பெண்கள் எய்த வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளைக் கொண்டுள்ளது.

4.24 இப்பல்கலைக்கழகத்திற்கு, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளாக உள்ளன. இப்பல்லைக்கழகம் 9 புலங்களைக் கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம் கல்வி வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும், மருத்துவ வகைச் செடிகள், வான் இயற்பியல், பழங்குடியின மக்கள் நல்வாழ்வு, சுற்றுச்சூழல் மற்றும் உயிரி பல்வகை ஆகிய துறைகளைக் கொண்டுள்ளன. தொலைதூரக் கல்வியின்மூலம் பெண்களின் கல்வித் தரத்தையும், சமுதாய முன்னேற்றத்தையும்



உயர்த்தும் பொருட்டு கல்வி வாய்ப்பினை இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது.

4.25 இப்பல்கலைக்கழகம், 14 தொலைதூரப் படிப்பு மையத்தினை, நகரம் மற்றும் கிராம அளவில் நிறுவியுள்ளது. மற்றும் 126 மருத்துவம் சார்ந்த படிப்பினையும் வழங்கி வருகிறது.

4.26 இப்பல்கலைக்கழகத்திற்குக் கருத்தரங்கு அறை கட்டுவதற்காக, அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

## மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

4.27 மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், 1990 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அபிஷேகப்பட்டி என்னும் ஊரில் அமையப்பெற்றுள்ளது. ஆழ்வார்க்குறிச்சி, பாளையங்கோட்டை மற்றும் இராஜாக்கமங்கலம் ஆகிய இடங்களில் இப்பல்கலைக்கழகத்தின் செயற்கைக் கோள் வசதிகொண்ட வளாகங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களின் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்து வருகிறது.

4.28 இப்பல்கலைக்கழகத்தில் 21 துறைகள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 82 கல்லூரிகள் உள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகத்துடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு மையம், நான்கு மனோ கல்லூரிகள், 38 சமுதாயக் கல்லூரிகள் மற்றும் 83 விரிவாக்கக் கல்வித் திட்ட மையங்களும் உள்ளன. இப்பல்கலைக்கழகம் 39 இளநிலை பாடப் பிரிவுகள், 30 முதுநிலை பாடப் பிரிவுகள், 79-க்கும் மேற்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டயப் பாடப் பிரிவுகள் மற்றும் 16 ஆய்வியல் நிறைஞர் மற்றும் 108 முனைவர் திட்டங்கள் ஆகிய பாடப் பிரிவுகளை வழங்கி வருகிறது.

4.29 ஒரு புதிய முயற்சியாகத் தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலையில், கைதிகளுக்குச் சிறப்புக் கல்வித் திட்டம் ஒன்றை வழங்கி வருகிறது. இதில் 14 சிறைக் கைதிகள், வரலாறு பாடத்தில் ஆய்வியல் நிறைஞர் படிப்பில் 2006-2007 ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

1.30 பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட நாகம்பட்டி, சங்கரன்கோவில், புளியங்குடி மற்றும் சோண்மகாதேவி ஆகிய இடங்களில் கிராமப்புறத்தில் உள்ள ஏழைகள் மற்றும் பெண்களுக்கு மிகக் குறைந்த செலவில் மனோ கல்லூரிகள்மூலம் கல்வி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## பெரியார் பல்கலைக்கழகம்

1.31 பெரியார் பல்கலைக்கழகம், 1997-ம் ஆண்டு சேலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. பெரியார் பல்கலைக்கழகத்தில் 118 பாடப் பிரிவுகளுக்கான வகுப்புகள் இணைவு பெற்றுள்ள கல்லூரிகளில் நடைபெற்று வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிப்பு மற்றும் ஆராய்ச்சிகளுக்கான 12 துறைகள் ஆரம்பிக்கப்பட்டு, 2006-2007 ஆம் ஆண்டில் தகுநிறைக் கல்வித் திட்டத்தின்கீழ் செயல்படுகின்றன. இருவழிப் பட்டத் திட்டமும் இப்பல்கலைக்கழகத் தொலை நிலைக் கல்வி வாயிலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு மாணவர், தான் படிக்கும் கல்லூரிப் படிப்புடன் மற்றொரு பாடத்தையும் தொலைதூரக் கல்வியில் சேர்ந்து பயில்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1.32 2004-2005 ஆம் கல்வியாண்டிலிருந்து பெரியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கென்று அவர்கள் பொதுத் துறைகளில் தேர்வு எழுதும்பொருட்டு ஊக்குவிக்கும் மையம் மற்றும் பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டு உள்ளது. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொழில் முனைவோருக்கான புத்தாக்கப் பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளது. கிராமப்புறங்களிலிருந்து வரும் மாணவர்களது மனிதவள மேம்பாட்டிற்கான பயிற்சிகளும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

1.33 தேர்ச்சித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் கல்வியாண்டிலிருந்து வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள பிரிவினரின் முன்னேற்றத்திற்காகவும் கல்லூரியில் படிக்க முடியாதவர்களுக்காகவும் ஒரு வருட பட்டயப் படிப்பு பல்வேறு பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

1.34 வேலூரில் 2002 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு, வேலூர் கோட்டை வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கென, சொந்த நிலம்



கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறையில் எம்.எஸ்ஸி., எம்.ஃபில். மற்றும் பி.எச்டி. படிப்புகளுக்கும், பொருளாதாரத் துறையில் எம்.ஃபில். மற்றும் பி.எச்டி. படிப்புகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. உணவு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் கூடம் பல்கலைக்கழகத்தின் உணவியல் மற்றும் சத்துணவுத் துறைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகம், மகளிருக்கென சத்துணவு மற்றும் உணவு தயாரிப்பு தொடர்பான விரிவாக்கப் பயிற்சிகளை அளித்து வருகிறது.

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

4.35 உயர் கல்வி வாய்ப்பு பெற முடியாதவர்களுக்குச் சீரான கட்டணத்தில் சமுதாயத்திற்குத் தேவையான தொலை நிலைக் கல்வி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 2002 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

4.36 இப்பல்கலைக்கழகம், தற்போது 67 பாடப் பிரிவுகளை வழங்கி வருகிறது. இதில் 67,000 மாணவர்கள் பயில்கிறார்கள். இப்பல்கலைக்கழகம் பி.எட். பட்டப் படிப்பை தமிழ் பயிற்றுமொழி மூலம் வழங்கத் தொடங்கியுள்ளது.

4.37 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் 23 புதிய படிப்புகளை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்கள் சேவைக்காக மாநிலம் முழுவதும் 786 கல்வி மையங்கள் செயல்படுகின்றன. பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் அனைத்து பாடங்களுக்கும், தானே கற்றறியும் முறையில் (SIM) உருவாக்கப்பட்ட பாட நூல்கள் வழங்கப்படுகின்றன. அதே நேரத்தில் ஆன்லைன் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்று முறையும் அளிக்கப்படுகிறது.

4.38 மாணவர் சேர்க்கை முதல் பட்டம் வழங்குதல் வரை மற்றும் அதற்கிடையில் உள்ள கல்விக் கட்டணம் செலுத்துதல், கலந்தாய்வு வகுப்பு விவரங்கள், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் ஆகிய பல்வேறுபட்ட பயில்வோர் நிருவாகப் பணிகளை ஒருங்கிணைப்பதற்குரிய ஒருங்கிணைப்பு மென்பொருள் உருவாக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

4.39 இனிமேல் திறந்தநிலைப் பல்கலைக்கழகப் படிப்புகளை (முறைசாரா தொலைநிலைப் படிப்புகள்) இப்பல்கலைக்கழகம் மட்டுமே

நடத்த வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே பிற பல்கலைக்கழகங்களில் தொலைதூரப் படிப்புமூலம் சேர்ந்துள்ள மாணவர்கள் அந்தந்தப் பல்கலைக்கழகங்களிலேயே படிப்பினை முடிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

4.10 மின்னணு ஊடகத் தயாரிப்பு மற்றும் ஆய்வு மையம் பல்கலைக்கழகத் தலைமையகத்தில் நிறுவப்பட்டு வருகிறது. எடுசாட் (EDUSAT) திட்டத்தின்கீழ் செயற்கைக் கோள் தொடர்பு நிலையம் (SIT) தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ளது. எடுசாட் மூலம் தகவல்களைப் பெறும் வகையில் எட்டு மையங்களில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வசதி படிப்படியாகப் பிற மையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தி இணைய வகுப்பறைகள் ஏற்படுத்தப்படும்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

4.11 அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1929ஆம் ஆண்டு சிதம்பரத்தில் உயர்நிலைக் கல்வி பயிலும் உறைவிடப் பல்கலைக்கழகமாக மலர்ந்தது. இன்றைக்கு இப்பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட 1000 ஏக்கர் பரப்பளவில் 48 துறைகளோடு விரிந்து பரந்துள்ளது. பல்கலைக்கழகத்தில் 204 பட்டம் மற்றும் பட்டய வகுப்புகளில் 21,000 மாணவர்கள் பயில்கின்றனர்.

4.12 பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும் கணினி சார்ந்த பாடத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இணைய தள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதன்மூலம் தகவல் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை உருவாக்கி மாணவர்களும் வேலைவாய்ப்பு பெற வகை செய்ய உதவுகிறது. தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார நிர்ணயக் குழு இப்பல்கலைக்கழகத்திற்கு நான்கு நட்சத்திரத் தகுதியை வழங்கி உள்ளது. மீண்டும் அக்குழுவின் மதிப்பீட்டிற்காக இப்பல்கலைக்கழகம் தற்போது தயாராகி வருகிறது.

4.13 ஏறத்தாழ ரூபாய் 25 கோடியில் தொழில்நுட்பப் பூங்கா பல்கலைக்கழக வளாகத்தினுள்ளே அமைக்கப்பட உள்ளது. இதில் உயிர் தொழில்நுட்பப் பூங்கா, தகவல் தொழில்நுட்பப் பூங்கா, நுண்நிலை தொழில்நுட்பப் பூங்கா மற்றும் உணவு தொழில்நுட்பப் பூங்கா முதலியவை அமைக்கப்பட உள்ளன. இது மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும். மேலும் தொழில்





நிறுவனங்களுடன் இணைப்பிற்கு உறுதுணையாக இருக்கும். 94 ஆம் இந்திய அறிவியல் மாநாடு சனவரி 2007, 3 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்திய வரலாற்றிலேயே இதுவே முதல் முறையாக கிராமப்புறச் சூழலில் நடைபெற்ற அறிவியல் மாநாடு ஆகும்.

4.44 இந்திய கடல் அகழ் இயந்திரக் கழகம், சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்திற்கான கடல்சார் மண்டல சுற்றுச்சூழல் ஆய்வுப் பணியினை மேற்கொள்ளும் பொறுப்பைப் பல்கலைக்கழகத்தின் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்திற்கு அளித்துள்ளது.

## தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

4.45 தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் 15-9-2005 அன்று நிறுவப்பட்டது. தற்போது சென்னை-6, கல்லூரி சாலையில் உள்ள ஈ.வெ.கி. சம்பத் மாளிகையில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இப்பல்கலைக்கழகத்திற்கென நிரந்தரமாகக் கட்டடம் கட்டுவதற்கு நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.46 இப்பல்கலைக்கழகத்திற்கு நான்கு புலக் கட்டமைப்புகளைச் சார்ந்த பதினொன்று துறைகளும் 38 ஆசிரியர் பணியிடங்களும், 32 ஆசிரியரல்லாத பணியிடங்களும் மற்றும் பல்கலைக்கழக மையத்திற்கு 5 உதவிப் பணியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

4.47 இப்பல்கலைக்கழகம் தற்போது உடற்கல்வியில் எம்.ஃபில். (M.Phil.) பாடம் பயிற்றுவிக்கிறது. மாலை நேர வகுப்புகளில் முதுநிலை யோகா, பட்டய யோகா, முதுநிலை மனவியல் மற்றும் சமூகவியல், முதுநிலை உடலியல் மற்றும் திட உணவு, முதுநிலை உயிர் நுட்பவியல் மற்றும் உயிர் இயக்கவியல், முதுநிலை பட்டய உடல் திறன் மேலாண்மை மற்றும் முதுநிலை தத்துவவியல் போன்ற பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான மாலை நேரப் பாடங்கள் கற்பிக்க சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம் முதன்மையான யோகா மையங்கள்மூலம் யோகா பட்டயப் பாடங்களை பயிற்றுவிக்கிறது.

4.48 இப்பல்கலைக்கழகம் செயல்படத் தொடங்கி, சுமார் ஓராண்டுக்குள் இணைப்புக் கல்லூரிகளின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

4.49 கௌகாத்தியில் நடைபெற்ற திறந்தநிலை தேசிய தடகளப் போட்டியில் இப்பல்கலைக்கழக மாணவி செல்வி வி. லீலாவதி 400 மீட்டர் தடையோட்டப் போட்டியில் தங்கப் பதக்கமும், கெப்டாதலான் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்று பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும், இவர் தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் தடகளப் போட்டி பயிற்சி முகாமிற்குத் தெரிவு செயயப்பட்டு பயிற்சி மேற்கொண்டுளளார்.

4.50 இப்பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளர்கள் (Ph.D. Registration) முனைவர் பட்டப் படிப்பிற்குப் பதிவு செய்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக யோகா மற்றும் தியானம் இப்பல்கலைக்கழகத்தில் கற்றுத் தாரப்படுகின்றன.



## 5. தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்

### அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

5.1 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4 ஆம் நாள் (1) பொறியியற் கல்லூரி, கிண்டி (2) அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, (3) சென்னை தொழில்நுட்ப நிலையம், குரோம்பேட்டை மற்றும் (4) கட்டடக் கலை மற்றும நகரமைப்புத் திட்டப் பள்ளி ஆகிய நான்கு கல்வி நிறுவனங்களைச் சேர்த்து, ஓர் ஒருமை வகை (Unitary) தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டது. அன்று முதல் இப்பல்கலைக்கழகம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து, நாட்டிலேயே முதன்மை தொழில்நுட்பப் பல்கலைக்கழகமாக விளங்குகிறது. 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொறியியற் கல்லூரிகளும் இணைக்கப்பெற்று, இணைப்புவகை பல்கலைக்கழகமாக இருந்தது. 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் சென்னை, திருவள்ளூர், வேலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் மட்டும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குள், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பயன்பாட்டு அறிவியல் ஆகிய துறைகளைக் கொண்ட 4 வளாகங்களும், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள 106 சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளும், ஒரு அரசுப் பொறியியற் கல்லூரியும் இருக்கின்றன.

5.2 இப்பல்கலைக்கழகத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையைச் சிறப்புக் கல்வி மையமாக (Centre for Advanced Studies) தரம் உயர்த்த பல்கலைக்கழக மானியக்குழு தேர்வு செய்து, ரூ.70.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இத்துறை சிறப்புக் கல்வி மையம் என்ற தகுதியைப் பெற்ற முதல் துறையாகும்.

5.3 ரூ. 600/- கோடி பொருட் செலவில் உயர்தர தொழில்நுட்பக் கல்விப் பணிகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு இப்பல்கலைக்கழகம் தொலைநோக்குத் திட்டம் 2020 என்ற திட்டத்தை வைத்துள்ளது. அடுத்துவரும் 5 ஆண்டுகளில், இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி. மிக உயர்ந்த நிலையை அடைவதோடு, தமிழ்நாட்டை உலகின் வளர்ந்த நாடுகளின் கல்வி வரைபடத்தில் தலைமை இடத்திலும் வைப்பதாக இருக்கும்.

5.4 Modular / Credit Banking Policy என்ற திட்டத்தின்மூலம் வரை பரிமாற்ற அடிப்படையிலான இணையதளம் சார்ந்த கல்வி (Interactive Web-based Education) மற்றும் மின்னணுவியல் கல்வியினை இப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

5.5 இலக்கமுறை (டிஜிட்டல்) அறிவு தகவல் மையத்தினை இப்பல்கலைக்கழகம் துவக்கியுள்ளது.

**புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர்**

5.6 2001ஆம் ஆண்டில், அண்ணா பல்கலைக்கழகத்தை இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக மாற்றிய பிறகு, சென்னையில் இருந்து கொண்டு, மாநிலம் முழுவதுமுள்ள 240 பொறியியற் கல்லூரிகளை நிருவகிப்பது என்பது ஓர் இயலாத நிலை என்பது உணரப்பட்டது. பொறியியற் கல்லூரிகள் மிக நன்றாகவும், திறமையாகவும் நிருவகிக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில், அதற்கென வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ள பொறியியற் கல்லூரிகளை உள்ளடக்கி, மேலும் இரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களை நிறுவ அரசு முடிவெடுத்தது. அவ்வகையில் முறையே, திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் மற்றொன்றும் நிறுவப்பட்டது. அவை முறையே, அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்றும் பெயர் சூட்டப்பட்டன. அவை 1-2-2007 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.



**6. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்**

6.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் தமிழக அரசால், ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகின்றது. மக்களிடையேயும், குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையேயும், அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னையில் கோளரங்கத்துடன் கூடிய பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தை நிறுவியுள்ளது. பி.எம். பிர்லா கோளரங்கம், சென்னையில் 11-05-1988 அன்று நிறுவப்பட்டது. பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் 17-09-1990 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. பார்வையாளர்களே கையாண்டு புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட 700 காட்சிப் பொருட்கள் இக்காட்சிக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

6.2 இம்மையத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த தற்காலிகக் கண்காட்சிகள், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், குறுகியகால வகுப்புகள், வானியல் முகாம்கள், வினாடி வினா, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வரைகலைப் போட்டி, கணிதத் திறன் தேர்வு, வானியல் ஒலிம்பியாட், வானியல் திறன் தேர்வு, 'அறிவியல் அறிஞரைச் சந்தியுங்கள்' மற்றும் 'மருத்துவத் துறை அறிஞரைச் சந்தியுங்கள்' நிகழ்ச்சிகள், குறுகியகால வானவியல் பயிற்சி வகுப்புகள், கணிப்பொறிப் பயிற்சி வகுப்புகள் ஆகியனவும் அடங்கும். மேலும், அரிய வானியல் நிகழ்வுகளின்போது சிறப்பு வான்நோக்கு நிகழ்ச்சிகள், ஒவ்வொரு இரண்டாம் சனிக்கிழமைதோறும் பொதுமக்களுக்கான இரவு வான் நோக்குதல் நிகழ்ச்சிகள் எனப் பல நிகழ்ச்சிகளை அறிவியல் தொழில்நுட்ப மையம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. 24 நேரிடையாகப் பழகிடும் காட்சிப் பொருட்கள் அடங்கிய ஒரு நடமாடும் அறிவியல் கண்காட்சிப் பேருந்தும், சிறிய கோளரங்கமும் கிராமப்புற ஊர்களுக்குச் சென்று அப்பகுதி மக்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப அறிவைப் பரப்பி வருகின்றன.

6.3 கீழ்க்காணும் புதிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தி முடிக்கப்படும்:—

அ. மைய அரசின் தேசிய கடல்சார் கழகத்துடன் இணைந்து ரூ.40 இலட்சம் செலவில் "கடல்சார் காட்சிக் கூடம்".

ஆ. மைய அரசின் மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சகத்தின் நிதியுதவியுடனும், தமிழக அரசின் நிதியுதவியுடனும் ரூ.124 இலட்சம் மதிப்பில் மாநில அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்கா.

இ. தமிழகத்தின் பாரம்பரிய வாழ்வு முறையினை விளக்கும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐவகை நிலங்களை உள்ளடக்கிய பூங்கா.

6.1 திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா அறிவியல் மையம் 10-06-1999 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. இம்மையத்தில் கோளரங்கம், அறிவியல் பூங்கா, மரபுசாரா எரிசக்திப் பூங்கா மற்றும் சுற்றுச்சூழலியல் காட்சிக் கூடம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

6.5 மாநிலத்தின் மற்ற மண்டலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் மக்களின் வேண்டுகோளிற்கிணங்கவும், கீழ்க்காணும் புதிய திட்டங்கள் 2007-2008 ஆம் நிதியாண்டில் நிறைவேற்றப்படும்:—

- ரூ.230 இலட்சம் செலவில் வேலூரில் மாவட்ட அறிவியல் மையம் அமைத்தல்.
- சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் பிரதான நுழைவாயில் சாலையை, தார்ச் சாலையாக அமைக்கவும் மற்றும் தரை ஓடுகள் பதித்தும் சீர்படுத்தப்பட உள்ளது.
- திருச்சிராப்பள்ளியிலுள்ள அண்ணா அறிவியல் மையத்தில் சுற்றுப்புறத் தடுப்புச் சுவர் நிறுவப்படவுள்ளது.
- மைய அரசின் கலாச்சார அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதியுதவியுடன் கோயம்புத்தூரில் மண்டல அறிவியல் மையம் அமைத்தல்.
- சென்னையிலுள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில், ஒரு செல் உயிரிலிருந்து இன்று நாம் காணும் உயிரினங்கள் வரை உயிர்களின் பரிணாம வளர்ச்சியைக் காண்பிக்கும் வகையில் பரிணாம வளர்ச்சிப் பூங்கா அமைத்தல்.
- திருச்சிராப்பள்ளி மண்டல அறிவியல் மையத்தில் இயல் அறிவியல் காட்சிக் கூடம் அமைத்தல்.



## 7. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

7.1 தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமானது, மாணவர்களிடத்தில் அறிவியல் உணர்வு உருவாகவும், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கும் தமிழக அரசினால் ஏற்படுத்தப்பட்ட தன்னாட்சி நிறுவனமாகும். மாநில அரசு வழங்கி வரும் மானியம் தவிர, மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறையும் இம்மன்றத்தின் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களை செவ்வனே நிறைவேற்ற உள்ளது:—

### அறிவியல் தொழில்நுட்ப திட்டங்கள்

7.2 இந்தத் திட்டத்தின்மூலம் வேளாண்மை, சுற்றுப்புறச்சூழல், மருத்துவ அறிவியல், உயிரியல் அறிவியல், கால்நடை அறிவியல், சமூகவியல் மற்றும் பொறியியல், தொழில்நுட்பம் போன்ற பிரிவுகளில் நம் மாநிலத்திலுள்ள அங்கீகாரம் பெற்ற ஏதாவது ஓர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் தகுதிவாய்ந்த அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு நமது மாநிலத்திற்கு உபயோகமுள்ள, முக்கியமான, சமூக சம்பந்தமான திட்டங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.3.50 இலட்சம் வரை இரண்டு ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

7.3 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் உள்ள அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இத்திட்டத்தின்கீழ் ஆராய்ச்சி மேற்கொள்ள ரூ.15.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

### மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

7.4 மாணவர்களிடையே இருக்கும் திறமைகளை அறிவியல் தொழில்நுட்பத்திற்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், அறிவியல் தொழில்நுட்பவியல், மருத்துவயியல், வேளாண்மையியல், கால்நடை மருத்துவயியல், சமூகவியல், உயிரியியல் போன்ற துறைகளில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப் படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்குச் சமூக சம்பந்தமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

7.5 2007-2008-ல் 200 மாணவர் திட்டங்களுக்கு ரூ.12.00 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

## கருத்தரங்கு, சூழியம், அறிவியல் மாநாடு நடத்துவதற்கு ஒரு பகுதி நிதியுதவி அளித்தல்

7.6 இத்திட்டம் அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு கருத்தரங்குகள், சூழியங்கள், அறிவியல் முகாம்கள் நடத்தி அறிவியல் அறிவுப் பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள அமைப்புகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குப் பகுதி நிதியுதவி அளிக்கப்படுகிறது.

7.7 2007-2008 ஆம் ஆண்டில் 20 கருத்தரங்குகள் / சூழியங்கள் / கலந்துரையாடல் நிகழ்வுகள் நடத்த, பகுதி நிதியுதவியாக சுமார் ரூ. 3.50 இலட்சங்கள் வழங்கப்பட உள்ளது. இதனால் அறிவியலறிஞர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் பயனடைவர்.

## இளம் அறிவியலறிஞர்களுக்குப் பயண நிதியுதவி அளித்தல்

7.8 இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகள்/ஆராய்ச்சி மையங்களில் பணி புரிந்துவரும் 40 வயதுக்குகீழ் உள்ள இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பன்னாட்டு மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைச் சமர்ப்பிக்கச் செல்லுவதற்குத் தேவையான விமான பயணத் தொகையில் 50 விழுக்காடு வரை நிதி உதவியும் மற்றும் அத்தகைய உள்நாட்டு மாநாடுகளில் பங்கு கொள்வதற்கு 100 விழுக்காடு இரயில் பயணக் கட்டணமும் (முதல் வகுப்பு) நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

7.9 இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் ஆண்டு 15 இளம் அறிவியலறிஞர்கள் தங்களுடைய ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைப் பன்னாட்டு மாநாடுகளில் / உள்நாட்டு மாநாடுகளில் சமர்ப்பிக்கச் செல்லுவதற்குப் பயண நிதி உதவியாக ரூ.2.30 இலட்சம் அளிக்கப்படவுள்ளது.

## இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல்

7.10 35 வயதுக்குட்பட்ட இளம் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தொழில்நுட்பங்களின் நுணுக்கங்களை





நன்கு கற்றுக் கொள்வதற்காக, அவர்களை வெளிமாநிலத்திலுள்ள, பல்கலைக்கழகங்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஏதாவது ஒன்றில் ஒரு முதுநிலை அறிவியலறிஞருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்யவும், நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும், ஊக்கப்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி அவர்களுக்குத் தாங்கள் பணிபுரியும் தாயக நிறுவனங்களில் பெற்றுவரும் மாதச் சம்பளத்துடன் கூடுதலாக மாதம் ரூ. 3,000/- ஆதரவு ஊதியமாக இரண்டு முதல் ஆறு மாதங்களுக்கு வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பயிற்சி / நுண் கருவிகளின் செயல்முறை தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளவும், பயிற்சி பெறவும் முடியும். சுமார் ரூ.50,000 செலவில் 5 விஞ்ஞானிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

## தமிழக அறிவியலறிஞர்கள் விருது

7.11 இத்திட்டத்தின்படி, ஒவ்வோர் ஆண்டும் (i) வேளாண்மை (ii) உயிரியல் (iii) வேதியியல் (iv) பொறியியல் தொழில்நுட்பம் (v) சுற்றுப்புறச்சூழலியல் (vi) மருத்துவம் (vii) கணிதவியல் (viii) இயற்பியல் (ix) சமூகவியல் (x) கால்நடை மருத்துவயியல் போன்ற 10 துறைகளைச் சார்ந்த சிறந்த அறிவியலறிஞர்களுக்குத் தமிழக அறிவியலறிஞர்கள் என்ற பெயரில் விருதுகள், அவர்களை ஊக்குவித்துப் பெருமைப்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன. இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள், தங்களுடைய துறையில் அவர்களுடைய செயல் திறமை மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாகத் தமிழகத்தின் அறிவியல் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக முக்கியப் பங்கு வகித்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவியலறிஞர்களுக்கு ரூ.10,000/- ரொக்கமும், தாமிரப் பட்டயமும், சான்றிதழும் வழங்கப்படும். மொத்தம் ரூ. 1.20 இலட்சம் செலவில் 10 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

7.12 அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொண்டு நிறுவனங்கள் போன்ற அமைப்புகள் அறிவியல் கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி முகாம்கள், பொது விரிவுரைகள், கண்ணொளி ஒளிக்காட்சி, காட்சி வில்லைகள், வினாடி வினாப்

போட்டிகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. மொத்தம் ரூ.7.50 இலட்சம் செலவில் 50 நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பயனுறுவர்.

### இளம் மாணவ அறிவியலறிஞர்கள் செயல் திட்டம்

7.13 நமது மாநிலத்தில் ஒன்பதாம் வகுப்புப் பயின்றுவரும் அறிவியலில் திறமை வாய்ந்த இளம் மாணவர்களுக்கு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிபற்றி போதனை செய்து அவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்பைத் தேர்ந்தெடுப்பதற்குரிய ஆர்வத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு நுழைவுத் தேர்வுமூலம் ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 40 மாணவர்களுக்குப் பெயர் பெற்ற கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் திறமைவாய்ந்த பேராசிரியர்களால் மே திங்களில் ஒரு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுமார் பத்து கல்வி மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மையங்களில், 9 ஆம் வகுப்புப் படிக்கும் 400 மாணவர்களுக்கு ஒரு மாத காலப் பயிற்சியளிக்கும் வகையில் 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும்

7.14 நமது நாட்டிலும், மாநிலத்திலும் பல்வேறு துறைகளில் அறிவியல் ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் நடைபெறுகின்றன. இவற்றின்மூலம் வெளிக்கொணரப்படும் நன்மை பயக்கும் தொழில்நுட்பங்களும், அறிவியல் உண்மைகளும் இதன் பயனாளிகளைச் சென்றடைய சிறிது காலம் தேவைப்படுகிறது. எனவே, இத்தகைய புதுமை தொழில்நுட்பங்களை உடனடியாக இதன் பயனாளிகளுக்குக் கொண்டு செல்லத் தேவையான பயிற்சிகளும், இதனை ஊக்குவிக்க வழிமுறைகளும் தேவை. இதனைக் கருத்தில்கொண்டு, புதுமைத் தொழில்நுட்பமும் பரவலாக்கமும் திட்டத்தின்மூலம் நமது மாநிலத்திலுள்ள மத்திய, மாநிலக் கல்வி மற்றும் ஆய்வு நிறுவனங்களில் வெளிக்கொணரப்படும் புதிய பயனுள்ள தொழில்நுட்பங்களைக் கல்வி மற்றும் அறிவியலாளர்கள்மூலம் உரிய பயனாளிகளுக்கு எடுத்துச் செல்லத் தேவையான பயிற்சி மற்றும் பட்டறைகள் ஏற்பாடு



செய்யப்படும். 2007-2008 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் வாயிலாக, சுமார் ரூ.5.00 இலட்சம் செலவில் 500 வேலையில்லாத இளைஞர்கள், பெண்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும்.

### அறிவியல் விழிப்புணர்வுத் திட்டம்

7.15 இந்தத் திட்டத்தின் நோக்கமானது, கிராமப்புறங்களில் உள்ள பள்ளி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். மாணவர்களுக்கு அடிப்படை அறிவியல் பற்றிய விளக்கங்களும், அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்க்ளைப் பற்றியும் கற்றுத் தரப்படும். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் மேற்கொள்ளப்படும் அறிவியல் ஆய்வுகளின் முடிவுகளைச் சம்பந்தப்பட்ட மக்களுக்குச் சென்றடையும் வகையில், பல்வேறு கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள், அறிவியல் கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்தத் திட்டமானது, 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் கல்லூரிகள் மற்றும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

## 8. அறிவியல் நகரம்

8.1 சென்னை நகரில் கிண்டி மற்றும் தரமணி பகுதியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் 60-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் அண்ணா பல்கலைக்கழகம், இந்திய தொழில்நுட்பக்கழகம் (IIT), மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), சென்னைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் உட்பட மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களுடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்க்கும் நோக்குடன் அமைந்த இப்பகுதி, அறிவியல் நகரம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவியல் நகரத்தில், சுமார் 1,500-க்கும் மேற்பட்ட முனைவர் பட்டம் பெற்றவர்கள் மற்றும் 3,500 ஆராய்ச்சி மாணவர்களைக் கொண்டு 1,500-க்கும் மேற்பட்ட ஆய்வுகள் அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிவியல் நகரத்தில் உள்ள நிறுவனங்களில் சுமார் ரூ. 500.00 கோடிக்கு மேல் மதிப்புள்ள அறிவியல் தொழில்நுட்ப உபகரணங்களும், கருவிகளும் உள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்காக அறிவியல் நகரம் பல அரிய அறிவியல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது.

8.2 கீழ்க்கண்ட பணிகள், அறிவியல் நகரத்தால் 2006-2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன:—

### புள்ளி விவரங்களைக் கொண்ட அடிப்படைத் தளங்களை உருவாக்குதல்

8.3 இந்த அடிப்படைத் தளமானது, அரசு சார்ந்த மற்றும் அரசு சாரா தன்னார்வமிக்க நிறுவனங்களுக்கு அறிவியலறிஞர்களை இனம் காண உதவும். அறிவியலாளர்களை இனம் காண சில முக்கிய வழிவகைகளான இணையம்மூலம் பெயரையோ, துறையையோ மையமாக வைத்துத் தேடுவதற்கு வழிவகைகள் செய்யப்படும். இப்புள்ளிவிவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும். அறிவியல் சமுதாயம் இதனால் பயனடையும்.

### செய்தி மடல் மற்றும் புகைப்படம்

8.4 அறிவியல் நகரத்தின் செய்தி மடல் உலகம் முழுவதும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைத் தொகுத்து வழங்குகிறது. இச்செய்தி மடலில் தலைசிறந்த அறிவியல் நிபுணர்களின் பொதுமக்களுக்கான செய்தியும் மற்றும் அவர்கள் எழுதும், சமீப காலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய கட்டுரைகளும் இடம் பெறும்.



### அறிவியலைப் பிரபலப்படுத்துதல்

8.5 அறிவியல் சார்ந்த தலைசிறந்த விரிவுரைகள், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் நிபுணர்களைச் சந்தித்தல் மற்றும் இணையதளத்தின்மூலம் வினாடி வினா நிகழ்ச்சி, அறிவியல் நகர உறுப்பினர் நிறுவனங்களுடன் சேர்ந்து அறிவியல் கூட்டங்கள் நடத்துதல், அறிவியல் கண்காட்சிகள் நடத்துதல், பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வுத் திட்டங்கள் ஆகியவை இத்திட்டத்தில் அடங்கும். இதுவரை 300 பள்ளி மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### பெண்கள் நிலையை மேம்படுத்துதல்

8.6 பெண் அறிவியல் நிபுணர்களின் நிலையைக் கண்டறிய, அறிவியல் நகரம், நாடு முழுவதும் உள்ள பெண் அறிவியல் நிபுணர்களின் புள்ளிவிவரங்களைச் சேகரித்து இணையதளத்தின்மூலம் எல்லோருக்கும் கிடைக்க வழி வகுத்துள்ளது. பெண் அறிவியல் நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக, அறிவியல் நகரம் இளம்பெண் விஞ்ஞானி விருது மற்றும் வாழ்நாள் பெண் சாதனையாளர் விருது ஆகிய விருதுகளை வழங்கி வருகிறது. இதுவரை 37 பெண் அறிவியல் நிபுணர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### தகவல் மையம் ஏற்படுத்துதல்

8.7 பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக், ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி போன்ற உயர் கல்வி வழங்கும் நிறுவனங்களின் புள்ளிவிவரங்கள் அறிவியல் நகரத்தின் இணையதளமான www.tamiladuscientists.com-ல் வழங்கப்பட்டுள்ளது. காப்புரிமை பற்றிய தகவல்களும் சேவைகளும் இவ் இணையதளத்தில் காணலாம். scicity.@dataone.in என்ற மின்னஞ்சல்மூலமும் இத்தகவல்களைப் பெறலாம். உலகிலுள்ள அறிவியல் சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் முகமைகள், உலகிலுள்ள ஆய்வு நிறுவனங்கள், அறிவியல் மன்றங்கள் மற்றும் அறிவியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் இவ் இணையதளத்தில் காணலாம். இத்தகவல்களால் மாணவ சமுதாயம், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் பயன் பெறுவர்.

8.8 மேற்கூறிய செயல்பாடுகள் தவிர, இந்தியக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களான CSIR, DRDO, Department of Ocean Development, இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் (Indian Council for Agricultural Research)

இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம (Indian Institute of Information Technology), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சில சிறந்த இந்தியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT), கௌஹாத்தி, கராக்பூர், ரூர்கி, டில்லி, மும்பாய், சென்னை ஆகியவற்றுக்கு இணையதள இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

8.9 மேலும், 2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் ரூ.21.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளன:—

**(i) அதிநவீன தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள்**

அதிநவீன தொழில்நுட்பங்களை, மாணவர்களிடையே பரப்புவதற்காக மரபியல், தொழில்நுட்பம், 'நானோ' தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் ரூபாய் 6.00 இலட்சம் செலவில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) சென்னையிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு முகாம்**

சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட மாநகராட்சி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு ரூபாய் 5.00 இலட்சம் செலவில் அறிவியல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) அறிவியல் விழா**

இவ்விழாவில் கண்காட்சி மட்டுமல்லாமல், தலைசிறந்த விஞ்ஞானிகள் அழைக்கப்பட்டு கண்காட்சிக்கு வரும் மக்களுடன் உரையாடுவதற்கும், சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதற்கும் கருதப்பட்டுள்ளது.



## 9. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

9.1 தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் அடிப்படைப் பணி, வரையறுக்கப்பட்ட கொள்கையின்படி இக்காப்பகத்திற்கு மாற்றப்பட்ட தலைமைச் செயலக மற்றும் குறிப்பிட்ட சில துறைகளின் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகும். தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இந்திய மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி செய்யும் பொருட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது. இக்காப்பகம் ஆவண மேலாண்மை பயிற்சியும் அளித்து வருகிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2.30 இலட்சம் அரிய நூல்கள் உள்ளன.

9.2 12-வது நிதிக் குழுவின் பணிக் குழு, தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தை வரலாறு, சுற்றுலா, பண்பாடு மற்றும் கட்டடக் கலை சிறப்பு வாய்ந்த முதல் நிலை நிறுவனமாக (Category-I) முக்கியத்துவம் அளித்துள்ளது.

9.3 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சம் செலவில், ஆவணக் காப்பக ஆராய்ச்சிக் கூடத்தை நவீனப்படுத்தவும், நிர்வாகப் பிரிவை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 மே 3

## 10. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம்

*10.1* மாநில அளவிலான உயர் கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும், உயர் கல்விக்கான மாநில மற்றும் பல்கலைக்கழக நல்கை நிதிக் குழுவின் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையிலும், தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம், ஒரு தன்னாட்சி அமைப்பாக 1992 ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் மாநில உயர் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

*10.2* உயர் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பாக அரசுப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அணுகும்போது அவற்றுக்குத் தக்க அறிவுரைகள் வழங்குதல்; உயர் கல்வி மேம்பாட்டிற்கான தகுந்த திட்டங்களை மாநில அளவில் உருவாக்குதல்; பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கிணங்க, உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்தும் வகையில் அவற்றின் செயல்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிடவும், அவற்றை நிறைவேற்றவும் உதவி செய்தல்; மாநில அளவில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் மேம்பாட்டுத் திட்டங்களைத் தெரிவு செய்து மன்றத்தின் குறிப்பு மற்றும் பரிந்துரையுடன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவிற்கு அனுப்புதல் மற்றும் திட்டப் பணிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்தல்; உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே பணிகளில் செயலாக்கத்தைக் கண்காணித்தல்; உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினை உயர்த்துதல்; ஒருங்கிணைத்தலை மேம்படுத்துதல் மற்றும் அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைக் கண்டறிதல்; மாநிலத்தில் உயர் கல்விக்கென கூடுதல் நிதி ஆதாரங்களை ஏற்படுத்தும் வழிவகை குறித்து அறிவுரை நல்குதல்; உயர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் பாடத் திட்டத்தைச் செழுமைப்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் தரத்தை சீரமைக்கவும் உதவுதல்; கல்வித் தரத்தை நிர்ணயித்து அதன் தொடர்ச்சியாக நிதி நல்கைக் குழுவிற்குத் தேவையான உதவி புரிதல்; கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல், கண்காணிப்புத் திட்டம் ஏற்படுத்துதல் ஆகியவை இம்மன்றத்தின் முக்கிய பணிகள் ஆகும்.



2007 மே 3]

*10.3* இம்மன்றம் திட்டப் பணிகளின்கீழ் மானியம் பெற்று, கீழ்க்காணும் செயல்களைத் துவக்கவும்/தொடரவும் திட்டமிட்டுள்ளது:—

(i) ஆசிரியர் பணியிடைப் பயிற்சிக் கல்லூரிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

(ii) ஆய்வுத் திட்டக் கருத்துருக்கள் தயாரிக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்

(iii) பல்கலைக்கழகங்கள் மின் ஆளுகை முறையில் செயல்பட ஊக்குவித்தல்

(iv) கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்

(v) கல்வி நிறுவனங்களில் கல்வித் தணிக்கையினை மேற்கொள்ளுதல்

(vi) உயர் கல்வியில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடுதல்

(vii) ஆராய்ச்சி குறித்த பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளித்தல்

(viii) கல்லூரி/பல்கலைக்கழகங்களுக்குப் புதியதாக தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

*10.4* தற்பொழுது தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் சென்னை, லேடி வெலிங்டன் கல்லூரி வளாகத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, அம்மன்றத்திற்கென புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.35.00 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட உள்ளது. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு, முழுஅளவில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

[2007 மே 3

## 11. தமிழ்நாடு மாநில உருது மன்றம்

11.1 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் உருது மொழியை வளர்க்கும் நோக்கத்தோடு 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில உருது மன்றம் துவக்கப்பட்டது. இம்மன்றம் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது.

11.2 நவீன யுகத்தில் உருது மொழி மற்றும் உருது இலக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் என்ற தலைப்பில் 29-3-2007 மற்றும் 30-3-2007 ஆகிய நாட்களில் சிறந்த வல்லுநர்களையும், பேச்சாளர்களையும் நாடு முழுவதிலிருந்து வரவழைக்கப்பட்டு, விவாதம் நடத்தப்பட்டது.

11.3 அலுவலகத்தை நிர்மாணிக்கவும், தளவாட சாமான்கள் மற்றும் கருவிகள், பிற நடவடிக்கைகளுக்காக, தமிழ்நாடு மாநில உருது மன்றத்திற்கு ரூ.10.00 இலட்சத்தை 2006-2007 ஆம் ஆண்டில் மானியமாக அரசு வழங்கியுள்ளது.



2007 மே 3]

## கல்லூரிக் கல்வி

### அட்டவணை – 1

### மாநிலத்திலுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை (2006–2007)

| கல்லூரிகள் வகை | அரசுக் கல்லூரிகள் | தனியார் கல்லூரிகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | உதவி பெறும் கல்லூரிகள் | சுய நிதிக் கல்லூரிகள் | |
| கலை மற்றும் அறிவியல் | 60 | 133 | 306 | 499 |
| உடற்கல்வி | – | 3 | 5 | 8 |
| கீழ்த்திசை | – | 10 | – | 10 |
| சமூகப்பணி பள்ளி | – | 2 | – | 2 |
| கல்வியியல் | 7 | 14 | . 256 | 277 |
| பல்கலைக்கழகக் கல்லூரிகள் | 7 | – | – | 7 |
| **மொத்தம்** | **74** | **162** | **567** | **803** |

### அட்டவணை – 2

### மாணவர் சேர்க்கை விவரம் 2006–2007

| கல்லூரியின் வகை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | | | | மாணவர் சேர்க்கை விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இள நிலை | முது நிலை | பட்டயம் முதலியவை | மொத்தம் | இள நிலை | முது நிலை | பட்டயம் முதலியவை | மொத்தம் |
| அரசுக் கல்லூரிகள் | 30908 | 2869 | 269 | 34046 | 30415 | 2779 | 258 | 33452 |
| உதவி பெறும் கல்லூரிகள் | 74787 | 18405 | 3132 | 96324 | 67257 | 16161 | 2106 | 85524 |
| சுயநிதிக் கல்லூரிகள் | 61296 | 12397 | 561 | 74245 | 37388 | 7984 | 162 | 45534 |
| மொத்தம் | 166991 | 33671 | 3962 | 204615 | 135060 | 26924 | 2526 | 164510 |

அட்டவணை - 3

## தொழில்நுட்பக் கல்வி

2006-2007 ஆம் ஆண்டு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்த இடங்கள் மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| வ. எண் | பிரிவு | பயிலகங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை | இதர பிரிவினர் | | பிற்படுத்தப் பட்டோர் | | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் | | ஆதி திராவிடர் | | பழங் குடியினர் | | மொத்தம் | | மொத்தம் ஆண் + பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1 | அரசு | 22 | 5080 | 5026 | 197 | 66 | 1470 | 816 | 910 | 397 | 685 | 400 | 63 | 22 | 3325 | 1701 | 5026 |
| 2 | அரசு நிதியுதவி | 34 | 12399 | 11128 | 332 | 80 | 5260 | 1141 | 2149 | 416 | 1425 | 270 | 51 | 4 | 9217 | 1911 | 11128 |
| 3 | இணைப்பு பெற்றவை | 3 | 215 | 136 | 1 | 0 | 73 | 0 | 32 | 1 | 29 | 0 | 0 | 0 | 135 | 1 | 136 |
| 4 | சுயநிதி | 166 | 53968 | 49924 | 4147 | 486 | 24996 | 2249 | 11548 | 759 | 5193 | 431 | 102 | 13 | 45986 | 3938 | 49924 |
| 5 | ஓட்டல் மேனேஜ் மெண்ட் பயிலகங்கள் | 15 | 1020 | 418 | 69 | 4 | 199 | 13 | 84 | 0 | 46 | 1 | 2 | 0 | 400 | 18 | 418 |
| 6 | திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி | 1 | 70 | 65 | 5 | 0 | 26 | 0 | 14 | 0 | 20 | 0 | 0 | 0 | 65 | 0 | 65 |
| 7 | மண்டலத் தொழிலாளர் பயிலகம் | 1 | 50 | 44 | 19 | 0 | 16 | 0 | 2 | 0 | 6 | 0 | 1 | 0 | 44 | 0 | 44 |
| | மொத்தம் | 242 | 72802 | 66741 | 4770 | 636 | 32040 | 4219 | 14739 | 1573 | 7404 | 1102 | 219 | 39 | 59172 | 7569 | 66741 |



அட்டவணை - 4

2006-2007 ஆம் ஆண்டு பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்த இடங்கள் மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்கள்

| வ. எண் | பிரிவு | பயிலகங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் | சேர்க்கை | இதர பிரிவினர் | | பிற்படுத்தப் பட்டோர் | | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் | | ஆதி திராவிடர் | | பழங் குடியினர் | | மொத்தம் | | மொத்தம் ஆண் + பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1 | அரசு | 6 | 1900 | 1874 | 160 | 63 | 645 | 298 | 254 | 118 | 198 | 121 | 11 | 6 | 1268 | 606 | 1874 |
| 2 | அரசு நிதியுதவி | 3 | 1810 | 1788 | 262 | 99 | 590 | 253 | 227 | 88 | 176 | 79 | 8 | 6 | 1263 | 525 | 1788 |
| 3 | சுயநிதி | 238 | 90124 | 70145 | 9291 | 4329 | 23805 | 14070 | 8306 | 3855 | 4212 | 2156 | 77 | 44 | 45691 | 24454 | 70145 |
| | மொத்தம் | 247 | 93834 | 73807. | 9713 | 4431 | 25040 | 14621 | 8787 | 4061 | 4586 | 2356 | 96 | 56 | 48222 | 25585 | 73807 |

[2007 மே 3

## அட்டவணை – 5

மாநிலத்திலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை (2006–2007)

| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 22 |
| 2 | அரசு மானியம் பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 34 |
| 3 | இணைப்புப் பயிலகம் | 3 |
| 4 | சுயநிதிப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் | 166 |
| 5 | உணவக மேலாண்மை மற்றும் விருந்தோம்பல் பயிலகம் | 15 |
| 6 | திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிலகம் | 1 |
| 7 | மண்டலத் தொழிலாளர் பயிலகம் | 1 |
| | மொத்தம் | 242 |


## அட்டவணை – 6

மாநிலத்திலுள்ள பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கை (2006–2007)


| வ. எண் | கல்லூரிகளின் வகை | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக்கழகம் | 4 |
| 2 | அரசுப் பொறியியற் கல்லூரிகள் | 6 |
| 3 | அரசு மானியம் பெறும் பொறியியற் கல்லூரிகள் | 3 |
| 4 | சுயநிதிக் கல்லூரிகள் | 238 |
| | மொத்தம் | 251 |



2007 மே 3]




[2007 மே 3




| வருடம் | 1995-1996 | 1996-1997 | 1997-1998 | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 | 2003-2004 | 2004-2005 | 2005-2006 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதி கல்லூரிகள் | 34660 | 48517 | 63812 | 66034 | 95682 | 98956 | 101947 | 95796 | 116965 | 151414 | 176766 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 205695 | 195344 | 188950 | 201099 | 219019 | 231018 | 237250 | 214869 | 257476 | 274535 | 286760 |
| அரசு கல்லூரிகள் | 85917 | 81760 | 79138 | 82690 | 56730 | 90200 | 91624 | 95078 | 98137 | 99487 | 104700 |




2007 மே 3]




| வருடம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதி கல்லூரிகள் | 69 | 76 | 106 | 118 | 143 | 209 | 225 | 222 | 213 | 224 | 238 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| அரசு கல்லூரிகள் | 7 | 7 | 7 | 7 | 7 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 |

பிற்சேர்க்கை

தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை





| வருடம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதி கல்லூரிகள் | 16401 | 18884 | 23886 | 27614 | 36583 | 46096 | 56033 | 44566 | 45934 | 62648 | 70291 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 1106 | 1306 | 1246 | 1507 | 1877 | 1383 | 1562 | 1712 | 1675 | 1728 | 1788 |
| அரசு கல்லூரிகள் | 1013 | 1296 | 1304 | 1342 | 1504 | 1408 | 1436 | 1828 | 1857 | 1885 | 1874 |



பிற்சேர்க்கை


தமிழ்நாட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகள் எண்ணிக்கை




| வருடம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதி கல்லூரிகள் | 110 | 125 | 143 | 142 | 156 | 147 | 147 | 145 | 146 | 153 | 166 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 35 | 35 | 35 | 35 | 35 | 41 | 41 | 40 | 39 | 39 | 37 |
| அரசு கல்லூரிகள் | 21 | 21 | 21 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 | 22 |

## பிற்சேர்க்கை

தமிழ்நாட்டில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை




| வருடம் | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 | 2000-01 | 2001-02 | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுயநிதி கல்லூரிகள் | 20910 | 17143 | 21282 | 16004 | 12057 | 20814 | 28097 | 29003 | 32370 | 41745 | 49924 |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | 7551 | 6957 | 6544 | 6878 | 8486 | 7469 | 8506 | 9148 | 10135 | 11317 | 11264 |
| அரசு கல்லூரிகள் | 3367 | 3589 | 3651 | 3635 | 3093 | 4240 | 4062 | 4826 | 4824 | 4984 | 5026 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227665
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.